
# ********கண்ணம்மா-என் காதலி!*********



***நிவேதா ஜெயானந்தன்***

# அத்தியாயம் – 1




**கண்ணன் முகம் கண்டு விட்டபின்..**
**வேறு முகம் நினைவில் இல்லை..**
**புன்னகையால் வசியம் செய்கிறான்..**
**குழல் ஊதி மயங்கச் செய்கிறான்..**

கையில் சுருட்டப்பட்டிருந்த நியூயார்க் டைம்ஸ் நாளிதழுடன் விறுவிறுவெனத் தன் இல்லத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த நித்யாவிற்கு.. அந்நகருக்கே உண்டான பரபரப்போ.. தன்னைச் சுற்றி ஒலித்துக் கொண்டிருந்த அமெரிக்க ஆங்கிலமோ.. மாலை நேரக் காற்றில் ஒளிந்திருந்தக் குளிரோ.. எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மனம் முழுதிலும் வசந்தி அத்தையின் வார்த்தைகளே நிறைந்திருந்தது.

இவளது பதிலை எதிர்பார்த்து நிச்சயம் அத்தையம்மாள் இப்போது அவள் வீட்டில் காத்திருப்பாள். என்ன தான் அவர் கூறிய விசயமும்,அதை அவர் எடுத்துச் சொன்ன விதமும் மனதை உருக்கினாலும்.. ஒரு புறம் எரிச்சலானது அவளுக்கு. யாரோ ஒருவன் அவனது திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிப்பதற்கு அவள் எதற்காக முயற்சிக்க வேண்டும்..?, எங்கிருந்தோ வந்து.. இன்று புதிதாக முளைத்த இந்த அத்தைக்காகத் தான் எதற்காக நாட்டையும், வீட்டையும் விட்டுச் செல்ல வேண்டுமென்று ஆதங்கம் எழுந்தது அவளுக்கு.

தன் எண்ணப் போக்கில் நடந்து சென்று கொண்டிருந்தவளை "நித்யா ஆன்ட்டி" என்று ஒரு பிஞ்சுக் கரம் தடுத்து நிறுத்தியது. பக்கத்து வீட்டுச் சிறுமி தர்ஷினி கையில் மிட்டாய் டப்பாவுடன் நான்கைந்து வெள்ளைக்காரச் சிறார்களுடன் நின்று கொண்டிருந்தாள். அவ்வளவு நேரமாக முகத்தில் குடி கொண்டிருந்த கோபமும்,எரிச்சலும் மறைய.. "ஹாய் தர்ஷூ.. இன்று உனக்குப் பிறந்த நாள் என்றாயல்லவா..?,ஆன்ட்டி மறக்கவில்லை.. உனக்காகப் பரிசு கூட கொண்டு வந்திருக்கிறேன்.."என்றவள் கைப்பையிலிருந்து ஒரு பார்பி பொம்மையை எடுத்துக் கொடுத்தாள். அருகே நின்றிருந்த மற்றக் குழந்தைகளின் ஆர்வப் பார்வையைக் கண்டு... அவர்களுக்காகவும் வாங்கப் பட்டிருந்த சிறு சிறு பரிசுப் பொருட்களை எடுத்து நீட்டினாள்.

DO NOT COPY

சிறுமி தர்ஷினி எப்போதும் நான்கு சிறுவர்களுடன் வலம் வருவது அவள் அறிந்த ஒன்று. ஒரு குழந்தைக்கு மட்டும் பரிசு கொடுத்தால்.. மற்றவர்களின் மனம் நோகும் என்பதால் அவர்களுக்கும் ஏற்கனவே பரிசு வாங்கி வைத்திருந்தாள். சிறியதோ,பெரியதோ.. கண்ணைப் பறிக்கும் நிறத்தில் அழகாக சுருட்டப் பட்டிருந்த பொருட்களின் மேலுறையிலேயே கவரப் பட்டு விட்டச் சிறுவர்கள்.. மகிழ்ச்சியுடனே நன்றி கூறி விட்டு ஓடிச் சென்றனர்.

எப்போதும் அவர்களது வீட்டிற்கு அருகேயிருக்கும் பூங்காவில் தினமும் மாலை அங்கே வரும் சிறுவர்களுடன் விளையாடுவது நித்யாவிற்கு மிகப் பிடித்தமான பொழுதுபோக்கு. தான் கொடுத்தப் பரிசுப் பொருட்களை.. பூங்காவின் மர பெஞ்சில் அமர்ந்து பிரித்துப் பார்த்து குதூகலித்துக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு மேலும் மனது பாரமானது. இந்த அழகிய பூங்காவை விடுத்து,பிறந்து வளர்ந்த இந்த நியூயார்க் நகரை விடுத்து அவள் இந்தியா செல்ல வேண்டுமாம். அதுவும் எதற்காக.. வசந்தி அத்தையின் அருமை புத்திரனைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க.. அந்த அத்தையம்மாளின் மேலான யோசனைக்கு அப்பா வேறு ஒத்து ஊதிக் கொண்டிருக்கிறார்.. ச்ச, என்று எண்ணமிட்டவள்.. பூங்காவிலிருந்து வெளியேறித் தன் வீட்டிற்குச் சென்றாள்.

கதவைத் திறந்து உள்ளே நுழைகையிலேயே வசந்தி அத்தையின் குரல் கேட்டது. என்று இந்த அத்தை வீட்டிற்குள் நுழைந்தார்களோ.. அன்றிலிருந்துத் துன்பம் தான்.. எப்போதும் அவளது விருப்பத்திற்கு மதிப்பளித்துத் செயல்படும் தந்தை.. இந்த விசயத்தில் அவளது சம்மதத்தைக் கூடக் கேட்கவில்லை.. எரிச்சலும்,கோபமுமாய் வீட்டிற்குள் நுழைபவளைக் கண்டு “நித்யாம்மா.. வந்து விட்டாயா..?,அத்தை உனக்காக இன்று பால் போளி செய்து வைத்திருக்கிறேன்.. உனக்கு மிகவும் பிடிக்குமாமே.. முகம் கழுவி விட்டு வா.. சாப்பிடலாம்..”என்று பாசமாக அழைத்தார்.

இது தான்! இந்தப் பாசம் தான் இந்த அத்தையின் ஒரே ஆயுதம்.. அண்ணா,அண்ணா என்று அன்பைக் கொட்டி.. அவள் இந்தியா செல்வதற்குத் தந்தையைச் சம்மதிக்க வைத்தவர்.. அதே அம்பை உபயோகித்துத் தன்னையும் தகர்க்கப் பார்க்கிறார்.. உள்ளே எழுந்த எரிச்சலை மறைத்து ஈ என இளித்து வைத்தவள்.. “இரண்டு நிமிடம் அத்தை.. இதோ வந்து விடுகிறேன்..”எனக் கூறி உள்ளே விரைந்தாள்.. தோள் பையையும்,கையில் வைத்திருந்த நாளிதழையும் அறையிலிருந்த சோபாவில் எறிந்தவள்.. விறுவிறுவெனத் தந்தையை நாடிச் சென்றாள்.

வீட்டின் பின் புறத்தில்.. புறாக்களுக்கு இரைகளைத் தூவியபடி நின்று கொண்டிருந்த விஸ்வநாதன் மகளின் காலடிச் சத்தத்திலேயே அவளது கோபத்தைப் புரிந்து கொண்டார். ஆனாலும் அவள் புறம் திரும்பாமல்

DO NOT COPY

சிரிப்புடன் நின்று கொண்டிருந்தவரை மேலும் எரிச்சலுடன் நோக்கியவள்.. “அப்பா..”என்று கத்தி அழைத்தாள்.

“ஷ்ஷ்.. என்னடாம்மா.. அப்பா இங்கே தானே நின்று கொண்டிருக்கிறேன்.. ஏன் இப்படிக் கத்துகிறாய்.., பார் நீ கத்தியதில் பக்கத்து வீட்டு நாய் ஜிம்மி கூட வெளியே வந்து என்னவென்று எட்டிப் பார்க்கிறது...”என்று அவர் கேலி செய்ய.. “அப்பா ப்ளீஸ்.. உங்களது கேலியைக் கேட்டுச் சிரிக்கும் மனநிலையில் நான் இல்லை..”என்றவள் தொடர்ந்து “இந்த அத்தை எப்போது இந்த வீட்டை விட்டுச் செல்லப் போகிறார்கள்..?”என்று நேரடியாகவே வினவினாள்.

அவளைக் கண்டிப்புடன் நோக்கியவர் “வீட்டிற்கு வந்த விருந்தாளியை இப்படித் தான் விரட்டி அடிக்கப் பார்ப்பாயா நித்யா..?,இது தான் நீ கற்றப் பண்பாடா..?, அவர் செய்து கொடுத்தக் குழிப் பனியாரத்தையும்,இடியாப்பத்தையும் சப்புக் கொட்டி உண்டாயே.. நீ தானே கூறினாய்..?, அத்தை உங்களது சாப்பாட்டைச் சாப்பிடுவதற்காவேனும் நானும் உங்களுடன் இந்தியா வருகிறேனென்று..” என்றவரை இடைமறித்து.. “அப்பா.. அது.. அது நான்.. ஒரு பேச்சுக்குக் கூறியது.. பீட்சா,பர்கரையும்,நீங்கள் அவ்வப்போது செய்து கொடுக்கும் கேவலமான சாம்பாரையும் சாப்பிட்டுப் பழக்கமான எனக்கு.. அத்தை செய்து கொடுத்த விதவிதமான பண்டங்கள் ஈர்த்ததென்னவோ உண்மை தான்.. அதற்காகவெல்லாம் இந்தியா செல்ல முடியாது.. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்..”என்று கோபமாகக் கூறினாள்.

மகளை இரண்டு நிமிடங்கள் சாந்தமாக நோக்கியவர் “நீ எதற்காக இந்தியா செல்ல மாட்டேனென்று அடம் பிடிக்கிறாய்..?”என்று பொறுமையாக வினவ.. குழப்பமான பார்வையை அவர் மீது செலுத்தியவள்.. “ஒய் ஷுட் ஐ கோ டாடி..?,”என்று பேச எத்தனிக்க “தமிழ்.. தமிழ்..”என்று அவர் நினைவுறுத்தினார்.. கண் மூடி “ஆமாம்.. தமிழ்,தமிழ்.. உங்களுடன் தமிழில் தான் உரையாட வேண்டும்.. மறந்து விட்டேன்.. மன்னித்து விடுங்கள்..” என்றவள் தந்தையின் முகத்தில் சிரிப்பைக் கண்டு.. “அப்பா.. தமிழ் மீது உங்களுக்கு மட்டுமல்ல.. எனக்கும் தான் ஈடுபாடு இருக்கிறது.. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதானது எங்கும் காணோம்.. பாரதியாரைப் பற்றி எனக்கும் தெரியும்..”என்றவளை இடைமறித்து “மொழி.. ழ,ழ.. சொல்..”என்று மீண்டும் கேலி செய்ய.. “அப்பா..”என்றுப் பல்லைக் கடித்து.. “தமிழ் மொழி..”என்று ‘ழ’வைச் சரியாக உச்சரித்தவள் தொடர்ந்து “அப்பா.. உங்களிடம் நான் தமிழ் டியூசனுக்கு வரவில்லை.. என் பிரச்சனைக்குத் தீர்வு சொல்லுங்கள்..”என்று கெஞ்ச.. “சரி.. சொல்கிறேன்... ஆனால் ஒரு கண்டிஷன்..”என்று கூறினார்.

என்ன என்பது போல் பார்த்தவளிடம் மேலும் சிரிப்பை உதிர்த்தவர்..
“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு
துப்பாய தூவும் மழை.”

DO NOT COPY

“இதை மட்டும் கூறி விடு.. நீ சொல்வதைக் கேட்கிறேன்..”என்று கூற செய்வதறியாதுத் திகைத்துப் பின் தந்தையை முறைத்தாள் மகள். அவரது குரலில் கம்பீரமாக ஒலித்த திருக்குறளை என்றும் போல் இன்றும் மனது ரசிக்கத் தான் செய்தது.. ஆனாலும்.. அவள் நிச்சயம் இந்தக் குறளைக் கூறப் போவதில்லை.. ஆங்கிலத்தில் எவ்வளவோ டங் ட்விஸ்டர்களைச் சுலபமாகக் கூறி விடுபவளுக்குக் இந்தக் குறளைக் கூறுவது மட்டும் கடினமாக இருந்தது.

ஒரு தமிழனாக இருந்து கொண்டு திருக்குறள் வரவில்லையென்று நீ கூறுவது எனக்கு அசிங்கமாக உள்ளது பாப்பா.. என்று அவர் கண்டிக்கையில்.. தாய் மொழியின் மீது இவ்வளவு பற்றுடன் இருப்பவர்.. எதற்காக நியூயார்க்கில் வசிக்கிறீர்கள்..?,குறைந்த பட்சம் என்னையேனும் தமிழ் நாட்டில் படிக்க வைத்திருக்கலாமே.. நீங்கள் அடிக்கடி கூறும் சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் அறிந்து வைத்திருப்பேனே.. தவறு உங்கள் மீது தான் அப்பா.. என்று தட்டைத் திருப்பிப் போட்டு விட்டு ஓடி விடுவாள்.

மகள் இப்படிக் கூறுவதைக் கேட்கையில் விஸ்வநாதனுக்குக் கஷ்டமாகத் தானிருக்கும். குடிகாரத் தந்தைக்கும், உலகமறியாத அன்னைக்கும் மகனாகப் பிறந்து.. சிறு வயதிலிருந்தே வேலைக்குச் சென்று பழகி.. விடாது படிப்பையும் முடிக்கையில்.. தாயும்,தந்தையும் காலமாகிப் போனார்கள்.. படிப்பிற்கேற்ற வேலையும் கிடைக்காமல்.. மனைவியுடன் துயரப் பட்டுக் கொண்டிருந்த வேளையில் நண்பன் ஒருவரின் உதவியால் துபாய் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. தனது ஏழ்மையைப் பரிகாசம் செய்த சொந்த பந்தங்களை உதறித் தள்ளி விட்டு.. தாய் நாட்டுடனும்,உயிர்த் தமிழுடனுமான உறவைக் கண்ணீருடன் விடைபெற்று... வெளி நாட்டுக்குச் சென்றார்.

தொழிலில் சிறிது சிறிதாக முன்னேறியவருக்கு நியூயார்க் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே சென்ற பின் நித்யாவும் பிறந்து விட மனைவி பார்வதியுடனும், மகளுடனும் நியூயார்க்கில் நிரந்தரமாக வசிக்கத் துவங்கி விட்டார். நித்யாவிற்குப் பதினைந்து வயதிருக்கையில் அவளது தாய் காலமாகி விட.. அதன் பின் அனைத்தும் தந்தையென மாறிப் போனது அவளுக்கு. அதன் பின் எதற்காகவும் அவர் தாய் நாட்டிற்குத் திரும்பவில்லை. அதற்கானத் தேவையும் ஏற்படவில்லை.

நித்யா வளர்ந்தது அனைத்தும் நியூயார்க்கில் தான் என்பதால்.. தமிழைப் பற்றியும், அதன் அருமையைப் பற்றியும் அவள் பெரிதாக அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போனது. அப்படியும் மகளுடன் அமரும் வேளைகளிலெல்லாம் பாரதியார் பாடல்களையும்,திருக்குறளையும் சொல்லிக் கொடுத்துக் கொண்டே தான் இருப்பார். அவர்களுடன் அண்டை வீடுகளில் வசிக்கும் தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் வாத்தியாராகவே மாறிப் போனார்.

DO NOT COPY

அவர் எவ்வளவோ முயற்சியெடுத்து மகளுக்குத் தமிழார்வத்தை உண்டாக்க முனைந்தாலும்.. அவளுக்கு எப்போதும் 'ழ'வுடன் போராட்டம் தான். அதனால் அதை வைத்து அவளைக் கேலி செய்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார் விஸ்வநாதன்.

நினைவுகளிலிருந்து ஒருவாறுத் தன்னை மீட்டுக் கொண்டவர்.. மகளை நிமிர்ந்து நோக்கினார். "உங்களுக்கு விளையாட்டாகவே இருக்கட்டும் அப்பா.. நான்.. நான் அத்தையுடன் இந்தியா செல்லப் போவதில்லை.."என்று அவள் தீர்மானமாகத் தெரிவிக்க.. மீண்டும் புறாக்களின் பக்கம் திரும்பிக் கொண்டவர் "அதைப் பற்றிய என்னுடைய முடிவை ஏற்கனவே நான் தெரிவித்து விட்டேன் நித்யா.. நீ நிச்சயம் அத்தையுடன் சென்றாக வேண்டும்.. அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முடிந்து விட்டது. நீ சென்ற பின் அடுத்த ஒரு மாதத்தில் நானும் வந்து விடுவேன்.. கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்களாகி விட்டது என் தாய் நாட்டிற்குச் சென்று.."என்று அவர் உணர்ச்சிப்பூர்வமாகக் கூற.. நித்யாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

"அப்பா.. நீங்கள் உங்களது தாய் நாட்டிற்குச் சென்று தான் ஆக வேண்டுமென்றால் தாராளமாகச் செல்லுங்கள். உங்களை யார் தடுத்தது?,என்னை எதற்காக அனுப்பி வைக்க முனைகிறீர்கள்..?,இப்போது தான் படிப்பை முடித்திருக்கிறேன்..நானும் எனது நண்பர்களும் சேர்ந்து புதிதாகத் தொழில் ஆரம்பிக்க இருக்கிறோம். வாழ்க்கையைப் பற்றிய எனது கனவுகள் அனைத்தும் நிறைவேறப் போவதாக எண்ணி நான் மகிழ்ந்து கொண்டிருக்கும்.. இப்போது பார்த்து.. சதி செய்கிறீர்களே அப்பா..?,சரி,ஏதோ ஜாலி டூராக ஒரு மாதத்திற்கு ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடலாமென்று நினைத்தால்.. இந்த அத்தையின் மகன் விடாக்கண்டனைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க வேண்டுமாம்.."என்று நொடித்துக் கொண்டவள் தொடர்ந்து..

"அப்பா.. ஒருவரது வாழ்க்கையின் முக்கியமான விசயங்களுள் ஒன்று திருமணம், இதில் நான் எப்படி அவரை வற்புறுத்திச் சம்மதிக்க வைக்க முடியும்?,ஆனால் எனக்கு ஒன்று புரியவில்லை, இந்த விசயத்திற்காக என்னை ஏன் அத்தை தேர்ந்தெடுத்தார்கள்..?"என்று வினவினாள்.

மகளைக் கண்டு புன்னகைத்தவர்.. "இந்தியா செல்ல மாட்டேனென்று பிடிவாதம் பிடித்து.. அதைச் சாதிப்பதற்காக இப்படி என்னிடம் வாதம் செய்து கொண்டிருக்கிறாயே,,?, உன் பேச்சுத் திறமையைக் கண்டு விட்டுத் தான் அத்தை இந்த முடிவிற்கு வந்து விட்டாள் போலும்.."என்று அவர் சிரிக்க.. "அப்பா.. ப்ளீஸ்.. எங்கிருந்தோ புதிதாக முளைத்து இங்கே வந்து பால் போளியும்,பருப்பு அடையும் செய்து கொடுக்கும் அத்தையுடனும்,முகமறியாத அந்த கட்டபொம்மனுடனும் என்னால் நாள் கடத்த முடியாது.. அத்தோடு.. முன், பின் பழகாதவனுடைய சொந்த சமாச்சாரத்தில் தலையிட்டு.. சீக்கிரம்

எவளையேனும் திருமணம் செய்து கொள் ராஜா என்று வற்புறுத்தவும் என்னால் முடியாது.. நீ யார் அதைச் சொல்ல என்று என்னை விரட்டி அடித்தானானால் அதன் பின் ஒரு நிமிடம் கூட அங்கே என்னால் இருக்க முடியாது..”என்றவளை இடைமறித்து..

“அதற்காகத் தான் அவனுடன் நன்றாகப் பழகி.. அவனை முழுதாக அறிந்து கொண்ட பின்.. அவனிடம் இதைப் பற்றிப் பேசு என்கிறாள் அத்தை..”என்று விஸ்வநாதன் கூறியதும் வெகுண்டவள்.. “அப்பா.. என்னவோ நான் பிறவி எடுத்ததே.. அந்த பின்லேடனுக்காகத் தான் என்பது போல் பேசுகிறீர்களே.. நீங்கள் கூறும் இவையனைத்தும் நடந்து முடிவதற்குள் நான் கிழவி ஆகி விடுவேன் போலும்.. நான் வளர்ந்ததும்,படித்ததும் எதற்காக அப்பா..?”என்று ஆத்திரத்துடன் வினவியவளிடம்..

“நித்யாம்மா.. எதற்காக கோபப் படுகிறாய்..?,உன் படிப்பு எந்த வகையிலும் வீணாகிவிடப் போவதில்லை. அவனுடைய கம்பெனியிலேயே நீ உன் வேலையைத் தொடரலாம்.. “எனவும் அதிர்ந்து அவரை நோக்கினாள்.

வேலையையும்,படிப்பையும் காரணம் காட்டி எப்படியேனும் இந்தப் பயணத்தைத் தடுத்து விடலாமென்று அவள் கனவு கண்டு கொண்டிருக்க.. தந்தை அதற்கும் தகுந்த பதில் வைத்திருப்பதைக் கண்டு மேலும் எரிச்சலானது அவளுக்கு. உஷ்ணமான பார்வையுடன் நின்றிருப்பவளை சாந்தமாக நோக்கி.. அவளது கைப் பற்றி அழைத்துச் சென்று அங்கே போடப் பட்டிருந்த நாற்காலியில் அமர வைத்தார்.

“நிதும்மா.. அப்பா என்றேனும் உனக்குத் தவறான வழியைக் காட்டியிருக்கிறேனா..?,நான் செய்யும் செயல்கள் அனைத்தும் உனது நன்மையைக் கருதியே.. உன் தந்தை ஒன்றும் பிறவிப் பணக்காரன் அல்ல. வசந்தி அத்தையும்,அவரது கணவர் வேலனும் நான் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் உதவி புரிந்தவர்கள்.. சுற்றியிருந்த சொந்தங்களால் கைவிடப் பட்டு நான் தனித்து இருந்த காலத்தில் எனக்கு ஆதரவாக இருந்தவர்கள். வேலன் அத்தானின் கம்பெனியிலேயே வேலை வாங்கித் தருவதாக வசந்தி என்னிடம் பல முறை கூறினாள்.ஆனால் நான் தான் அந்த ஊரை விட்டுச் சென்றாக வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்து நண்பன் ஒருவனின் உதவியால் துபாய் சென்றேன். எனக்கு உதவி செய்த ஒரே சொந்தத்திற்கு.. நான் பதிலுக்கு செய்ய நினைப்பது தவறா..?.சொல்..”என்றவர் தொடர்ந்து..

“அத்தோடு.. இதில் என்னுடைய சுயநலமும் இருக்கிறது.. என்ன தான் இருபத்தைந்து வருடங்களாகத் தாய் நாட்டை விட்டு விட்டுப் பிழைப்பிற்காக அங்கே,இங்கே திரிந்தாலும்,என்னுடைய கடைசி காலத்தை சொந்த ஊரில்

DO NOT COPY

கழிக்க வேண்டுமென்று தான் என் மனம் கேட்கிறது.. இப்படியொரு வாய்ப்பிற்காக நான் நீண்ட நாட்களாகக் காத்திருக்கிறேன் கண்ணே.. இந்த மண்ணும்,காற்றும் நமக்குச் சொந்தமானதல்ல. என்றேனும் ஒரு நாள் நாம் நம் நாட்டிற்குத் திரும்பியாக வேண்டும். அது உன்னுடைய திருமணத்தால் நடக்குமென்று எண்ணினேன்.. ஆனால் அதற்கு முன்பே இப்படியொரு வாய்ப்பு வந்து விட்டது.. “என்று கூறினார்.

தந்தை கூறியதைக் கேட்டு விழி விரித்தபடி அமர்ந்து விட்ட நித்யாவிற்கு அவர் கூறியதைக் கிரகித்துக் கொள்ள சிறிது நேரம் பிடித்தது. ஆக அப்பாவிற்கு என்றேனும்.. எப்படியேனும் தாய் நாட்டிற்குத் திரும்பி விட வேண்டுமெங்கிற எண்ணம் அடி மனதில் இருந்திருக்கிறது. வசந்தி அத்தை வந்திருக்காவிட்டால்.. நிச்சயம் அடுத்த 2 வருடங்களில்.. அவளது திருமணம் என்கிற பெயரில்.. அவளை நிச்சயம் இந்தியாவிற்கு அனுப்பியிருப்பார். இவர் ஏன் இப்படியிருக்கிறார்..?, 23 வருடங்களாக இதே ஊரில் வசித்துக் கொண்டிருக்கும் தன்னால் எப்படித் திடீரென்று இந்த நாட்டை விட்டு வேறு நாட்டில் குடியேற முடியும்..?,இதில் அங்கேயே ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு.. நிரந்தரமாகத் தங்கி விட வேண்டுமாம்.. என்ன ஒரு சதித் திட்டம்..?

அதிர்ந்து அமர்ந்து விட்ட மகளின் முகத்தைக் கண்டவர்.. “அத்தோடு.. வசந்தி அத்தையைப் பற்றியும் கொஞ்சம் நினைத்துப் பாரம்மா.. கணவனை இழந்து மகன் ஒருவனை மட்டுமே உலகமாக எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.. அவ்வளவு சொத்துக்களுக்கும்,சுகபோகத்திற்கும் குறைச்சலே இல்லாத அந்த பணக்காரக் குடும்பம் வாரிசற்றுப் போய் விடுமோ என்று அவள் பயப்படுவதில் என்ன தவறு இருக்கிறதம்மா..?”என்று அவர் வினவ.. “டாடி.. பெற்றத் தாய் கூறியே சம்மதிக்காதவன். நான் கூறினால் மசிந்து விடுவானா..?,எந்த நம்பிக்கையில் இருவரும் என்னை வற்புறுத்துகிறீர்கள்..?,அத்தை கூறியதை வைத்துப் பார்க்கையில்.. அவன் எந்தப் பெண்ணிடமும் நம்பிக்கையுடன் பழகுவானென்று எனக்குத் தோன்றவில்லை.. வீண் அவமானம் தான் எனக்குக் கிட்டப் போகிறது..”என்று அவள் சலிப்புடன் கூற..

“அப்படி ஒருவன் உன்னை அவமானப் படுத்தி விட்டால்.. நீ அவனை அப்படியே விட்டு விட்டு நாடு திரும்பி விடுவாயாக்கும்..?”என்று அவர் எள்ளலுடன் கூற.. நெற்றியைத் தேய்த்துக் கொண்டவள் “மாட்டேன் தான்.. ஆனால் எதற்காக இந்த வீண் முயற்சி..?”என்று அந்த நாளின் ஆயிரமாவது முறையாக ஒரே கேள்வியைக் கேட்டவளிடம்.. “சொந்த ஊர்,சொந்த நாடு என்றால் என்னவென்பதற்கான அர்த்தமும்,விடையும் உனக்கு இந்தப் பயணத்தால் நிச்சயம் கிடைக்கும். கூடவே.. திறமையான ஒருவனுடன் பழகி.. தொழில் கற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் கிடைக்கும்.. இத்தனை நாட்களாக.. உன் விருப்பத்திற்குத் தலையாட்டும் தந்தையுடனும்,உன்

DO NOT COPY


அடாவடித் தனத்தால்.. தைரியத்தால்.. அன்பால்.. நம்பிக்கையால்.. நண்பர்களையும்,சுற்றியிருப்போரையும் கைக்குள் வைத்துக் கொள்ளும் உன் கர்வத்திற்கும் ஒரு சவால் அம்மா.. முற்றிலும் மாறுபட்ட ஒருவனை நீ சந்திக்கப் போகிறாய்.. இல்லையில்லை.. நாம் சந்திக்கப் போகிறோம்.. உன் ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால்.. ஹீ இஸ் கௌய்ட் இன்ட்ரெஸ்ட்டிங்.. ”என்று கூறி விட்டு அவர் எழுந்து சென்றார்.

இருவருக்குள்ளும் நடந்த இந்த நீண்ட வாக்குவாதத்திற்குக் காரணமான.. வசந்தி மற்றும் வேலன் தம்பதியின் ஒரே அருமருந்தன்ன புத்திரன்.. செல்வச் சீமாட்டி.. விடாக்கண்டன்.. கௌதம் பிரபாகரனைப் பற்றி முதல் நாள் வசந்தி அத்தைக் கூறிய அனைத்தும் மனக் கண்ணில் ஓடியது நித்யாவிற்கு.



DO NOT COPY

# அத்தியாயம் – 2




**உன்னை எண்ணி உறக்கம் கொள்கையில்..**
**என் இதழ் தீண்டி.. முகம் வருடி..**
**கண்ணிமைக்கும் நேரத்திற்குள்..**
**மாயாமாய் மறைந்து விடுகிறாயே..**
**கண்ணா..! போதுமடா உன் கண்ணாமூச்சி ஆட்டம்!**
**நித்திரை கொள்ள விடு..**
**ஸ்வப்னத்திலேனும்.. நின் திருமுகம் கண்டு..**
**சொர்க்கமடைந்து விடுகிறேன்...!**

**வி**ஸ்வநாதனுக்கும்,அவரது ஒன்று விட்ட சித்தி மகளான வசந்திக்கும் சொந்த ஊர் எழில் ததும்பும் காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள மயிலாடுதுறை,நாகப்பட்டினம். வசந்தியின் தந்தை செல்வச் செழிப்பானவர். ஆனாலும் விஸ்வநாதனின் தாய்,கணவனின் குடிப் பழக்கத்தால் வருத்தமுற்று உதவி கோரி.. தங்கையின் வீடு நோக்கிச் செல்லும் போதெல்லாம் விரட்டி அடித்து விடுவார். ஆனால்.. வசந்தியின் அன்னைக்கும்,வசந்திக்கும் இருவர் மீதும் பாசமும்,அக்கறையும் இருந்தது. அதனால் கணவன் அறியாமல் வசந்தியின் அன்னை.. விஸ்வநாதனின் குடும்பத்திற்கு உதவி புரிந்து வந்தார்.

வசந்தியின் தந்தை ஓரளவு செல்வச் செழிப்பானவராக இருந்தாலும்..தனது ஒரே மகளை அந்த ஊரிலேயே மிகவும் வளமான பரம்பரைப் பணக்காரரான செல்வக்குமரனின் மகனான வேலனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று மிகவும் ஆசைப் பட்டார். வேலனுக்கும்,வசந்தியின் மீது ஈடுபாடிருக்கவும் இருவரது திருமணமும் இனிதே நடைபெற்றது. விவசாயத்தை மட்டுமே தொழிலாக புரிந்து வந்து கொண்டிருந்தத் தன் பரம்பரையின் வழக்கத்தை மாற்றிச் சென்னையில் கன்ஷ்ட்ரக்ஷன் கம்பெனி ஒன்றை ஆரம்பித்தார் வேலன். விவசாயத்தையும் கைவிடாமல் திறமையாக இரண்டு தொழிலையும் கவனித்து வந்தார்.

அடுத்த சில ஆண்டுகளில் வசந்தித் தன் கணவனுடன் சென்னையில் குடியேறி விட்டாலும்.. விஸ்வநாதனைப் பற்றிக் கணவனிடம் அடிக்கடிக் கூறிக் கொண்டிருப்பாள். இருவரும் சேர்ந்து விஸ்வநாதனைச் சந்தித்துத் தங்களது

DO NOT COPY

கம்பெனியிலேயே வேலைக்குச் சேர்ந்து கொள்ளும் படி வற்புறுத்திய போது அவர் ஊரை விட்டுச் சென்று விடத் திட்டமிட்டிருப்பதாகக் கூறி மறுத்து விட.. அதற்கு மேல் அண்ணனுக்கு உதவி செய்ய முடியாமல் போனது வசந்திக்கு. சிறு வயதிலிருந்து உடன் விளையாடி.. தன் மீது அக்கறையுடனும், பாசத்துடனும் நடந்து கொள்ளும் ஒரே சொந்தமான வசந்தியின் மீது விஸ்வநாதனுக்குப் பாசம் அதிகம் தான். அதன் பின் இருவரது வாழ்க்கையும் வெவ்வேறு பாதைகளில் பயணிக்க, மறுபடி சந்திக்கும் வாய்ப்பற்றுப் போனது இருவருக்கும்.

வசந்திக்கும்,வேலனுக்கும் திருமணமாகி மூன்றாண்டுகள் கழித்துப் பிறந்தவன் கௌதம் பிரபாகரன். ஒரே மகன் என்பதாலும்,வளமும்,செழிப்பும் நிறைந்த அந்தக் குடும்பத்திற்கு ஒரே வாரிசு என்பதாலும்.. பிறப்பிலிருந்தே செல்வந்தனாக வளர்ந்தான். கான்வென்ட் பள்ளி,வெளி நாட்டில் கல்லூரி என.. அக்மார்க் பணக்கார வாடையுள்ளவனுக்கு.. புத்தியும்,எண்ணமும் தந்தையைப் போல..! எதிலும் வழக்கத்தை மாற்றி.. புதுமையைப் புகுத்த வேண்டும் என்பது தான்.

படிப்பு முடிந்ததும்,தந்தையிடம் பயிற்சிப் பெற்று.. தொழிலில் காலடி எடுத்து வைத்தவன் பெற்றதெல்லாம் வெற்றி தான். மிகவும் எளிமையானவன். பணக்காரன் என்கிற பந்தோபஸ்தில்லாமல் அனைவரிடமும் இயல்பாகப் பழகுபவன்.. அவனது எண்ணங்கள் அனைத்தும் ஈடேறி.. வாழ்க்கை அவனது போக்கில்.. பயணித்துக் கொண்டிருக்கையில்.. அவன் சந்தித்த முதல் அடி அவனது தந்தையின் மரணம். தனது தோழனாகத் தன்னுடன் பழகி.. அவனது விருப்பங்கள் அனைத்திற்கும் செவி சாய்த்து.. அவனைத் தொழிலுக்குப் பயிற்சி அளித்து.. அவனது வெற்றியை ரசித்தவர் அவனது தந்தை. அப்படிப்பட்டவர் தன்னை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து விட்டதை எண்ணி ஆடித் தான் போனான்.

முழுதாக இரண்டு வருடங்களானது அவனுக்குத் தன் தந்தை தன்னுடன் இல்லையென்பதைக் கிரகித்துக் கொள்ள.. மூன்றாவது வருட முடிவில் வசந்திக்குத் தன் மகனை மணக் கோலத்தில் காண வேண்டுமெங்கிற ஆசை தோன்றியது. முதலில் மறுத்த கௌதம் பின் அன்னையின் நச்சரிப்புத் தாங்காமல் ஒப்புக் கொண்டான். அடுத்த சில மாதங்களில் வசந்தி எண்ணியவாறு ஒரு சம்பந்தம் கிட்டியது.

வேலனின் தொழில் நண்பர்களில் ஒருவரான மனோகரின் மகள் சௌம்யாவைக் கண்டு விட்ட வசந்திக்கு அவள் தன் மகனிற்கு ஏற்றவள் என்றே தோன்றியது. அவளது எலுமிச்சை நிறமும்,அழகான விழிகளும் அவருக்குப் பிடித்துப் போய் விட.. மகனிடம் புகைப் படத்தைக் காட்டினார். முகத்தில் எவ்வித உணர்ச்சியுமற்று.. அவன் "உங்களுக்குப் பிடித்தால் சரி

DO NOT COPY

தான் அம்மா..”என்று கூறி விட.. பெண் வீட்டிலிருந்தும் சம்மதித்து விட. அடுத்த சில நாட்களில் நிச்சயதார்த்தத்திற்கே ஏற்பாடு செய்து விட்டார் வசந்தி. நிச்சயதார்த்தம் முடிந்த பின்பும் வேலை,வேலையெனத் திரிந்த கௌதமை அவனது வருங்கால மனைவியிடம் பேசுமாறு எவ்வளவோ வற்புறுத்தினார் வசந்தி. அவன் ம்,ம் எனத் தலையாட்டினானேத் தவிர.. பேச முயற்சிக்கவேயில்லை.. அன்னையின் பேச்சிற்கு மதிப்பளித்து அப்போதே அவன் சௌம்யாவிடம் உரையாடியிருந்தால் பின் நடக்கப் போகும் பிரச்சனைகளைத் தவிர்த்திருக்கலாம்.

அடுத்த மூன்று மாதங்களில் ஊரைக் கூட்டித் தன் ஒரே மகனின் திருமணத்தை விமர்சையாக நடத்தினார் வசந்தி. திருமணமான அன்று... முதன் முதலாகத் தன் மனைவியின் முகத்தை நிமிர்ந்து நோக்கிய கௌதமன் கண்டது அவளது கண்ணீர் படிந்த கன்னங்களைத் தான். அவன் பேச முயன்ற போதும்.. தலை குனிந்த படி அமைதியாகவே அமர்ந்திருந்தவள்.. உறக்கம் வருவதாகக் கூறிப் படுத்துக் கொண்டாள். அவனும் அதற்கு மேல் அவளை வற்புறுத்தவில்லை..

மறு நாள் விருந்திற்காக இருவரும் பெண் வீடு சென்றிருக்கையில்.. அவசர வேலை வந்ததால் அவன் வெளியே சென்று விட்டான். அதன் பின் என்ன நடந்ததோ கடவுளுக்கே வெளிச்சம்..! அவன் இரவு திரும்பி வருகையில்.. அவனது மனைவி அவளது வீட்டை விட்டு எங்கோ சென்று விட்டாள். என்னவென்று விசாரிக்கையில் கண்ணைக் கசக்கிக் கொண்டு அவளது பெற்றோர் அளித்த பதில்.. திருமணத்திற்கு முன்பு அவள் வேறு ஒருவனைக் காதலித்ததாகவும்..இப்போது அந்தக் காதலனுடனே ஓடிச் சென்று விட்டதாகவும் கூறினர்.

“ஏன் இந்த விசயத்தை மறைத்தீர்கள்..?”எனக் கூறி வசந்தி அவர்களுடன் கண்ணீரும்,கோபமுமாகச் சண்டையிட்டால் என்றால்.. கௌதமனோ.. இறுகிப் போய் அந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டான். திருமணம் முடிந்த இரண்டாவது நாளே.. மனைவி வேறு ஒருவனுடன் ஓடிச் சென்று விட்டாலென்பதை அவனால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

இந்திய நாட்டில்.. தமிழ்க் கலாச்சரத்தில்.. ஏகப்பட்ட கட்டுப்பாடுகளோடு.. பாரம்பரியத்தைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் சூழலில் வளர்ந்த ஒருத்தி.. கட்டியத் தாலியைக் கழட்டியெறிந்து விட்டு.. வேறு ஒருவனுடன் ஓடிச் சென்று விட்டாள்.. இந்தத் திருமணப் பந்தத்தின் புனிதத்தை உயிருள்ள வரைக் காப்பேன் என்று அக்னி சாட்சியாக மண மேடையில் உறுதியளித்து அத்தனை பேரின் நல்லாசிகளைப் பெற்றுக் கொண்டவளுக்கு இப்படி ஒரு கேடுகெட்டக் காரியத்தைச் செய்து கொள்ள எப்படி மனம் வந்தது..?

DO NOT COPY

காதலும்,காதலனும் தான் பெரிதென்றால்.. முன்,பின் அறியாதவனைத் திருமணம் செய்து கொண்டு எதற்காகத் தண்டிக்க வேண்டும்..?, கழுத்தில் கத்தி வைத்துப் பெற்றோர் மிரட்டியிருந்தாலும் கூட.. அவள் நிச்சயம் திருமணத்திற்குச் சம்மதித்திருக்கக் கூடாது.

அந்தப் புனிதமானத் தாலிக்கும்,அதைக் கட்டியவனுக்கும் என்ன மதிப்பளித்திருக்கிறாள்..?,பண்டைய காலத்துப் பெண்கள் அந்த மஞ்சள் கயிறை உயிராக மதித்தார்களாமே.. கணவன் மாய்ந்து போனால் உடன் கட்டை ஏறி விடுவார்களாமே..! அப்படிப் பட்ட மண்ணில் பிறந்தவளா அவள்..?, எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்து விட்டுப் போய் விட்டாள்..?

பெண்கள் புனிதமானவர்கள்.. அந்தப் பராசக்திக்கு நிகரானவர்கள்.. எப்போதும் மதிப்பளிக்க வேண்டும்.. மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று வேதம் போல் தந்தைத் தன் காதில் ஓதிய சொற்கள் அனைத்தும் நிமிடத்தில் மறைந்து போனது அவனுக்கு. சுயநலத்துக்காக.. தன் நன்மைக்காக எப்பேர்ப்பட்ட ஈனக் காரியத்தையும் செய்யத் துணிந்தவர்கள் பெண்களென்ற மோசமான மனநிலைக்கு வந்து விட்டான். ஏளனத்துடன் ஒரு புன்னகையைச் சிந்தியவன்.. அதன் பின் இறுகிய முகத்துடனும்,இடுங்கிய விழிகளுடனும்,புன்னகையை மறந்த போன இதழ்களுடனும் விறைப்புடனே வலம் வந்தான்.

அதன் பின்பு தாயைத் தவிர எந்தப் பெண்ணிடமும் அவன் முகம் கொடுத்துப் பேசுவது கூட இல்லை. தொழில் நிமித்தமாகப் பெண்களுடன் பழக நேர்ந்தாலும் அளவுடனே நிறுத்திக் கொண்டான். சேலை கட்டிய மாந்தரைக் கண்டாலே வெறுத்து ஒதுங்கும் மகனைக் கண்டு வருத்தம் கொண்டார் வசந்தி. போதாதற்கு தொழில் முறை நண்பர்களும்,சொந்த பந்தங்களும் துக்கம் விசாரிப்பது போல் தினமும் வருகை தந்து நடந்ததை விசாரித்து விட்டுச் செல்ல.. அவமானம் பிடுங்கித் தின்றது அவனுக்கு. நிம்மதியை வேண்டி புதிதாகக் குடிப் பழக்கத்தை வேறு அவன் பழகத் துவங்கவும் வருத்தத்தோடு சேர்ந்து பயமும் வந்து விட்டது வசந்திக்கு.

வெளிப்படையாக அவன் தாயிடம் தனது வருத்தத்தைக் காட்டா விட்டாலும் அவன் உள்ளூரக் குன்றிப் போயிருப்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. வீட்டிற்கு வராமல் அதிக நேரம் வெளியே செலவழிப்பதையும், அடிக்கடி வெளியூர், வெளி நாடு என நாட்களைக் கழிப்பதையும் கண்டு கொண்டவரால் அழுகையை அடக்க முடியவில்லை. ஒரே மகன்,செல்வ மகன், அவனது தந்தை இருந்திருந்தால் இப்படியொரு நிலை ஏற்பட நிச்சயம் அனுமதித்திருக்க மாட்டார்.

DO NOT COPY

அவனுடைய இந்த நிலைக்குத் தானே காரணமாகி விட்டோமே என்பதை எண்ணுகையில் மேலும் துக்கம் சூழ்ந்தது அவருக்கு. தொழில்,வீடு என நிம்மதியாக இருந்தவனைத் திருமணம் என்கிற பெயரில் பெரும்பள்ளத்தில் தள்ளி முட்டாள் தனம் விட்டதைக் கண்டு அந்தத் தாய் மனம் தினமும் தூக்கமின்றித் தவித்தது.

ஒரு முடிவுக்கு வந்தவராக மீண்டும் மகனுக்குப் பெண் பார்க்கும் படலத்தைத் தொடர்ந்தார். இந்த முறை கவனமாகத் தேர்ந்தெடுக்க நினைத்து.. மயிலாடுதுறையிலேயே தூரத்து உறவிலேயே பெண் எடுக்கத் தீர்மானித்தார். அவர் எண்ணப்படியே பெண்ணும் அமைந்து விட.. அதைப் பற்றி மகனிடம் பேச எத்தனித்து அவன் அறைக்குச் சென்றார்.

அன்னை கூறிய அனைத்தையும் இமை இடுங்க.. சிவந்த விழிகளுடன் கேட்டு முடித்தவன்.. “இந்தப் பெண்ணைப் பார்த்து நீ பேசு.. உனக்குப் பிடித்திருந்தால் அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்”எனக் கூறிக் கொண்டே சென்றவர்.. அறையில் மேஜை மீது வைக்கப் பட்டிருந்த கண்ணாடி ஜாடி உடைந்த சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து நோக்கினார்.

முகம் முழுக்க ஆத்திரத்தில் ஜொலிக்க உக்கிரப் பார்வையுடன் நின்றிருந்தவனின் கைகளில் வழிந்து கொண்டிருந்த ரத்தத்தைக் கண்டு பதறியவர்.. “என்ன கண்ணா.. இப்படி செய்து விட்டாயே..?,”என்று வேகமாக அருகே சென்று ரத்தத்தைத் துடைக்க எத்தனித்தார். அவரைத் தடுத்து நிறுத்தியவன்.. “இனியொரு முறை கல்யாணம்,கருமாதி எனக் கூறி என்னைத் தேடி வந்தீர்களானால்.. இதை விடக் கடுமையாக என்னை நானே தண்டித்துக் கொள்வேன்.. திருமணமாம் திருமணம்!, அப்படியொரு சம்பிரதாயத்தைத் துச்சமாக மதித்து அவமானத்தை ஏற்படுத்திவிட்டு ஓடினாளே ஒருத்தி.. அப்பேர்ப்பட்ட கேடு கெட்ட நிலையைச் சந்தித்து விட்டப் பின் எப்படி எனக்குப் பெண் மீதும்,திருமணத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படும்..?, ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.. போதும் அம்மா!, இனியும் என்னைத் துன்புறுத்தாதீர்கள்.. ஒரு கல்யாணத்தால்.. இன்று வரை நான் பட்டுக் கொண்டிருக்கும் அவமானம் போதும்.. வேறு ஒருவனைக் காதலித்ததை மறைத்து அந்தச் சண்டாளி திருமணம் முடிந்த மறுநாளே என்னை விட்டு ஓடிச் சென்றாள். ஆனால் பழியையும்,பாவத்தையும் அனுபவித்துக் கொண்டிருப்பதென்னவோ நான்..”என்றவனிடம்..

“அதற்காகத் தான் சொல்கிறேன் கண்ணா.. எப்பேர்ப்பட்ட பாவத்தைச் செயலை புரிந்து விட்டு ஓடினாள் அவள்..?,ஆனால் இன்று அவளது கணவனுடன் நன்றாகத் தான் வசித்து வருகிறாள். அவளது குடும்பத்துடனும் சமரசம் செய்து கொண்டு விட்டாள்.. அவளே நன்றாக வசிக்கையில் ஒரு பாவமும் அறியாத நீ

DO NOT COPY

எதற்காக துன்பப் பட வேண்டும்..?, வேண்டாம் கண்ணா.. நம் குடும்பம் வாரிசற்றுப் போக வேண்டாம்.. நான் சொல்வதைக் கேள்.. ஐந்து விரல்களும் ஒன்றாக இருப்பதில்லை.. நல்ல பெண்களும் இருக்கத் தான் செய்வார்கள்.. தயவு செய்து திருமணம் செய்து கொள்..”எனக் கெஞ்ச..

அழுத்தமாக மறுத்துத் தலையசைத்தவன்.. “இன்னொரு முறை விஷப் பரீட்சை செய்து கொள்ள நான் விரும்பவில்லை அம்மா.. காதலிக்காத பெண் யாரென்று வடிகட்டித் தேடியா திருமணம் செய்து கொள்ள முடியும்..?, அம்மா.. காதல்,கல்யாணம்,கண்றாவி என்பதைக் கேட்டாலே.. எனக்குக் காதிலிருந்து தொடங்கி மூளை வரை ஏதோ செய்கிறது.. வெறுப்பும்,ஒவ்வாமையும்,கோபமும்,சலிப்பும்,அறுவெறுப்பும் ஏற்படுகிறது.. பெண்களைக் கண்டாலே கண்களை மூடிக் கொள்ள வேண்டும் போல இருக்கிறது.. இந்த மனநிலை மாறும் என்று எனக்குத் தோன்றவில்லை.. உங்களுக்கு வாரிசு வேண்டுமானால்.. ஒரு அநாதைக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்துக் கொள்ளுங்கள்.. புண்ணியமேனும் கிட்டும்..”என்றவன் விறுவிறுவென வெளியேறி விட அயர்ந்து போனார் வசந்தி.

மகனது மனதில் இந்தத் திருமணமும்,அதன் விளைவும் எவ்வளவு பெரிய இன்னலை,வெறுப்பைத் தோற்றுவித்திருக்கிறது என்பதை முழுதாகப் புரிந்து கொள்ள முடிந்தது. எப்படி இதை மாற்றுவதென்று குழம்பியவரால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. மகன் படும் பாட்டைத் தாங்கிக் கொள்ளா முடியாமல் ஒவ்வொரு இரவும் கண்ணீர் உகுத்தார். அவனது மூர்க்கத்தையும், வெறுப்பையும் அதிகப் படுத்தும் அளவிலான சம்பவம் விரைவிலேயே நடைபெற்றது.

அவர்களது வீட்டில் வேலை செய்யும் கண்ணாம்பாளின் மகள் சுந்தரி. பார்க்கவும் கொஞ்சம் சுந்தரியாகத் தான் தெரிவாள். வீட்டு வேலை பார்த்தாலும் மகளை நல்ல பள்ளியில் படிக்க வைத்துக் கஷ்டமறியாமல் வளர்த்தாள் கண்ணாம்பாள். அதனாலோ என்னவோ.. தகாத உறவுகளால் தீய பழக்கங்கள் பலவற்றைக் கற்று வைத்திருந்தாள்.

பள்ளியில் தோழிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்த போது தோழி ஒருத்தி பணக்காரன் எவனையேனும் மயக்கித் திருமணம் செய்து கொண்டால்.. வாழ்வு முழுமைக்கும் கஷ்டப் படத் தேவையில்லை என்று விளையாட்டாகத் தெரிவிக்க.. அதை உண்மையிலேயே செய்து பார்த்தால் என்னவென்று அவளது குறுக்கு புத்தி யோசனை செய்யத் துவங்கி விட்டது. உடனேயே கண் முன்னே நினைவிற்கு வந்தது கௌதமனின் முகம் தான். இவன் விசயத்தில் கூடுதல் விசேஷம் என்னவென்றால் அவனது மனைவி திருமணமான இரண்டே நாளில் வீட்டை விட்டு ஓடி விட்டாள்.. நிச்சயம்

DO NOT COPY

விரக்தியில் இருப்பான், உடனேயே மயங்கி விடுவான் என்று கற்பனை செய்து கொண்டவள்.. அன்றே அன்னையுடன் அவன் வீட்டிற்குச் சென்றாள். அவ்வப்போது வீட்டிற்கு வருபவளை வசந்தியும் அன்புடன் நடத்துவதால் அனுகூலமாகிப் போனது அந்த இளங்குருத்திற்கு.

கௌதமின் அறையைப் பெருக்கச் செல்ல எத்தனித்த அன்னையிடமிருந்து விளக்குமாற்றை வாங்கிக் கொண்டவள்.. முன்னே நடந்து செல்ல.. அவருக்கு ஆச்சரியமாகிப் போனது, பொதுவாக இப்படி வரும் சமயங்களில் வீட்டுக்காரர்கள் கொடுக்கும் சிற்றுண்டிகளைக் கொறித்துக் கொண்டு காலாட்டியபடி சமையல் மேடையில் அமர்ந்து கொள்பவள்.. இன்று வேலை செய்வதாகக் கூறவும் ஒன்றும் கூறாமல் சரியென்று விட்டார்.

கௌதமனின் அறைக்குள்.. சிரித்தபடி காலடி எடுத்து வைத்தாள். கட்டிலில் அமைதியாகக் கண் மூடிச் சாய்ந்திருந்தவனின் அருகே சென்று அவன் முகத்தைக் காண.. அருகில் அரவம் உணர்ந்து திடுக்கிட்டுக் கண் விழித்த கௌதம் அவளைக் கண்டு “ஏய்.. யார் நீ..?,இங்கே என்ன செய்கிறாய்..?,வெளியே செல்..”என்று கத்தத் துவங்க.. பயம் கொண்டவள்.. “நா... நான் கண்ணாம்பாளின் மகள்.. இந்த அறையைச் சுத்தம் செய்ய வந்தேன்..” என்றதும் “ம்ம்,சீக்கிரம் வெளியே செல்..”என்று முகச் சுழிப்புடன் கூறி விட்டு அவன் எழுந்து அமர.. சரியெனத் தலையாட்டியவள்.. அறையைப் பெருக்கும் சாக்கில்.. அவனையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் தன்னையேக் காண்பதை உணர்ந்தவன் அவளை நிமிர்ந்து நோக்க.. அதையே எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தவள் போன்று.. அவள் ஒரு வெட்கச் சிரிப்பை உதிர்த்து.. அவனைக் கண்ணால் அழைக்க.. அவன் சிவந்த விழிகளுடன் அவளை நோக்கி எழுந்து வந்தான்.. நினைத்தது சுலபத்தில் நிறைவேறி விட்ட இறுமாப்பில் அவள் எழுந்து நிற்க.. அருகே வந்து அவளை உறுத்து விழித்தவன்.. அவளது தலை முடியைப் பற்றித் தரதரவென இழுத்துக் கொண்டுக் கீழே சென்றான்.

அதே வேகத்தில் அவளை உதறித் தள்ள.. எதிரேயிருந்த சுவற்றில் மோதிக் கீழே விழுந்தாள் அவள்.. பயமும்,பதட்டமுமாய் அவனைப் பார்க்க.. அவனோ.. மனித நிலையைக் கடந்த மிருகமாக மாறியிருந்தான். “என்ன வயதாகிறது உனக்கு..?,ம், கண்ணால் அழைக்கிறாயா..?,வயது வந்ததும் இந்தக் கீழ்த்தரமான குணமும் உடன் வந்து விடுமோ உன் இனத்திற்கு.. வெட்கம் கெட்ட ஈனப் பிறவிகள்.. வெளியே செல்.. இனி ஒரு நிமிடம் கூட என் வீட்டில் நீ இருக்கக் கூடாது வெளியே செல்..”என்று அந்த வீடே அதிருமளவிற்குக் கூச்சலிட்டான்.

என்ன நடந்ததென்று வெளியே எட்டிப் பார்த்த அனைவரும் கௌதமனின் கோபத்தைக் கண்டு உறைந்து நிற்க.. அந்தப் பெண்ணோ.. அவனைக் கோபமாக

DO NOT COPY

முறைத்து "உன் மனைவி தான் உன்னை விட்டு ஓடி விட்டாளே.. என்னுடன் குடும்பம் நடத்துவதில் என்ன கஷ்டம் உனக்கு...?"என்றுத் திமிராகக் கூறியதைக் கேட்டு.. "என்னப் பேச்சு பேசுகிறாய்..?"என்று கண்ணாம்பாள் பதற.. வசந்திக்கு மகன் அடுத்து என்ன செய்யப் போகிறானோ என்று பயமே வந்து விட்டது. அவர் அஞ்சியபடி.. அவளையேக் கோப விழிகளால் நோக்கியவன்.. "15 வயதைக் கூடத் தாண்டாத.. உனக்கு.. எப்பேர்ப்பட்ட கேடு கெட்ட எண்ணங்கள்.. உன் பிறவி அப்படி..!, சேலை,தாவணிக்கே உண்டான குலப் பெருமை!,ம்?,இனியொருத்தி என்னை அவமானப் படுத்துவதைப் பார்த்துக் கொண்டு நிற்க.. நான் சாதுவல்ல.."என்றவன்.. அவள் மீது பூச்சாடியைத் தூக்கி எறிய.. வேகமாக அவளை வசந்தித் தன் பக்கம் இழுத்து விட்டதால் அவள் தப்பித்து விட்டாள்..

"உன்னை.."என்று அவள் கழுத்தைப் பற்ற வந்தவனிடமிருந்து தப்பியவள்.. வாசலை நோக்கி ஓடியவள்.. திரும்பி "அம்மா.. இவன் ஒரு பைத்தியம் போலும்.. ராட்சசன், மிருகம்.."என்று கத்தினாள்.. கௌதமனின் தோளைப் பற்றிச் சாந்தமாக்க முயன்ற வசந்தி தோற்றுப் போக.. மகளிடம் சென்ற கண்ணாம்பாள் மிதமிஞ்சிய கோபத்தில் அவளைப் பளாரென்று அறைந்தார். பின் இருவரின் புறமும் திரும்பி "என்னை மன்னித்து விடுங்கள் அம்மா.."என்று கூறி மகளையும் இழுத்துக் கொண்டு வெளியேறி விட்டார்.

ஆத்திரத்திலும்,கோபத்திலும் கை முஷ்டி இறுகத் தலையைக் கோதியபடித் தன்னறையை நோக்கிச் செல்லும் மகனை செய்வதறியாது நோக்கிக் கொண்டிருந்தார் வசந்தி. அதன் பின் வீட்டு வேலை அனைத்திற்கும் ஆண்களையே நியமித்து விட்டான். வசந்தியைத் தவிர அந்த வீட்டில் பெண் வாசனையே இல்லாமற் போனது.

மகனது மனநிலையை இன்னும் மோசமாகும் அளவிற்கு அடுத்தடுத்து நடந்தேறிய சம்பவங்களால் நம்பிக்கையற்றுப் போன வசந்தி.. மேலும் வாடலானார். அன்னையின் உடல் நிலை சீர் குலைவதைக் கண்ட கௌதம் "அம்மா.. நான் எந்தக் குறையுமில்லாமல் நன்றாகத் தான் இருக்கிறேன்.. நீங்கள் எதற்காக உங்கள் உடலைக் கெடுத்துக் கொள்கிறீர்கள்..?,வருத்தபடுவதால் ஒன்றும் நடக்கப் போவதில்லை.."என்று சமாதானமும்,மிரட்டலுமாய் கூறி விட்டுச் சென்றான். ஆனாலும் அவர் தேறாததைக் கண்டு "என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தால் தான் நீங்கள் இப்படி வருத்தப் பட்டுக் கொண்டிருப்பீர்கள்.. அமெரிக்காவிற்குச் சுற்றுப் பயணம் சென்று வாருங்கள்.."என்று வற்புறுத்தி அனுப்பி வைத்தான்.

அப்படி வந்த சுற்றுப் பயணத்தின் போது தான் எதிர்பாரா விதமாக விஸ்வநாதனைச் சந்திக்க நேர்ந்தது வசந்திக்கு. இத்தனை நாட்களாக மனதை

DO NOT COPY

அழுத்திக் கொண்டிருந்த பாரம் அனைத்தையும் தமையனிடம் கொட்டியவர்.. என்ன செய்வதென்று அவரிடமே வினவினார்.

அனைத்தையும் கேட்டு முடித்த விஸ்வநாதனுக்கு.. அவனைச் சமாளிக்கக் கூடிய ஒரே பெண் தன் அருமை மகள்.. நித்யாவாக மட்டுமே இருக்க முடியுமென்று தோன்றியது, இந்தக் காலத்துப் பெண்கள் அனைவரும் மோசமானவர்களென்று எண்ணி வைத்திருக்கும் அவனை மாற்ற.. பெண்களென்றால் உங்களுக்குக் கைப்பாவையா ஆண் ஜென்மங்களே என்று தெருத்தெருவாகச் சென்று மைக் பிடித்துக் கூடப் பேசத் தயாராயிருக்கும் தன் மகளேச் சரியாக இருப்பாளென்று தோன்றியது.

இருவரும் வேறு வேறு துருவங்கள்.. பெண்கள் ஆண்களை மயக்கவும்,ஏமாற்றவும் மட்டுமே பிறவி எடுக்கிறார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கும் கௌதமன்.. அவனது எண்ணங்களுக்கு மாறுதலான ஒருத்தியைச் சந்திக்கையில் மனம் மாறுவான். பெண் மீதும்,திருமணத்தின் மீதான நம்பிக்கை அவனுக்கு மாறி விடும்.. நிச்சயம் அவனுடன் மோதி மகள் ஜெய்த்து விடுவாளென்று நம்பினார் அவர்.

அப்போது அவர் நினைக்கவில்லை. கௌதமனைக் கண்ட மறுநொடி இவனே தன் மகளுக்குக் கணவனாக வர வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொள்ளப் போவதை!

அதன் பின் வசந்தியிடம் தன் மகளை இந்தியா அழைத்துச் செல்லுமாறு கூற.. அவரும் தயக்கத்துடனே அதற்குச் சம்மதித்தார். அவரது தயக்கத்தைப் புரிந்து கொண்ட விஸ்வநாதன் "உன் மகன் என் மகளை உன் வீட்டில் சேர்த்துக் கொள்ள மாட்டானென்று தானே தயங்குகிறாய்..?,அவளைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரிய வேண்டாம்.. அவளை நீ உன் வீட்டிலும் தங்க வைக்க வேண்டாம்.. இருவரையும் தொழில் ரீதியாகச் சந்திக்க வைக்கலாம்.. வேறு வழியில்லை.. இருவரும் அருகேயிருந்தாக வேண்டும்.. ஏதோ ஒரு வகையில். அது ஒரே வீட்டில் என்றில்லாத பட்சத்தில் ஒரே அலுவலகத்திலேனும்... நித்யா.. அவனுடன் பழகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியாக வேண்டும்.. எது எப்படி நடக்க வேண்டுமென்பதைப் பிறகு திட்டமிட்டுக் கொள்ளலாம்.. முதலில் என் மகளை இதற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும்.."என்றவர் உடனேயே நித்யாவிடம் அனைத்தையும் கூறினார்.

வசந்தி அத்தைக் கூறி முடித்ததும் கன்னத்தில் கை வைத்துக் கொண்ட நித்யா "என்ன..?,வீட்டில் ஒரு பெண் வேலையாள் கூட இல்லையா..?,அலுவலகத்திலேனும் இருக்கிறார்களா..?,விட்டால் உங்கள் மகன் உலகத்துப் பெண்கள் அனைவரையும் பூ ஜாடியை வைத்தேக் கொன்று

விடுவார் போலும்..''என்று எள்ளி நகையாட.. "நித்யா..''என்று அடக்கினார் விஸ்வநாதன்.

அவனது மனநிலையை மாற்றி அவனைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க அவள் இந்தியா செல்ல வேண்டும் என்கையில் வெகுண்டாள். அதுவரை அத்தை செய்து கொடுத்த எள்ளுச் சீடையை மென்று கொண்டே கதைக் கேட்டுக் கொண்டிருந்தவள்.. "இது என்ன முட்டாள்தனம்..?,நான் என்ன மனநிலை மருத்துவரா..?,நான் எப்படி அவன் மனநிலையை மாற்ற முடியும்..?''என்றவள் தந்தையின் முறைப்பை உணர்ந்து "சரி.. அவர்..''என்றாள்.


"உன்னால் நிச்சயம் முடியும் நித்யா. பெண்களிடமும், திருமணத்தின் மீதும்.. அவனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.. அதற்கு மனநிலை மருத்துவராக இருக்க வேண்டாம். பெரிய வாயாடியாக இருந்தால் போதும்.. உன்னைப் போல்..''என்றவரிடம் முடியாது என்று ஒரேடியாக மறுத்து விட்டாள். ஆனால் அதைக் கண்டுகொள்ளாது.. வசந்தியுடன் அவர் அவளை இந்தியா அனுப்பி வைக்கத் திட்டமிட.. மகள் எவ்வளவோ வாதாடி.. போராடித் தோற்று.. கடைசியில் சரியெனத் தலையையும் ஆட்டி வைத்தாள்.

தந்தையிடம் கோபத்துடனே டாட்டா காட்டி "சீக்கிரமே உங்கள் தாய் நாட்டுக்கு வந்து சேருங்கள்.. அத்தை உங்களுக்காக வத்தக் குழம்பு சமைத்து வைத்திருப்பார்கள்..''என்று பல்லைக் காட்ட.. மகளின் காதைத் திருகி சிரிப்புடன் விடை கொடுத்தார் விஸ்வநாதன். விமானத்தில் வசந்தி அத்தையின் அருகே அமர்ந்துக் கண்களை மூடிக் கொண்டவளுக்கு.. திடீரென்று ஒரு யோசனை தோன்றியது... அது கௌதமனைச் சந்திக்கையில் மறக்காமல் தலைக் கவசம் அணிந்து கொள்ள வேண்டும் என்பது தான்!!!!

DO NOT COPY



# அத்தியாயம் – 3




**நின் திருமேனி காண வேண்டி..**
**நின் குழலிசைக் கேட்க வேண்டி..**
**தவிப்புற்று நான் காத்திருக்கையில்..**
**எனை விடுத்து.. நீ..**
**கோபியர்களுடன் கூடிக் களிப்பது..**
**தகுமோ கண்ணா…?**
**மனம் ஏங்கி.. மேனி வாடி..**
**நான் உயிர் விடும் முன்.. வந்து விடு!**

**த**ன் முன்னே இளம் பச்சை நிறச் சுடிதாரில் கூரான விழிகளுடன் அவன் மீது ஆராய்ச்சிப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த நித்யாவை நிமிர்ந்து நோக்கினான் கௌதம் பிரபாகரன். அதுவரை அவன் முகத்தில் தெரிந்த எரிச்சலையும்,கோபத்தையும் அதன் பின் அவளது பயோடேட்டாவைப் பார்த்து விட்டு உண்டான சிறு யோசனை என அனைத்து உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் கொண்டிருந்தவள் பின் பார்வையைச் சாதாரணமாக்கி அவன் விழிகளைச் சந்தித்தாள். ஒரு தொண்டைச் செறுமலுடன் ஆரம்பித்தவன்.. "ஆண்கள் மட்டுமே இந்த வேலைக்கு விண்ணப்பிக்கலாம் என்று நாங்கள் அளித்திருந்த விளம்பரத்தை நீங்கள் பார்க்கவில்லையா..?"என்று சிறிது எரிச்சல் கலந்த குரலில் அவளிடம் வினவினான்.

ஆமாமாம்! ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டிய வேலை தான் இது! ஆனால் வசந்தி அத்தை தான் இந்த விடாக்கண்டனை அணுக இதை விட நல்ல வாய்ப்பு கிடைக்காது கண்ணே என்று கெஞ்சி இந்த வேலைக்கு அவளை விண்ணப்பிக்க வைத்தார். இதை எப்படி அவனிடம் தெரிவிப்பது..?,

இதழ்களைக் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்தவளுக்கு நியூயார்க்கிலிருந்து கிளம்பிய அன்றிலிருந்து முந்தைய நாள் வரை நடந்த அத்தனை சம்பவங்களும் நினைவிற்கு வந்தது. பலமணி நேரப் பயணத்திற்குப் பின் சலிப்புடன் இறங்கியவளை வரவேற்றது சென்னை விமான நிலையம். முதன்முறையாகத் தமிழ்நாட்டிற்கு வருகை தருவதால்.. விமான நிலையத்தில்

DO NOT COPY

தன்னைச் சுற்றிலும் ஒலித்தத் தமிழ்க்குரல்களைக் கண்டுக் கொஞ்சம் பரவசமாகத் தான் இருந்தது அவளுக்கு.

தூய தமிழில்லாவிடினும் அந்த மெட்ராஸ் தமிழே அவளது காதுகளுக்குத் தேன் வந்து பாய்வது போலத் தானிருந்தது. நம் நாடு,நம் மக்களெனத் தந்தை அடித்துக் கொள்வதற்கானக் காரணம் அவளுக்கும் மெல்ல புரிய ஆரம்பித்தது. பைகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தவளுக்கு அந்தப் பரபரப்பும்,சென்னை டிராபிக்கும்,சுள்ளெனச் சுட்டெரித்த வெயிலும் புதுமையாகத் தானிருந்தது. சுற்றும்,முற்றும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்தவளை அழைத்த வசந்தி "நிதும்மா நாம் இப்போது மயிலாடுதுறை செல்லப் போகிறோம் அதாவது உன் தந்தை பிறந்த ஊருக்கு."எனவும் உற்சாகம் தொற்றிக் கொண்டது நித்யாவிற்கு. வேகமாகச் சரியெனத் தலையாட்டினாள்.

அதன் பின் வசந்தி அத்தையின் பிறந்த வீடான மாளிகைக்குச் சென்று அங்கேயே தங்கி ஒரு வாரம் முழுதையும் மகிழ்ச்சியாகக் கழித்தாள். காவிரி ஆற்றங்கரையையும்,கோவில் குளங்களையும் சுற்றித் தீர்த்தவள் தந்தை படித்தக் கல்லூரியையும்,அவர் வாழ்ந்த இடங்களையும் கூடக் கண்டாள். தண்டட்டி அணிந்த காதுகளுடன் பல் போனக் காலத்தில் கூடத் தங்களது அரட்டையை விடாது தொடர்ந்து கொண்டிருந்தக் கிழவிகளுடன் வம்பு செய்த படி அமர்ந்திருப்பதுக் கூட அவளுக்கு சந்தோசமாகத் தானிருந்தது.

வீட்டில் வேலை செய்யும் ஆட்களிலிருந்துத் தொடங்கி வயல்,வரப்பில் நடக்கையில் "கஞ்சி குடிக்கிறியா தாயி..?"என்று அன்போடு விசாரிக்கும் தாய்மார்கள் வரை அனைத்தும் அனைத்துமே அவளுக்குப் பிடித்துப் போனது. உயிரற்றப் பொருட்களுக்குக் கூட அங்கே உணர்விருப்பதாகத் தோன்றியது அவளுக்கு, எப்படித் தந்தை இந்தச் சொர்க்க பூமியை விட்டு விட்டு வெளி நாடு சென்றார்..?, இங்கே பிறந்து,வளர்ந்திருக்காவிட்டாலும்.. இது தான் உனைச் சார்ந்த இடம்,இவர்கள் தான் உன் மக்களென இயல்பாக மனதில் எழுந்த எண்ணங்களை அவளால் கண்டு கொள்ள முடிந்தது.

அதே பூரிப்புடனும்,பரவசத்துடனும் தந்தையுடன் உரையாடினாள். தனது மடிக்கணிணியில் தந்தையின் முகத்தைக் கண்டதும் உற்சாகம் கொண்டவள் தான் கண்ட இடங்களையும்,பழகிய மனிதர்களையும் பற்றி சந்தோசம் ததும்பிய குரலில் கூற.. அவருக்கும் சொந்த ஊருக்கு விரைவில் திரும்ப வேண்டுமென்கிற எண்ணம் மேலோங்கியது.

அனைத்தையும் தந்தையுடன் பகிர்ந்து கொண்டதும் வசந்தியையும் அழைத்து அவருடன் பேச வைத்தாள். "என்னம்மா அடுத்து என்ன செய்வதாக இருக்கிறாய்..?"என்று விஸ்வநாதன் வினவியதற்குத் தயங்கியபடி நித்யாவை

DO NOT COPY

ஏறிட்டவர் பின் மெல்லிய குரலில் "நம் பங்களாவிற்கு எதிர் வீடு காலியாக இருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது அண்ணா. அதனால் அந்த வீட்டிலேயே நித்யாவைத் தங்க வைக்கத் திட்டமிட்டிருக்கிறேன். என் கண் முன்னேயே தானிருப்பாள்.. நீங்கள் கவலைப்பட வேண்டாம்.."என்று கூற.. அதுவரை சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்த நித்யாவிற்குக் கோபத்தில் முகம் சிவந்தது.

"விருந்தாளியாக வந்திருக்கும் என்னை உங்கள் வீட்டில் தங்க வைத்துக் கொள்ள முடியாத அளவிற்கு என்ன கஷ்டம் அத்தை உங்களுக்கு?, இதை நீங்கள் ஏன் முன்னமே என்னிடம் தெரிவிக்கவில்லை..?,இதற்காகத் தான் சொந்த மகளைப் போல் இந்த ஒரு வாரமாக என்னை சீராட்டினீர்களா..?"என்று கோபமாகக் கூறியவளை "நித்யா.."என்று விஸ்வநாதன் அடக்க.. "அய்யோ.. அப்படியெல்லாம் இல்லையம்மா.."என்றுப் பதறிய வசந்திக்குக் கண்ணீரே வந்து விட்டது.

"பெரியவர்களிடம் இப்படித் தான் மரியாதையில்லாமல் பேசுவாயா நித்யா..?, என்னப் பழக்கம் பழகி வைத்திருக்கிறாய்..?,அத்தையின் வயதென்ன..?,உன் வயதென்ன..?,முதலில் நாவடக்கத்தைக் கற்றுக் கொள்.. வேலை பார்க்கும் பெண்களைக் கூட வீட்டிற்குள் அனுமதிக்காத கௌதம் உன்னை மட்டும் எப்படி அனுமதிப்பான்..?,என்ன சொல்லி உன்னை அந்த வீட்டிற்குள் சேர்ப்பாள் அத்தை..?,ஊர் சுற்றிப் பார்க்க நீ இந்தியா செல்லவில்லை.. வந்த காரியம் மறந்து போனதா உனக்கு..?, அத்தை இதைப் பற்றிக் கூறும் போது இந்த யோசனையை அவளிடம் கூறியதே நான் தான்.. முதலில் அவளிடம் மன்னிப்புக் கேள்.."என்று அதட்ட.. நிலைமயைப் புரிந்து கொண்ட நித்யாவிற்குத் தனது முன் கோபத்தை நினைத்துத் தன் மீதே கோபம் வந்தது,

பின் தயங்கியபடி வசந்தியின் முகத்தை நோக்கி "மன்னித்து விடுங்கள் அத்தை.. நான்.. நான் அறிவற்றவள்.. இப்படித் தான் அவ்வப்போது யோசிக்காமல் பேசி விடுவேன்.. என்னை மன்னித்து விடுங்கள் அத்தை. அப்பா இதைப் பற்றி என்னிடம் எதுவும் கூறவில்லை. அதனால் தான்.. சாரி அத்தை.." என்று நாடியைப் பற்றிக் கொஞ்ச.. கண்ணீரைத் துடைத்துச் சிரித்த வசந்தி "எனக்குத் தானம்மா வருத்தம்.. இத்தனை வருடங்களுக்குப் பிறகு சந்தித்த என் அண்ணன் மகளை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று கவனித்துக் கொள்ள முடியவில்லையே என்று.. நீ தான் என்னை மன்னிக்க வேண்டும் இதற்காக.." என்று கூற.. "கவலையை விடுங்கள் அத்தை.. உங்கள் மகனின் அய்யனார் புத்தியை மாற்றி.. சீக்கிரமே உங்கள் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கிறேன் பாருங்கள்" என்று சவால் விடுத்தாள்.

இருவரையும் கண்டு சிரித்த விஸ்வநாதனிடம் தனது அடுத்தத் திட்டத்தைப் பற்றித் தெரிவித்தார் வசந்தி. கௌதமனது அலுவலகத்தில் வேலை வாய்ப்பு இருப்பதாக அவனது அலுவலக ஜி.எம் சொன்னதாகவும்.. நித்யாவை அதற்கு

DO NOT COPY

விண்ணப்பிக்க வைக்கப் போவதாகவும் தெரிவிக்க.. “மிகவும் நல்ல யோசனை”என்று அவரும் உற்சாகப் படுத்தினார். ஹ்ம்ம்,தங்கை மகன் மீது இருக்கும் அக்கறையில் ஒரு சதவீதமாவது இந்த அப்பாவிற்கு என் மீது இருக்கிறதா..?, இவன் திருமணம் செய்து கொள்வதற்காக அவள் ஊர் விட்டு ஊர் வந்ததோடு மட்டுமில்லாமல்.. இப்போது தனி வீட்டில் தங்கி.. அவன் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்து.. கௌதம் மவனே நீ மட்டும் என் கையில் சிக்கினால் அப்படியே இடியாப்பம் பிழிந்து விடுவேனென்று கறுவிக் கொண்டாள்.

மகளின் முகத்தைக் கண்ட விஸ்வநாதன் “என்னம்மா..?”என்று விசாரிக்க.. தந்தையும்,மகளும் உரையாடட்டுமென இங்கிதமாக எழுந்து சென்றார் வசந்தி. செல்லக் கோபம் கொண்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டவள்.. “எதற்காக அப்பா இந்தத் தேவையில்லாத வேலை..?,என்னை மட்டும் தனியாகத் தங்க வைத்தால் எனக்குப் பயமாக இருக்காதா..?,எந்தத் தைரியத்தில் என்னை இப்படி இஷ்டப்படி அனுப்புகிறீர்கள்..?”என்று வினவ...

“பிராஜக்ட் செய்வதாகக் கூறி நியூஜெர்சியில் நீ ஆறு மாதங்கள் தனியாகத் தங்கிக் கொள்வதாக அடம்பிடித்த போது நான் சம்மதிக்கவில்லையா அம்மா..?, அது போலத் தான் இதுவும்.. அதுமட்டுமல்லாமல்.. நீ பயப்படுவதாகக் கூறுவதை நம்புமளவிற்கு நான் முட்டாளல்ல கண்ணே..”என்று கூற.. “நம்ப மாட்டீர்களே..”என்று முறுவலித்தாள் நித்யா.

அதன் பின் அனைத்து ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்றன. அடுத்த வாரத்தில் மயிலாடுதுறையிலிருந்து சென்னை வந்து சேர்ந்தாள். கௌதமனது பங்களாவிற்கு எதிர்புறத்தில் அமர்ந்திருந்த வீட்டில் அவள் வசிக்க ஏற்பாடு செய்தார் வசந்தி. அவளது தேவைகள் அனைத்தையும் தானே கவனித்துக் கொள்வதாகவும்.. அவள் எதற்காகவும் வருத்திக் கொள்ளக் கூடாதென்றும் தெரிவித்துச் சென்றார். நேரத்திற்கு அவளுக்குச் சாப்பாடு,டிஃபன் என அனைத்தையும் அவர்களது பங்களாவில் வேலை பார்க்கும் வைகுந்தனிடம் கொடுத்தனுப்பினார். கௌதமன் வீட்டில் இல்லாத சமயங்களில் அவளை வந்து பார்த்துச் சென்றார்.

அவர் கூறிய படி வேலைக்கு விண்ணப்பித்து விட்டுக் காத்திருந்த நித்யாவிற்கு நேர் முகத்தேர்விற்கான அழைப்புக் கடிதமும் வந்தது. கௌதமன் அறியாமல் வசந்தி அம்மாவின் வேண்டுகோளின் படி அதை அனுப்பியிருந்தவர் கம்பெனியின் ஜி..எம் அழகர்சாமி. அழைப்புக் கடிதம் வந்து விட்டதை ஆவலுடன் அவள் தெரிவிக்கையில் மகிழ்ச்சியும்,பயமுமாய் தலையாட்டினார் வசந்தி. “நிதும்மா.. அவன் கோபமாக ஏதேனும் கூறி உன்னை வேதனைப் படுத்தினால் தயவு செய்து எனக்காகப் பொறுத்துக் கொள். அவன் உன்னை இந்த வேலைக்குச் சேர்த்துக் கொள்வான் என்று எனக்கு நம்பிக்கையே

DO NOT COPY

இல்லை.. ஆனால் கடவுள் விட்ட வழி.. இதை ஒரு வாய்ப்பாக நினைத்துக் கொண்டு தான் உன்னை அனுப்புகிறேன்.. பின் நடப்பதை அவன் தான் தீர்மானிக்க வேண்டும்.. நாராயணா..!"என்று கைக் கூப்பி வேண்டிக் கொண்டவரைக் கண்டு சிரித்தவள்.. "அத்தை.. உங்கள் மகன் கட்டாயம் எனக்கு வேலை கொடுப்பார்.. அப்படியே இந்த வேலை கிடைக்காமல் போனாலும் உங்கள் மகனை அணுக வாய்ப்பற்றுப் போய் விடாது.. பயப்படாதீர்கள்.."என்று சமாதானம் கூறினாள்..

மயிலாடுதுறையிலிருந்து சென்னை வந்து சேர்ந்த இந்தப் பத்து நாட்களில் ஒரு முறை கூட கௌதமனை அவள் பார்க்கவேயில்லை. "என் மகனது கார் வந்து விட்டது"என்று வசந்தி பதறி அடித்துக் கொண்டு ஓடுகையில் தானும் வெளியே வந்து எட்டிப் பார்க்கையில்.. விறுவிறுவெனப் படிக்கட்டில் ஏறும் நெடிய உருவத்தின் பின்புறத்தைத் தான் அவள் கண்டது. முகம் தெரியவில்லையே என்று வருத்தம் தோன்றினாலும்.. ஆமாம்.. இந்த உம்மணாமூஞ்சிப் பூ ஜாடி கொண்டானைச் (கங்கை கொண்டான்,வாதாபி கொண்டான் போல் இப்படி ஒரு பெயர் வைத்து விட்டாள் நிது) சந்திப்பதில் என்ன அவசரம்?, பொறுமையாகப் பார்த்துக் கொள்ளலாமென்று விட்டு விட்டாள்.

நேர்முகத் தேர்வன்று காலை அவசரமாக அவளது வீட்டிற்குள் நுழைந்த வசந்தி அவளிடம் ஒரு தொலைபேசி எண்ணைக் கொடுத்தார். "இது நம் ஜி.எம் அழகர்சாமியின் எண்.. நீ அங்கே சென்ற பின் என்ன உதவி வேண்டுமானாலும் அவரிடம் கேள். நீ திரும்பி வருவதற்குக் கார் ஏற்பாடும் நான் செய்து விட்டேன்.."என்றவரை அமர வைத்துத் தண்ணீர் கொடுத்தவள்.. "அத்தை.. நான் நன்றாகவே என்னைச் சமாளித்துக் கொள்வேன்.. நீங்கள் ஏன் பதட்டப்படுகிறீர்கள்..?,உங்கள் மகனுக்கு நான் கியாரண்ட்டி. கவலைப் படாமல் இருங்களெனச் சமாதானம் செய்தவள்.. கார் அனுப்புவதாகக் கூறியவரிடம் ஆட்டோவில் செல்வது தான் நல்லதென வாதாடி.. ஆட்டோவிலேயே அலுவலகத்தை அடைந்தாள்.

நேர்முகத் தேர்விற்காகக் காத்திருந்த ஆண்கள் அனைவரும் அவளை வித்தியாசமாகப் பார்த்ததை அவள் கண்டுகொள்ளவேயில்லை. பின்னே..?, ஆண்கள் மட்டும் தான் கலந்து கொள்ள வேண்டுமென்று கொட்டை எழுத்தில் அவன் குறிப்பிட்டிருந்ததை மதிக்காமல்.. இப்படிச் சட்டமாக வந்து அமர்ந்திருந்தால் பார்க்கத் தான் செய்வார்கள்..!

தனக்கான அழைப்பு வந்ததும் நிதானமாக நடந்து சென்று அவனது அறைக் கதவில் கை வைத்தாள்.. "கம் இன்" என்று ஒலித்த கௌதமனின் கணீர்க் குரலை வியந்தபடியே உள்ளே நுழைந்தவளை வரவேற்றது அவனது அழுத்தமான பார்வையும்,இறுகிப் போன இதழ்களுமே.

DO NOT COPY

இதை ஓரளவு எதிர்பார்த்தவள் தான் என்பதால் நேர் கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்ண்டையுமாக அவன் முன்பு சென்று அமர்ந்தாள். எதுவும் கூறாமல் கையை நீட்டியவனிடம் புரிந்து கொண்டு தனது பயோடேட்டாவைக் கொடுத்தாள். அதை வாங்கிப் படித்தவனின் முகத்தைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தவளுக்குச் சத்தியமாகத் திகைப்பு தான்.

மயிலாடுதுறையில்.. அவர்களது கிராமத்தில் ஊர் எல்லையில் வீற்றிருக்கும் அய்யனாரைக் கண்ட போது கௌதமன் இப்படித் தானிருப்பானென்று கற்பனை செய்து வைத்திருந்தவளுக்கு... ஆறடி உருவத்தில்.. அழுத்தமான கருவிழிகளுடன்.. அடர்த்தியானப் புருவங்களுடன்.. சரியாக வாரப் படாமல் களைந்து கிடந்த கேசத்துடன்.. அளவாகக் கத்தரிக்கப் பட்டிருந்த மீசைக்கடியில் அமைந்திருந்த வடிவான இதழ்களுடன்.. ஓவியத்தில் தீட்டப்பட்டிருக்கும் கம்பீர ஆண்மகனைப் போல் தோற்றம் கொண்டிருந்தவனைக் கண்டு கொஞ்சம் வியப்புற்றாள் என்று தான் சொல்ல வேண்டும்.

இவனுக்கு அருள்மொழிவர்மன் வேடம் பொருத்தமாக இருக்குமோ என்று அவள் சிந்தனைவயப்பட்ட சமயம் அவன் நிமிர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

அவனது கேள்விக்குப் பதிலளிக்காமல் சிந்தனையில் ஆழ்ந்து விட்டவளை எவ்வித உணர்ச்சியுமற்றப் பார்வையில் நோக்கிக் கொண்டிருந்தான் அவன். ஒரு நிமிடம் தயங்கி அவன் முகம் நோக்கியவள் அவன் கண்களில் தெரிந்த எரிச்சல் கலந்த கோபத்தைக் கண்டு நன்றாகவேத் தலை நிமிர்ந்து "ஆண்கள் மட்டுமே செய்யக் கூடிய வேலை என்றால்.. குவாரியில் கல் உடைப்பதற்கு ஆள் எடுக்கிறீர்களா சார்..?,அல்லது மூட்டை தூக்கும் வேலையா..?,இல்லை, செங்கல் தூக்கும் பணியா..?, அப்படியே பார்த்தாலும் நான் மேற்கூறிய வேலைகளிலெல்லாம் பெண்களின் பங்கு சரிசமமாகத் தானிருக்கிறது.."என்று எள்ளலுடன் கூறியவள் பின் "நீங்கள் விளம்பரம் அளித்திருக்கும் வேலைக்கு நிர்வாகம் படித்த யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். அது ஆணாக மட்டும் இருந்தாக வேண்டிய கட்டாயமில்லை என்பது எனது அபிப்ராயம்.."என்று அவள் கூறியது தான் தாமதம்.. "உனது அபிப்ராயப்படி நடந்து கொள்வதற்கு இது உன் தாத்தாவின் கம்பெனி அல்ல.." என்று அவனிடமிருந்து பட்டென்று பதில் வந்தது.

சரி தான்! என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டாலும் அதை மறைத்து "இது எனது அபிப்ராயம் மட்டுமல்ல சார். உங்களது கம்பெனியின் விளம்பரத்தைப் பார்த்து விட்டு ஏக்கப் பெரு மூச்சை வெளி விட்டப் பல பெண்களின் அபிப்ராயம்.."என்று கூற சடாரென்று நிமிர்ந்து நோக்கினான் கௌதம். ஏன்..?,

DO NOT COPY

ஏன் இப்படிப் பார்க்கிறான்..?, ஓ! ஏக்கப் பெருமூச்சு என்றதற்கா..?, அடக் கடவுளே! மாற்றி அர்த்தம் செய்து கொண்டான் போலும்!

“ஏ..ஏக்கப் பெருமூச்சென்றால்.. நமது திறமையைச் சரியாக உபயோகித்துக் கொள்ளும் நல்ல கம்பெனியில்.. நல்ல சம்பளத்தில்.. எண்ணற்ற வசதிகளுடன் கூடிய இடத்தில் பணிபுரியும் வாய்ப்புத் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்கிற அவர்களது ஏக்கத்தைக் கூறினேன்..”என்று அவசரமாகக் கூறி விட்டு.. உள்ளே ஆண்டவா! தணல் மேல் நிற்பது போல் தகிக்கிறதே..! முகத்தைப் பார்! தந்தூரி அடுப்பைப் போல்! என்று உள்ளே அவனைத் திட்டித் தீர்த்தாள்.

எதுவும் கூறாமல் மீண்டும் அவள் கொடுத்தக் கோப்பைப் பார்வையிட்டவன் “வெளி நாட்டில் புகழ் பெற்றப் பல்கலைக் கழகத்தில் படித்திருக்கிறாய்.. பொதுவாக அங்கே படித்தவர்கள் பலபேர் சொந்தமாகத் தொழில் தொடங்குவதைத் கண்டிருக்கிறேன்,அல்லது அங்கேயே பெரிய கம்பெனிகளில் சேர்ந்துப் பணம் சம்பாதிப்பதைக் கண்டிருக்கிறேன்.ஆனால் நீ..”என்றவன் நிறுத்திப் பின்.. “அத்தோடு நீ அங்கேயே பிறந்து படித்து வளர்ந்ததாகத் தான் இது சொல்கிறது..”என்று அவளது பயோடேட்டாவைத் தூக்கிக் காட்டியவன் “இங்கேயிருந்து பல பேர் படிப்பை முடித்து விட்டு அமெரிக்காவைத் தேடிச் செல்கையில் நீ படிப்பை அங்கே முடித்து விட்டு இங்கே வரக் காரணம் என்ன..?,அதிலும் சொந்தத் தொழில் தொடங்காமல் எதற்காக இந்தச் சொற்ப வருமானத்தைத் தேடி வந்திருக்கிறாய்..?”என்று வினவினான்.

அவன் கூறியது சரி தான்! தாய் நாட்டின் மீது பற்றில்லாமல் அவளது தந்தை இருந்திருந்தால்.. பால் போளி செய்து தரும் அத்தை அவளைத் தேடி வாராமல் இருந்திருந்தால்.. அவன் கூறியது போல் சொந்தத் தொழில் தொடங்கி.. படிப்படியாக முன்னேறியிருப்பாள் தான். ஆனால் இங்கே தான் நிலைமைத் தலைகீழாக இருக்கிறதே..?, ஹ்ம்ம் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டவள்.. எனது நிலைமைக்கு முக்கியக் காரணமே இந்த ராசா தான்! ஆனால் கேள்வி கேட்பதைப் பார்! என்று பொறுமிக் கொண்டாள்.

“வருமானம் சொற்பமானதா.. தாராளமானதா என்பதை அவரவரது குடும்ப நிலை தான் சார் முடிவு செய்ய வேண்டும். நீங்கள் அளிக்கும் இந்தச் சொற்ப வருமானம் எனது குடும்ப நிலைக்கு மிகவும் தேவையாக இருப்பதால் தான் உங்கள் முன்னே அமர்ந்திருக்கிறேன்.”என்று மகாப் பொய்யைக் கூறி வைத்தவளுக்கு அவளது நியூயார்க் வீடும்,தோட்டமும் கண் முன்னே வந்து போனது. ஆனால் அவன் அவளது இந்த அண்டப் புழுகை நம்பியதாகவே தெரியவில்லை.

DO NOT COPY

“ஆமாமாம்.. படிப்பிற்காக மட்டும் பல லட்சங்களைச் செலவழித்திருக்கும் உனது குடும்பநிலை படு மோசமாக இருப்பதாக நீ கூறுவதை நான் நம்பித் தான் ஆக வேண்டும்”என்று அலட்டிக் கொள்ளாமல் பதிலளித்தான்.

நம்பவில்லை அவன்! கல்லூளிமங்கன்! முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் அமர்ந்திருந்தவளை மீண்டும் அழுத்தமாக நோக்கியவன் அவளது பயோடேட்டாவை டேபிளின் மீது வைத்து விட்டு “தொழிலாளர்களின் திறமையை முழுதாக உபயோகப் படுத்திக் கொள்ளும் கம்பெனி எனவும், நல்ல வாய்ப்பென்று பலர் ஏக்கப் பெருமூச்சை வெளி விடுமளவிற்கு சிறந்த கம்பெனி எனவும் எனது நிர்வாகத்தைப் பற்றிப் பெருமையாகக் கூறியதற்கு மிகவும் நன்றி. ஆனால் நாங்கள் ஏற்கனவே முடிவு செய்தது போல் இந்த வேலைக்கு ஆண்களை மட்டுமே தேர்ந்தெடுப்பதாக இருக்கிறோம்.. தேர்வில் கலந்து கொண்டமைக்கு நன்றி. நீங்கள் புறப்படலாம்.”எனக் கூறி விட்டு அடுத்த ஆளை உள்ளே அனுப்பச் சொல்வதற்காக அருகே இருந்த அழைப்பு மணியின் மீது கை வைக்க எத்தனித்தான்.

இவ்வளவு தூரம் தனது ஆசைகளையெல்லாம் தாரவார்த்துக் கொடுத்து விட்டு இந்தியாவிற்கு வந்தது இவனிடம் தோல்வியைச் சந்திப்பதற்காகவா..?, கம் ஆன்.. கம் ஆன் நித்யா! எனத் தனக்குத் தானேக் கூறிக் கொண்டவள் “என்னை எதற்காக நீங்கள் தேர்வு செய்யவில்லையெங்கிற காரணத்தை நான் அறிந்து கொள்ளலாமா..?”என்று வெளிப்படையாகவே வினவினாள்.

எதுவும் கூறாமல் அவளை நோக்கி உஷ்ண மூச்சை வெளிவிட்டவனது மூச்சுக் காற்றிலேயே அவனது கோபத்தை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது, அதற்காக இப்படியே விட்டு விட்டுச் செல்வதா..?, ம்ஹ்ம்ம்..

“பதில் கூறுங்கள் சார்.. நீங்கள் கொடுக்கப் போகும் வேலையைக் கையாளுவதற்கு எனக்குத் திறமை போதாதென்று நீங்கள் தீர்மானித்திருந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால் ஆண்களுக்கு மட்டுமே வேலை கொடுக்கப் படும் என்று நீங்கள் போர்டு போட்டு வைத்திருப்பதை எல்லாம் என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியாது..”என்றவளிடம் “போர்டா..?”என்று புருவம் சுருக்கினான் அவன்.

“கிட்டத்தட்ட போர்டு தான் சார். ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என்று கொட்டை எழுத்தில் 1000 பத்திரிக்கைகளில் வெளியிட்டிருந்தீர்களே..?,அதைச் சொல்கிறேன்..”என்று விளக்கமளித்தவள் பின் “அல்லது ஓ! நான் வெளி நாட்டில் படித்து வந்ததால் இந்த வேலைக்கு நான் ஓவர் குவாலி்ஃபைட் என்று நினைக்கிறீர்களோ..?,அப்படியானால் உள்நாட்டில் படித்தவர்கள் அனைவரும் அண்டர் குவாலி்ஃபைடா...?,நீங்களே நம் நாட்டுப் பல்கலைக்கழகங்களை குறைத்து எடை போட்டால் எப்படி சார்..?”என்றவளிடம் நான் அப்படிச்

சொல்லவேயில்லையே என்பது போல் ஒரு பார்வையைச் செலுத்தியவனைக் கண்டு கொள்ளாது.. “காரணம் தெரிந்து கொள்ளாமல் நான் இந்த இடத்தை விட்டு நகர்வதாக இல்லை சார்.. பல நூறு வருடங்களாக அடுக்களைக்குள்ளேயே தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டு உலகமறியாமல் இருந்த பெண்கள்.. இந்த சில நூற்றாண்டுகளாகத் தானே சார் ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் பணி புரிகிறார்கள்..?, பாரதியாரின் புதுமைப் பெண்ணைப் பற்றி நீங்கள் படித்ததில்லையா..?, சட்டங்கள் ஆள்வதற்கும்,பட்டங்கள் செய்வதற்கும் எங்களுக்கும் முழு உரிமை இருக்கிறது.. அனைத்தும் மாறி ஆணும்,பெண்ணும் சமமென்று மாறிப் போன இந்தக் காலத்தில் இப்படி ஆண்கள் மட்டுமே இந்த வேலைக்கு விண்ணப்பிக்கலாமென்று விளம்பரம் கொடுக்க உங்களுக்குக் கூசவில்லையா சார்..?,இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்..”என்று மைக் இல்லாமலேயே புரட்சிப் போராட்டம் நடத்தத் துவங்கியவளை.. முழு எரிச்சலுடன் நோக்கியவன்.. பற்களைக் கடித்தபடி “இதோ பார், உன்னுடன் வாதம் செய்வதற்கு எனக்கு நேரமும் இல்லை,பொறுமையும் இல்லை..”என்றவனை இடைமறித்து.. “வாதம் செய்ய வேண்டாம். நான் கேட்டதற்கு பதிலை மட்டும் கூறுங்கள் போதும்”என்றாள்.

தலை முடியை அழுந்தக் கோதி வேக மூச்சுடன் அவள் புறம் திரும்பியவன் “இதோ பார்.. நியூயார்க்கில் படித்து விட்டு குடும்பக் கஷ்டத்திற்காக வேலைக்கு வந்திருக்கிறேன் என்று நீ கூறுவது எனக்கு நம்பும் படியாகத் தோன்றவில்லை...”என்றவனிடம் விழிகளை அகல விரித்து “பின்னே..?,பின்னே எதற்காக நான் வேலைக்கு வந்திருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள் சார்..?”என்று வினவியவளிடம்..

“நிச்சயம் நீ படிக்கிற காலத்திலேயே உனக்கு வேலையும் கிடைத்திருக்க வேண்டும். அல்லது சொந்தத் தொழில் தொடங்கும் எண்ணமிருந்திருந்த காரணத்தினால் நீ வேலைக்கு முயற்சிக்காமல் இருந்திருக்க வேண்டும். இந்த இரண்டு காரணங்களில் ஏதேனும் ஒன்று நிச்சயமான உண்மை. ஆனால் நீ எதற்காக அந்தத் திட்டங்களையெல்லாம் விட்டு விட்டு இந்தியாவிற்குத் திரும்பி இங்கே வேலைக்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறாய் என்று தான் எனக்குப் புரியவில்லை..”என்று தாடையைத் தடவினான்.

தன்னுடனே வளர்ந்து பழகியவன் போன்று அவன் அனைத்தையும் புட்டு புட்டு வைத்ததைக் கண்டு வியப்புற்றவள் பின் நிமிர்ந்து “எனது கடந்த காலத் திட்டங்களைப் பற்றியும்,எனது பின்புலத்தைப் பற்றியும் ஆராய்வதற்குப் பதில் எனது திறமை உங்கள் நிர்வாகத்திற்குப் பயன்படுமா என்பதை யோசித்துப் பார்த்தீர்களானால் உங்களோடு சேர்த்து எனக்கும் பயனுள்ளதாக

DO NOT COPY

இருக்கும்,,"என்று அவனுக்கே யோசனை கூற.. "திஸ் இஸ் இட்.."என்று கோபமாகக் கூறியபடி இருக்கையை விட்டு எழுந்தான் கௌதம் பிரபாகரன்.

"இந்தக் கம்பெனிக்கு நீ முதலாளியா அல்லது நான் முதலாளியா..?, நானும் வந்ததிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். வாய் நீண்டு கொண்டே போகிறது. இது என் கம்பெனி. யாரை வேலைக்குச் சேர்க்க வேண்டும்?,யாரைச் சேர்க்கக் கூடாது என்பதைப் பற்றியெல்லாம் நான் முடிவு செய்து கொள்கிறேன்... கெட் அவுட்.."என்றான் கோபமாக,

அவன் எழுந்த பின்பும் கூடத் தன் இருக்கையை விட்டு எழாமல் அவன் சத்தமிடுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த நித்யா பின் மெல்ல எழுந்து அவனது டேபிளின் மீதிருந்த தண்ணீர் டம்ளரை எடுத்து அவனிடம் நீட்டினாள். அதைக் கையில் வாங்காமல் முறைத்துக் கொண்டு நின்றவனிடம் "ம்,ம்.."என்று வேண்டாமா என்பது போல் இருபுறமும் தலையசைத்து வினவியவள் அவன் பதில் கூறாததைக் கண்டு ஓகே என்றுத் தோளைக் குலுக்கித் தானே அந்த நீரைப் பருகி அவனை மேலும் சோதித்தாள்.

பின் நிதானமாக அவனை நிமிர்ந்து பார்த்து "எதற்காகக் கோபப்படுகிறீர்கள் சார்..?,உங்களுக்கு என்னை இந்த வேலைக்கு எடுப்பதில் விருப்பமில்லையென்றால் அதை நாசூக்காக என்னிடம் வெளிப்படுத்தியிருக்கலாம். பல கம்பெனிகள் கூறுவது போல் தேர்வு முடிவுகள் பின்னே வருமெனக் கூறிச் சுலபமாக வெளியே அனுப்பியிருக்கலாம். ஆனால் நீங்கள் பெண்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் போவதில்லையென்று நேரடியாகவே என்னிடம் தெரிவித்து ஒரு வாக்குவாதத்தை ஏற்படுத்தி விட்டீர்கள்.."என்றவளை இடைமறித்து "நான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை நீ எனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டாம்"என்று சற்றும் கோபம் குறையாமல் கூறினான் அவன்.


"அய்யோ! என்ன சார் அப்படிக் கூறி விட்டீர்கள்...?,உங்களைப் போன்றப் பெரிய மனிதர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வயதோ,அறிவோ கிடையாது சார்.."என்றவள் தொடர்ந்துப் பார்வையைக் கூராக்கி.. "பெண்களால் மட்டுமே முடிந்த வேலைகள் பல இருக்கின்றன உலகத்தில்.அதை உங்கள் ஆண் இனம் தலை கீழாக நின்றால் கூடச் செய்ய முடியாது. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனது படிப்பையோ,திறமையையோ காரணம் காட்டி நீங்கள் என்னை வெளியே அனுப்பியிருந்தால் உங்கள் மீதிருக்கும் மரியாதை சற்றும் குறையாமல் இருந்திருக்கும் எனக்கு. ஆனால் நீங்கள்..."என்று அவன் கண்களை.. அவனுக்கு நிகரானக் கோபத்துடன் சந்தித்தவள்.. சட்டெனத் திரும்பி அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

DO NOT COPY



DO NO

## அத்தியாயம் – 4




**கண்ணாமூச்சி ஆடலாமென்பான்..**
**என் கண்களைத் துணிகொண்டு மூடி விட்டு..**
**என் தோழிகளுடன் களி ஆடச் செல்வான்...**
**இனிய கீதம் உனக்காக என்பான்..**
**அவனது புல்லாங்குழல் ஓசையில்..**
**நான் மயங்கிக் கண் மூடுகையில்...**
**என் பானையிலிருக்கும் பண்டங்களைத்**
**திருடிச் சென்று விடுவான்..**
**கண்ணா... என் மனங்கவர்க் கள்வனே...!**

**கௌ**தமனின் அறையை விட்டு வெளியே வந்த நித்யா செய்த முதல் காரியம் நான்கைந்துக் டம்ளர் தண்ணீரைப் பருகியது தான். என்னவோ உலகத்திலிருக்கும் பெண்கள் அனைவருக்கும் இவள் தான் ஒரே பிரதிநிதி என்பதைப் போல் அவனிடம் சண்டை போட்டு விட்டு வந்து விட்டாள். நிச்சயம் அவன் இந்த வேலைக்கு அவளைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. ஆவது ஆகட்டும்! வசந்தி அத்தைக் கூறுவது போல் இனி கடவுள் விட்ட வழி!

இவனுக்கு என்ன அப்படி ஒரு வெறுப்பு! இன்னும் சில வருடங்களில் அவனது அலுவலகத்தில் வேலை பார்க்கும் அத்தனை பெண்களையும் தூக்கி விட்டு ஆண்களை மட்டும் நியமித்து விடுவான் போலும்! யாரோ ஒரு பெண்..! மனதில் காதலனைச் சுமந்து கொண்டு பெற்றோரின் மிரட்டலுக்கு பயந்து இவனைத் திருமணமும் செய்து கொண்டு விட்டுப் பின் காதலனை மறக்க முடியாமல் அவனுடன் ஓடி விட்டாள்.. அதனால் என்ன இப்போது..?, தான் விரும்பும் ஒருவனுடன் வாழ நினைப்பதுத் தவறா என்ன..?, மனதில் ஒருவனைச் சுமந்து கொண்டு கணவனுடன் ஒன்றவும் முடியாமல்.. காதலனை மறக்கவும் முடியாமல் தவித்துக் கொண்டு திரிவதற்கு விருப்பப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாமென்று சென்று விட்டாள் பாவம்!

அதனால் என்ன இவனுக்கு??, அந்தப் பெண் சுயநலமாக நடந்து கொண்டது தவறு தான்.. யார் இல்லை என்றது..?, அதற்காக.. அந்த ஒரு சம்பவத்திற்காக

DO NOT COPY

ஒட்டு மொத்த பெண் இனத்தையே வெறுப்பதா..?, தேவையில்லாமல் அவனது வாழ்க்கையை வேறு கெடுத்துக் கொண்டு திரிகிறான் முட்டாள்!

அமெரிக்காவில் பிறந்து.. அந்தக் கலாச்சாரத்தைப் பார்த்து வளர்ந்த நித்யாவிற்கு.. அந்தப் பெண் செய்தது பெரிய தவறாகவே தெரியவில்லை. பின்னே?, அவளும் தான் பார்த்திருக்கிறாளே! நான்கு முறை நான்கு கணவர்களை விவாகரத்து செய்து இப்போது ஐந்தாவது கணவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அவளது ஆசிரியை. ஜோன்ஸைக் காதலித்துக் கொண்டிருக்கையிலேயே சன்னியுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்த அவளது வகுப்புத் தோழி லில்லிபெத். இப்படிக் கலாச்சாரத்திற்கும்,திருமண பந்தத்திற்கும் முக்கியமளிக்காத மனிதர்கள் பலரைப் பார்த்து விட்டவளுக்கு கௌதம் முட்டாளாகத் தெரிந்ததில் ஆச்சரியமில்லை.

எது எப்படியோ அவனது கோபத்தைத் தூண்டி ரோத்தைக் கிளறி ரணகளப் படுத்தி விட்டு வந்தாயிற்று! நிச்சயம் வேலை கிடைக்குமென்று நம்ப முடியாது. அத்தை தான் வருத்தப் படப் போகிறார்கள் பாவம்! ஆனால் நிச்சயம் அவனை எப்படியேனும் அணுகி அவனது இந்த முட்டாள்தனமான எண்ணங்களைப் போக்கியாக வேண்டும் என்றெண்ணிக் கொண்டவள் ஆட்டோவிலேயே வீட்டிற்கு வந்தடைந்தாள்.

வாசலிலேயே அவளை எதிர்பார்த்துக் காத்திருந்த வசந்தி, அவளைக் கண்டதும் வேகமாக எழுந்து வந்து அவள் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றார். “என்னம்மா..?,என்ன நடந்தது..?”என்று ஆர்வமாக விசாரித்தவரிடம் “அத்தை, உங்கள் மகனைப் பற்றி நன்றாக அறிந்து வைத்திருந்தும் எதற்காக உங்களுக்கு இந்த ஆர்வம்..?,நாம் நினைத்தது போலத் தான் அவர் பெண்களை வேலைக்குச் சேர்ப்பதாக இல்லையாம்.. அதனால் வெளியே செல் என என்னை விரட்டி அடித்து விட்டார்..”என்றவளிடம் “ஓ!”எனக் கூறிய வசந்தியின் முகத்தில் அப்பட்டமான ஏமாற்றம் தெரிந்தது.

“அத்தை ஏன் சோர்வடைகிறீர்கள்..?,இந்த வாய்ப்பில்லாமல் போனால் என்ன,,?, உங்கள் மகனுடன் என்னால் பழக முடியாதா..?,பொறுமையாக இருங்கள் அத்தை.. ஏதேனும் வழி பிறக்கும்.. இப்போது எனக்குச் சாப்பாடு போடுகிறீர்களா..?,பசிக்கிறது..”என்று கூற.. “சாரி மா. வா சாப்பிடலாம்.”என்றழைத்துச் சென்று பரிமாறினார் வசந்தி.

உண்டு முடித்ததும் அங்கே நடந்த அத்தனையையும் தெரிவித்தாள். “உங்கள் மகனுடன் சண்டை போட்டு விட்டுத் தான் வந்தேன் அத்தை. பின்னே என்ன அவருக்கு அப்படி ஒரு பிடிவாதம்...?, விட்டால் பெண் தோற்றத்தையே நான் வெறுக்கிறேன் எனக் கூறி உங்களைச் சேலைக்கு பதில் பேண்ட் அணிந்து கொள்ளச் சொல்வார் போலும்,..”என்று நொடித்துக் கொண்டவளிடம்

DO NOT COPY

களுக்கென்று சிரித்தார் வசந்தி. “ஹ்ம்ம்,தட்ஸ் குட்.. இப்படிச் சிரித்த முகத்துடனே இருங்கள் அத்தை. உங்கள் மகனை மாற்றி விடலாம்..”என்று ஆறுதல் கூறினாள்.

**நி**த்யா அந்த அறையை விட்டு வெளியேறியதும் அடுத்தடுத்த ஆட்களை இண்டர்வியூ செய்து முடித்தான் கௌதம், வருகை தந்திருந்த பதினைந்து பேரிலிருந்து நான்கு பேரைத் தேர்ந்தெடுத்து முடித்தவன்.. பின் கழுத்தை அழுந்தத் தேய்த்து.. கைகளை நீட்டிச் சோம்பல் முறித்தான். இருக்கையை விட்டு எழ எத்தனித்த வேளை ஜி,எம் அழகர்சாமி உள்ளே நுழைந்தார்.

“வாருங்கள் அங்கிள்..”என்று அவரை வரவேற்றவன் “இன்றையத் தேர்வின் முடிவுகள்..” என்று அவரிடம் ஒரு காகிதத்தை நீட்டினான். அதிலிருந்த பெயர்ப் பட்டியலைக் கண்டவர் “வந்து.. அந்தப் பெண்..”என்று இழுத்தார் அவர். அதுவரை இருந்த மனநிலை மாறி முகம் இறுக அவரை முறைத்தவன் “ஆண்களை மட்டுமே இந்த வேலைக்குத் தேர்வு செய்யலாம் என்று நான் கூறீயதை மறந்து விட்டீர்களா அங்கிள்..?,எதற்காக அந்தப் பெண்ணை நேர்முகத் தேர்வு வரை வரவழைத்தீர்கள்..?,ஆரம்பத்திலேயே நிராகரித்திருக்கலாமே.. என் அனுமதியில்லாமல் அவளுக்கு நீங்கள் அழைப்புக் கடிதம் அனுப்பியதே தவறு அங்கிள்..”என்று பொரியத் துவங்க..

தயங்கியபடி அவனை ஏறிட்டவர் “அது வந்து தம்பி.. அந்தப் பெண்ணின் பயோடேட்டாவைப் பார்த்ததும் அவள் இந்த வேலைக்குப் பொருத்தமானவளாக இருப்பாளென்றுத் தோன்றியது எனக்கு, அதனால் தான் நேர்முகத் தேர்வுக்கு உங்களது அனுமதியில்லாமல் வரவழைத்து விட்டேன். மன்னித்து விடுங்கள்.. ஆனால் அந்தப் பெண் திறமை மிகுந்தவளாகத் தான் தெரிகிறது..எதற்காக நீங்கள் தேர்வு செய்யவில்லை தம்பி..?”என்று விசாரித்தார்.

“அங்கிள் எதுவுமே அறியாதவர் போன்று விசாரிக்கிறீர்களே..?,எனக்குப் பெண்களை நியமிப்பதில் விருப்பமில்லை..”என்று எரிச்சலுடன் தெரிவித்தான். “இவ்வளவு பெரிய நிறுவனத்தைத் திறம்பட நிர்வகித்து வரும் நீங்கள் இப்படிப் பேசுவது எனக்குச் சரியாகப் படவில்லை தம்பி. திறமை எங்கிருந்தாலும் வரவேற்கப் பட வேண்டிய ஒன்று, இதில் ஆண் என்ன பெண் என்ன..?, நீண்ட வருடங்களாக நமது கம்பெனியின் வெற்றிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் ஏராளம் தம்பி. அவர்களை எல்லாம் அவமதிப்பது போல் இருக்கிறது நீங்கள் கூறுவது. நன்றாக யோசித்து முடிவு செய்யுங்கள். எனக்கென்னவோ நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் நால்வரது திறமையை அவள் ஒருவளே கொண்டிருப்பாளென்றூ தோன்றுகிறது. நான் அவளுடைய பெயரையும் இதில் இணைக்கிறேன் தம்பி.. இதற்கு மேலும் அவள் வேண்டாமென்று உங்களுக்குத் தோன்றினால்.. நீங்கள் அவளது ஆஃபர் லெட்டரில் கையொப்பமிட வேண்டாம்.” என்றவர் திரும்பி நடந்து சென்றார்.

DO NOT COPY

“அங்கிள் நில்லுங்கள்..”என்று அவரை நிறுத்தியவன் விறு விறுவென ஐந்து லெட்டர்களில் கையெழுத்திட்டு அவரிடம் நீட்டி விட்டு.. அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டான்.

வியப்பும்,மகிழ்ச்சியுமாய் அவன் கையெழுத்திடுவதைப் பார்வையிட்டவர் அவன் வெளியே செல்வதைக் கண்டு புருவம் சுருக்கினார். மணி இரவு ஒன்பது. இந்த நேரத்தில் அவன் எங்கே செல்வானென்பது அவர் அறிந்த ஒன்றே. “தம்பி..”என்றழைத்து அவனை நிறுத்தியவர் “இந்தக் கருமாந்திரப் பழக்கத்தை விட்டுத் தொலைக்கக் கூடாதா..?,உங்களையும் வருத்திக் கொண்டு மற்றவரையும் வருத்துகிறீர்களே.. அம்மா மிகவும் கவலைப் படுகிறார்கள்.. வீட்டுக்குச் செல்லலாம் தம்பி.. நானும் உடன் வருகிறேன்..”என்று கூற.. அவருக்குப் பதிலளிக்காமல்.. நின்று விட்டவன் பின் திரும்பி..

“இப்போதிருக்கும் ஒரே நிம்மதியை இழக்கச் சொல்கிறீர்களா..?,”எனக் கேட்டு விட்டு விறுவிறுவென வெளியேறி விட்டான். “என்ன நிம்மதியோ!, நன்றாகப் படித்துத் திறமையாக வேலை செய்பவன் அநியாயமாகக் குடித்துக் குடித்தே வீணாகிறான்.. எல்லாம் அந்த டாட்சசியைச் சொல்ல வேண்டும்! சண்டாளி! என்று திட்டியபடி கடிதங்களை ஸ்கேன் செய்து தேர்வில் வெற்றி பெற்றவர்களின் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தார்.

அன்று இரவு உறக்கம் வராமல் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தவள் கார் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். காரைத் திறந்து கொண்டு தள்ளாடியபடி இறங்கிய கௌதமனை காரோட்டித் தன் தோளில் தாங்கியபடி நடத்திச் செல்வதைக் கண்டாள்.. இந்தப் பழக்கம் வேறு இருக்கிறதா இவனுக்கு?, ஏன் இப்படி வருத்திக் கொள்கிறான்..?, என்று யோசனையுடன் படுக்கையில் தலை சாய்த்த நித்யா அவனை எண்ணியபடியே உறங்கியும் போனாள்..

மறு நாள் காலை காபி கோப்பையுடன் தன் மடிக்கணிணியில் தனது மெயிலைத் திறந்து பார்த்தவளின் கண்கள் வியப்பில் ஆழ்ந்து விட்டன. வசந்தி வேலன் நிறுவனத்திலிருந்து.. கௌதமின் கையொப்பமிடப்பட்டு அவளுக்கு வந்திருந்த ஆ..ஃபர் லெட்டரைக் கண்டு திகைத்து விட்டாள். சுடிதார்,சேலைக்கு என் அலுவலகத்தில் வேலையில்லை,வெளியே செல் என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக அனுப்பி வைத்தவன் எப்படி அவளைத் தேர்வு செய்தான்.. குழப்பமும்,சிந்தனையுமாய் அமர்ந்து விட்டவளை “நித்யாம்மா..”என்று உலுக்கினார் வசந்தி.

“நாம் எதிர்பார்க்காத ஒன்று நடந்து விட்டது பார்த்தாயா..?, என்னால் நம்பவே முடியவில்லை அம்மா.. அவன் எப்படி உனக்கு வேலை தர சம்மதித்தானென்று.. அழகர்சாமி சார் தான் பிரம்மப்பிரயத்தனப் பட்டிருக்க

DO NOT COPY

வேண்டும். எது எப்படியோ.. நமக்கு முதல் வெற்றி கிடைத்து விட்டது..”என்று குதூகலித்தார் அவர்.

மறுநாள் வேலைக்குச் செல்லத் தயாராகி வெளியே வந்தவள் மரூன் நிற சட்டை அணிந்து தனது வழக்கமான வேக நடையுடன் வந்து காரில் ஏறியவனைக் கண்டு “ம்ம்,சார் கொஞ்சம் ஸ்மார்ட் தான்”என்று புன்னகைத்துக் கொண்டாள். தோற்றத்துக்கு அக்கறையே அளிக்க மாட்டான் போலும்! ஆனாலும் அழகன் தான்!

அத்தை அளித்தக் காலை உணவை முடித்துக் கொண்டு அலுவலகத்தை அடைந்தாள். ஆஃபர் லெட்டரைக் காண்பித்து விட்டு அவர்கள் கூறிய அறையில் அமர்ந்தவளைத் தேடி வந்து வரவேற்றார் அழகர்சாமி. “வெல்கம் டூ வசந்தி வேலன் இண்டஸ்ட்ரீஸ் மா.. நான் ஜி,எம் அழகர்சாமி, உன் அத்தைக் கூறியிருப்பார்களே..”என்று கைக் குலுக்கி வரவேற்றார். “ஹலோ அங்கிள்.. தாங்க்ஸ் அங்கிள். வரவேற்க நீங்கள் ஒருவரேனும் இருக்கிறீர்களே.. உங்கள் எம்,டி எப்போதும் தந்தூரி அடுப்பைப் போல் சூடாகவே இருக்கிறார்..”என்று அவள் சிலிர்த்துக் கொள்ள.. தானும் முறுவலித்தார் அழகர் சாமி. அவருடன் பேசிக் கொண்டே வெளியே வந்தவள் கௌதம் அலுவலகத்திற்குள் நுழைவதைக் கண்டு நடையை நிறுத்தி நின்றாள்.

வாசலில் நின்றிருந்த காவலாளி எழுந்து நின்று “குட் மார்னிங் சார்..”என்று கூற.. “என்ன நம்பி சார் குட் மார்னிங் டல்லாக இருக்கிறதே.. காலைச் சாப்பாடு சாப்பிடவில்லையா..?”என்றவன் அவரது கையைப் பற்றி நெற்றியில் விறைப்பாக வைத்து “குட்மார்னிங் சார்..”என்று அடிக்குரலில் மிலிட்டரி மேனைப் போல் குரல் கொடுக்க.. நம்பி நன்றாக முறுவலித்தார். அவர் சிரிப்பதைக் கண்டுத் தானும் முறுவலித்தவன் “இது கொஞ்சம் சுறுசுறுப்பான குட்மார்னிங் நம்பி..”என்று மீண்டும் புன்னகையைச் சிந்தினான்.

அவன் புன்னகைப்பதைத் திறந்த வாயுடன் திகைத்து நோக்கிக் கொண்டிருந்தவளை “நித்யா..” என்று உலுக்கினார் அழகர்சாமி. “அங்கிள்… இ..இவர் அவரே தானா..?,கௌதம் பிரபாகரனா..?,சிரிக்கிறாரே அங்கிள்.. எப்படி..?”என்று திகைப்பு மாறாமல் கூற “இது என்னம்மா கேள்வி..?, வாயால் தான் சிரிக்கிறார்.. பார்த்தால் தெரியவில்லை..?”என்று அடிக்குரலில் கூறியவர் அவனை நோக்கி வரவேற்பான முறுவலைச் செலுத்தினார்.

புன்னகை மாறாத முகத்துடன் இவர்களிருவரையும் நோக்கியவனது புன்னகை நித்யாவைக் கண்டதும் உதட்டிலேயே உறைந்தது. அழகர்சாமியிடம் “குட்மார்னிங் அங்கிள்..”என்றவன் அவளிடன் பார்வையைக் கூடச் செலுத்தாமல் உள்ளே செல்ல நித்யாவின் புன்னகை நிறைந்த “குட்மார்னிங் சார்..” காற்றிலேயே கரைந்து போனது. கோபமாக அழகர்சாமியிடம்

DO NOT COPY

திரும்பியவள் “என்ன சார் இது..?”என்று கேட்க “விட்டுப் பிடிக்கலாம் அம்மா.. கொஞ்சம் பொறுமையாக இரு..”என்று கூற “எதை விட்டு எதைப் பிடிப்பது..?, அங்கிள் அதெல்லாம் பழைய டெக்னிக்..”என்றவள் விறுவிறுவென அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

அவனது அறைக்கததவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவனைத் தொடர்ந்து “மே ஐ கம் இன் சார்..?”என்று சற்று உரக்கவே குரல் கொடுத்தாள். அவள் தான் என்பதைக் கண்டு கொண்ட கௌதமனோ எரிச்சலுடன் ஒரு மூச்சை வெளியிட்டான். “கம் இன்..”என்று அவன் குரல் கொடுத்ததும் உள்ளே நுழைந்தவளை என்ன என்பது போல் ஏறிட்டான்.

“ஒரு ஆஃபிஸ் ஸ்டாஃப் அவர்களது கம்பெனி முதலாளிக்குக் காலையில் குட்மார்னிங் சொல்வது தவறா சார்..?,எதற்காக அப்படி உதாசீனப் படுத்தி விட்டுச் சென்றீர்கள்..?, நம்பி அங்கிளிடம்,அழகர் சாமி அங்கிளிடம் இயல்பாகத் தானே குட்மார்னிங் என்றீர்கள்..?,என்னிடமும் அது போல கூறி விட்டுச் சென்றிருக்க வேண்டியது தானே..?,வேலை பார்ப்பவர்களில் ஆண் என்ன, பெண் என்ன சார்..?,அனைவருமே இந்தக் கம்பெனிக்காக உழைப்பவர்கள் தானே..?, வேண்டுமானால் உங்கள் திருப்திக்கு ஒன்று செய்யுங்கள். இங்கே வேலை பார்க்கும் அத்தனை பெண்களையும் இனி பேண்ட்,சட்டை அணிந்து வரச் சொல்லி விடுங்கள்.. செய்கிறீர்களா..?”என்று வினவ..

அவள் மூச்சு விடாமல் பேசுவதைக் கண்டு வழக்கம் போல் எரிச்சல் கொண்டவன் “கதிர்...”என்று சத்தமிட்டான். வேகமாக “எஸ் சார்..”என்று உள்ளே நுழைந்தவனிடம் “மேடம் இந்தக் கம்பெனிக்குப் புதிது, அவர்களை ட்ரெயினிங் ரூமிற்கு அழைத்துச் செல் கதிர்..”என்று முடித்து விட்டுக் கணிணியின் மீது பார்வையைத் திருப்ப.. இவ்வளவு சொல்லியும் மசிகிறானா பார்.. சரியான பாறாங்கல்! என்றெண்ணியவள் அந்தக் கதிரிடம் திரும்பி “என்னுடைய ட்ரெயினிங்கைப் பற்றி சாரிடம் கொஞ்சம் டிஸ்கஸ் செய்ய வேண்டியிருக்கிறது கதிர்.. அதை முடித்து விட்டு வந்து விடுகிறேன்.. 5 நிமிடம் கொடுங்கள்..”என்று கூற அவனும் “சரி மேடம்..”என்று தலையசைத்து விட்டு வெளியே சென்றான்.

அவன் சென்றதும் தன்னை நோக்கி உஷ்ணப் பார்வையைச் செலுத்தியவளிடம் “நீ என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்..?,என்ன வேண்டும் உனக்கு?, ட்ரெயினிங்கைப் பற்றியோ,உனது வேலை சம்பந்தமானச் சந்தேகங்களைப் பற்றியோ நீ கேட்க வேண்டுமானால் நீ அணுக வேண்டியது அழகர்சாமி அங்கிளை. என்னை அல்ல.. அதனால் இப்போது வெளியே செல்..”என்றவன் “காலங்கார்த்தாலேயே தலைவலியைக் கொடுக்கிறாள்.. இதற்குத் தான் வேண்டாம்,வேண்டாமென்று அடித்துக் கொண்டேன்..”என்று முணுமுணுத்தான்.

DO NOT COPY

“எதுவாயிருந்தாலும் சத்தமாகப் பேசுங்கள் சார்.. இது என்ன முணுமுணுக்கிறீர்கள்.?,உங்களிடம் என்ன பெரிதாகக் கேட்டு விட்டேன்..?, அனைவருக்கும் சிரிப்புடன் குட்மார்னிங் சொன்னீர்களே..?,என்னை ஏன் உதாசீனப் படுத்தி விட்டுச் சென்றீர்கள் என்று தானே கேட்கிறேன்.. சாதாரண ஆஃபிஸ் ஸ்டாஃஃபின் நான்.. என்னிடம் என்ன சார் உங்களுக்குக் கோபம்..?,” என்று கூறத் தலையை அழுந்தக் கோதி அவளை முறைத்துப் பார்த்தவன் “நீயெல்லாம் நிர்வாகம் படித்து இந்த வேலைக்கு வந்ததுக்கு பதில் மௌண்ட் ரோட்டில் கூவிக் கூவி பொம்மை விற்கும் வேலைக்குச் சென்றிருக்கலாம்.. வருமானமேனும் பெருகியிருக்கும்..”என்றவன் “குட்மார்னிங்.., போதுமா..?”என்று கூறினான்.

“எப்படிப் போதும்..?, எப்படிப் போதும் சார்..?, டல்லாகக் குட்மார்னிங் சொன்ன நம்பி அங்கிளைச் சுறுசுறுப்பாகச் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தினீர்களே..?,எனக்கு மட்டும் இவ்வளவு கோபமாகச் சொல்கிறீர்கள்..?”என்று அவள் நொடித்துக் கொள்ள... பெருமூச்சை வெளியிட்டு கோபத்திய அடக்கியவன் “குட்மார்னிங்..”எனக் கூறி ஈ என இளித்து வைத்தான்.

“ஏதோ கொஞ்சம் பரவாயில்லை..”என்றவள் தொடர்ந்து “என்னை வேலைக்குச் சேர்க்க மாட்டேனென்று முகத்தில் அடித்தாற் போல் கூறினாலும், பின் யோசித்து என் திறமைக்கு மதிப்பளித்து என்னைத் தேர்வு செய்ததற்கு மிகவும் நன்றி சார்..”எனக் கூறியவள்.. “திறமையாம் திறமை..”என்று அவன் முணுமுணுத்து கதிரை அழைப்பதற்கு “க..”என்று ஆரம்பிப்பதற்குள் “கதிர்..”என்று குரல் கொடுத்தவள் அவன் உள்ளே வந்ததும் “செல்லலாம் கதிர்..” என்றவள் கௌதமின் புறம் திரும்பி “நன்றி சார்.. ஹேவ் அ நைஸ் டே..”என்று கூறி விட்டுச் சென்றாள்.

இது என்ன தலைவலி..?,விடாமல் உயிரை வாங்குகிறாள்..! எல்லாம் இந்த அங்கிளைச் சொல்ல வேண்டும்..!,நல்லவளொ, கெட்டவளோ, திறமையானவளோ.. மக்கோ..! பெண் என்றால் பத்தடித் தள்ளித் தான் நிற்க வேண்டும்..! இருக்கட்டும்! இவளை வெளியே துரத்த வாய்ப்பில்லாமலா போய் விடும்..? என்று நினைத்துக் கொண்டவன் வேலையில் மூழ்கினான்.

அங்கே பயிற்சி அறையில்.. கடந்த பத்தாண்டுகளாக கம்பெனியில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியைப் பற்றியும்,கௌதமின் தொழில் பற்றைப் பற்றியும்,கம்பெனியின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றியும் விவரிக்க.. பிரில்லியண்ட்! என்று நினைத்தாள். என்ன தான் அவனுக்குப் பெண்களின் மீது இழிவான எண்ணம் வைத்திருப்பது கோபத்தைத் தந்தாலும்.. அவனது மறுபக்கம் அவளை வெகுவாக ஈர்த்தது.அனைத்திலும் கச்சிதமாக

DO NOT COPY

இருக்கிறானே.. இப்படிப்பட்டவனை எப்படி மாற்றி விட்டது ஒரு திருமணம்..?, அந்தச் சண்டாளி சென்றதை வைத்து.. ஒட்டு மொத்தப் பெண்களும் அப்படித் தான் இருப்பார்களென முடிவு செய்து கொண்டு.. முட்டாள்தனமாகத் திரிகிறானே..! இவனை எப்படித் தான் மாற்றுவது!

மதிய இடைவெளியில் அழகர்சாமியுடனே சாப்பாட்டைத் தொடர்ந்தவள்.. “கௌதமின் வளர்ச்சி அபாரமாக இருக்கிறது அங்கிள்.. எல்லா விசயத்திலும் அவனது பார்வை மிகவும் வித்தியாசமாக இருக்கிறது.. பெர்ஃபக்ட் என்று சொல்லுமளவிற்கு இருக்கிறான்.. ஆனால்.. ஆனால் ஏன் அங்கிள் பெண்கள் மீது அவனே ஒரு அனுமானத்தை ஏற்படுத்திக் கொண்டு... நிம்மதி இழந்து தவித்து.. குடிப் பழக்கத்தை வேறு பழகி.. ஏன் இப்படி அங்கிள்..?, அவனை மாற்றவே முடியாதா..?”என்று வருத்தத்துடன் வினவினாள்.

“விதி யாரை விட்டது அம்மா..?,அவரை மாற்ற நானும்,முதலாளி அம்மாவும் எவ்வளவோ முயற்சித்து விட்டோம்.. அவர் மாற்றிக் கொள்வதாக இல்லை.. அவர் பட்டத் துன்பம் அப்படி அம்மா.. அவர் தொழிலில் முன்னேறி வந்து கொண்டிருந்த சமயம்.. இப்படியொரு சம்பவம் நடைபெற்று.. அவருக்குப் பெருத்த அவமானத்தைத் தேடித் தந்து விட்டது.. அதில் ஒடிந்து போனவர்.. இன்னும் மீளவேயில்லை.. என்று அவருக்கு நல்வழி பிறக்குமோ தெரியவில்லை..”என்று அவரும் தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

நித்யாவினால் அவன் பட்ட அவமானங்களை நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது. தொழில் ரீதியாகவும்,உறவுகளின் மத்தியிலும் அது எப்பேர்ப்பட்டக் கலங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அவனது நலனை நாடும் அழகர்சாமியைப் போன்ற சிலர் அந்தச் சம்பவத்தை எண்ணி வருத்தம் கொண்டிருப்பார்கள்.. ஆனால் அவனது எதிரிகளுக்கு இந்தச் சம்பவம் எக்களிப்பாகத் தானே இருந்திருக்கும்.. எத்தனை பேர் எப்பேர்ப்பட்ட வார்த்தைகளை உபயோகித்தார்களோ..! அதனால் தான் இப்படித் துவண்டு போயிருக்கிறான் போலும்..

அவனை எண்ணியபடியே உண்டு முடித்தவள்.. கௌதம் சாப்பிடுவதற்காக வெளியே செல்வதைக் கண்டாள். “அங்கிள்.. என்ன இது..?,அத்தையின் பிரமாதமான சமையலை விடுத்து.. இவர் ஏன் வெளியே சென்று உண்கிறார்..?”என்று விசாரித்தாள். “அன்னையைப் போதுமென்ற அளவிற்கு துன்புறுத்தி விட்டானாம்.. இந்த மாதிரி சின்னச் சின்னத் தேவைகளுக்கெல்லாம் அவரை வருத்தப்பட விட மாட்டானாம்.. பிள்ளைக்குச் சாப்பாடு அளிக்கப் பெற்றவளுக்குக் கசக்கவா செய்யும்..?,அவன் அனைத்தையும் தவிர்த்து விட்டான். காலை ஒரு வேளை தான் அவன் வீட்டில் உண்பது.. மதியம் வெளியே சென்று விடுவான்.. இரவு பாரில் கழிப்பான்..”என்று விரக்தியாக முடித்தார்.

DO NOT COPY

அனைவரையும் கஷ்டப்படுத்துகிறானே.. நிச்சயம் இவனை எப்படியேனும் மாற்றியாக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்.

அடுத்த ஒரு மாதம் முழுமைக்கும் ட்ரெயினிங் என்று தீர்மானிக்கப் பட்டிருந்ததால் கௌதமை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படவில்லை.. ஆனாலும் காலை குட்மார்னிங்கை மட்டும் அவன் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்துச் சொல்லி விட்டுத் தான் தன் இருக்கைக்கு வருவாள்.. எரிச்சலும்,கோபமுமாய் இருந்தாலும் வேறு வழியின்றித் தலையசைத்து அவளது குட்மார்னிங்கை ஏற்றுக் கொள்வான் அவன்.

அலுவலக வழியும்,சென்னை டிரா:பிக்கும் பழகிப் போனதால் வசந்தி அத்தையுடன் சென்று ஒரு ஸ்கூட்டி வாங்கிக் கொண்டாள். அத்தைக்கு அதிகத் தொந்தரவு அளிக்காமல் கா:பி போடுவது, சிறு சிறுச் சமையல் செய்வது எனச் சமையலறையையும் பழக்கப்படுத்திக் கொண்டாள்.

கௌதமனை விடாமல் கண்காணிப்பதையும், அவனது பல செயல்களைக் கண்டு திகைப்பும், மகிழ்ச்சியுமாய் அவனைத் தொடர்ந்து கொண்டு தான் இருந்தாள். ரசிக்கும் படியான செய்கைகள் அவனிடம் பல இருந்தன. காலை வேளைகளில் அருகிலிருக்கும் மைதானத்தில் அவன் ஜாகிங் செய்து முடித்துக் காலை வெயில் முகத்தில் பட.. வியர்வை வழிய.. மூச்சு வாங்க அவன் அமர்கையில் களைந்த அவனது கேசமும்,அழுத்தமான விழிகளும் கவிதையாகத் தான் தெரிந்தது..

வாட்சைச் சரி செய்தபடியோ.. அல்லது சட்டைபட்டனை கையிலிட்டபடியோ.. அவன் படியிறங்குவதைக் காண நன்றாகத் தானிருந்தது அவளுக்கு. அது மட்டுமல்லாது.. அவனைவிட எளியோரைக் காண்கையில் அவனது கண்களில் தோன்றும் பரிவோடு கூடிய அன்பு.. அதைத் தொடர்ந்து வெளிப்படும் சிரிப்பு.. ஒரு நிமிடம் அவனது மற்றொரு பக்கத்தை மறந்து அந்த சிரிப்பில் லயித்துப் போய் விடுவாள்.

விடுமுறை நாளான அன்று கணிணியும்,டிவியும் போரடித்துப் போக.. அருகிலிருக்கும் கோவிலுக்கேனும் சென்று வரலாமென்று எண்ணி.. அத்தையிடம் சொல்லிக் கொண்டு செல்லலாமென்று அவர்களது வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள். கௌதமின் காரைக் காணவில்லையே.. அப்படியானால் அவன் இல்லை போலும்.. தைரியமாகச் செல்லலாம் என்று நினைத்து.. வாசலில் நிற்கும் காவலாளிக்கு சல்யூட் அடித்து விட்டு உள்ளே நுழைந்தாள்.

பாதி தூரம் நடந்தவள்.. கௌதமின் பேச்சுச் சத்தம் கேட்டு உறைந்து போய் அங்கேயிருந்த மரத்தின் பின்னே வேகமாக மறைந்து கொண்டாள். பார்த்து

DO NOT COPY

விட்டானோ.. இல்லையில்லை,வாய்ப்பில்லை.. ஆனால் அவனதுக் குரல் மட்டும் தானே கேட்கிறது.. என்றபடி சுற்றிச் சுற்றிப் பார்த்தாள்..

“இந்தக் கன்னத்தில் மட்டும் தானே கொடுத்தாய் குட்டி.. இதெல்லாம் போங்காட்டம்.. அங்கிள் உனக்கு இன்று 2 கேட்பரீஸ் தந்தேனே.. அப்படியானால் 2 முத்தம் தானே தர வேண்டும்..?,ப்ளீஸ்.. ப்ளீஸ் டா குட்டி.. இந்தக் கன்னத்திலும்..”என்ற அவனதுக் குரலைக் கேட்டுத் திகைத்து நின்று விட்டாள்..

கௌதம்..! கௌதமாப் பேசுவது..?, முரட்டுத் தனமான அவனது குரலுக்கு.. இவ்வளவு மென்மையாகப் பேசக் கூட வருமா..?, அமைதியாக அன்பு நிறைந்த குரலில்... கொஞ்சிக் கொஞ்சிப் பேசவும்.. திகைத்தவள்.. அவனது முகத்தைக் கண்டே ஆக வேண்டுமெங்கிற ஆவலில் குரல் வரும் திசையை நோக்கினாள்.. அவள் நின்றிருந்த மரத்திற்குச் சற்றுத் தள்ளியிருந்த ஒரு பெஞ்சில் அழகான ஒரு சிறுமி அமர்ந்திருக்க.. அவளருகில் கீழே மண்டியிட்டு அமர்ந்திருந்தவன்.. “ப்ளீஸ்.. ப்ளீஸ் டா குட்டி...”என்று அவனது கன்னத்தைத் திருப்பி குழந்தையிடம் காண்பித்தான்..

கோபமும்,குரூரமும்,ரௌத்ரமும்,ஆத்திரமுமாய் காட்சி தரும் கௌதம்,.. முதன்முதலாகத் தன்னைக் கண்டபோது கூட எந்தவொரு அலட்டலும் இல்லாமல்.. அவளது பேச்சுக்கெல்லாம் செவி சாய்க்காமல் வெளியே செல் எனச் சட்டமாகக் கூறியவன்.. ஏன் இன்னமும் கூட.. அலுவலகத்தில் அவளைக் காண்கையில் அவனது முகம் ஏகத்துக்கும் வெறுப்பைத் தான் உமிழ்கிறது.. அப்படி இருப்பவன்... இன்று..

தன்னையும்,தன் நிலையையும் மறந்து.. கஞ்சி போட்ட சட்டையைப் போல் எப்போதும் இருக்கும் அந்த விறைப்புத் தன்மையைக் கைவிட்டு.. இயல்பான சிரிப்புடன்.. முகம் முழுக்கச் சந்தோசத்தில் ஜொலிக்க.. தானும் சிறு பிள்ளையாய் மாறி அந்தக் குழந்தையின் முன்னே மண்டியிட்டு அமர்ந்திருந்தக் காட்சியைக் கண்டுத் திகைத்து... சிலையென நின்று விட்டாள்.

அந்தக் குழந்தை சிரிப்புடனே குனிந்து அவனது கன்னத்தில் முத்தமிட.. பதிலுக்கு அவளைப் பற்றித் தூக்கி இரண்டு கன்னங்களிலும் அழுத்தமாய் முத்தமிட்டான். எவ்வளவு அதிர்ஷ்டம் வாய்ந்த குழந்தையென அவளையறியாமல் உள்ளே தோன்றியப் பெருமூச்சைக் கண்டு வியந்து போனவள்.. அதைப் பின்னுக்குத் தள்ளி அவனை நோக்கினாள்.

குழந்தையைத் தூக்கிச் சுற்றிச் சிரிக்க வைத்தவன்.. “போன வாரம் ஏன் குட்டி அங்கிளைப் பார்க்க வரவில்லை..?,அங்கிளுக்கு உன் மேல் கோபம் போ..”என்று கூற அந்தச் சிறுமி அதற்கும் சிரித்து.. “நான் அம்மா கூட யானை பார்க்கப்

DO NOT COPY


போனேன் அங்கிள்..”என்று கூற அவள் முகத்தில் இருந்த சாக்லேட்டைத் துடைத்தபடியே “வேறு என்னவெல்லாம் பார்த்தீர்கள்..?”என்று விசாரித்தான்.

அதன் பின் அந்தச் சிறுமி சொல்லும் கதைகளையெல்லாம் கேட்டுச் சிரித்தபடியும் கொஞ்சியபடியும் அவன் அமர்ந்திருந்ததைக் கண்டு ஆச்சரியமும்,மகிழ்ச்சியுமாய் நோக்கினாள் நித்யா.



DO NOT COPY

# அத்தியாயம் – 5




**உன் கள்ளச் சிரிப்பைக் கண்டு..**
**நான் மயங்கி நிற்கும் வேளையில்..**
**எனைத் தீண்டிச் செல்கிறாயே..**
**கண்ணா..! உன்னைப் போன்ற கள்வனை..**
**உலகத்தில் எங்கும் கண்டதில்லை..**

**க**ண்கள் இரண்டும் அவனது முகத்திலேயே நிலைத்திருக்க இமைக்க மறந்து அவனது புன்னகையை ரசித்துக் கொண்டிருந்தவளுக்கு... அந்த வெண்பற்களும், கன்னக்குழியும், பெரிய விழிகளில் தேங்கியிருந்த கலப்படமில்லாத சந்தோசமும் உள்ளே ஏதோ செய்தது.. அது என்னமாதிரியான உணர்வென்பதை ஆராய்ந்து பார்க்கத் தோன்றாமல்.. அவனது புன்னகை முகத்தை மனதில் படம் பிடித்துக் கொண்டிருந்தாள்.

2 சாக்லேட்களையும் உண்டு முடித்ததும் அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு அவன் அவளை நோக்கி நடந்து வர.. மரத்தின் பின்னே நன்றாக மறைந்து கொண்டாள் அவள்.. அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனுடன் கொஞ்சியபடி அவன் மேல் சாய்ந்திருந்தக் குழந்தைக் கண்டு அவளுக்குப் பொறாமையாக இருந்தது.. ஏன் இப்படி என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே... அருகில் யாரோ வரும் அரவம் உணர்ந்துத் திடுக்கிட்டுத் திரும்பினாள்..

தினமும் அவளுக்குச் சாப்பாடு கொடுக்கும் வைகுந்தன் நின்றிருப்பதைக் கண்டு "வைகுந்த் அண்ணா நீங்கள் தானா..?,பயந்தே போய் விட்டேன்.."என்று அவள் நிம்மதியாக மூச்சு விட.. "நீ ஏனம்மா இங்கே வந்தாய்..?,அய்யா இருக்கிறாரே.. நீ பார்க்கவில்லையா..?"என்று வினவினார். "இல்லை அண்ணா.. வெளியே கார் இல்லையா.. ஒரு வேளை அவர் வெளியே எங்கேனும் சென்று விட்டாரோ என்றெண்ணி வந்தேன்.. அவர் தான் பார்க்கவில்லையே.. அது இருக்கட்டும் அண்ணா.. அந்தப் பாப்பா யாருடையது..?,"என்று விசாரித்தாள்.

DO NOT COPY

“அந்தப் பாப்பா.. இங்கே வேலை செய்யும் தோட்டக்காரரின் மகள்.. ஸ்ரீமதி. அய்யா வீட்டிலிருக்கும் வேளைகளில் பாப்பாவை வரச் சொல்லி அழைப்பு விடுப்பார்.. அவள் என்றால் அவருக்கு மிகவும் இஷ்டம்..”என்று கூறினார்.

அவரிடம் தலையாட்டி விட்டுச் சென்ற காரியத்தையே மறந்துத் தனது இல்லம் நோக்கி வந்தவள் யோசனையுடன் படுக்கையில் சாய்ந்தாள். அப்படியானால் இயல்பாக மனிதனுக்கு இருக்க வேண்டிய அத்தனை உணர்வுகளும் அவனுக்குள்ளும் இருக்கத் தான் செய்கிறது.. வயதானவர்களை மதித்து நடந்து கொள்கிறான்.. சிறு குழந்தையைக் கண்டால் கொஞ்சி விளையாடுகிறான்.. சிரிக்கிறான்... சந்தோசப் படுகிறான்.. எல்லா உணர்வுகளையும் அழகாகத் தானே வெளிப்படுத்துகிறான்.. ஆனால் ஏன் ஒரு விசயத்தில் மட்டும் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறான்..?

அவனை எண்ணியபடியே உறங்கி.. அவனை எண்ணியபடியே உண்டு மூளை முழுக்க கௌதமைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருந்தாள். மறுநாள் அலுவலகத்தில் நுழையும் போதும் சிந்தனை வயப்பட்ட முகத்துடனே இருந்தவள்.. லி∴ப்ட்டில் தன்னருகே நின்றிருந்த கௌதமைக் கூடக் கவனிக்கவில்லை. அவளைக் கண்டதும் முதலில் எரிச்சல் கொண்டவன் பின் அவள் பார்வை எங்கோ பதிந்திருப்பதை உணர்ந்து.. மீண்டும் திரும்பி அவளை நோக்கினான். அவள் அப்போதும் கண்டு கொள்ளாததைக் கண்டு தோளைக் குலுக்கியபடி திரும்பிக் கொண்டான்.

லி∴ப்ட்டை விட்டு இறங்கியதும்.. குட்மார்னிங் எனக் கூறித் தனக்காக் கதவைத் திறந்த நம்பியிடம் அவன் பதிலுக்குக் குட்மார்னிங் கூறுகையில் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தவள் தன்னருகில் நின்றிருந்தவனை நிமிர்ந்து நோக்கினாள்.. “சா..சாரி சார்.. நான் உங்களைக் கவனிக்கவேயில்லை..”என்று கூற.. அவனோ ஏளனமாக உதட்டை வளைத்து.. “உன் கவனம் தான் வேறு எங்கோ.. யாருடனோ.. பயணித்துக் கொண்டிருக்கிறதே.. அலுவலகத்திற்குள் நுழையும் போதே இது போன்ற சிந்தனைகளையெல்லாம் கழட்டி வைத்து விட்டே வந்து விடு.. உன் கவனக் குறையால் என் தொழில் பாதிக்கப்படக் கூடாது பார்..”என்றவன் தனது நடையைத் தொடர்ந்து உள்ளே சென்றான்.

யாருடன் பயணிப்பதை வந்து பார்த்தானாம்?,இவனையும் இவனது எதிர்கால வாழ்க்கையையும் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்க இந்தப் பின்லேடனின் பேச்சைப் பார்.. என்று எரிச்சல் மண்ட அதே இடத்தில் அவள் நின்று விட.. சென்ற வேகத்திலேயேத் திரும்பி வந்தவன் “குட்மார்னிங்...”என்று கூறி விட்டுச் சென்றான். “குட்மார்னிங்”என்று பதிலுக்கு முணுமுணுத்தவள் தனது இருக்கையை நாடிச் சென்றாள்.

DO NOT COPY

அன்று அவள் அழகர்சாமியுடன் சைட்டுக்குச் செல்ல வேண்டியிருந்ததால்.. காலை சுமார் பதினோரு மணியளவில் அவருடன் புறப்பட்டு விட்டாள். அங்கே வேலை முடிந்து உணவு இடைவேளையின் போது தந்தை ஃபோன் செய்து விட.. சாப்பிடுவதை நிறுத்திவிட்டு.. கைபேசியில் உரையாடியபடியே நடந்து சென்றாள். எண்ணங்களிலும்,நேரிலும் கௌதமை மட்டுமே கண்டு வந்தவளுக்குத் தந்தை கௌதம் எப்படியிருக்கிறான் என்று வினவியதும்.. அவனுக்குள் இருக்கும் நல்ல குணங்களையும்,அவனது கெட்ட பழக்கத்தையும் அளந்து கொண்டிருந்தாள்.

கல்லும்,மண்ணும் குவிந்த கிடந்த இடத்தில் சுற்றும் முற்றும் எதையும் கவனிக்காமல் சிரித்து சிரித்துப் பேசியபடி அவள் நடந்து கொண்டிருந்த வேளை.. அருகேயிருந்தக் கட்டிடத்தின் மேல் தளத்தில் செங்கலைக் குவித்துக் கொண்டிருந்த பெண்.. தனது கவனக் குறைவால் செங்கலைக் கீழே கொட்ட.. செங்கல் கற்கள் அனைத்தும் கீழே விழுந்தது.

தன் போக்கில் கைப்பேசியில் நடந்து கொண்டே உரையாடிக் கொண்டிருந்த நித்யா அதை கவனிக்கவேயில்லை. செங்கல் கற்கள் சிதற ஆரம்பித்து அனைவரும் சத்தமிட்ட வேளை… இருவரையும் கவனித்த கௌதம் வேகமாக ஓடி வந்து நித்யாவின் கைப்பற்றி இழுத்தான். சட்டென அவன் தனது கையைப் பற்றவும் திகைத்த நித்யா அவன் இழுப்பிற்குச் சென்று பின் செங்கல் கற்கள் கீழே விழும் சத்தம் கேட்டுத் திரும்பி நோக்கினாள்.

இத்தனை கற்களும் தலை மேல் விழுந்திருந்தால் என்ன ஆவது.. என்று திகைத்துப் பின் பயந்துத் தன்னருகே நின்றிருந்தவனை அவள் நிமிர்ந்து நோக்க.. அவனோ முழு உக்கிரத்துடன் அவளை நோக்கிக் கொண்டிருந்தான். “வ..வந்து..”என்று அவள் தொடங்குவதற்குள்.. “அறிவில்லை உனக்கு..?,அக்கம் பக்கம் பார்த்து நடந்து வரவேண்டுமென்று தெரியாது..?,என்ன பூங்காவில் நடப்பதாக நினைப்பா உனக்கு..?,சைட்டுக்குள் கேப் அணிய வேண்டுமென்று தெரியாதா..?,ஏன் அணியவில்லை..?,உன் போக்கில் எவனுடனோ ஃபோனில் உரையாடிக்கொண்டு காலார நடந்து கொண்டிருக்கிறாய்..?,வேலை நடக்கும் இடத்தில் இப்படித் தான் அசட்டையாக இருப்பாயா..?, நீயெல்லாம் ஏசி அறைக்குள் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்து வேலை செய்ய வேண்டிய ஆள்.. உன்னையெல்லாம் தேர்ந்தெடுத்திருக்கிறார் பார்.. அவரைச் சொல்ல வேண்டும்..”என்றவன் தொடர்ந்து.. செங்கலைக் கீழே தள்ளியப் பெண்ணின் புறம் திரும்பி..

“எத்தனை வருடமாக வேலை பார்க்கிறாய்..?,ம்?,இது போல் எத்தனை தலைகளை உடைக்க முயற்சித்திருக்கிறாய்..?,எந்தப் பெண்ணுக்கும் கவனமாக நடந்து கொள்ள வேண்டுமெங்கிற நோக்கமே கிடையாதா..?,எல்லாரும் ஒரே மாதிரி தானா..?,இனி கவனத்தை எங்கோ பதித்துக் கொண்டு இங்கே வந்து

DO NOT COPY

வேலைக்குத் தடையாக இருக்கும் எவரும் உள்ளே நுழைய வேண்டுமென்று அவசியமேயில்லை.. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்..”என்றவன்.. அருகே கோபத்தோடு நின்று கொண்டிருக்கும் நித்யாவைக் கண்டதும் “அங்கிள்...”என்று குரல் கொடுத்தான். அழகர்சாமி வேகமாக முன்னே வந்ததும்.. அவளிடமிருந்து பார்வையை விலக்காமல்.. “இனி இது போன்ற ஆட்களையெல்லாம் சைட்டுக்கு அழைத்து வராதீர்கள்..”என்று கூற.. கோப மிகுதியில் முகம் சிவந்து விட்டது நித்யாவிற்கு. “வாம்மா.. போகலாம்..”என்றழைத்தவரைக் கையமர்த்தி விட்டு “ஒரு நிமிடம் அங்கிள்..”என்றவள் அவன் புறம் திரும்பி..

“ஆடியாயிற்றா...?,உங்கள் ருத்ரதாண்டவத்தை முடித்து விட்டீர்களா..?,அல்லது இன்னமும் பாக்கி வைத்திருக்கிறீர்களா..?, ஒரு சாதாரண விபத்திற்காக ஏன் இப்படிச் சத்தமிடுகிறீர்கள்..?,ஆண்களுக்கு மட்டும் கவனக்குறைவே ஏற்படாதா..?, ஏன் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தவறு செய்ததேயில்லையா..?, ஏதோ அந்தப் பெண் தெரியாமல் சிதற விட்டதற்காக அப்படித் திட்டுகிறீர்களே.?, வேண்டுமென்றே யாரேனும் இப்படிச் செய்வார்களா..?, பெண்கள்,பெண்களென எப்போதும் வெறுப்பை உமிழ்கிறீர்களே.. இந்தக் கட்டிடத்தில்.. அந்தக் கட்டிடத்தில்.. எல்லா இடத்திலும் பாருங்கள்..இங்கே வேலை செய்வதில் 50 சதவீதம் பேர் பெண்கள் தான்.. தேவையில்லாமல் பழி சொல்வதை விட்டு விடுங்கள்.. முதலில் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேளுங்கள்..”என்றவள் தொடர்ந்து..

“அத்தோடு நான் உணவு இடைவேளையிலிருந்தேன், ஃபோனில் உரையாடிக் கொண்டிருந்தது என் தந்தை. மற்றபடி இங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்த நேரம் முழுதும் கேப் அணிந்து கொண்டு தான் இருந்தேன்.. சாதரணத் தவறை கத்திக் கத்திப் பெரிது படுத்தி.. இத்தனை பேரின் முன்னிலையில் அவமானப் படுத்துகிறீர்கள்..?, பெண் என்றாலே எப்போது, யாரை ஏமாற்றலாம் என்கிற எண்ணத்தில் தான் திரிவார்கள் என்று நீங்கள் வைத்திருக்கும் கேடு கெட்ட எண்ணத்தை தயவு செய்து மாற்றிக் கொள்ளுங்கள்”என்றவள்.. அவனைத் திரும்பிப் பாராமல் நடந்து சென்றாள்.

கோபம் குறையாமல்.. அடுத்தச் சில நிமிடங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தவளை.. “சூப்பர்மா..”என்ற அழகர்சாமியின் குரல் நிமிர்ந்து பார்க்க வைத்தது. “என்ன அங்கிள் சூப்பர்..?”என்றவளிடம் “கௌதமை அதட்டிப் பேசிக் கடைசியில் அந்தப் பெண்ணிடம் அவனை மன்னிப்புக் கேட்க வைத்தாயே.. அதைச் சொல்கிறேன்..”என்றதும் “மன்னிப்புக் கேட்டாரா..?”என்று திகைத்தவள் பின் தோளைக் குலுக்கினாள்.

சரியாகச் சாப்பிடாமல் சென்று விட்டாயே என்று கடிந்து கொண்டு அவரளித்த டீயையும்,பன்னையும் உண்டு முடித்தவள்.. கைக் கழுவ எழுந்து சென்றாள். அங்கே கைகளில் டெட்டால் ஹேண்ட் வாஷூடன் இரண்டு கைகளையும்

DO NOT COPY

பரபரவெனத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்த கௌதமைக் கண்டவள்.. இவன் என்ன வெட்டி முறித்தானென்று இப்படி டெட்டால் ஊற்றிக் கழுவுகிறான்.. இவன் எப்படிப் போனால் என்ன.. அவன் நகர்ந்ததும் செல்லலாமென்று நினைத்து விலகி நின்றவளுக்குச் சட்டெனப் பொறி தட்டியது.

அவள் கைப்பற்றி அவன் இழுத்ததும் அவள் திகைத்து அவனை நோக்க.. அவனோ அவள் கையைத் தொட்டதே பாவம் என்பது போல்.. முகத்தில் ஒரு விதமான அருவெறுப்புடன் சட்டென விலக்கிக் கொண்டான். அப்படியானால்.. அப்படியானால்.. அவளைத் தொட நேர்ந்து விட்டதால் தான் இந்த டெட்டாலா..?, சுறுசுறுவெனக் கோபம் ஏற.. அவனருகே சென்றவள்.. என் கைகளை அவன் பற்றியதால்.. எனக்கும் தான் அருவெறுப்பு.. என்று மனதினுள் கூறிக் கொண்டு அவனை முறைத்தபடியே பாட்டிலைத் திறந்து முழுவதையும் தன் கைகளில் கொட்டினாள்.

திடீரென்று அருகே வந்து நின்றவள்.. கைகளில் மொத்தமாகக் கொட்டிக் கொள்வதைக் கண்டுத் திகைத்தவன் பின் வித்தியாசமாக நோக்கினான். “செங்கல் தான் தலையில் படவில்லையே..?,பின் ஏன் தலையில் அடிபட்டது போல் நடந்து கொள்கிறாய்..?”என்றபடியேத் தண்ணீரைத் திருகியவனைக் கோபத்துடன் முறைத்து.. “ஏதோ ஆபத்பாந்தவன் போல் காப்பாற்றி விட்டு இந்தப் பக்கம் வந்து.. என் கைப் பிடித்ததற்காக உங்கள் கைகளை இப்படிச் சுத்தம் செய்கிறீர்களே.. உங்களுக்கு ஒரு மடங்கு அருவெறுப்பென்றால்.. எனக்கு ஆயிரம் மடங்கு.. அதனால் தான்.. ஒரு பாட்டிலெல்லாம் போதாது..” என்றுத் தன் பின்னால் நின்றுக் கத்திக் கொண்டிருந்தவளை நிமிர்ந்துக் கண்ணாடியில் நோக்கியவன்.. “உன் கைப் பற்றியதற்காகக் நான் என் கையைச் சுத்தம் செய்கிறேனா..?,சரி தான்.. சிமெண்ட் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு சென்றவருக்கு உதவி செய்தேன்.. அதனால் சிமெண்ட் கைகளில் ஒட்டிக் கொண்டு விட்டது.. மதியச் சாப்பாட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதால் கையைச் சுத்தம் செய்ய வந்தேன்.. நீயாக எதையோ கற்பனை செய்து கொண்டு ஒரு பாட்டில் ஹேண்ட் வாஷை வீணாக்கி விட்டாய்.. மரியாதையாக அதற்குண்டான விலையைக் கொடுத்து விடு..”என்று அவன் மிரட்டவும்..

அசடு வழிந்தாலும்.. பின் அவனைப் போலவே முறைத்து.. “ஏன்.. உங்கள் கம்பெனியில்.. உங்களது ஏச்சு,பேச்சுக்களையும் வாங்கிக் கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறோமே.. எங்களுக்கு ஒரு ஹேண்ட் வாஷை வீணாக்குவதற்கு உரிமையில்லையா..?,வேண்டுமானால்.. என் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளுங்கள்..”என்றவள் வேண்டுமென்றே கைகளிலிருந்துத் தண்ணீரை அவன் முன்னாலேயே உதறி.. அவன் “ஏய்..”என்று பற்களைக்

DO NOT COPY

கடிக்கும் முன் ஓடி விட்டாள். என்ன பிறவி இவள்..?, வந்ததிலிருந்து தொல்லையாக இருக்கிறாள்.. என்றெண்ணிக் கொண்டான் அவன்.

வாழ்க்கை அதன் போக்கில் சென்று கொண்டிருக்க.. நித்யா கௌதமின் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து முழுதாக ஒன்றரை மாதங்கள் முடிந்து விட்டிருந்தது. முன் போலல்லாது.. காலையில் அவளைக் கண்டால் முகச் சுழிப்புடன் குட்மார்னிங் சொல்லாது.. கொஞ்சம் புன்னகையுடனே கூறினான் அவன்.. அதைக் கண்டு “மயக்கம் வருவது போல் இருக்கிறது அங்கிள்...”என்று நடிப்பவளை சிரிப்புடன் அதட்டிக் கொண்டிருந்தார் அழகர்சாமி. நித்யாவிற்கும், கௌதமிற்குமான உறவில் நெருக்கம் ஏற்பட வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்த வசந்தி இதைக் கண்டு மகிழ்ச்சியுற்றார். விஸ்வநாதனுக்கு விசா பிரச்சனையால் அவர் இந்தியா திரும்புவதில் தாமதம் ஏற்பட்டாலும் அவர் தினமும் மகளுக்கு ஃபோன் செய்து உள்ள நிலைமையை விசாரித்துக் கொண்டு தானிருந்தார்.

மற்றபடித் தனதுக் குடிப்பழக்கத்தை அவன் விடவுமில்லை.. நித்யாவுடன் சகஜமாக நெருங்கிப் பழகவுமில்லை. ஆனால் அதற்கான வாய்ப்பு விரைவிலேயே அவர்களைத் தேடி வந்தது.

நியூயார்க்கில் இருந்த வரை காலை வேளைகளில் அருகேயிருந்தப் பூங்காவில் நித்யா ஜாகிங் செய்வதை வழக்கமாகத் தான் வைத்திருந்தாள். ஆனால் என்று இந்தியா வந்து சேர்ந்தாலோ.. அப்போதிருந்து அந்தப் பழக்கத்தை முழுவதுமாகக் கை விட்டிருந்தாள்.

அன்று அலுவலகம் செல்வதற்காக விரைவிலேயே எழுந்து விட்டவள்.. கட்டாயம் ஜாகிங் சென்றாக வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு டீஷர்ட்டையும்,ட்ராக் சூட்டையும் மாட்டிக் கொண்டுப் புறப்பட்டு விட்டாள்,, கௌதம் செல்லும் அதே மைதானம் தான்.. ஆனால் அவன் காலை உடற்பயிற்சிகளைச் செய்யும் இடம் அவள் அறிந்தது தான் என்பதால்.. அவள் அந்தப் பக்கம் செல்லாமல்.. வேறு புறம் சென்று விட்டாள்.

ஜாகிங் முடிந்துச் சிறிது நேரம் கண் மூடி அமர்ந்தவள்.. விழி திறக்கையில் எதிரேயிருந்தக் குளத்தில் தாமரை ஒன்று அழகாக மலர்ந்திருப்பதைக் கண்டாள். உடனே அதைக் கையில் தொட வேண்டுமெங்கிற ஆர்வம் பிறக்க.. சுற்றும் முற்றும் நோக்கியவள்.. அருகேயிருந்தக் குச்சியை எடுத்துக் கொண்டு குளத்தின் அருகே சென்று மண்டியிட்டமர்ந்து எட்டி அதை அருகில் கொண்டு வர முயற்சித்தாள்.

அந்த மைதானம் முழுதையும் சுற்றி ஓடி முடித்த கௌதம் என்றும் போலல்லாது.. அன்று.. மைதானத்தின் மறுபுறம் அமைந்திருந்த பூங்காவிற்கு

DO NOT COPY

வந்தான். குட்டிப் பெண் ஸ்ரீமதி இங்கே செல்ல வேண்டுமென்று அடிக்கடி அடம்பிடிப்பதால்.. அவளைக் கூட்டி வருவதற்கு முன் தான் ஒரு முறை அந்தப் பூங்காவைச் சுற்றிப் பார்த்து விட்டுச் செல்லாம் என்ற நோக்குடன் உள்ளே நுழைந்தவன்.. சுற்றும் முற்றும் பார்வையைத் திருப்பினான்.

எதிர்ப்புறத்தில் தாமரைக் குளத்தில் யாரோ ஒரு பெண் தலையைக் கவிழ்த்தி ஏதோ செய்து கொண்டிருப்பதைக் கண்டவன்.. யார் இவள்.. லூசாக இருப்பாள் போலும்.. குளத்தின் உள்ளே விழுந்தால் என்ன ஆவது.. அருகில் சென்று எச்சரிக்க எண்ணித் திரும்பியவன்.. பின் நமக்கென்ன என்பது போல் திரும்பி நடந்தான்..

பின் மனம் கேட்காமல்.. திரும்பி அந்தப் பெண்ணின் அருகே சென்றான். வெகு அருகில் சென்று விட்டப் பின் அது நித்யாவைப் போல் தோன்ற.. புருவம் சுருக்கியபடி "நித்யா..."என்றழைத்தான். திடீரென்று கௌதம் அவளது பெயர் சொல்லி.. அதுவும் முதன்முறையாக அழைத்ததும் திகைத்துத் திரும்பியவள்.. கால் தடுமாறிக் குளத்திற்குள்ளேயே விழுந்தாள்.. "ஏய்.. ஏய்.."என்று அவன் குரல் கொடுக்கும் முன் அவள் விழுந்து விட.. வேகமாக அருகில் சென்றான்.


அதற்குள் அந்தக் குளத்திற்குள் முழுமையாக மூழ்கி.. ஆடைகள் முழுதும் தொப்பலாக நனைந்து.. இலைகளையும்ம்,வேர்களையும் தலையில் சுமந்து கொண்டு முழுக் கோபத்துடன் வெளியே வந்தாள்... என்னவோ, ஏதோ என்று பதறி அருகே வந்த கௌதம் அவளது இந்தக் கோலத்தைக் கண்டு விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கினான்..

அவன் சிரிப்பதைக் கண்டு இடுப்பில் கை வைத்து அவள் முறைக்க.. அதில் மேலும் அவனுக்கு சிரிப்பெழுந்தது... கண்களில் நீர் நிறையுமளவிற்குக் கடகடவெனச் சிரித்தபடி அருகேயிருந்த பெஞ்சில் அமர்ந்தவனைக் கண்டு.. வழக்கம் போல் வியப்பானது அவளுக்கு. அவனது சிரிப்பைக் கண்டபடியே சில நிமிடங்கள் நின்றிருந்தவள்.. பின் அவனருகே வந்து மண்டியிட்டு அமர்ந்தாள்.


அப்போதும் விடாமல் அவளது முகத்தைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தவனிடம் "எப்போதும் இப்படியே சிரித்துக் கொண்டேயிருக்கலாமில்லையா கௌதம்..?"என்று மெல்லிய குரலில் ஏக்கத்துடன் வினவினாள்.

அவளது குரலும்,அந்தக் குரலிலிருந்த ஏக்கமும்,காலை வெயிலில் ஜொலித்துக் கொண்டிருந்த அவளது முகமும், அந்தக் கண்கள் வெளிப்படுத்திய.. உணர்வையும் கண்டவனின் முகம் ஒரு நொடி இறுகியது. பின் சட்டென எழுந்து அவளைக் கடந்து நடந்து சென்றான்.

DO NOT COPY



# அத்தியாயம் – 6




**உன்னைத் தேடித் தேடிச் சோர்ந்து..**
**களைப்புற்று நான் அமரும் வேளையில்...**
**பின்னிருந்து என் கண்கள் மூடி..**
**என்னைத் தவிப்புறச் செய்கிறாயே!**
**கண்ணா...! நீ அறிவாயா...?**
**நின் முகம் கண்டு விட்டப் பின்..**
**என் கண்கள் மோட்சம் பெறுவதை..!**
**நீ என்னைத் தீண்டி விட்டப் பின்..**
**என் ஜீவன் சொர்க்கமடைவதை..!**

**எ**திர்பார்க்க முடியாது தான்! நித்யா கூறியதற்காக கௌதம் தனது அய்யனார் தோற்றத்தை உடனே மாற்றி வாயெல்லாம் பல்லாக மாறி விடுவானென்று! ஏதோ அந்த நிமிடம் அவனுடைய புன்னகையைக் கண்டதும் அவளுக்குள் ஒரு ஏக்கம் எழுந்து விட்டது. இவன் இப்படியே சிரித்துக் கொண்டே இருந்தாலென்னவென்று! அப்படியொரு எண்ணம் தோன்றியதும் கொஞ்சமும் சிந்திக்காமல் எண்ணியதை அவனிடம் கேட்டும் விட்டாள். ஆனால் எதற்காக அவளுக்குள் அந்த ஏக்கம் எழ வேண்டும்..?

ஒரு வேளை.. இவன் சீக்கிரம் மாறி விட்டானானால்.. வந்த வேலை முடிந்தது என்கிற திருப்தியுடன் நியூயார்க் சென்றுத் தனது வாழ்வைத் தொடரலாம் என்கிற வேகமோ..?,அல்லது எந்நேரமும் மகனைப் பற்றியே சிந்தித்துத் தனது வாழ்நாளின் ஒவ்வொரு நாளையும் நிம்மதியின்றிக் கழித்துக் கொண்டிருக்கும் வசந்தி அத்தையின் மேல் தோன்றிய இரக்கத்தால் விளைந்த ஏக்கமோ..?. இருக்கலாம்! அல்லது.. ஒரு இளைஞன்! நன்றாகப் படித்து வெற்றிகரமாகத் தொழில் நடத்தித் தன் வாழ்வில் பல சாதனைகளைப் புரிந்தவன்.. அவனது வாழ்க்கை வீணாக வேண்டாமெங்கிற இயல்பான நல்ல எண்ணமாகக் கூட இருந்திருக்கலாம்... ஆனால் இதற்காகவெல்லாம் மனதினுள் ஏக்கம் எழுமா என்ன..?. தெரியவில்லையே!

DO NOT COPY

சரி! இப்போது அவளைப் பற்றிய ஆராய்ச்சி முக்கியமல்ல.. நித்யா கூறியதும் விறுவிறுவென எழுந்து சென்ற கௌதமின் நிலையை அறிந்து கொள்வது தான் முக்கியம்!

நித்யாவின் முகத்தில் வெளிப்பட்ட உணர்வுகளைக் கண்டுத் திகைத்துப் பின் முகம் இறுக எழுந்து வந்து விட்டவனுக்கு.. அவளது ஏக்கம் நிறைந்த குரல் குழப்பத்தை ஏற்படுத்தியது. அவளது குரலும்,அதனால் ஒலித்த வார்த்தைகளும் ஒருபுறம் குழப்பத்தை ஏற்படுத்தினாலும்.. அவனுக்கு அவன் மீதே கோபம் வந்தது. எப்படி ஒரு பெண்ணிடம் சிரித்துப் பேசலாமென்று! என்ன தான் பெண்ணுரிமை அது,இதுவெனப் பக்கம்,பக்கமாக வசனம் பேசி நினைத்ததைச் சாதிக்கும் ரகமாக நித்யா இருந்தாலும்... அவளது பேச்சுக்கள் நியாயமானதாகவே இருந்தாலும்.. அவள் ஒரு பெண்! தன்னுடைய நலத்திற்காக எப்பேர்ப்பட்டக் கேடுகெட்ட செயலையும் செய்யத் தயாராயிருக்கும் பெண்ணினத்தைச் சேர்ந்தவள் அவள்..

அவளது பேச்சிலும்,செயலிலும் இருக்கும் நியாயமும்,அலுவலகத்தில் அனைவரிடமும் அழகாகப் பேசி நல்ல உறவை வளர்த்துக் கொள்ளும் அவளது குணமும்,தைரியமும்,துடுக்குத்தனமும்,வாதிடும் திறமையும் அவளை நல்லவளாகவே உருவகப் படுத்தினாலும்.. அவன் அவளை நம்புவதாக இல்லை.. அலுவலகத்தில் அவள் நியாயம் பேசிப் போராடும் விசயங்களை.. முதலில் எதிர்த்தாலும் அடுத்து அவன் ஒப்புக் கொண்டிருக்கிறான் தான்.. அன்று சைட்டில் வேலை செய்யும் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டதைப் போல்.. ஆனால் அதைத் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு அவள் அவனது சொந்த வாழ்வில்.. சொந்த விசயங்களில் மூக்கை நுழைத்தால்.. அவமானப் பட்டுத் தான் திரும்பப் போகிறாள். இனி அவளுடன் பேசுவதைக் கட்டாயமாகத் தவிர்த்து விட வேண்டும். அதிகப் பிரசங்கி! என்று முடிவு செய்து கொண்டான் கௌதம். ஆனால் தன் எண்ணங்களுக்கு நேர்மாறாக.. அவள் தன்னுள் விளைவிக்கப் போகும் மாற்றங்களை எரிச்சலும்,கோபமும் நிறைந்திருந்தாலும் தப்பாமல் நிறைவேற்றப் போவதை அவன் அறிந்திருக்கவில்லை.

**அ**ன்று அவள் அலுவலகத்திற்கு வந்து லிஃப்ட்டில் ஏறுகையில் அவளைத் தொடர்ந்து உள்ளே நுழைய முற்பட்ட கௌதம் அவளைக் கண்டதும் திரும்பி நடந்து வெளியே சென்று விட்டான். “எ..என்ன..?”என்று நித்யா வினவியது அவன் காதில் விழவேயில்லை. ஏன் இப்படி நடந்து கொள்கிறான்..?, இருக்கட்டும்! பார்த்துக் கொள்ளலாம்! என்று நினைத்துக் கொண்டாள்.

அதன் பின் இடைவேளையின் போது அவனைப் பார்க்க முயன்றும் முடியாமல் போனது. அவன் அறைக்குள் செல்ல முயன்றால்.. “சார் பிஸியாக இருக்கிறார் மேடம், யாரையும் உள்ளே விடக் கூடாதென்று உத்தரவு

DO NOT COPY

போட்டிருக்கிறார்.”என்று கூறினான் கதிர். அவனை ஒரு முறை முறைத்தவள் “யாரையும் விடக் கூடாதா..?,அல்லது என்னை மட்டும் உள்ளே விடக் கூடாதென்று கூறினாரா..?”என்று அவள் வினவியதற்கு “அது வந்து மேடம்..”என்று அவன் தலையைச் சொறிய உண்மை அது தான் என்று உறுதியானது அவளுக்கு. கோபத்துடன் தன் இருக்கைக்கு வந்தமர்ந்தவளை அழகர்சாமி அழைத்தார்.

“சொல்லுங்கள் அங்கிள்..”என்றுத் தன் முன்னே தூக்கி வைத்த முகத்துடன் அமர்பவளை சிரிப்புடன் நோக்கியவர் “என்னம்மா..?,மறுபடியும் உன் ஹீரோவுடன் சண்டையா..?,”என்று வினவ.. “ஹீரோவா..?யார் அந்த அசுரனா..? அங்கிள்.. அவன் ஹீரோ அல்ல.. வில்லனும் அல்ல.. இரண்டுக்கும் நடுவில் என்னவென்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.. இந்தச் சில நாட்களாக என்னிடம் சிரித்துப் பேசாவிடினும் முறைக்காமலேனும் இருக்கிறானே என்று நான் சந்தோசப் பட்டுக் கொண்டிருந்தால் இன்று.. இன்று என்னை அவன் அறைக்குள் நுழையக் கூடாதென்று தடை விதித்து விட்டான்..”என்று பள்ளிக் குழந்தை ஆசிரியரிடம் அடுத்த மாணவனைப் பற்றிக் குறை கூறுவது போல் கூறி முடித்தவளை புன்னகையுடன் நோக்கியவர்.. பின்..

“அவன் இப்படித் தடை உத்தரவு விதிக்குமளவிற்கு நீ என்ன காரியம் செய்து வைத்தாய்..?”என்று வினவினார். “பெரிதாக எந்தத் தவறும் செய்யவில்லை அங்கிள்.. காலையில் ஜாகிங்செல்கையில்..” என்று தொடங்கி நடந்ததைக் கூறினாள். அவர் கூறீயதைக் கேட்டு ஆச்சரியத்துடன் “கௌதமா அப்படிச் சிரித்தான்..?”என்றவரிடம் “காட் பிராமிஸ் அங்கிள்.. அந்த அய்யனாரே தான்.. நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் என்று தெரிந்தால் என் கைப்பேசியில் ஒரு புகைப்படம் எடுத்திருப்பேன்..”என்றவளிடம் “ஆனால்.. உனக்கு ஏனம்மா அவன் சிரித்ததும் அப்படிக் கேட்க வேண்டுமென்று தோன்றியது...?”என்று அவர் வினவ.. “ம்ம்..”என்று தலையைச் சொறிந்தவள்.. “தெரியவில்லையே அங்கிள்..” என்று கூற.. நமுட்டுச் சிரிப்புடன் எழுந்தார் அழகர்சாமி.

“சரி, இப்போது என்ன..?,அவன் உன்னை அறைக்குள் விட மாட்டேனென்று தடைப் பிறப்பித்து விட்டான்.. அவ்வளவு தானே..?,அந்தத் தடையை முறிப்பதற்கு என்னிடம் ஒரு திட்டம் உள்ளது..”என்று அவர் கூற “அப்படியா...?, என்னத் திட்டம் அங்கிள்..?”என்று வினவியவளின் கண்களிலிருந்த ஆர்வத்தைக் கண்டவர் நன்றாக முறுவலித்து “கௌதமின் செகரட்டரி 3 மாத விடுமுறையில் செல்கிறார்.. அவருக்கு பதில் யாரை நியமிப்பதென்று கௌதம் என்னிடம் கருத்துக் கேட்டிருந்தான். நான் உன் பெயரை சிபாரிசு செய்யத் திட்டமிட்டிருக்கிறேன்.. எப்படியேனும் வாதாடி அவனைச் சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு.. அதற்கு முன்பு திருவேங்கடத்திடம் (கௌதமின் செகரட்டரி) சென்று வேலை விசயங்களைப் பற்றி அறிந்து கொள்..”என்று கூறினார்.

“சூப்பர் ப்ளான் அங்கிள்..”என்று கைக் குலுக்கிய நித்யா “உங்களுக்கு உடம்பெல்லாம் மூளை அங்கிள்..”என்று பாராட்ட அவர் சிரிப்பதை நிறுத்தி அவளை முறைத்து “பார்த்தாயா..?,என்னையே கலாய்க்கிறாயே..?”என்று கூறக் கலகலவெனச் சிரித்து அவர் அறையை விட்டு வெளியேறினாள் நித்யா.

அவள் சென்றதும் கௌதமின் அறைக்குச் சென்ற அழகர்சாமி நித்யாவை மூன்று மாத காலத்திற்கு அவனது உதவியாளராக நியமிக்குமாறுக் கூற வேகமாகத் தலையசைத்து “அது சரி வராது அங்கிள்..”என்று முடித்து விட்டான் அவன். “ஏன் தம்பி..?,நல்ல பெண்.. திறமையானவள்.. நீங்கள் எள் என்றால் எண்ணையாக இருப்பாள்.. ஏன் மறுக்கிறீர்கள்..?”என்றவரிடம் “அங்கிள்.. நீங்கள் ஏன் அவளது கொள்கைப் பரப்புச் செயலாளராக மாறி விட்டீர்கள்..?,எந்த வேலையைப் பற்றிக் கேட்டாலும் நித்யா,நித்யா என்கிறீர்கள்..?,”என்று எரிச்சலுடன் கூறினான்.

“அந்தப் பெண்ணின் குணம் அப்படித் தம்பி.. குறை கூறும்படி எதையேனும் அவளிடம் கண்டீர்களா..?,இல்லையே..!,தன் மனதிற்கு நியாயமென்று படும் விசயத்தை உடனே முகத்துக்கு நேரேயே கூறி விடுகிறாள்.. அனைவரது நலனைப் பற்றியும் யோசிக்கிறாள்.. அதில் தவறென்ன தம்பி..?,எவ்வளவு இனிமையாகப் பழகுகிறாள்.. நீங்களே பார்க்கிறீர்கள் தானே..?”என்று கூறக் கோபமாக அவர் புறம் திரும்பியவன் “விட்டால்.. என்னை இந்த சீட்டிலிருந்து தூக்கி விட்டு அவளை அமர வைத்து விடுவீர்கள் போலும்..” என்றவன் பின் “கதவு திறந்து விடும் நம்பியிலிருந்து கம்பெனி ஜி,எம் அழகர்சாமி வரை அனைவரையும் கவர்ந்து விட்டாள்.. இம்சை”என்று முணுமுணுக்க.. “என்ன தம்பி..?”என்றார் அவர்.

“ஒன்றுமில்லை... உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்..”என்றவன் மடிக்கணிணியில் பார்வையைத் திருப்ப.. இதுவே போதும் தெய்வமே என்று நினைத்துக் கொண்டு விரைவாக வெளியேறி விட்டார் அழகர்சாமி.

அடுத்த இரண்டு நாட்களும் கௌதம் அவளது கண்ணிலேயே படாமல் கண்ணாமூச்சி ஆட.. முகம் பார்க்கக் கூட மறுக்குமளவிற்கு என்ன தவறு செய்து விட்டேன் என்று புலம்பித் தீர்த்தவள்.. அன்று மதிய இடைவேளையின் போது அவன் அறைக்குச் செல்ல முடிவெடுத்தாள். அவளும் இரண்டு நாட்களாக முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறாள் ஆனால் முதலாளியின் சொல்லுக்குக் கட்டுப் பட்ட கதிர் அவளை உள்ளே விடுவதேயில்லை.

அவன் அறையைக் கண்டபடியே அவனை ஃபோனில் அழைத்தாள். “ஹலோ..” என்றவனிடம் “உங்களை இப்போது பார்த்தாக வேண்டும்.. உள்ளே வரலாமா..?”என்று வினவ நித்யா தான் என்பதை அவளது குரலிலிருந்தே

DO NOT COPY

கண்டு கொண்டவன் “முடியாது, நான் இப்போது வேலையாக இருக்கிறான்... பிறகு பார்க்கலாம்..”என்று கூறி கட் செய்ய முற்பட.. “உங்களுக்கு அடுத்த மூன்று மணி நேரத்திற்கு என்ன வேலைகள் இருக்கின்றன என்பதற்கான பட்டியல் என்னிடம் இருக்கிறது.. அதனால் பிஸி என்று கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்காதீர்கள்..”என்றவளிடம் “உன்னிடம் நான் எதற்காகத் தப்பிக்கப் பார்க்க வேண்டும்..?நீ என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனதில்..?, எப்போதும் அதிகப் பிரசங்கித் தனமாகத் தான் பேசுவாயா..?”என்று சீறியவனிடம் “நான் என் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை நேரில் வந்து தெரிவிக்கிறேன்.. இப்போது என்னை அறைக்குள் அனுமதியுங்கள்..”என்றவள் ஃபோனைக் கட் செய்து விட்டு எழுந்து சென்றாள்.

ஃபோனை வெறித்தபடி இரண்டு நிமிடம் அமர்ந்திருந்தவனை “சார்..”என்ற கதிரின் அழைப்பு களைத்தது. “நித்யா மேடம் உங்களைக் காண வந்திருக்கிறார்கள்.. நீங்கள் தான் அழைத்தீர்கள் என்கிறார்கள்.. உள்ளே அனுப்பட்டுமா..?”என்றவனிடம் “வரச் சொல்..”என்றான்.

கருநீலச் சுடிதாரில் மயிலாக உள்ளே நுழைபவளை அவன் எந்தவித உணர்ச்சியுமின்றி நோக்க.. அவளோ.. அவனைக் கண்டு விட்ட சந்தோசத்தில் நன்றாக முறுவலித்து “குட் ஆஃப்டர்னூன் சார்..”என்று கூற “வந்த வேலையைச் சொல்லி விட்டுச் செல்..”என்று பல்லைக் கடித்தபடி கூறினான்.

அவனது எரிச்சலைக் கண்டதும் அவன் இரண்டு நாட்களாகத் தன்னை உதாசீனப் படுத்தியது நினைவிற்கு வர.. “என்னை எதற்காக இரண்டு நாட்களாக இந்த அறைக்குள் அனுமதிக்கவில்லை..?,என்னை உள்ளே விட வேண்டாமென்று கதிரிடம் வேறு உத்தரவு போட்டிருக்கிறீர்கள்..?,அவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்..?,”என்று பொறிய.. “ஆமாம், நான் தான் உன்னை உள்ளே விட வேண்டாமென்று கதிரிடம் கூறினேன்.. நான் தான் ஏற்கனவே கூறினேனே உன்னுடைய வேலை பற்றிய விசயங்களை அழகர்சாமி அங்கிளிடம் கேள் என்று.. பின் எதற்காக என்னைக் காண வருகிறாய்..?”என்றவனிடம் “அது..”என்று இழுத்தவள் “ஏன்..?,கம்பெனி எம்,டியிடம் பேசுவதற்கு எனக்கு எதுவுமே இருக்கக் கூடாதா..?,கம்பெனியின் வளர்ச்சிக்கு என்னால் முடிந்த விசயங்களைப் பற்றி நான் உங்களிடம் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கலாம்..”என்று வாய்க்கு வந்ததை உளற.. “அப்படியா..?,கம்பெனியின் வளர்ச்சிக்கு நீ உதவ எண்ணுகிறாயா..?,கூறு.. உன் மேலான யோசனையைத் தெரிந்து கொள்ள நானும் ஆவலாகத் தான் இருக்கிறேன்..”என்று அவன் அவள் புறம் திரும்பி அமர.. பேந்த பேந்த விழித்தாள் நித்யா.

“ம்,சொல்..”என்றவனிடம் “சரி,நான் நேராகவே விசயத்திற்கு வந்து விடுகிறேன்.. அன்று பூங்காவில் சந்தித்தற்குப் பின் தான் இப்படி நடந்து கொள்கிறீர்கள்..

DO NOT COPY

என்னைப் பார்ப்பதைத் தவிர்க்கிறீர்கள்.. என்னிடம் பேசுவதைத் தவிர்க்கிறீர்கள்..”என்று குற்றம் சாட்ட.. “பின்னே அதிகப்பிரசங்கித் தனமாக நீ பேசி வைத்தால்.. இப்படித் தான் நடக்கும்..”என்றான் அவன்.

“என்ன அதிகப் பிரசங்கித் தனத்தை கண்டீர்கள்..?,எப்போதும் உர்ரென்ற முகத்துடன் அய்யனார் தோற்றத்துடன் வலம் வரும் நீங்கள் திடீரென்று அப்படிச் சிரித்தீர்கள்.. சரி பார்க்க அழகாக இருக்கிறதே.. எப்போதும் நீங்கள் சிரித்துக் கொண்டேயிருந்தால் நன்றாக இருக்குமே என்றெண்ணிக் கூறினேன். அது தவறா..?”என்று சாதாரணமாகக் கூறியவளைத் திகைப்புடன் நோக்கினான்.

உங்கள் சிரிப்பு அழகாக இருக்கிறதென்று.. ஒரு ஆணிடம் எவ்விதத் தயக்கமும் இன்றி இயல்பாகத் தெரிவிப்பவளை அவன் ஆச்சரியமாக நோக்க.. “என்ன..?,உங்கள் சிரிப்பு அழகாக இருக்கிறதென்று சொன்னதைப் பற்றி யோசிக்கிறீர்களா..?, ஆமாம்.. உங்கள் சிரிப்பு அழகு தான்.. நீங்கள் ஹேண்ட்சம் தான்..”என்றவளை அவன் எதுவும் கூறாமல் முறைக்க.. “இதையும் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.. சிறு குழந்தையின் சிரிப்பு அழகாக இருந்தால் நாம் கொஞ்சுவதில்லையா..?,அது போன்று ஒரு சாதாரண ரசனை.. அவ்வளவு தான்.. உள்நோக்கு எதுவுமில்லை..”என்றாள்.

நான் பேசுவதற்கு எப்போதேனும் வாய்ப்பளிக்கிறாளா..?,அவளே எனக்கும் சேர்த்துப் பேசிக் கொள்கிறாள் என்று நினைத்தவன் பின் பொறுமையிழந்து “என்ன தான் வேண்டும் உனக்கு..?,”என்றவனுக்கு பதிலாக அவள் மனது “நீ தான்..”என்றது. திடுக்கிடலுடன் தனது எண்ணப் போக்கை உள்வாங்கியவள்.. பின் நிமிர்ந்து “இனி கதிரிடம் என்னை உள்ளே விடக் கூடாதென்று உத்தரவு பிறப்பிப்பது,லி∴ப்ட்டில் என்னைக் கண்டால் வெளியேறி விடுவது.. இது போன்ற வேலைகளெல்லாம் செய்யாதீர்கள்..”என்று கூற.. “என்ன நீ எனக்கு ஆணை பிறப்பிக்கிறாயா..?”என்று வினவினான்.

“ச்ச,ச்ச, அப்படியெல்லாம் செய்ய முடியுமா..?,நீங்கள் இந்தக் கம்பெனியின் முதலாளி.. நான் ஒரு சாதாரண வேலையாள்.. அத்தோடு இனி தடை உத்தரவுக்கெல்லாம் வாய்ப்பில்லை... திருவேங்கடம் நாளையிலிருந்து விடுமுறையில் போகிறார்.. அதனால் நான் தான் உங்களதுத் தற்காலிக பி.எ. மறந்து விடாதீர்கள்..”என்று கூற.. “ஆமாமாம்..இத்தனை நாட்களாக என்னைத் தேடித் தேடி வந்து இம்சித்துக் கொண்டிருந்தாய்.. இனி நாளையிலிருந்து நேரடியாகவே உன் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டும்..”என்று சலித்துக் கொண்டான்.

அவன் பேச்சு சிரிப்பை வரவழைத்தாலும் அடக்கிக் கொண்டு “சரி,சரி எனக்குப் பசிக்கிறது.. சாப்பிடச் செல்கிறேன்.. நீங்களும் சென்று சாப்பிடுங்கள்..”என்றவள் எழுந்து நடக்க.. எந்தத் தைரியத்தில் இவள் இப்படி உரிமை பாராட்டுகிறாள்..

DO NOT COPY

அனைவரையும் எதிர்த்துப் பேசும் தான்.. இவள் கூறுவதற்கு மட்டும் எப்படி மறுக்காமல் தலை ஆட்டுகிறோம்.. என்று நினைத்தவனுக்குக் குழப்பமே மிஞ்சியது. யோசித்தபடிக் கணிணியில் பார்வையைத் திருப்பியவனிடம் “சார்..” என்றழைத்துக் கொண்டு மறுபடியும் அவன் முன்பு நின்றவள்.. கைப்பேசியைக் கையில் வைத்துக் கொண்டு... “ஒரு முறை.. அன்று போல் சிரியுங்கள்.. நான் புகைப்படம் எடுத்து அங்கிளிடம் காண்பிக்க வேண்டும்.. கம் ஆன்.. ஸ்மைல்.. “என்று அவன் முன்பு புகைப்படம் எடுப்பவள் போல் நிற்க.. வந்ததே கோபம் அவனுக்கு.

“ஏய்.. அரை லூசு.. மெண்டல்.. உன்னையெல்லாம் எந்த நேரத்தில் பெற்றார்களோ.. வெளியே போகிறாயா..?,இல்லையா...?”என்று கத்த.. “நான் அரை லூசென்றால்.. இவன் முழு லூசு..”என்று முணுமுணுத்தபடியே வெளியேறி விட்டாள்.

“**அ**த்தை...”என்றழைத்தபடி சிரிப்புடன் நுழைபவளை வாஞ்சையுடன் வரவேற்ற வசந்தி “வா வா நித்யா.. இன்று உனக்குப் பிடித்தக் குழிப் பணியாரம்..”என்றதும் “அத்தை.. பணியாரமெல்லாம் அப்புறம் சாப்பிடலாம்.. முதலில் நான் உங்களுக்கு ஒரு குட் நியூஸ் சொல்கிறேன்.. நாளையிலிருந்து உங்கள் மகனின் பி.எ விடுமுறையில் செல்கிறார்.. அதனால் நான் தான் மூன்று மாதத்திற்கு அவருடைய பி.எ.. பாருங்கள் அவரை எப்படி ஆட்டி வைக்கிறேனென்று..”என்று கூறியவள்.. குழிப்பனியாரத்தை எடுத்து உண்ணத் தொடங்கினாள்.

“அத்தை.. தினமும் எனக்கு மட்டும் பலகாரம் எடுத்து வருகிறீர்களே.. கௌதம் சாப்பிட மாட்டானா..?,சாரி.. மாட்டாரா..?”என்று வினவ.. “உன்னை விட 5,6 ஆண்டுகள் பெரியவனை அவன் என்கிறாயா..?”என்று அவள் காதைத் திருகினார். பின் பெருமூச்சுடன் “என் சமையலை அவன் ரசித்து உண்ட காலமெல்லாம் முடிந்து விட்டதம்மா.. காலை உணவை மட்டும் கொறித்து விட்டு ஓடி விடுவான்.. மதியமும்,இரவும் வெளியில் தான் சாப்பிடுவான். என்னைத் தொந்தரவு செய்யக் கூடாதாம்.. அவனுக்கு சாப்பாடு போடுவதால் எனக்கு என்னம்மா கஷ்டம் வந்து விடப் போகிறது..?”என்று வருத்தத்துடன் கூற... “ஓ!”என்றவள் “அத்தை.. ஒரு ஐடியா.. நாளையிலிருந்து அலுவலகத்திற்கு நீங்கள் சாப்பாடு கொடுத்து விடுங்கள்.. எப்படியேனும் அவரைச் சாப்பிட வைப்பது என் பொறுப்பு..”என்று கூறினாள். சற்றுத் தயக்கமாகவே இருந்தாலும் சரியெனத் தலையாட்டினார் வசந்தி. பின் “ஆனால் நித்யா... உன்னைப் பார்க்கில் கண்டு விட்ட பின் கௌதம் நீ தங்கி இருக்கும் இடம் பற்றி உன்னிடம் விசாரிக்கவில்லையா..?”என்று வினவினார். “உங்கள் மகனுக்கு அவ்வளவு அறிவு இல்லை போலும் அத்தை..”என்றவள் அவர் முறைப்பதைக் கண்டு “உங்கள் மகன் அப்படி ஊன்றி

DO NOT COPY

யோசிக்குமளவிற்கு என்னிடம் நெருங்கிப் பழகவில்லை அத்தை..”என்று முடித்தாள்.

மறுநாள் காலை படு உற்சாகமாக வீட்டை விட்டுக் கிளம்பியவள்.. கௌதம் புறப்படும் வரைக் காத்திருந்து அவன் பின்னேயே சென்றாள். லிஃப்ட்டிலும் அவனைத் தொடர்ந்து நுழைந்தவள் “குட்மார்னிங் சார்..”என்று கூற அவனும் வேறு வழியின்றி “குட் மார்னிங்”என்றான். பின் அவள் திரும்பித் திரும்பித் தன்னையே பார்ப்பதைக் கண்டு அவன் புருவம் நெறிக்க.. “இல்லை.. இன்று கிளையண்ட் மீட்டிங் இருக்கிறதே.. டையும்,கோட்டும் அணிந்து ஷோக்காக வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்..”என்று கூற.. “மீட்டிங் எத்தனை மணிக்கு..?” என்று வினவினான். “பத்து மணிக்கு..”என்றவளிடம் “ம்ம்” என்றான் அவன்.

கௌதமின் பி,எ திருவேங்கடத்தின் இருக்கை அவனது அறைக்கு வெளியே அருகிலேயே இருந்தது. ஆனால் கௌதமுடன் அதிகம் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தனது இருக்கையை அவனது அறைக்குள்ளேயே மாற்றிக் கொண்டாள் நித்யா. அறைக்குள் நுழைந்ததும் மாற்றத்தை உணர்ந்த கௌதம் பதில் கூறாமல் அவளை முறைக்க.. “ஆ,ஊன்னா நெற்றிக் கண்ணைத் திறந்தால் எப்படி சார்..?,நான் பஸ்பமாகி விட மாட்டேனா..?”என்று கேலி செய்தாள் நித்யா.

பையை வைத்த படித் தன் இருக்கைக்குச் சென்றமர்ந்த கௌதம் “எத்தனை முறை பஸ்பமானாலும் மீண்டும் மீண்டும் உயிர்பெற்று வரக் கூடிய சக்தி தான் உனக்கிருக்கிறதே..”என்று கூற.. அப்படியென்றால் என்ன அர்த்தம்.. என்று குழம்பிய நித்யா.. இவனுக்கென்ன.. கல்லூளிமங்கன்! என்று நினைத்துக் கொண்டாள்.

அதன் பின் இருவரும் வேலையில் மூழ்க.. அன்றைய மீட்டிங்கிற்குத் தேவையான குறிப்புகள் அனைத்தையும் ஃபைல் செய்து கொண்டவள்.. அவனை அழைக்கச் சென்றாள். இருக்கையில் அவனைக் காணாததும் நேரமாயிற்றே!இன்னும் என்ன செய்கிறான்.. என்றெண்ணுகையில் அவன் வாஷ்ரூமைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். “சார்.. நேரமாயிற்றே.. கிளம்பலாமா..?”என்று வினவியவளிடம் “ம்,குறிப்புகளை ஃபைல் செய்யச் சொல்லியிருந்தேனே.. செய்தாயா..?”என்றவாறுத் தன் கணிணியில் எதையோ பார்வையிட்டவனிடம் “ம்,உங்கள் டேபிளில் இருக்கிறது பாருங்கள்..”என்றாள்.

அதைப் பிரித்துப் பார்வையிட்டுக் கொண்டிருந்தவன் நேரமாவதை உணர்ந்து “நித்யா.. அந்தப் பையில் டையும்,கோட்டும் இருக்கிறது பார்.. எடுத்து வா..”என்று கூற மகிழ்ச்சியுடன் முறுவலித்தபடி பையைத் திறந்து இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்தாள். ஃபைலைப் பார்வையிட்டபடியே

DO NOT COPY

நின்று கொண்டிருந்தவனின் அருகே சென்றவளுக்கு ஒரு யோசனை தோன்றியது..

டையைக் கேட்டு ஒரு கையை அவள் புறம் நீட்டிக் கொண்டு மறுகையில் ஃபைலைப் பிடித்திருந்தான் அவன். “பரவாயில்லை.. நீங்கள் நிதானமாகப் படியுங்கள்.. நான் உதவி செய்கிறேன்..”என்றவள் அவன் பதில் கூறும் முன்பு டையை அவன் கழுத்திலிட்டு மாட்டத் துவங்கியிருந்தாள்.

தனக்கு வெகு அருகில் நின்று உரிமையுடன் தோள் பற்றி.. சிரிப்புடன் மாட்டிக் கொண்டிருந்தவளை அவன் விரிந்த விழிகளுடன் நோக்க.. அவளோ அவன் பார்வையை அறியாமல் ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டு அணிவித்துக் கொண்டிருந்தாள். தடுக்கத் தோன்றாமல் அமைதியாகி விட்டவனை நிமிர்ந்து நோக்கியவள்.. “என்ன..?,திரும்பி நில்லுங்கள்.. கோட் அணிய வேண்டாமா..?”என்றபடி அவனைப் பற்றித் திருப்பினாள். தனக்கு அணிவிப்பவளை அவன் திகைப்பு மாறாமல் பார்த்தபடி நின்றிருக்க.. அணிவித்து முடித்ததும் ஓரடித் தள்ளி நின்று அவனைப் பார்வையிட்டவள்.. “ம்ம்,பரவாயில்லை.. அவ்வப்போது அய்யனாரைப் போல் தோற்றம் அளித்தாலும்.. நீங்கள் ஸ்மார்ட் தான்.. போகலாமா..?,”என்று கூற.. அவளைப் புரிந்து கொள்ள முடியாமல்.. அவளோடு சேர்த்துத் தன்னையும் புரிந்து கொள்ள இயலாமல் குழம்பிப் போனான் கௌதம் பிரபாகரன்.

பின் அவனுடன் காரில் கிளம்பி மீட்டிங்கை வெற்றிகரமாக முடித்து விட்டுத் திரும்புகையில் “மிகவும் சந்தோசம் இல்லையா சார்..?,பெரிய கான்ட்ராக்ட் சைன் செய்திருக்கிறீர்கள்.. வாழ்த்துக்கள்..”என்று கை நீட்ட.. அவள் நீட்டியக் கையை ஒரு முறை நோக்கியவன் “நன்றி..”என்று வாய் வார்த்தையுடன் நிறுத்திக் கொண்டான். முகம் கன்ற அவனை நோக்கியவள் “கைக் குலுக்குவதில் என்ன தவறைக் கண்டு விட்டீர்கள்..?,சற்று முன் யாரோ ஒரு பெண்மணியிடன் கை குலுக்கினீர்கள்..?.அது தவறில்லையா..?”என்று துவங்க.. அவன் பதிலே பேசாமல் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான். “இவ்வளவு கேட்கிறேனே.. ஏதேனும் பதில் கூறுகிறீர்களா..?”என்று உச்சஸ்தாதியில் கத்தியவளிடம் உச்சுக் கொட்டியவன் “வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறேனே.. எப்படிக் கை குலுக்க முடியும்..?”என்று எரிச்சலுடன் வினவ.. “ஆமாம்.. ஏதேனும் ஒரு சாக்கு..”என்று திரும்பிக் கொண்டாள்.

அவள் மீது எரிச்சலும்,தன் மீது கோபமும் வந்தாலும்.. இதழ்க்கடையில் ஒரு முறுவல் தோன்றியது கௌதமிற்கு. அது ஏன் என்று தான் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.. அதன் பின் அலுவலகத்திற்கு வந்த பின் அழகர்சாமி சிரிப்புடன் வரவேற்றுத் தன் வாழ்த்தைத் தெரிவிக்க.. பதிலுக்கு முறுவலித்து அவரிடம் கை குலுக்குபவனை நித்யா முறைத்தபடி நிற்க.. அவள் பார்வையை உணர்ந்து சிரிப்புடன் நின்றிருந்தான் அவன். கௌதமின்

DO NOT COPY

சிரிப்பையும்,நித்யாவின் முறைப்பையும் கண்ட அழகர்சாமிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அவர் சென்றதும் ஃபைலை மாரோடு அணைத்தபடி நின்றிருந்தவள் அவனையே முறைக்க.. "என்ன..?,போ போ.. வேலையைப் பார்"என்றான் அவன். "இது அநியாயம் சார்... ஒரு கைக் குலுக்கலைக் கூட நிராகரிப்பீர்களா..?, அதிலும் அனைவரிடமும் ஏற்றுக் கொள்கிறீர்கள்..!,என்னிடம் மட்டும் மறுக்கிறீர்கள்..?,"என்று கூறினாள்.


பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து மூச்சை இழுத்து வெளி விட்டவன்.. "நம்பி இன்று விடுமுறையா என்ன..?,ஆளைக் காணோமே..?"என்று வினவ.. அவனை மேலும் முறைத்தவள் "பேச்சை மாற்றாதீர்கள்.. கைக் குலுக்க முடியுமா.. முடியாதா..?"என்று கேட்க.. அவள் முகத்தில் பார்வையைப் பதித்துத் தன் வலது கையை நீட்டினான்.. விரிந்த சிரிப்புடன் அவன் கையில் தன் கையைப் பதித்தவளுக்கு.. உயிர் வரை ஒரு சிலிர்ப்பு ஓடியது... அகலமான உள்ளங்கையுடன் koodiya நீள நீளமான விரல்களில் சீராக வெட்டப் பட்டிருந்த நகங்களுடன் இருந்த அவன் கையில்.. அவளது ஐவிரல்களும் அடங்கிப் போனது.. அழுத்தமாகப் பதிந்த அவனது உள்ளங்கையின் வெப்பம்.. உள்ளே ஏதோ செய்ய.. படபடவென அடித்துக் கொள்ளும் இதயத்துடன் தலை குனிந்தாள். அதே சமயம்.. அவளது உள்ளங்கையின் மென்மையை உணர்ந்து சிலிர்த்துப் போன கௌதம் சட்டெனத் தன் கையை உருவிக் கொண்டு மறுபுறம் திரும்பி நின்றான்.

"நா..நான் அங்கிளைப் பார்த்து விட்டு வருகிறேன்.."என்று அவள் வெளியேறி விட.. தலையை அழுந்தக் கோதி நெற்றியைத் தேய்த்துக் கொண்டவன்.. இது என்ன தலைவலி என்றெண்ணி வேலையில் தன் கவனத்தைத் திருப்பினான். அழகர்சாமியிடம் அரட்டை அடித்துவிட்டு வெளியே வந்தவள் வசந்தி அத்தையின் டிரைவர் நிற்பதைக் கண்டு அவரருகே சென்றாள். "அண்ணா.. அத்தை சாப்பாடு கொடுத்தனுப்பியிருக்கிறீர்களா..?"என்று வினவியவளிடம் சாப்பாட்டுக் கூடையை நீட்டினான்.

அதை வாங்கிக் கொண்டு கௌதமின் அறைக்குள் நுழைந்தாள். அரவம் உணர்ந்து திரும்பிய கௌதம் "என்ன இது..?,"என்று வினவினான். "உங்களுக்குத் தான் சார்.. சாப்பாடு.. உங்கள் அன்னை அனுப்பியிருக்கிறார்கள்.. டிரைவர் வந்து கொடுத்துச் சென்றார்.. வாவ்.. என்ன ஒரு வாசனை.. வகையான சாப்பாடு தான் சார்.. ஒரு பிடி பிடிக்கலாம்.. என்னையும் சேர்த்துக் கொள்கிறீர்களா ப்ளீஸ்.."என்று சிரிக்க.. "அம்மா சாப்பாடு அனுப்பியிருக்கிறார்களா..?,யாரைக் கேட்டு அனுப்பியிருக்கிறார்கள்..?, எதற்காக சிரமப்படுகிறார்கள்..?,முதலில் அந்தச் சாப்பாட்டை திருப்பிக் கொடுத்தனுப்பு.. இதையே தினமும் பழக்கப்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்... இருக்கும்


DO NOT COPY

துன்பம் போதாதா..?”என்று அவன் பொறியத் துவங்க.. போராடித்தான் அவனை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டியிருக்கும் என்று ஏற்கனவே அவள் எதிர்பார்த்திருந்ததால்.. அவனை நின்று முறைத்தாள்.



DO NO

## அத்தியாயம் – 7




**சிறகு முளைத்தப் பறவையாய் மாறி..**
**மழை மேகங்களுக்கிடையில்..**
**பறந்து திரிந்து கொண்டிருக்கிறேன்..**
**ஏன் தெரியுமா..?, கண்ணா!**
**இன்று நீ என் கன்னம் ஏந்தி..**
**என் கண்களைச் சந்தித்து..**
**என் உயிருக்குள் நுழைந்து விட்டதால்!**

**கௌ**தமைப் பொறுத்தவரை அன்னை செய்து கொடுக்கும் உணவுகளையும், அவளது பாசத்தையும் ஏற்றுக் கொள்வதில் தயக்கம் ஏதும் இல்லை தான். ஆனால் இதுவரை அவன் செய்து கொண்டிருக்கும் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு.. தினமும் அழுகையில் கரைபவளை மேலும் துன்புறுத்த அவனுக்கு விருப்பமேயில்லை.. தினமும் அவன் குடித்து விட்டு இல்லம் செல்கையில் தவிப்புடன் வாசலில் காத்திருப்பாள்.. காலை உணவை அரைகுறையாக உண்டு விட்டு அவன் எழுகையில்.. வருத்தத்துடன் அவன் முகம் நோக்குவாள். அவனது ஒவ்வொரு செய்கையும் அன்னையை பாதிப்பதை உணர்ந்தும் அவனால் ஏதும் செய்ய முடியாது போக.. வீட்டிலிருக்கும் நேரத்தை வெகுவாகக் குறைத்து விட்டான் அவன். அதனால் இன்று அன்னை சாப்பாடு கொடுத்திருப்பதாக நித்யா கூறியதும் அவனுக்குக் கோபம் வந்து விட்டது.

அவனை முறைத்துக் கொண்டே நிற்பவளை "என்ன பார்க்கிறாய்..?"என்று அவன் வினவ.. "எதற்காகத் திருப்பி அனுப்பச் சொல்கிறீர்கள் சார்..?,உங்கள் அம்மா எவ்வளவு பாசமாக சமைத்திருப்பார்கள்..?,ஏன் வேண்டாம் என்கிறீர்கள்..?"என்று வினவ.. "அது உனக்குத் தேவையில்லாத விசயம்.. திருப்பி அனுப்பி விடு என்றால் திருப்பி அனுப்பி விடு.."என்று அழுத்தமாகக் கூற.. "எது எனக்குத் தேவையில்லாத விசயம் சார்..?,நீங்கள் இப்போதுத் திருப்பி அனுப்பினால்.. நீங்கள் நிராகரித்ததைத் தாங்க முடியாமல்.. உங்கள் அன்னைத் தான் உண்ணாமல் இருப்பதோடு மட்டுமல்லாது.. இந்த உணவு முழுதையும் குப்பையில் கொட்டுவார்.. உங்களுக்குத் தெரியுமா சார்..?, ஒரு

வேளை உணவு இல்லாமல் எத்தனை பேர் கஷ்டப் படுகிறார்கள் என்று.. உணவை மறுக்காதீர்கள்.. பாவம் புரியாதீர்கள்.. இதனால் எவ்வளவு பேருக்குக் கஷ்டம் பாருங்கள்.. வாருங்கள் உண்ணலாம்.. நான் கேட்க மாட்டேன்.. அனைத்தையும் நீங்களே சாப்பிடலாம்.. ம்,வாருங்கள்..''என்றழைக்க.. வேறு வழியின்றி எழுந்து சென்று கைக் கழுவி விட்டு வந்தான்.

அவன் வருவதற்குள் அனைத்தையும் டேபிளின் மீதுக் கடைப் பரப்பி விட்டாள் நித்யா. நீண்ட நாட்களுக்குப் பிறகு மகன் தான் சமைத்த உணவை உண்பதால்.. நிறைய வகைகளைச் சமைத்துக் கொடுத்திருந்தார். அனைத்தையும் கண்டவன் வியப்பும்,மகிழ்ச்சியுமாய் வந்தமர.. "பார்த்தீர்களா..?,யம்மி இல்லை..?"என்றபடி அவனுக்குப் பரிமாறினாள். அனைத்தும்,அனைத்துமே அவன் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகள்.. பார்த்துப் பார்த்துச் சமைத்திருக்கிறாள்.. அன்னையின் நினைவில் ஆடிப் போய் அமர்ந்து விட்டவனின் தோள் தொட்டு சாப்பிடுங்கள் என்று அவள் சைகை செய்ய.. பின் ஆர்வமாக உண்ணத் துவங்கினான். அடுத்த சில நிமிடங்கள் தட்டைத் தவிர வேறு புறம் திரும்பாமல் உண்பவனைக் கண்டு சிரிப்பு வந்தது அவளுக்கு.

சில நிமிடங்களில் அவளை நிமிர்ந்து நோக்கியவன் "நீ சாப்பிடவில்லையா..?"என்று வினவினான். "அப்பாடி! இப்போதேனும் உங்களுக்குக் கேட்க வேண்டுமென்று தோன்றியது.. தட்டிலேயே புதைந்து விட்டீர்களோ என்று நினைத்து விட்டேன்..''என்றவள் படபடவெனத் தனக்கு வேண்டியதைத் தட்டில் போட்டுக் கொண்டு உண்ணத் தொடங்கினாள். அவளிடம் புன்னகைத்த படியே உண்டவனுக்கு.. வெகு நாளைக்குப் பிறகு திருப்தியாக சாப்பிட்ட உணர்வு.

இருவரும் உண்டு முடித்த பின் பாத்திரங்களை எடுத்து வைத்தவள் "இனி தினமும் உங்கள் அன்னை சமையலை நானும் உண்ணப் போகிறேன் சார்.." என விளையாட்டு போலக் கூறி.. தினமும் உண்பதற்கு அவனுக்குச் சம்மதமா என்று கேட்க நினைத்தாள். ஒரு நிமிடம் தயங்கினாலும் பின் சிரிப்புடனே தலையசைத்தான். அத்தை ஜெயித்து விட்டீர்கள்! என்று மனதுக்குள் குதூகலித்துக் கொண்டவள் உடனே அவருக்கு ஃபோன் செய்தும் தெரிவித்தாள். கண்ணீரும் சந்தோசமுமாக பதிலளித்த வசந்தியைச் சமாதானப் படுத்தி விட்டு அறைக்குள் நுழைந்தாள்.

அன்று முழுதும் புன்னகை முகத்துடன் காட்சி அளித்தவனைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை நித்யாவிற்கு. தன் முகத்தை அடிக்கடி நோக்குபவளை "என்ன அப்படிப் பார்க்கிறாய்..?"என்றவனிடம் "ஒன்றுமில்லை" என்று முணுமுணுத்தாள். அதன் பின் வேலை தொடர.. இரவு ஒன்பது மணிக்காகக் காத்திருந்தாள். நிச்சயம் இன்று அவனைக் குடிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

DO NOT COPY

ஏழு மணியாகியும் அவள் கிளம்பாததைக் கண்டு “நீ இன்னும் செல்லவில்லையா..?”என்று வினவியவனிடம் “இ..இல்லை.. வேலையிருக்கிறது..”என்று சமாளித்து அமர்ந்திருந்தாள். சரியாக ஒன்பது மணியானதும் கிளம்பத் தயாராகிவனை.. என்ன சொல்லித் தடுப்பது என்று நகத்தைக் கடித்தவள்.. “வ..வந்து.. கிளம்பி விட்டீர்களா சார்..?”என்று வினவினாள்.

அவளை நிமிர்ந்து பார்க்காமல் “ம்,ம்..”என்றவனிடம் “வீட்டிற்கா சார்..?”என்று வினவினாள். “ப்ச்..”என்றபடி அவள் முகம் நோக்கியவன் “வீட்டிற்கோ.. காட்டிற்கோ.. இது என்ன கேள்வி..?,நான் எங்கு செல்கிறேன் என்பதைக் கூட உன்னிடம் சொல்ல வேண்டுமா..?”என்று கோபமாகக் கூற முற்பட்டான். “வீட்டிற்குச் செல்கிறீர்களா என்று கேட்பது தவறா..?,அப்படியானால்.. நீங்கள் வேறு எங்கோ செல்கிறீர்கள்.. அப்படித் தானே..?”என்று வினவினாள்.

எரிச்சல் மறையாமல் அவளை மீண்டும் நோக்கியவன் “நித்யா.. என் பொறுமையைச் சோதிக்காதே... என்ன பிரச்சனை உனக்கு..?”என்று வினவ.. “நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்,. என்ன சார் இது..?,மதிப்பான.. உயர்வான இடத்தில் இருக்கும் திறமைசாலி நீங்கள்.. நீங்கள் இப்படி ஒரு தவறைச் செய்யலாமா..?,வேண்டாம் சார்..”என்று அவன் வழிமறிக்க.. “நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன்.. என் சொந்த விசயங்களில் அதிகப் பிரசங்கித் தனமாகத் தலையிட்டு வாங்கிக்கட்டிக் கொள்ளாதே என்று.. வழி விடு நித்யா..”என்று அவன் கோபமாகக் கூற.. “இது என்ன முட்டாள்தனம்..?,கஷ்டம்,கவலை என்றால் ஆண்கள் போதையைத் தான் நாடிச் செல்வீர்களா..?,உங்கள் நிலையைப் பார்த்துக் கவலை கொள்ளும் உங்கள் அன்னை கஷ்டம் தாங்காமல் உங்களைப் போல் தினமும் பாருக்குச் சென்றால் ஒப்புக் கொள்வீர்களா..?”என்று கோபமாக வினவ.. “என்ன பேசுகிறாய் இடியட்..” என்றவன் அவள் கழுத்தைப் பற்றித் தள்ள.. அவன் தள்ளிய வேகத்தில் அருகிலிருந்த நாற்காலியில் படாரென விழுந்தவளை.. “அளவுக்கு மீறிப் பேசினாயானால்.. மரியாதை கெட்டு விடும் ஜாக்கிரதை.. உன் எல்லையைத் தாண்டி உள்ளே வராதே..”என்று கர்ஜித்தவன் விறுவிறுவென நடந்து சென்று விட்டான்.

கழுத்தைப் பற்றியபடி எழுந்து அமர்ந்தவள் “சரியான ராட்சசன்!”என்று முணுமுணுத்தாள்.. ஆனால் தவறு அவளுடையது தான்.. ஒரே நாளில் அவன் முழுதாக மாறி விட வேண்டும் என்று நினைப்பது எவ்வளவு பெரிய தவறு..! கொஞ்சம் விட்டுப் பிடித்திருக்க வேண்டும்.. இப்போது உள்ளதையும் கெடுத்துக் கொண்டாயிற்று.. இனி நாளை முகம் கொடுத்துக் கூடப் பேச மாட்டான்.. என்று வருத்தமுற்றவள்.. சடாரென்று எழுந்தமர்ந்தாள். ரோஷமும்,கோபமும் தான் முக்கியமென்று இருக்கும் நித்யாவா இது..?,ஒருவன் அவளது கழுத்தைப்

DO NOT COPY

பற்றித் தள்ளி அவமானப் படுத்தியிருக்கிறான். அதைப் பெரிதாக எண்ணாமல் அவனைப் பற்றி யோசிக்கிறேனே.. என்று இல்லாத கோபத்தை இருப்பதாகக் காட்டிக் கொண்டு வீட்டிற்குச் சென்றாள். அன்று இரவுத் தந்தையிடம் கணிணியில் உரையாடுகையில் அனைத்தையும் தெரிவித்தாள். “கழுத்தைப் பற்றித் தள்ளுகிறான் டாடி.. ராஸ்கல்..”என்று கூற.. “உன் முகத்தில் இருக்கும் கோபம் குரலில் இல்லையே நித்யாம்மா..?”என்று அவர் கேலி செய்ய.. சிரித்துச் சமாளித்து வைத்தாள்.

நித்யாவுடன் சண்டையிட்டு பாரில் சென்றமர்ந்தவனுக்கு அன்று குடிக்கத் தோன்றவேயில்லை.. அன்னையின் உணவை உண்டதில்.. அன்னையின் மீது தோன்றிய இரக்கம்.. அன்னையின் அன்பை இத்தனை நாட்களாக உதாசீனப்படுத்தியதில் தன் மீதே தோன்றிய கோபம்.. மேலும் இந்தக் குடிப் பழக்கம் வேறு அன்னையைத் துன்பப்படுத்துமோ என்ற எண்ணம்.. கடைசியாக.. குடிக்க வேண்டாமென்றுத் தடுத்த நித்யாவின் முகம் என்று அனைத்தும் வந்து போனது.. குடிக்காமலேயே வீடு திரும்பியவனை டிரைவரும்,வசந்தியும் ஆச்சரியமாக நோக்கினர்.

அன்னையைக் கண்டதும் அருகே வந்தவன்.. “மதியம் நீங்கள் அனுப்பிய சாப்பாடு நன்றாக இருந்ததம்மா..”என்றவன் தொடர்ந்து “நீ சாப்பிட்டாயா,,.?”என்று வினவினான்.. திகைப்பும் கண்ணீருமாய் தலையசைத்தவரிடம் “சென்று படுத்துக் கொள்..”என்றுத் தோளைத் தட்டி விட்டுத் திரும்பி நடந்தான்.

சந்தோசமும்,திகைப்பும் போட்டி போட அதிர்ந்து நின்று விட்டவர் மறுநாள் எழுந்ததும் செய்த முதல் வேலை.. நித்யாவின் கையைப் பிடித்துக் கொண்டுத் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டது தான். “குடிக்கவில்லையா..?,”என்று யோசித்தவள்.. “அத்தை.. இது நான் கூறியதால் இருக்காது.. உங்கள் சாப்பாடு செய்த மாயம் தான்..”என்று கூறி அவரை மேலும் மகிழ்ச்சிபடுத்தினாள்.

அன்று அலுவலகத்தில் தன் அறைக்குள் நுழைகையில் நேற்று இரவு நித்யாவுடன் நடந்த வாக்குவாதம் நினைவிற்கு வந்தது கௌதமிற்கு. நிச்சயம் எப்படியும் ஆயிரம் பக்கத்திற்கு குற்றப் பத்திரிக்கை தயாரித்திருப்பாள். அவள் என்ன பேசினாலும் சரி,சரியெனத் தலையாட்டி விட வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டு சிரிப்புடன் அறைக் கதவைத் திறந்தான். அறைக்குள் அவள் இல்லாததைக் கண்டுப் புருவம் நெறித்தவன் அவளது மேஜையின் மீது பார்வையைத் திருப்பினான். அவளது கைப் பை,மற்றும் இத்யாதிப் பொருட்கள் சிதறிக் கிடப்பதைக் கண்டு அவள் வந்து விட்டாள் என முடிவு செய்து கொண்டுத் தன் இருக்கைக்கு சென்று அமர்ந்தான்.

DO NOT COPY

அடுத்த சில மணி நேரங்களுக்கு அவள் அறைக்கு வந்து சேராததைக் கண்டு எரிச்சலுடன் அழகர்சாமியை அழைத்தான். “அங்கிள் நித்யா அங்கே இருக்கிறாளா..?”என்று வினவியதற்கு அவர் பதில் கூறும் முன் முந்திக் கொண்ட நித்யா.. “ஏன்..?,என்ன வைத்திருக்கிறாராம் நித்யாவிற்கு..?,திட்டி அதட்ட யாரும் கிடைக்கவில்லையென்று என்னைக் கூப்பிடுகிறாராக்கும்..?”என்று பலமாகவே முணுமுணுக்க.. “வாங்குகிற சம்பளத்திற்குக் கொஞ்சமேனும் வேலை பார்க்கச் சொல்லுங்கள் அங்கிள்.. எப்போதும் எங்கேயேனும் அமர்ந்து அரட்டையில் இறங்கி விடுகிறாள்..” என்று அவன் சிரித்தபடியே கூற.. “ஏன்..?,என்ன குறைவாக வேலை பார்க்கிறேனாம் நான்..?,தினமும் இவரது ஏச்சு,பேச்சுகளை வாங்கிக் கட்டிக் கொள்கிறேனே.. அதை விட வேறு என்ன பெரிய உழைப்பு இருந்து விடப் போகிறது..?”என்று கூற.. “சரி பேசியது போதும்.. வேலை பார்க்க வருகிறாயா..?”என்று அவன் அழைத்ததும் “நான் இப்போது கொஞ்சம் பிஸி அங்கிள்.. பிறகு வருகிறேன் என்று கூறி விடுங்கள்..”என்று மிடுக்காகத் தெரிவித்தாள்.

“இந்த கம்பெனிக்கு நான் எம்.டியா அல்லது அவள் எம்.டியா என்று கேட்டுச் சொல்கிறீர்களா அங்கிள்..?”என்று அவன் கேட்டதும்.. சிரித்த அழகர்சாமி.. “நித்யாம்மா.. சார் நமக்கு எம்.டி.. உனக்கு மறந்து விட்டதென்று நினைக்கிறேன்..”என்று கூற.. “யாராக இருந்தால் என்ன அங்கிள்..?,எம்.டி என்றால் என்ன வேண்டுமானாலும் பேசலாமா..?,செய்யலாமா..?,நாம் என்ன அவருக்கு அடிமையா..?”என்று உச்சஸ்தாதியில் தொடங்க.. “நித்யா.. இப்போது அறைக்கு வருகிறாயா இல்லையா..?”என்று அவன் அதட்டியதும் “முடியாது.. நான் இன்று வெளி நடப்பு செய்கிறேன்..”என்றாள்.

“தாராளமாகச் செய்... அப்படியானால் வேலையை வெளியிலிருந்தே பார்த்துக் கொள்..”என்றவன் “அங்கிள்..”என விளித்து அவரிடம் பேசத் தொடங்கி விட்டான். தனக்குள் முணுமுணுத்தபடி உர்ரென்ற முகத்துடன் அமர்ந்திருந்தவளைக் கண்டு சிரித்தபடியே அமர்ந்திருந்தார் அழகர்சாமி. அதன் பின் சிறிது நேரம் அவர் அறையில் அமர்ந்திருந்தவள் பின் எழுந்து அவன் அறைக்குச் சென்றாள்.

கதவைத் தட்டி விட்டு அவன் அனுமதிக்குக் காத்திராமல் விறுவிறுவென நடந்து சென்றவள் தன் இருக்கையில் அமர.. அவளை முறைத்த கௌதம் “இந்தக் கம்பெனிக்கு நான் எம்.டியா இவள் எம்.டியா என்றே தெரியவில்லை.. கொஞ்சமேனும் மதிக்கிறாளா.. ராட்சசி..”என்று முணுமுணுத்தான். அவன் முணுமுணுப்பைக் கண்டு கொள்ளாமல் வேலையில் ஈடுபட்டாள் நித்யா.

முழுதாக இரண்டு மணி நேரம் அமைதியாகவே வேலையைத் தொடர்ந்தவளைக் கண்டு எரிச்சலானது அவனுக்கு. இவள் பேசினாலும்

DO NOT COPY

தொல்லை.. பேசாமல் இருந்தாலும் தொல்லை.. என்றெண்ணிக் கொண்டவன்.. பொறுமை இழந்த சமயம்.. அவனது வீட்டிலிருந்து மதிய சாப்பாடு வந்தது.

“சார்..”என்றபடி கதவைத் திறந்து கொண்டு நுழைந்த டிரைவர் சாப்பாடை வைத்து விட்டு வெளியேற.. நித்யாவைத் திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு சாப்பாட்டுக் கூடையின் அருகே சென்றான் கௌதம். மேஜையின் மீது சாப்பாட்டுக் கிண்ணங்களைக் கடைப் பரப்பியவன் தொண்டையைச் செருமி “நித்யா.. சாப்பிடலாமா..?”என்று கேட்க.. அவனை வித்தியாசமாக நோக்கியவள் “உங்களுக்குப் பசித்தால் நீங்கள் சாப்பிடுங்கள்.. என்னை எதற்காக அழைக்கிறீர்கள்..?”என்று எரிச்சலுடன் வினவினாள்.

“ஏன்..?,நேற்று இருவரும் சேர்ந்து தானே சாப்பிட்டோம்..?,தினமும் உங்கள் வீட்டுச் சாப்பாட்டையே சாப்பிடுகிறேன் சார் என்றாயே..?,இப்போது என்ன..?,வா.. வா சாப்பிடலாம்..”என்றவனுக்குப் பதிலாக.. “ஐ ஹேவ் மை டிஃபன் பாக்ஸ்..”என்றபடித் தனது டப்பாவை எடுத்து முன்னே வைக்க.. “ஓ!” என்றபடிப் புருவம் உயர்த்தியவன் “நீ சமைத்ததா..?”என்று ஆர்வமாக டப்பாவைத் திறந்தான்.

“அ..அது வந்து.. நான் சமைக்கவில்லை..”என்றவள் தொடர்ந்து மனதுக்குள் உன் அன்னை சமைத்தது தானடா முட்டாள்.. என்று திட்டிக் கொண்டாள்.. காலையில் சாப்பிடத் தோன்றாததால் அதை அப்படியே டப்பாவில் அடைத்து எடுத்து வந்திருந்தாள்.. என்ன பதில் சொல்வதென்று விழித்தவளிடம் “பின்னே..?,யார் சமைத்தார்கள்..?”என்றவன் ஸ்பூனை எடுத்து ருசி பார்க்க.. “வே..வேலையாள் சமைத்தது தான்..”எனக் கூறிச் சமாளித்தாள்.

“அப்படியா..?,வேலையாள் வைத்துச் சமைக்கும் அளவிற்கு நீ பணக்காரியா..?, உன் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பதாக இண்டர்வியூ அன்றுத் தெரிவித்தாயே..”என்று நக்கலாக வினவியவன்.. “நன்றாக இருக்கிறதே.. சொல்லப் போனால் என் அன்னை சமைத்தது போல் இருக்கிறது.. ஆமாம்.. உன் வீடு எங்கே இருக்கிறது..?,அன்று பார்க்கில் சந்தித்த போதே கேட்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்..”என்றவனிடம் என்ன கூறுவதென்று மேலும் விழித்தவள்.. “ஆமாமாம்.. சார்.. உங்கள் அன்னை அளித்த சாப்பாட்டின் மணம் மூக்கைத் துளைக்கிறது.. சாப்பிடலாமே..!”என்றபடி எழுந்த செல்ல.. அவள் தவிர்ப்பதை அறிந்து கொள்ளாத கௌதம் சிரித்தபடி அவளுடன் சென்றான்.

அதன் பின் அமைதியாக உண்பவளை நிமிர்ந்து நோக்கினான். அவன் தன்னைக் காண்பதை உணர்ந்த நித்யா குடித்துக் கொண்டிருந்தத் தண்ணீர் பாட்டிலைக் கீழே வைத்து விட்டு “என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்..?”என்றவளிடம் “ஐ ஆம் சாரி.. நேற்று அப்படி நடந்து கொண்டதற்கு..”என்றான். சாரியா கேட்கிறான்..?,

DO NOT COPY

இவனா..?,அதுவும் அவளிடம்..?. ஆச்சரியமாக அவனை நோக்குபவளைக் கண்டவன் "இப்போது நீ எதற்காக இப்படிப் பார்க்கிறாய்..?"என்றவனிடம் "இல்லை.. உங்களுக்கு சாரி என்கிற வார்த்தையெல்லாம் தெரிந்திருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.."என்று கூற அவளை முறைத்தவன் "தப்பு என் மீது இருப்பதால் தான் பணிவாகப் பேசுகிறேன்.. அதற்காக அதிகமாகப் பேசினாயானால் பல்லைத் தட்டி விடுவேன்.." என்று அவன் மிரட்ட.. கோபத்திற்குப் பதிலாக சிரிப்பு வந்தது அவளுக்கு.

அவள் சிரிப்பதைக் கண்டவனுக்குத் தன்னாலேயே முறுவல் பூத்தது. "உனக்கு நித்யா என்று பெயர் வைத்தற்குப் பதில் அகராதி என்று வைத்திருக்கலாம்.." என்றவனிடம் "சரி,சரி சாப்பிட்டாயிற்றல்லவா..?, வேலையைத் தொடரலாமா..?"என்றபடித் தன் இருக்கைக்குச் சென்றவள் மீண்டும் திரும்பி வந்து "சார்.. எனக்கு ஒரு ஐடியா தோன்றியிருக்கிறது.."என்றாள்.

"என்ன ஐடியா..?" என்றவனிடம் "நமக்குத் தான் பெரிய கான்ட்ராக்ட் கிடைத்திருக்கிறதே.. அதைக் கொண்டாட வேண்டாமா சார்..?, பார்ட்டி கொடுங்கள்.."என்றாள்.. "மூக்குப் பிடிக்க உண்டாயே இப்போது.. அதைப் பார்ட்டியாக எண்ணிக் கொள்.."என்றவளிடம் "எனக்கு மட்டும் அளித்தால் போதுமா.?,இந்தக் கான்ட்ராக்ட்டிற்காக உழைக்கப் போகும் நமது பணியாளர்களை மகிழ்ச்சி படுத்த வேண்டாமா..?"என்றவளிடம் "என்ன செய்ய வேண்டுமெங்கிறாய்..?"என்று எரிச்சலுடன் வினவினான்.

"நம் அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் விருந்து அளிக்கலாம் சார்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.. வேலை,வேலை என்று இருப்பவர்களுக்கு புத்துணர்ச்சி அளித்தது போல் இருக்கும்.. ப்ளீஸ் சார்.."என்றவளிடம் "ம்,சரி.. செய்யலாம்.. உனக்கு அடுத்த மாதம் சம்பளம் வேண்டாமென்று எழுதிக் கொடுத்து விடு.. செய்து விடலாம்.."என்று கூற அவனை முறைத்தவள்.. "சரியான கஞ்சமாக இருக்கிறீர்களே.. உங்களுக்காக உழைக்கும் பணியாளகளுக்கு ஒரு விருந்து கூட அளிக்க மாட்டீர்களா..?"என்று தொடங்கியவளிடம் "சரி,சரி.. இதற்கு ஒரு போராட்டம் செய்து விடாதே... அங்கிளிடம் கலந்தாலோசித்து விட்டு வேண்டியதைச் செய்.."என்று முடித்து விட்டான்.

"வாவ்.. தேங்க் யூ.. தேங்க் யூ சார்..."என்றவள் மடிக் கணிணியின் மீது பதிந்திருந்த அவனது கையைப் பற்றிக் குலுக்கி விட்டு வெளியே ஓடிச் சென்றாள். அவள் செல்வதைக் கண்டவனின் முகத்தில் புன்னகை நிறைந்தது.

அழகர்சாமியின் அறைக்குள் வேகமாக நுழைந்தவள் "அங்கிள்.. அலுவலகத்தில் அனைவருக்கும் விருந்தளிக்க கௌதம் சம்மதித்து விட்டான்.. நம் இருவரையும் ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறான்.. "என்று சிரிப்புடன் கூற..

DO NOT COPY

“நீ அவன்,இவன் என்று மரியாதையில்லாமல் கௌதமை அழைப்பதை எப்போது நிறுத்தப் போகிறாய்..?”என்று வினவினார் அழகர்சாமி.

“என்னவோ தெரியவில்லை அங்கிள்.. கௌதமை மரியாதையாக அழைக்க வேண்டுமென்று தோன்றவே இல்லை..”என்றவள் தொடர்ந்து “அது முக்கியமல்ல இப்போது.. நாம் பார்ட்டி ஏற்பாடு செய்வோம் அங்கிள்..”என்றவள் தனது ஐடியாக்களை அள்ளி வீச.. இருவரும் சேர்ந்து திட்டம் தீட்டத் துவங்கினர். அன்றைய வாரக் கடைசியிலேயே ஹோட்டல் ஒன்றில் இரவு விருந்தை ஏற்பாடு செய்யலாம் என்று தீர்மானித்தவர்கள்.. அன்றே அலுவலகத்தில் அனைவருக்கும் மின்னஞ்சலில் விசயத்தைத் தெரிவித்தார்கள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தவள் கௌதமிடம் “மெயில் பார்த்தீர்களா சார்..?,இடம் உங்களுக்குப் பிடித்திருக்கிறது தானே..?”என்று விசாரித்தாள். “என்னிடம் அனுமதி வாங்கிவிட்டா ஏற்பாடு செய்தாய்..?, என் விருப்பத்தைக் கேட்பதற்கு..?”என்றவனிடம் “ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்..?. அழகர்சாமி அங்கிளிடம் கலந்தாலோசித்து ஏற்பாடு செய் என்று நீங்கள் தானே அனுமதியளித்தீர்கள்..?,இப்போது என்ன..?,எம்,டிக்கு வேறு அப்பாயிண்ட்மென்ட் இருக்கிறதென்று கூறி விருந்தை ரத்து செய்து விடுகிறேன்.. சரி தானே..?”என்று கோபமாகக் கூற.. அவசரமாக மறுத்தவன் “நான் உன்னைத் தவறாகக் கூறவில்லை தாயே.. அப்படி ஏதும் செய்து விடாதே..”என்றபடியே அவளுடன் அறையை விட்டு வெளியேறினான்.

“எப்போதும் எதையேனும் கூறி என்னுடன் சண்டையிட்டுக் கொண்டு தான் இருக்கிறீர்கள்..”என்று சலித்தபடியே வந்தவள் கதவு திறந்த நம்பியைக் கண்டு “நம்பி அங்கிள் சனிக்கிழமை இரவு விருந்து இருக்கிறது.. புது கான்ட்ராக்ட் கிடைத்தற்காக எம்.டி சார் நம் அனைவருக்கும் அளிக்கிறார்.. அன்று இந்த யூனிபார்ம் வேண்டாம்.. நான் உங்களுக்குப் புது உடை வாங்கித் தருகிறேன்.. அதை அணிந்து கொண்டு வாருங்கள்.. சரியா..?”என்று கூற வாயெல்லாம் பல்லாக நகைத்தார் நம்பி.

அவள் கூறியதையும் நம்பி சிரிப்பதையும் கண்டுத் தானும் புன்னகையைச் சிந்தியவன் அவளைத் தொடர்ந்து வெளியேறினான். சிரிப்பு மாறாத முகத்துடன் நடப்பவளைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பவனைக் கண்டவள்.. “என்ன..?”என்று புருவம் தூக்கினாள். “இல்லை.. அனைவரிடமும் சிரித்து சிரித்துப் பேசுகிறாய்.. அன்னை தெரசாவிற்கு அடுத்த வாரிசைப் போல் இரக்கத்துடன் பழகுகிறாய்.. ஆனால்.. என்னிடம் மட்டும் சரிக்குச் சரியாகச் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கிறாயே..?, ஏன்..?”என்று விசாரித்தான்.

“அவர்கள் எப்போதும் சிரித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.. அன்பாகப் பழகுகிறார்கள்.. மரியாதையாக நடத்துகிறார்கள்.. நீங்கள் அப்படியா..?, எப்போது


DO NOT COPY

பார்த்தாலும் தந்தூரி அடுப்பைப் போல், சுடு வாணலியைப் போல்.. காட்டமாகவே இருக்கிறீர்கள்.. சிரிப்பை மறந்த இதழ்களுடன், உணர்ச்சியைத் தொலைத்த முகத்துடன் இயந்திரத் தனமாக நடந்து கொள்கிறீர்கள்..'' என்று குறை கூற... அதுவரை சிரித்தபடி நடந்து கொண்டிருந்தவன்.. இறுகிய முகத்துடன் முன்னே நடக்க.. ஓடிச் சென்று அவன் கையைப் பற்றியவள்.. “இப்போது என்ன கூறி விட்டேனென்று கோபமாகச் செல்கிறீர்கள்..?, இதைத் தான்.. இதைத் தான் கூறுகிறேன்.. எதற்காக இப்படி இருக்க வேண்டும்..?, மற்றவர்களைப் போல் மகிழ்ச்சியாக இருப்பதில் என்னப் பிரச்சனை உங்களுக்கு..?,அப்படி என்னக் குடி முழுகிப் போய் விட்டதென்று இப்படி நடந்து கொள்கிறீர்கள்..?''என்று கூற.. கோபமாக அவள் முகம் நோக்கியவன் “ஆம்.. குடி முழுகித் தான் போய் விட்டது...''என்று கூறி விட்டுத் தன் கையின் மீது பதிந்திருந்த அவளது கையை உதறி விட்டு விறுவிறுவெனச் சென்று விட்டான்.




COPY

# அத்தியாயம் – 8




**உன்னைக் காணும் அந்த நொடி..**
**என் உடல் சிலிர்த்து.. உள்ளம் மகிழ்ந்து,,**
**நான் பரவச நிலைக்குச் சென்று விடுவதை..**
**நீ அறிவாயா கண்ணா..?**
**அறிந்திருந்தால்.. என்னை இப்படி..**
**தவிப்பிற்கு உள்ளாக்குவாயா..?**

"**சா**ர்..." என்றழைத்தபடித் தன் முன்னே மூச்சு வாங்க நிற்பவளை வழக்கமான எரிச்சலுடன் ஏறிட்டான் கௌதம். "ம்.."என்றபடி கார் கதவை சாத்தி விட்டு அவள் புறம் திரும்பியவனிடம் "உங்களுக்குக் குட் மார்னிங் சொல்வதற்காக நான் அங்கேயிருந்து இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கிறேன்.. ம் என்கிறீர்கள்..?" என்று இடுப்பில் கை வைத்தபடி நிற்பவளை சோர்ந்த விழிகளுடன் நோக்கியவன்.. "நித்யா.. காலையிலேயே தொடங்காதே.. நான் ஏற்கனவே தலைவலியில் இருக்கிறேன்.." என்றவன் தொடர்ந்து நடக்க.. "நில் கௌதம்.." என்று ஓடி வந்து அவன் முன்னே நின்றவள்.. அவனை உற்று நோக்கி.. "உடம்பு சரியில்லையா..?, என்னவாயிற்று..?"என்று வினவ.. அவளுக்குப் பதில் கூறாமல் நிமிர்ந்து நோக்கியவன் "என்னை என்னவென்று அழைத்தாய் இப்போது..?" என்று வினவ.. நாக்கைக் கடித்துக் கொண்டாள் நித்யா.

அய்யோ! மனதுக்குள் எப்போதும் அவனைப் பெயர் சொல்லி அழைப்பது போல் கூறி விட்டோமே.. என்றெண்ணியவள்.. இவனைச் சமாளிப்பது என்ன கஷ்டமான விசயமா என்று நினைத்துக் கொண்டு முகத்தைச் சாதாரணமாக்கி "ஏன்..?,சார் என்று தான் அழைத்தேன்.. உங்களுக்குக் காது சரியாகக் கேட்கவில்லை போல சார்.. "என்று சிரிப்புடன் கூற "ப்ச்.."என்றதுடன் முன்னே நடந்தான்.

அறைக்குள் நுழைந்ததும் அவனது நடையைக் கண்டு நின்றவளுக்கு ஒரு வேளை அவன் குடித்திருக்கிறானோ என்று தோன்ற.. டையைத் தளர்த்தி, சட்டையின் கைப் பகுதியை மடித்து விட்டுக் கொண்டிருந்தவனின் அருகே சென்று "நீ.. நீங்கள் குடித்திருக்கிறீர்களா..?"என்று வினவ.. அவனோ கோபமாக

DO NOT COPY

“நித்யா..”என்று பல்லைக் கடித்தான். “ஓகே,ஓகே.. நீங்கள் குடிக்கவில்லை... குடித்திருந்தால் கெட்ட நாற்றம் வருமே.. உங்கள் மீது வரவில்லை.. வரவில்லை தானே..” என்றபடியே அவனை நெருங்கி மூச்சுக் காற்றுப் படும் தூரத்தில் நிற்க.. அவளிடமிருந்து புறப்பட்ட வாசனையை முகர்ந்தவன் சட்டெனத் தோன்றிய எரிச்சலுடன் விலகி நின்றான்.

“முட்டாள் தனமாக நடந்து கொள்ளாதே... அலுவலகத்திற்கு யாரேனும் குடித்து விட்டு வருவார்களா..?,அப்படியே நான் குடித்து விட்டு வந்தாலும் உனக்கென்ன வந்தது..?, ஊரில் எத்தனையோ பேர் குடிக்கிறார்களே.. அவர்களையெல்லாம் சென்று திருத்த வேண்டியது தானே..?”என்று எரிச்சலுடன் கூற.. “அவர்களெல்லாம் எனக்கு சம்பளம் கொடுப்பதில்லையே சார்.. நீங்கள் என் முதலாளி.. மாதமாதம் சம்பளத்தை அள்ளிக் கொடுத்து என் கஷ்டத்தைத் தீர்க்கும் மகான்.. உங்களது நலன் எனக்கு முக்கியமான ஒன்று தானே..?” என்றவள்.. தொடர்ந்து “உங்கள் வீட்டிற்கு ஃபோன் செய்து உங்களுக்கு என்னவாயிற்றென்று உங்கள் அன்னையிடம் விசாரித்துக் கொள்கிறேன்..” என்றவள் அவனது மேஜையின் மீதிருந்த டெலிஃபோனில் எண்களை அழுத்தத் துவங்கினாள்.

“முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே நித்யா.. எனக்கு உடல்நிலை சரியில்லை என்று என் அன்னைக்குத் தெரியாது.. வீணாக அவரை பதற்றப் பட வைக்காதே..” என்று அவள் கையைப் பற்ற.. தன் கையைப் பற்றியிருந்த அவனது கரத்தை நோக்கியவள்.. சிரிப்புடன் அவன் கண்களைச் சந்தித்தாள்.. “என்ன..?”என்று கோபம் குறையாமல் வினவியவனிடம் ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தவள்.. அவன் தன் கையைப் பற்றியிருப்பதை உணரவில்லையென்பதைக் கண்டு கொண்டவள்.. தொண்டையைச் செறுமி “அதெல்லாம் முடியாது.. நா.. நான் ஃபோன் செய்து கேட்கத் தான் போகிறேன்..” என்று அவள் மீண்டும் தொடங்க.. பற்றியிருந்த கரத்தை மேலும் அழுத்தியவன் “நித்யா சொன்னால் கேள்...” என்று அவன் கூறியதும் மறுபுறம் திரும்பி சத்தமில்லாமல் சிரித்தவள்.. திரும்பி அவன் முகத்தை நோக்க.. அவள் கண்களில் தெரிந்த உணர்வைப் புரிந்து கொள்ள முடியாத கௌதம் திகைத்து நோக்கினான்.

நீ என் கைப் பற்றியதும்.. எனக்குள் ஒரு புதுவித சிலிர்ப்பும்,சந்தோசமும் ஏற்படுகிறதே.. ஏன் கண்ணா.. என்று மனதினுள் கேள்வி கேட்டபடி அவன் கண்களில் தன் பார்வையை நிலைக்கச் செய்திருந்தவளை.. வேகமாக வீசிய காற்று நடப்பிற்குக் கொண்டு வர.. பின் அவனிடம் “அப்படியானால்.. உடம்பு சரியில்லை உங்களுக்கு.. அப்படித் தானே.. வாருங்கள் மருத்துவமனைக்குச் செல்லலாம்..”என்று அவன் நெற்றியில் கை வைத்து சோதித்துப் பார்த்தவளிடம் “அதெல்லாம் வேண்டாம்.. வேலை இருக்கிறது.. நகர்ந்து செல்..”

DO NOT COPY

என்று அவள் கையை விலக்கித் தன் இருக்கைக்குச் சென்றுக் கண் மூடி அமர்ந்தான்.

சில நிமிடங்கள் நின்று அவன் முகத்தைக் கண்டவள் பின் மாத்திரை மற்றும் தண்ணீருடன் அவன் முன்னே சென்றாள். “சார்..”என்று அவன் தோளைத் தட்டியவள்.. அவன் கண் விழித்ததும் “மாத்திரை..”என்று நீட்டினாள். “தேங்க்ஸ்..”எனக் கூறி மறுக்காமல் வாங்கிக் கொண்டவன்.. தண்ணீரைப் பருகி முடித்ததும் அவளை நிமிர்ந்து நோக்கினான். “சிறிது நேரம் படுத்துக் கொள்ளுங்கள்.. இல்லையென்றால் வீட்டிற்குச் செல்கிறீர்களா..?”என்றவளிடம் “இல்லை.. இன்று வேளச்சேரி சைட்டிற்குச் செல்ல வேண்டும்.. பதினோரு மணிக்கு என்னை எழுப்பி விடு..”என்று விட்டுக் கண் மூடியவனிடம் சரியெனத் தலையாட்டினாள்.

கண் மூடியபடியே “இது என்ன உடை..?,சின்னப் பெண் மாதிரி.. பாவாடை,சட்டையுடன்..?,ம்?,”என்று வினவினான்.. கருப்பு நிற லாங் ஸ்கர்ட்டும், கருப்பு நிற சட்டையும்.. அவளது பால் வண்ணத்திற்குப் பளிச்சென்று தெரிந்தது, சிரித்தபடி அவன் புறம் திரும்பியவள்.. “ஏன்..?, நான் சின்னப் பெண் தான்.. அழகாக இருக்கிறேனா..?”என்றுத் தன் பெரிய கண்ணை உருட்டிக் கேட்க.. முறுவலுடன் கண் விழித்தவன் பதில் கூறாமல் அவளை நோக்கி விட்டுக் கண் மூடிக் கொண்டான். “இதற்கு மட்டும் பதில் கூற மாட்டான்.. உம்மணாமூஞ்சி..”என்று முணுமுணுத்தபடித் தன் இருக்கைக்குச் சென்றாள். அதன் பின் அவன் சைட்டிற்குச் சென்றதும் வசந்திக்கு ஃபோன் செய்து விசயத்தைத் தெரிவித்தவள் மதிய சாப்பாட்டை சைட்டிற்கு அனுப்பி வைக்கும் படி கூறினாள்.

டிரைவர் வந்தளித்த உணவைக் கண்ட கௌதம் அன்னைக்கு ஃபோன் செய்ய.. “கண்ணா.. உடம்பு சரியில்லையென்று காலையிலேயே கூறியிருக்கலாமே.. இன்று ஒரு நாள் வீட்டிலிருந்து ஓய்வு எடு கண்ணா..”என்று வசந்தி கூறியதும் “அம்மா.. எனக்கு உடம்பிற்கு ஒன்றுமில்லை.. நித்யா தான் ஃபோன் செய்தாளா உனக்கு..?”என்றவன் மேலும் சிறிது நேரம் உரையாடி விட்டு நித்யாவை அழைத்தான்.

அவன் அழைத்ததும் மகிழ்ச்சியுடன் “ஹலோ..”என்றவளிடம் “அம்மாவிடம் கூறாதே என்றேனல்லவா நித்யா..?”என்று அவன் கூற.. “அதனால் என்ன குறைந்து விட்டது இப்போது..?,ஏற்கனவே உடம்பு சரியில்லை.. மதியம் வெளியில் சாப்பிட்டீர்களானால் எப்படி..?,அதனால் தான்.. அத்.. மேடமிடம் கூறினேன்..” என்று கூறினாள்.. அவளது அக்கறை உள்ளே இதமாக இருந்தாலும் “அதிகப் பிரசங்கி..”என்று திட்டி விட்டுத் தான் செல்பேசியை வைத்தான்.

DO NOT COPY

மாலை நித்யா வீடு திரும்பும் வேளையில் அலுவலகம் வந்து சேர்ந்த கௌதமை விரிந்த சிரிப்புடன் வரவேற்றவள்.. "வந்து விட்டீர்களா..?, எங்கே உங்களைக் காணாமல் வீடு செல்ல நேர்ந்திடுமோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்.. இப்போது காய்ச்சல் பரவாயில்லையா..?"என்று அவன் நெற்றியில் கை வைக்க எத்தனிக்க.. "நித்யா..."என்று விலகி நின்றவன்.. "எனக்குப் பரவாயில்லை.. நான் நன்றாகத் தான் இருக்கிறேன்.. நீ கிளம்பவில்லையா..?"என்றபடியே இருக்கைக்குச் சென்றான்.

"கிளம்பி விட்டேன்... நீங்கள் நேராக வீட்டிற்குச் சென்று விடுவீர்கள் என்று நினைத்தேனே.." என்றவளிடம் பதில் சொல்ல முடியாமல் திணறினான். உண்மையில் அவன் வந்ததே அவளைக் காணத் தான்.. ஏனோ.. அவளைக் காணாமல் வீடு திரும்ப அவனுக்கு மனமில்லை.. அவளைக் காண்கையில் கோபமும்,எரிச்சலும் வந்தாலும்.. அவளது அருகாமையை மனம் விரும்புவதைத் தடுக்க முடியவில்லை அவனால்.. அவள் தன்னுள் விளைவிக்கும் மாற்றங்களை அவனது மூளை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மனம் வேறு பாதையில் பயணித்தது.
"வேலை இருக்கிறது... அதனால் தான்.." என்று முணுமுணுத்து விட்டு.. அவன் கணிணியின் பக்கம் திரும்ப.. "இனியும் என்ன வேலையிருக்கப் போகிறது..?, நாளை பார்த்துக் கொள்ளலாம்.. வீட்டிற்குச் சென்று ஓய்வெடுங்கள்.. நாளை இரவு விருந்திருக்கிறது.. மறந்து விடாதீர்கள்.." என்று கூறி விட்டு விடை பெற்றாள்.

மறுநாள் இரவு விருந்திருப்பதாக வசந்தியிடம் தெரிவித்தவள்.. "என்ன உடை அணிவது அத்தை..?,இந்த சல்வார் நன்றாக இருக்கிறதா..?, அல்லது இந்த ஸ்கர்ட்?"என்று ஆடைகள் அனைத்தையும் எடுத்து நீட்டிக் கொண்டிருந்தவளிடம் "நல்லதாக புடவை அணிந்து கொள்ளலாமில்லையா நித்யா..?"என்று வசந்தி "சேலையா..?"என்று விழி விரித்தவள்.. "ஒரு முறை கூட நான் அணிந்ததில்லை அத்தை.. சரி அணிகிறேன்.. எனக்கு உதவி புரியுங்கள்.."என்று முறுவலித்தாள்.

மறுநாள் இரவு வசந்தியைப் பாடு படுத்தி.. புடவை அணிந்து கொண்டவள்... ஸ்கூட்டியில் புறப்பட்டாள். வாசலில் வரவேற்ற அழகர்சாமி அங்கிள்... "புடவை உனக்கு நன்றாக இருக்கிறதம்மா.."என்று பாராட்ட.."தேங்க்ஸ் அங்கிள்.."என்றவள்.. நம்பியிடம் "இந்த சட்டை உங்களுக்கு நன்றாகப் பொருந்தியிருக்கிறது அங்கிள்.. சூப்பர்.."என்று சிரித்தாள்.

அதன் பின் அலுவலகத்தில் அனைவரும் கூட.. அனைவரும் கௌதமின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.. "ஏன் அங்கிள்.. எம்.டி என்றால் தாமதமாகத் தான் வர வேண்டுமென்று நிர்பந்தம் ஏதும் இருக்கிறதா என்ன..?, இவன் ஒரு சட்டை,பேண்ட்டை மாட்டிக் கொண்டு வருவதற்கு என்ன இவ்வளவு நேரம்..?"

DO NOT COPY

என்று அவள் புலம்பித் தவித்த நேரம் ஜீன்ஸூம்,டீஷர்ட்டுமாக வந்து சேர்ந்தான்.

“தாமதத்திற்கு மன்னித்து விடுங்கள்.. விழாவை ஆரம்பிக்கலாம்..”என்றவனின் விழிகள் நித்யாவைத் தேட அவள் ஒரு புறம் முறைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டுச் சிரித்தபடி அருகே அழைத்தான். “புடவையெல்லாம் அணிந்திருக்கிறாய்..?,பரவாயில்லையே..”என்று பாராட்டியவன் “முகத்தை மட்டும் ஏன் இப்படி இஞ்சி தின்ன குரங்கைப் போல் வைத்திருக்கிறாய்..?” என்று கூற.. “நான் குரங்கென்றால்.. நீங்கள் காட்டுப் பூனை...” என்று பொறிந்தவளிடம் “சரி, இப்போது என்ன..?,ஏன் முறைத்துக் கொண்டிருக்கிறாய்..?”என்றான். “ஒரு மணி நேரம் தாமதமாக வருகிறீர்கள்.. அனைவரையும் காக்க வைத்து விட்டீர்களே..”என்று திட்டியவளிடம் “முக்கியமான வேலையாக சென்று விட்டேன்.. அதனால் தான்.. சரி செல்.. ஏதோ விளையாடுகிறார்கள் பார்.. கலந்து கொள் போ..” என்று அனுப்பி வைத்தான்.

ஒரு கூட்டம் பாட்டு பாடிக் குதூகலிக்க.. சிறு சிறு விளையாட்டுக்களும், கேளிக்கைகளுமாக மறுபுறம் இருந்தது.. சிற்றுண்டிகளும்,குளிர் பானங்களும், உற்சாக பானங்களும் அவ்வப்போது வந்து சென்று கொண்டிருந்தது.. பாட்டு பாடும் கூட்டத்தில் கலந்து கொண்ட நித்யாவை பாடுமாறு அனைவரும் வற்புறுத்த... சரியெனத் தலையாட்டியவள்.. தூரத்தில் அமர்ந்திருந்த கௌதமைக் கண்டபடி..

“கண்ணன் மனநிலைத் தங்கமே தங்கம்..
கண்டு வர வேண்டுமடி தங்கமே தங்கம்....”
என்று பாடத் துவங்க.. அவளிடமிருந்து பார்வையைத் திருப்பாமல் விரிந்த விழிகளுடன் அமர்ந்திருந்த கௌதமிற்கு.. உள்ளே ஏதோ செய்தது. சட்டென எழுந்து வேறு புறம் சென்றான்.

பாட்டு பாடி முடித்ததும் அனைவரது கைத் தட்டலையும் பெற்றுக் கொண்டவள்.. கௌதமைத் தேடினாள்.. அவன் கண்ணில் படாததைக் கண்டு அவனைத் தேடிச் சென்றாள். கையில் விஸ்கியுடன் எங்கோ பார்வையைப் பதித்து அமர்ந்திருந்தவனின் அருகே சென்றவள்.. “கூல் ட்ரிங்க்ஸ் குடித்துக் கொண்டிருக்கிறீர்களா சார்..?,எனக்கும் ஒன்று சொல்கிறீர்களா..?, பாட்டு பாடிக் களைத்துப் போய் விட்டேன்..” என்று கூற.. அவளிடமிருந்துப் பார்வையைத் திருப்பாதவன்.. “பரவாயில்லையே.. பாட்டு பாடு என்றதும்.. உன் அமெரிக்க ஆங்கிலத்தில்.. எதையேனும் பாடி வைத்து.. அனைவரையும் தலையைச் சொறிய வைத்து விடுவாயோ என்று நினைத்தேன்.. பாரதியார் பாட்டெல்லாம் கூட உனக்குத் தெரியுமா..?”என்று கேலி செய்ய.. கலகல்வெனச் சிரித்தவள்..

DO NOT COPY

“என் தந்தை எனக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறார்..” என்று கூறினாள்.

“என்ன குடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறேனே..?”என்றவளிடம் “விஸ்கி..”என்றான் அவன்.. “விஸ்கியா..?”என்று விழி விரித்தவள்.. அவன் கையிலிருந்தக் கோப்பையைப் பறிக்க எத்தனித்தாள். “ஏய்...”என்று விலகியவன்.. “என்ன செய்கிறாய்..?”என்று கேட்க.. “எதற்காக நீங்கள் இப்போது குடிக்கிறீர்கள்..?,”என்று கோபமாக வினவினாள்.

“நீ எதற்காக எப்போதும் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கிறாய்..?,நான் குடித்தால் உனக்கென்ன வந்தது..?,அதிகப் பிரசங்கித் தனமாக என் செயல்கள் அனைத்திலும் மூக்கை நுழைக்காதே.. முட்டாள்..”என்று அவன் அடிக்குரலில் கர்ஜிக்க.. கோபமும்,ஆத்திரமுமாய் அவனை நோக்கியவள்.. அருகே சென்று கொண்டிருந்த பணியாளின் தட்டிலிருந்த பாட்டிலை எடுத்து அவனை முறைத்தபடியே கடகடவெனப் பருகத் துவங்கினாள்..

“ஏய்.. ஏய்.. என்ன செய்கிறாய்..?”என்றவனிடம் “உங்களைக் கேட்க எனக்கு உரிமையில்லையல்லவா..?,அதைப் போல் என் செயல்களைப் பற்றிக் கேட்க உங்களுக்கும் உரிமையில்லை..”என்றவள்.. குடித்து முடித்து பாட்டிலை அவன் முன்பு சத்தத்துடன் வைத்தாள்.. குடித்த வேகத்தில் மேல் மூச்சு,கீழ் மூச்சு வாங்க.. அவனை முறைப்பவளை.. “தண்ணீர் கூடக் கலக்காமல் ராவாக அடிக்கிறாயே.. ரொம்பப் பழக்கமோ..”என்று கேலி செய்ய.. விறுவிறுவென நடந்து சென்றாள்..

சிரிப்புடன் திரும்பித் தன் குவளையிலிருந்ததைக் காலி செய்யத் துவங்கியவன்.. சிறிது நேரம் கழித்து.. நித்யாவைத் தேடித் தன் பார்வையைத் திருப்பினான்.. அவள் கண்ணில் படாததைக் கண்டு எழுந்து வந்தவன்.. சோர்விலும்,மயக்கத்திலும் கண்கள் சொருக அங்கே போடப் பட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்தவளைக் கண்டு சிரிப்புப் பொங்கியது அவனுக்கு..

அவளருகே சென்று “நித்யா.... மிஸ்.மாடர்ன் மங்கை..”என்று அவள் முன்பு சொடுக்கிட.. அந்த மயக்கத்திலும் அவனைக் கண்டு முறைத்தவள்.. எழுந்து நடந்து வெளியே சென்றாள். தள்ளாடியபடி நடந்து வெளியே செல்பவளைத் தொடர்ந்துத் தானும் வெளியேறியவன்.. “நித்யா.. நித்யா நில்.. இவ்வளவு குடித்தும் ஸ்டெடியாக நடக்கிறாயே.. எனக்குச் சந்தேகமாக இருக்கிறது...” என்று சிரிக்க.. அவனைக் கண்டு கொள்ளாமல் மேலும் நடந்தவளுக்குக் கால்கள் தள்ளாடி.. மயக்கம் வந்தது..

தலையைப் பற்றியபடித் தள்ளாடியவளின் தோளைப் பற்றியவன்.. “ராட்சஷி.. அறிவிருக்கிறதா..?,பாட்டில் முழுவதையும் குடித்துத் தொலைத்து விட்டாயே..

DO NOT COPY

நித்யா.. நித்யா..”என்று கன்னத்தைத் தட்டி நினைவிற்குக் கொண்டு வர முயன்றான். அவன் இழுத்த இழுப்பிற்குச் சென்றவள்.. கண் விழிக்காததைக் கண்டு அவளைக் காருக்கு நடத்திச் சென்றான்.

உள்ளே அமர வைத்தவன்.. தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் தெளித்துப் பார்த்தான். அதற்கும் அவள் அசராததைக் கண்டு எரிச்சலுற்றான்.. அவளது வீட்டின் முகவரி தெரிந்தாலேனும் பரவாயில்லை.. அதுவும் தெரியாது.. அப்படியே தெரிந்தாலும்.. இந்த நிலைமையில் அழைத்துச் சென்றால்.. நிச்சயம் தவறாகத் தான் நினைப்பார்கள்.. வேறு என்ன செய்வது என்று யோசித்தவன்.. அலுவலகத்திற்குச் செல்லத் தீர்மானித்து.. காரை அலுவலகத்திற்குச் செலுத்தினான்.

அலுவலகத்தின் உள்ளே காரை நிறுத்தி விட்டு அமர்ந்தவன்.. அவளைத் திரும்பி நோக்கினான். எதையும் அறியாமல்.. மட்டையாகி விட்டவளைக் கண்டு கோபம் எழுந்தாலும்.. சிரிப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை அவனால். மொத்தமாகக் குடித்து விட்டு இப்படிச் சுயநினைவில்லாமல் கிடக்கிறாள்.. முட்டாள்.. முட்டாள்.. என்று திட்டித் தீர்த்தவன்.. இவளுக்கு நினைவு வரும் வரை இப்படியே காருக்குள்ளேயே அமர்ந்திருக்க வேண்டியது என்று முடிவு செய்து.. இருக்கையைப் பின் சாய்த்து.. கால் நீட்டி.. வசதியாக அமர்ந்தான்.

நேரம் செல்லச் செல்லத் தூக்கம் கண்ணைச் சுழட்டக் கொட்டக் கொட்ட விழித்திருந்தவனை நித்யாவிடம் தெரிந்த அசைவு நன்றாக விழிக்க வைத்தது.. உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து லேசாக அசைந்தவள்.. “குடிக்காதீர்கள் என்கிறேனல்லவா.. கௌதம்..”என்று மயக்கத்தில் உளற.. அவனுக்கு உள்ளே சில்லென ஓர் உணர்வு தோன்றி மறைந்தது...

உறக்கத்திலும்,மயக்கத்திலும் கூடத் தன்னைப் பற்றிச் சிந்திக்கிறாளே.. ஏன் என்று.. அவள் முகத்தைக் கண்ட படியே இருக்கையில் தலை சாய்த்தான்.. வடிவான நெற்றியுடன்.. அழகான புருவங்களுடன் கூடிய விழிகளுடன்.. மென்மையான இதழ்களுடன்.. அந்த இரவு வெளிச்சத்தில் அபாரமான அழகியாகக் காட்சி தந்தவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு...

அவனது பார்வையை உணர்ந்ததாலோ என்னவோ.. புருவம் சுருக்கிப் புரண்டவள்.. அவன் மார்பிலேயே தலை சாய்த்தாள்.. விக்கித்துப் போய்.. மூச்சு விட மறந்துத் தன் மேல் சாய்ந்து கிடப்பவளை அவன் திகைப்புடன் நோக்கினான்.. மெத்தென்ற அவளது உடலின் மென்மை.. அவளிடத்திலிருந்து புறப்பட்ட வாசம்.. அவனது வெற்று மார்பில் படர்ந்த அவளது கைகள்.. பல


DO NOT COPY

வருடமாக.. மறந்து போயிருந்த.. மரத்துப் போயிருந்த உணர்வுகளைத் தட்டி எழுப்புவது போல் தோன்றியது...

தன்னாலேயே அவனது கைகள்.. அவளது கூந்தலை வருட எழத் துவங்கிய அந்த நொடி.. இது தவறு.. என்று மூளை இடித்துரைக்க. பின் அவளைத் தன் மார்பிலிருந்து விலக்க எத்தனித்தான்.. ஏதோ ஒன்று உள்ளே தடுக்க.. கைகளை மடக்கித் தலைக்குக் கொடுத்து.. பெரு மூச்சை வெளியேற்றினான்.. தன் மீது சாய்ந்திருந்த அவளது மேனியின் மென்மை தந்த சுகத்தில் இறுகக் கண் மூடியவன்.. தன்னை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்தான்.



# அத்தியாயம் – 9




**கண்ணா.. கார்மேக வர்ணா..**
**உன் திருமுகம் காண வேண்டி..**
**நின் குழலிசை கேட்க வேண்டி..**
**உன் கைவிரல் தீண்ட வேண்டி..**
**ஜென்ம ஜென்மமாக நான்..**
**காத்துக் கொண்டிருப்பதை..**
**நீ அறிவாயா..?**

முதல் நாள் விருந்தில் முழு பாட்டில் விஸ்கியையும் ஒரே மூச்சில் குடித்து விட்டு சுற்றுப் புறம் மறந்து கௌதமனின் மார்பிலேயே உறக்கம் கொண்ட நித்யாவிற்கு.. காலை வெயில் சுள்ளென முகத்தில் அடிக்கத் துவங்கிய பின்பு தான் சுரணை வரத் தொடங்கியது. எங்கிருக்கிறோம்..?,என்ன நடந்தது இரவு..? என்று கண்கள் மூடியிருந்த நிலையிலேயே நினைவிற்கு கொண்டு வர முயன்றாள். எதுவும் நினைவிற்கு எட்டாமல் போக.. லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

இது வீடு போன்று தெரியவில்லையே.. கார் போலல்லவா இருக்கிறது.. கனவு ஏதும் காண்கிறோமா..? என்றெண்ணியபடி தலையணையில் தலையை அழுத்துவதாக எண்ணி கௌதமனின் மார்பில் அழுத்தியவள்.. பின் அது தலையணை அல்ல என்பதை அறிந்து.. தலையை லேசாக நிமிர்த்தி கௌதமனின் முகத்தை நோக்கினாள்.

காற்றிலாடிக் கொண்டிருந்த அவனது அலை அலையான கேசமும்.. அடர்த்தியான புருவங்களுடன் கூடிய நித்திரையில் ஆழ்ந்திருந்த அவனது விழிகளும்.. அழுத்தமான இதழ்களும்.. நாள் முழுதும் சுமந்து திரியும் இறுக்கம் தளர்ந்து சிறு குழந்தை போல் உறங்கிக் கொண்டிருந்தவனைக் கண்டவளுக்கு.. இதயம் ஒரு நொடி நின்று பின் வேகமாகத் துடித்தது..

தன்னை மறந்து அவனது நெற்றியை வருடத் துவங்கிய அவளது கைகள்.. அவனது கன்னங்களில் தனது பயணத்தைத் தொடர்ந்தது.. அவளது ஸ்பரிசம் உணர்ந்தவன் லேசாகப் புருவம் சுழிக்க.. திடுக்கிட்டு வேகமாகக் கண் மூடி

DO NOT COPY

அவன் மார்பிலேயே தலை சாய்த்தாள். பின் அவன் உறங்குவதை உறுதி செய்து கொண்டவள்.. மேலும் சிறிது நேரம் அவனது மார்பிலேயே சாய்ந்து கிடந்தாள்..

இப்படியே இந்த ஜென்மம் முழுதும் இவனது மார்பில் துயில் கொண்டால் கூட போதாதென்று தோன்றுகிறதே.. என்று சிந்தித்தபடியேக் கண் மூடியவள்.. மீண்டும் உறக்கம் கொண்டாள்.. அடுத்த சிறிது நேரத்தில் கண் விழித்தவள்.. விடிந்து நீண்ட நேரமாகி விட்டதை உணர்ந்து சட்டென எழுந்தாள்.. நல்ல வேளை.. இன்று விடுமுறை என்பதால் யாரும் அலுவலகத்திற்கு வரவில்லை.. என்றெண்ணியபடியே.. இன்னமும் உறங்கிக் கொண்டிருந்த கௌதமனின் தோளைத் தட்டினாள்..

“சார்.. சார்..”என்ற அவளது உலுக்கலில் கண் விழித்தவன்.. சோம்பல் முறித்தபடி எழுந்தமர்ந்தான்.. பின் சுற்றுப்புறத்தையும், தன்னை மையலுடன் நோக்கிக் கொண்டிருந்த நித்யாவையும் கண்டவனுக்கு.. இரவு நடந்தது அனைத்தும் நினைவிற்கு வர.. அவளை முறைத்தான். “அறிவிருக்கிறதா உனக்கு..?,முழு பாட்டிலையும் குடித்து மொத்தமாக மட்டையாகி விட்டாயே..?,இரவு முழுதும் எங்கே தங்கியிருந்தாயென்று உன் வீட்டில் கேள்வி கேட்டால் என்ன கூறுவாய் முட்டாள்..?,வீம்புக்கென்று எதையேனும் செய்து வைத்து சிக்கலில் மாட்டிக் கொண்டு தான் இருப்பாயா..?,நீ மாட்டிக் கொள்கிறாய் சரி.. என்னையும் சேர்த்து இழுத்து வைத்து விடுகிறாய்??, அலுவலகத்தில் யாரேனும் பார்த்தால் என்ன ஆவது..?, அறிவீனமாக நடந்து கொள்வது தான் உனக்கு வேலையா..?” என்று அவன் பொறியத் துவங்க..

எப்போதும் எதிர்த்துப் பேசி தான் செய்து தான் சரியென்று சாதித்து விடுபவள்.. இப்போது எதுவும் பேசாமல் அசடு வழிய அமைதியாக அமர்ந்திருந்தாள், அது அவனுக்குச் சாதகமாகிப் போக.. மேலும் கத்தத் துவங்கினான். “வாயைத் திறக்கிறாளா பார்.. ராட்சசி.. எப்போதும் சட்டமாகப் பேசுவாயே.. இப்போது பேசிப் பாரேன்..”என்று கூற.. “சாரி..”என்று தலை குனிந்தபடி கூறினாள்..

“சாரியாம்.. சாரி.. முட்டாள்.. இப்போது என்ன செய்யப் போகிறாய்..?,இரவு எங்கே தங்கினாய் என்று வீட்டில் கேட்டால் என்ன கூறுவாய்..?”என்று கேட்டவனிடம் “எம்.டியுடன் காரிலேயே பாதுகாப்பாக தூங்கி விட்டேன் என்பேன்..”என்று உரக்கக் கூறியவளை.. பதில் கூறாமல் முறைத்தவன்.. “உன்னையெல்லாம் அடித்துப் பல்லைக் கழட்டினால் தான் சரிப்படுவாய்...” என்று அவன் கையை ஓங்க.. “அய்யோ சார்.. என்னை என்ன தான் செய்ய வேண்டுமெங்கிறீர்கள்..?”என்றவளிடம் “நித்யா.. இது நியூயார்க் அல்ல.. நீ இரவு முழுதும் ஒரு ஆண் பிள்ளையுடன் தங்கி விட்டுச் சாதாரணமாக காலை வீடு செல்வதற்கு..”என்று கூற.. “ம்,ம்”என்று தலையைச் சொறிந்தவள்.. “இப்போது

DO NOT COPY

எதற்காக வெட்டிப் பேச்சு பேசுகிறீர்கள்..?, கேள்வி கேட்பதற்கு என் வீட்டில் யாருமில்லை இப்போது..”என்று சிரித்தபடி கூறினாள்.

“யாருமில்லையா..?”என்று புருவம் சுருக்கியவன் “யாருமில்லையென்றால் நீ தனியாகவா தங்கியிருக்கிறாய்..?”என்று வினவ.. “அ..அது.. அப்பா ஊருக்குச் சென்றிருக்கிறார்.. அதைத் தான் இப்போது யாருமில்லையென்று கூறினேன்..” என்றவளிடம் “ஓஹோ...”என்றவன் தொடர்ந்து “சரி,உன் வீட்டு முகவரியைக் கூறு.. உன்னை உன் வீட்டில் விட்டு விட்டே செல்கிறேன்..”என்று கூற.. அதிர்ந்து போனாள் நித்யா.

“ச்ச,ச்ச, அதெல்லாம் வேண்டாம் சார்.. உங்களுக்கு எதற்காக வீண் சிரமம்..? என்.. என் ஸ்கூட்டி அந்த ஹோட்டலில் நிற்கிறதே.. நான் எடுத்துக் கொண்டு சென்று விடுவேன்.. ஒன்றும் பிரச்சனையில்லை..”என்றபடி கார் கதவை திறக்க முற்பட..”இந்தக் கோலத்தில் வீதியில் உலா வரப் போகிறாயா..?,நித்யா என் கோபத்தைக் கிளறாதே.. உன் வீட்டின் முகவரியைக் கூறுவதில் என்னப் பிரச்சனை உனக்கு..?”என்று பாயத் துவங்கியவனிடம் ஆவது ஆகட்டுமென்று முகவரியைக் கூறி விட்டாள்.

வியப்புடன் அவளை நோக்கியவன் “நீ என் எதிர் வீட்டிலா குடியிருக்கிறாய்..?,” என்று வினவ.. “என்னது..?,நீங்கள் என் எதிர் வீட்டில் தான் இருக்கிறீர்களா..?” என்று அவனை விட வியப்பைக் கொட்டித் தன் பெரிய கண்களை விரித்து ஏதுமறியாதவள் போல் அவள் வினவ.. அவளைச் சந்தேகமாக நோக்கியவன் “நீ ஒரு முறை கூட என்னைப் பார்த்ததேயில்லையாக்கும்..?”என்று வினவினான்.

மேலும் தனது கண்களை விரித்தவள் “அப்படியானால் நீங்கள் என்னைப் பார்த்திருக்கிறீர்களா சார்..?” என்று வினவ மறுத்துத் தலையசைத்தவன்.. “எத்தனை நாட்களாக அந்த வீட்டில் இருக்கிறாய்..?”என்று விசாரித்தான். “யு.எஸ்ஸில் இருந்து இங்கே வந்ததிலிருந்து அங்கே தான் இருக்கிறேன்.. கிட்டத்தட்ட நான்கைந்து மாதங்களாக..”என்று அவள் சிரித்தபடி கூற.. “ம்,நான்கைந்து மாதங்களாக என் எதிர் வீட்டில் இருக்கிறாய்.. நான் இதை அறியாமல் போனேனே..”என்றான்.

“அறிந்திருந்தால் மட்டும் என்ன செய்திருப்பீர்கள்..?,மாத வாடகையை நீங்கள் கொடுத்திருப்பீர்களா..?”என்றவள்.. தொடர்ந்து “கிளம்பலாமே ப்ளீஸ்.. எனக்குப் பசிக்கிறது.. இரவு சாப்பிடக் கூட இல்லை..”என்று புலம்ப.. “ராவாக அடித்தாயே ஒரு பாட்டில் விஸ்கி... அது போதாதா..?,ஆனாலும் நித்யா.. நீ முதன்முறையாக அடித்தது போல் தெரியவில்லை.. ரொம்பப் பழக்கமோ..?” என்று கேலி செய்ய.. செய்வதறியாது அவனை முறைத்தாள்.

DO NOT COPY

அதன் பின் அவள் வீட்டின் முன்பு வண்டியை நிறுத்தியவன்.. "நித்யா.. என் வீட்டிற்கு வா.. என் அன்னையின் சமையல் தான் உனக்கு மிகவும் பிடித்தம் என்பாயே.. வந்து சாப்பிட்டுச் செல்.. வா.."என்று அவன் அழைக்க.. ஆஹா! இன்று எதிர்பாராவிதமாக பல நல்ல விசயங்கள் நடைபெறுகிறதே என்று நினைத்தவள்.. "நிச்சயம் வருகிறேன் சார்.. உங்கள் அன்னையையும் சந்திக்க வேண்டும்.. குளித்துத் தயாராகி வருகிறேனே.. இன்று எனது காலை சாப்பாடு உங்கள் வீட்டில் தான்.." என்று கூறிச் சிரிக்க.. தானும் சிரித்து அவளுக்கு விடை கொடுத்தவன்.. தனது வீட்டிற்குள் நுழைந்தான்.
சிறிது நேரம் உறங்கி விட்டுப் பின் குளித்துத் தயாரானவள்.. கௌதமைக் காண எண்ணி அவனது வீட்டிற்குச் சென்றாள். முன் போல் பயந்து பயந்து செல்ல வேண்டிய அவசியமில்லாததால் துள்ளலுடன் உள்ளே நுழைந்தாள். தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த வைகுந்தன் அவளைக் கண்டு "அய்யோ என்ன பாப்பா இந்த நேரத்தில் வந்திருக்கிறாய்..?,ஐயா வீட்டில் இருக்கிறாரே.."என்று பதற.. "உங்கள் ஐயா இருந்தால் என்ன..?,நான் வரக் கூடாதா..?,"என்று சிரித்தபடியே உள்ளே நுழைபவளைக் கண்டு அவர் திகைத்து நிற்க.. சத்தம் கேட்டு வெளியே வந்த வசந்தி அவளைக் கண்டு மேலும் பதறினார்.

"நிதும்மா.. கௌதம் வீட்டில் தான் இருக்கிறான்.. அவனுக்குத் தெரிந்தால் வம்பாகி விடப் போகிறது.."என்று கலங்கிய முகத்துடன் கூற கலகலவெனச் சிரித்தவள்.. "அத்தை வீணாகப் பயம் கொள்ளாதீர்கள்.. என்னை இங்கே வரச் சொன்னதே உங்கள் மகன் தான்.. உள்ளே வாருங்கள்.. நேற்று நடந்த கூத்தைச் சொல்கிறேன்.."என்று உள்ளே நடந்து சென்றாள்.

அவள் கூறிய அனைத்தையும் கேட்ட வசந்திக்கு சிரிப்பாக வந்தது. கூடவே திகைப்பும்.. தன் மகன் ஒரு பெண்ணிடம் இவ்வளவு இயல்பாகப் பழகுவதைக் கண்டு ஆச்சரியமாக வந்தது.. இந்த மூன்று வருடங்களாகப் பெண் என்றாலே பத்தடித் தள்ளி நிற்பவனை இந்த அளவிற்கு மாற்றி விட்டவளை அவர் சிரிப்பும்,கண்ணீருமாக நோக்க.. "ரிலேக்ஸ் அத்தை.." என்று அவள் சமாதானப் படுத்திக் கொண்டிருந்த அந்த நிமிடம் மாடிப் படிகளிலிருந்து "அம்மா.."என்றழைத்தபடி கீழே இறங்கி வந்தான் கௌதம்.

ஒருவரையொருவரின் கைகளைப் பற்றியபடி நின்றிருந்த இருவரையும் கண்டுப் புருவம் நெறித்தவன்.. "அம்மா.. உனக்கு இவளை ஏற்கனவே தெரியுமா..?"என்று விசாரித்தான். "அ..அது.."என்று இழுத்த வசந்திக்குப் பயத்தில் வியர்த்து வழிந்தது. அவரது கைகளை இறுகப் பற்றி அழுத்திய நித்யா.. "ஆமாம் சார்.. ஆன்ட்டியை நான் அருகிலிருக்கும் முருகன் கோவிலில் அடிக்கடி பார்த்திருக்கிறேன்.. அப்போது நான் அறிந்திருக்கவில்லை இவர்கள் உங்கள் அன்னையென்று.."என்றா இயல்பாகக் கூறி அவள் சிரிக்க.. "ஆமாமாம்..

இவளைக் கோ..கோவிலில் சந்தித்திருக்கிறேன்..''என்றுத் தானும் ஒத்து ஊதினார் வசந்தி.

"ஓ!.''என்றவன் தொடர்ந்து.. "வாய்ப்பிருக்கிறது தான்.. என் அன்னை எப்போதும் கோவில்,குளம் என்று இறைவனின் காலடியில் தான் கிடப்பார்கள்.. செய்வதையெல்லாம் நாம் செய்து விட்டுக் கடவுளிடம் கண்ணீர் விடுவதில் என்ன பயன் இருக்கிறது..?''என்று அவன் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு நக்கலானக் குரலில் தெரிவிக்கத் தலை குனிந்த படி அமைதியானார் வசந்தி.

கண்ணீர் முட்ட நின்று கொண்டிருந்தவரைக் கண்டு விட்ட நித்யாவிற்கு கௌதமின் மீதுக் கோபமாக வந்தது.. "உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையென்றால் அது உங்கள் விருப்பம்.. அதற்காக அடுத்தவர்களின் நம்பிக்கையைக் கேலி செய்யும் உரிமையோ.. உங்களது கருத்துக்களை அடுத்தவர்களிடம் நிலை நாட்டும் அதிகாரமோ உங்களுக்குக் கிடையாது... நீங்கள் தினமும் அலுவலகம் சென்று விடுகிறீர்கள்.. இரவு தான் திரும்புகிறீர்கள்.. ஆன்ட்டி அதுவரை என்ன செய்வார்கள்..?, பாவம்''என்று வக்காலத்து வாங்க.. அவனுக்கு சிரிப்பு வந்தது.. "நான் என் அன்னையைத் தானே கூறினேன்.. உன்னை எதுவும் சொல்லவில்லையே..?''என்று கூற.. "நீங்கள் இறைவனைத் தேடிச் செல்லும் அனைவரையும் தான் குறை கூறுகிறீர்கள்..'' என்றவள் தொடர்ந்து.. "ஆன்ட்டி.. எனக்கு மிகவும் பசிக்கிறது.. நாம் சாப்பிடலாமே...''என்று வினவ..

"ஆமாமாம்.. அதற்காகத் தானே வந்திருக்கிறாள்.. சீக்கிரம் சாப்பாடு போடும்மா..'' என்று கேலி செய்தான் கௌதம். "ஆமாம்.. நான் சாப்பிடத் தான் வந்திருக்கிறேன்.. பின்னே.. நீங்கள் அளிக்கும் சொற்ப வருமானத்திற்கு நான் ஸ்டார் ஹோட்டலிலா விருந்து சாப்பிட முடியும்..?''என்று அவள் பதில் கேள்வி கேட்க.. அவனோ அசராமல் "வருமானம் சொற்பமானதாக இருக்கிறதென்றால்.. ஏன் என்னிடம் வேலை பார்க்கிறாய்..?, வேறு எங்காவது செல்ல வேண்டியது தானே..?''என்று அவன் கூற.. தானும் கோபம் கொண்ட நித்யா.. "ஏன்..?,செல்வேனே.. இப்போது நான் வேலை கேட்டால் கூட என் திறமைக்கு நல்ல வேலை கிடைக்கும் தான்.. நான் உங்களை நம்பி வாழவில்லை.. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்..'' என்று சற்றுக் கோபமாகவே கூற.. அவனோ மேலும் எரிச்சலாகி.. "சரி,அப்படியானால் நாளையே ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்து விட்டு வெளியேறி விடு.. சரி தானே..?''என்று கூற.. இவர்களிருவரது சண்டையைக் கவனித்த வசந்தி.. வேகமாக இடையிட்டு.. "கண்ணா.. என்ன இது..?,முதன்முறையாக வீட்டிற்கு வந்திருக்கிறாள்.. இப்போது நீங்கள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டு தான் ஆக வேண்டுமா..?''என்று வினவினார்.

DO NOT COPY

அவளை முறைத்தபடியே அன்னையின் புறம் திரும்பியவன்.. “அம்மா.. இவளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.. சரியான ராட்சசி.. வாயாடி.. இத்தனை நாட்களாக அலுவலகத்தில் என் உயிரை வாங்கியது போதாதென்று இனி வீட்டிலும் என்னைத் தொல்லை செய்யப் போகிறாள்..”என்று அவன் நொந்து கொள்ள.. “கவலைப் படாதீர்கள் சார்... நான் மற்றவர்களைப் போல் அல்ல.. காஃபி பொடி தீர்ந்து போயிற்று என்றோ.. ஒரு கப் சர்க்கரை தருகிறீர்களா ஆன்ட்டி என்றோ.. கடன் கேட்டுத் தொல்லை செய்ய மாட்டேன்..” என்று கூற.. “ஆமாமாம்.. காஃபி பொடி,சர்க்கரை இரண்டும் உங்கள் வீட்டில் இருக்கிறது தானே ஆன்ட்டி, ஒரு கப் காஃபி போட்டுத் தாருங்கள் என்று நேரடியாகவேக் கேட்டு விடுவாய்..”என்று அவன் கூறியதும் வசந்திக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை..

அவனை முறைக்க முயன்று தோற்ற நித்யாவும் கலகலவென சிரித்தாள். தானும் முறுவலுடன் அவளை நோக்கியவன் “சிரிப்பதைப் பார்..”என்று கேலி செய்ய.. “ஏன்..?,என் சிரிப்பிற்கு என்ன..?,அழகாகத் தானே சிரிக்கிறேன்..? பாருங்கள் அழகாகத் தான் இருக்கிறது”என்றபடியே கௌதம் நின்றிருந்த இடத்திற்குப் பின்னே இருந்த கண்ணாடியில் தன் முகத்தைக் காண்பதற்காக அவனருகே வந்து நின்றாள்..

பின் கண்ணாடியிலிருந்து பார்வையைத் திருப்பி அவன் முகத்தைக் கண்டவள்.. “என் சிரிப்பில் என்ன குறையைக் கண்டீர்கள்?”என்று வினவ.. தனக்கு வெகு அருகே நின்றிருந்தவளின் பளிங்கு முகத்தை உதட்டில் உறைந்த புன்னகையுடன் நோக்கிக் கொண்டிருந்தான் கௌதம். குளித்த உடன் புறப்பட்டு வந்ததால் பின்னலிடாமல் விரிந்து படர்ந்திருந்த கூந்தல் அவளது தோள்களை உரச.. பொட்டிடாமல் இருந்த வெற்று நெற்றியில்.. அடர்ந்த புருவங்களுடன் மையிடப்பட்டிருந்த அவளது பெரிய விழிகள் அவன் முகத்திலேயே நிலைத்திருக்க.. அசைந்தாடிக் கொண்டிருந்த காதுத் தொங்கட்டான்களையும்,சாயம் பூசாமலேயே அழகாகச் சிவந்திருந்த இதழ்களையும் கண்டவன்.. அவளையே சிரிப்பு மாறாமல் நோக்க.. அவனது பார்வையைக் கண்ட நித்யாவிற்கு மூச்சடைத்தது..

திகைப்பு மாறாமல் இமைக்க மறந்து அவனையே நோக்குபவளைக் கண்டவன் அவள் முகத்திலேயே பார்வையை நிலைக்க வைத்து “அம்மா.. நான் குளித்து விட்டு வருகிறேன்.. சாப்பாடு எடுத்து வையுங்கள்..”என்று கூறி விட்டு அதே சிரிப்புடன் நகர்ந்து விட்டான். அவனது சிரிப்பும்,பார்வையும் எதைஎதையோ தூண்ட.. சட்டெனப் பார்வையைத் திருப்பியவள்.. பின் நடப்பிற்கு வந்து.. படியேறிக் கொண்டிருந்தவனிடம் “நீங்கள் வரும்வரையெல்லாம் காத்திருக்க என்னால் முடியாது.. நான் சாப்பிடப் போகிறேன்..”என்று குரல் கொடுக்க..

DO NOT COPY

“மிக்க மகிழ்ச்சி.. சாப்பிட்டு விட்டு இடத்தைக் காலி செய்..”என்று சிரிப்புடன் கூறி விட்டுச் சென்றான்.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்ட வசந்திக்கு யோசனையாக இருந்தது.. “நித்யா..”என்று அவர் அவளது தோளைப் பற்றியதும்.. “அத்தை.. சாப்பிடலாம்..”என்று கூறி சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தாள்.

அவள் மூன்று இட்லிகளைக் காலி செய்து மற்றுமொரு தோசையை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்த சமயம்.. தானும் குளித்து முடித்து கையில்லாத பனியனும்,ஒரு ட்ராக் சூட்டுடனும் தோளில் இட்ட துண்டுடனும் தலையைத் துவட்டியபடியே வந்தான் கௌதம். மகனைத் திரும்பிப் பார்த்த வசந்திக்கு ஆச்சரியமாக இருந்தது. மூன்று வருடத்திற்கு முன்பு காலைச் சாப்பாட்டிற்கு இப்படித் தான் வந்தமர்வான்.. ஆனால் இப்போதெல்லாம் குளித்து முடித்து அலுவலகம் கிளம்புகையில் அன்னையின் முகத்திற்காக.. வேண்டா வெறுப்புடன் இரண்டு இட்லிகளை வாயில் அடைத்துக் கொண்டு செல்வான்.. அப்படி இருப்பவன்.. இன்று மீண்டும் பழையபடி நடமாடுவதைக் கண்டு சந்தோசமாக இருந்தது..

“சாப்பிட வா கண்ணா..”என்று அவர் அழைத்ததும் திரும்பி அவனை நோக்கிய நித்யா.. அவனது வலிய தோள்களையும்,கம்பீரமான புஜத்தையும் கண்டு அந்த நாளில் இரண்டாவது முறையாக உறைந்து போனாள். “என்ன கபளீகரம் செய்ய ஆரம்பித்து விட்டாய் போலும்.. எனக்கு ஏதேனும் மிச்சமிருக்கிறதா..?” என்று சிரித்தவனைக் கண்டுத் தானும் சிரித்து அருகே அமரும் படி பக்கத்து இருக்கையைக் காட்டி சைகை செய்தாள்.

அவள் கூறியபடியே அவளருகே வந்தமர்ந்தவனுக்குத் தானே பரிமாறியவளைக் கண்டு வசந்தி உள்ளே செல்ல.. அத்தைக்கு மனதில் நன்றி கூறியபடி கௌதமிடம் திரும்பியவள்.. “ஜிம் பாடியா சார்....?”என்று அவன் தோளை இடிக்க.. “ப்ச்..”என்று அவன் அவளை முறைத்ததும் “ஓகே ஓகே.. தொடவில்லை..”என்றவள் தொடர்ந்து “வீட்டில் ஒரு பெண் வேலைக்காரர்களைக் கூடக் காணவில்லையே.. ஆண்களுக்கு மட்டும் தான் வேலை என்று இங்கேயும் போர்டா..?,ஏன் சார் இப்படி..?”என்று கூற.. தோசைகளை வாயில் அடைத்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து..

“ஆனால் நித்யா.. நீ இப்படிப் பெண் விடுதலை,பெண் சுதந்திரம் என்று பேசி ஏதோ ஒரு வெள்ளைக்காரனிடம் பலமாக மாட்டிக் கொண்டு விட்டாயா..?,அதனால் தான் நியூயார்க்கில் இருந்து இங்கு வந்து மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாயா..?,மரியாதையாக உண்மையைச் சொல்..”என்று கூற.. “நான் ஏன் மறைந்து வாழப் போகிறேன்..?,ஆக நியூயார்க்கிலிருந்து

DO NOT COPY

இந்தியா வரை பெண் விடுதலையும்,சுதந்திரமும் அவசியமாகத் தானே இருக்கிறது..?,அதனால் தான் நியூயார்க்கைத் திருத்தியது மட்டும் போதாதென்று இந்தியாவிற்கும் வந்து விட்டேன்..”என்று கூறிச் சிரித்தாள்.

அவன் அடுத்து பதில் கூறாததைக் கண்டவள்.. “சார்...” என்றழைத்து “வைகுந்த் அண்ணாவின் உறவுக்காரப் பெண் ஒருத்தி குடிகாரக் கணவனால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாளாம்.. அவளுக்கு வேலை வேண்டுமாம்.. நம்.. உ..உங்கள் வீட்டிலேயே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளலாமா..?,பாவம் சார்..”என்று கூற.. “இங்கேயுமா உன் அராஜகம்..?, ஏற்கனவே பெண் வேலைக்காரியினால் நான் பட்டது போதும்.., நீ கிளம்பு.. அதிகப் பிரசங்கித் தனமாக எல்லா விசயத்திலும் தலையிட்டுக் கொண்டு..”என்று அவன் முகம் சுளிக்க.. “நான் செல்வது இருக்கட்டும்.. ஒரு பெண் தவறு செய்தால் எல்லாப் பெண்களும் அப்படியே இருக்க வேண்டுமா சார்..?,ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்...?”என்று அவள் கோபமாக வினவ... தட்டிலிருந்து தலையை நிமிர்த்தி அவளை அழுத்தமாக நோக்கினான்.

“என்ன..?,அழகாக இருக்கிறேனா என்று ஆராய்ச்சி செய்கிறீர்களா..?”என்று வினவ.. சட்டெனச் சிரித்தவன்.. “ஏதோ செய்..”என்று கையைக் கழுவி விட்டு எழுந்தான். “ஏதோ செய் என்றால்..?,வைகுந்தனின் உறவுக்காரப் பெண்ணை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளலாமா..?”என்று ஆர்வமாக வினவினாள். “வேண்டாமென்றால் விட்டு விடப் போகிறாயா நித்யா..?,என் வீட்டின் முன்பு 10 பெண்களுடன் ஆர்ப்பாட்டத்தில் இறங்கி விட மாட்டாய்..?”என்று கூற.. நன்றாகச் சிரித்து “தேங்க் யூ சார்..”என்றாள்.

“ஆமாம்.. உனக்கு வைகுந்தனை எப்படித் தெரியும்..?,”என்று வினவ.. “அ..அது.. இப்போது தான்.. உள்ளே வருகையில் பேச்சுக் கொடுத்தேன்..”என்று உளற.. “பேச்சுக் கொடுத்ததற்கே அவனது குடும்ப வரலாற்றையே கூறுகிறாய்..?, இப்படியே பொதுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டேயிரு.. நன்றாக வருவாய்”என்று வாழ்த்தி விட்டுச் சென்றான் அவன்.

அதன் பின் வசந்தியிடமும்,வைகுந்தனிடம் விசயத்தைத் தெரிவித்தாள். “எப்படிம்மா நீ கூறும் அனைத்திற்கும் அவன் தலையாட்டி விடுகிறான்..?”என்று வினவியவரிடம் “அத்தை.. நான்கு முறை உங்கள் மகனை எதிர்த்து வாதாடினால் அவர் தனது தவறை மாற்றிக் கொள்கிறார்.. என்ன, இதனால் எனது தொண்டைத் தண்ணீர் வற்றிப் போய் விடுகிறது.. அதனால் என்ன பரவாயில்லை..”என்று கூற.. கலகலவென சிரித்தார் வசந்தி. பின் அவளது முகத்தை வருடி.. “சிறிது சிறிதாக என் மகனை மாற்றி வருகிறாய்.. இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ தெரியவில்லை..”என்றவரிடம் “கைம்மாறெல்லாம் வேண்டாம் அத்தை.. பருப்பு போளி மட்டும் செய்து கொடுங்கள் போதும்..”என்று கூறிச் சிரித்தாள்.

DO NOT COPY

அதன் பின் விடைபெற்றுப் படியிறங்கியவள் தோட்டத்தில் ஸ்ரீமதியைச் சுமந்தபடி நின்று கொண்டிருந்த கௌதமைக் கண்டு அவனருகே சென்றாள். “யார் இந்தப் பாப்பா சார்.. அழகாக இருக்கிறாள்.. என்னிடம் வருவாயா கண்ணே..?,உனக்கு சாக்லேட் தருகிறேன்...”என்று அவள் கை நீட்ட.. அவளிடம் தாவியது அந்தக் குழந்தை.. “சாக்லேட் தருகிறேன் என்றதும் என்னிடம் வந்து விட்டதே.. அய்யோ சார் என்னிடம் சாக்லேட் ஏதுமில்லையே..”என்று அவள் பதற.. “என்னிடம் இருக்கிறது.. இதைக் கொடு..”என்று அவளிடம் நீட்டினான்.

“பாப்பா.. இதோ சாக்லேட்..”என்று சிரித்தவள் “உன் பெயரென்ன..?”என்று அவள் விசாரித்ததும் தன் பெயரைக் கூறிய ஸ்ரீமதி அவளது பெயரையும் கேட்டாள். நித்யா பதில் சொல்வதற்குள் முந்திக் கொண்ட கௌதம் “அவள் பெயர் வாயாடி நித்யா..”என்று கூற அவனை முறைத்தவள் “வாயாடியெல்லாம் இல்லை வெறும் நித்யா தான்..”என்று கூறியவள்.. ஸ்ரீமதியைப் பற்றி அவனிடம் விசாரித்தாள்.


அவன் கூறியதைக் கேட்டவள் அவனை ஒரு மாதிரியாகப் பார்க்க.. “என்ன..?”என்றான் அவன். “இல்லை.. உங்களுக்குத் தான் பெண்கள் என்றாலே வெறுப்பாயிற்றே..இந்தப் பெண்ணிடம் மட்டும் பாசமாகப் பழகுகிறீர்கள்..?”என்று கேட்க.. “இது சூதுவாதறியாத மழலை.. வளர்ந்து கெட்ட முட்டாள்களைப் போல அல்ல.. “என்று அவன் மரத்துப் போன குரலில் கூறினான்.

மறுபடியும் மரம் ஏறி விட்டான்.. அந்தத் திருமணத்தையும்,அந்தச் சண்டாளியையும் மறக்கவே மாட்டான் போலும்.. “இந்தச் சூது வாதற்ற மழலையும் ஒரு நாள் பெண்ணாகத் தான் போகிறது.. அப்போதும் இதே பாசத்துடன் நீங்கள் நடந்து கொண்டால் சரி தான்..”என்று அடிக்குரலில் கூறியவளிடம்.. பதில் கூற முடியாமல் முறைத்தவன்.. “குழந்தையைக் கொடு..” என்று வாங்கிக் கொண்டு முன்னே நடந்தான்.


“இப்போது ஏன் கோபப் படுகிறீர்கள்..?,என்ன தவறாகக் கூறி விட்டேன்..?” என்று பின்னேயே ஓடிச் சென்றாள். “எந்நேரமும் என்னுடன் வாதிட்டுக் கொண்டு தான் இருக்க வேண்டுமா நித்யா..?”என்று அவன் தளர்வுடன் மரபெஞ்சில் அமர.. ஸ்ரீமதியைப் பற்றியபடி அவன் முன்னே மண்டியிட்டு அமர்ந்தாள். “பாப்பா.. அங்கிளை உனக்கு மிகவும் பிடிக்குமா..?”என்று விசாரிக்க.. “ரொம்பப் பிடிக்கும்...”என்று கூறிய மழலையிடம் “ஆனால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.. எப்போதும் என்னைத் திட்டிக் கொண்டே இருக்கிறார்.. என்னுடன் சிரித்துக் கூடப் பேசுவதில்லை..”என்று அவனை ஓரக் கண்களால் நோக்கியபடியே குழந்தையிடம் கூறிக் கொண்டிருந்தாள்.

DO NOT COPY

“அய்யய்யோ... ஆனால் அங்கிள் என்னைக் கொஞ்சுவார்.. முத்தம் கொடுப்பார்...” என்று அவன் மடியில் ஏறிய குழந்தை அவனை முத்தமிட.. “என்னை எங்கே கொஞ்சுகிறார்..?”என்று சற்று சத்தமாகவே முணங்கி விட்டாள். குழந்தையைப் பதிலுக்கு முத்தமிட்டவன் அவள் முணுமுணுத்ததைக் கேட்டு விட்டு.. “என்ன கூறினாய் இப்போது..?”என்று வினவ.. “ஒன்றுமில்லை.. நான் என் வீட்டிற்குச் செல்கிறேன் என்று கூறினேன்.. பாப்பா டாட்டா..”என்றவள் தப்பித்தோமடா சாமி என்று ஓடி விட்டாள்.



# அத்தியாயம் – 9




**அவன் கானம் என் காதுகளை நிரப்புகையில்..**
**நான் வையகம் மறந்து..**
**இன்பக் கடலில்.. மூழ்கிப் போனேன்..**
**கண்ணா.... இசையென்றால் இது தானா..?**

**அ**ன்று அலுவலகம் கிளம்புவதற்காக வீட்டை விட்டு வெளியே வந்த நித்யாவிற்கு கௌதமின் காரை வாசலில் கண்டதும் குதூகலமாகிப் போனது. "சார்... குட்மார்னிங்... அலுவலகம் கிளம்பி விட்டீர்களா..?,என்னையும் அழைத்துச் செல்கிறீர்களா.. ப்ளீஸ்.."என்று கெஞ்ச.. அவனோ காருக்குள் அமர்ந்தபடியே "ஏன் உன் ஸ்கூட்டி என்னவாயிற்று..?"என்று விசாரித்தான். "அதைத் தான் அந்த ஹோட்டல் வாசலிலேயே விட்டாயிற்றே.. என்னவாகியதோ தெரியவில்லை.. தொலைந்து போயிருக்குமோ..?"என்று வினவ.. மறுத்துத் தலையசைத்தவன் "மறந்து போனேன் பார்.. உன் ஸ்கூட்டியை அலுவலகத்தில் நிறுத்தும் படி நம்பியிடம் நேற்றே கூறி விட்டேன்.."என்று கூறினான். "நன்றி சார்.. ஆனால் இப்போது நான் ஸ்கூட்டியில்லாமல் எப்படி அலுவலகம் செய்வது..?,அதனால் என்னை ட்ராப் செய்கிறீர்களா ப்ளீஸ்.."என்று கெஞ்சியபடியே கதவைத் திறந்து ஏறி அமர்ந்து விட்டாள்.

"ஏறி அமர்ந்து விட்டுக் கெஞ்சுகிறாயா..?,உன்னை என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை.. சரி, உன் தந்தை இன்னும் ஊரிலிருந்து வரவில்லையா..?"என்று வினவினான். "இ..இல்லை.. இன்னும் ஒரு வாரம் கழித்துத் தான் வருவார்.. முக்கியமான வேலையாக சொந்த ஊருக்குச் சென்றிருக்கிறார்"என்று தடுமாறியபடி கூறியவளிடம் அவன் மீண்டும் "சொந்த ஊரா..?,எது உன் தந்தையின் சொந்த ஊர்..?"என்று விசாரித்தான். "மாயவரம் சார்.."என்று உளறி வைத்து விட்டவள் திகைத்து அவன் முகம் பார்க்க.. அவனோ புன்னகையுடன் "அப்படியானால் உன் சொந்த ஊர் மாயவரம் தானா..?,என் அன்னை,தந்தையின் சொந்த ஊரும் கூட அது தான்.. மாயவரத்தில் எங்கே..?"என்று அவன் மேலும் விசாரிக்க.. முதலில் விழித்தவள் பின் "சார்.. நியூயார்க்கில் எதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் என்னிடம் விசாரியுங்கள்.. மாயவரத்தைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது..

DO NOT COPY

நான் ஒரு முறை கூடச் சென்றதில்லை..."என்று புழுகி வைத்தாள். அவனும் "ம்ம்.."என்று முடித்து விட அவளுக்கு வசதியாகப் போனது.

அதன் பின் செல்லும் வழி முழுதும் வாய் மூடாமல் பேசிக் கொண்டு வந்தவளை எரிச்சலுடன் நோக்கியபடி வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான் கௌதம். சிறிது நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்த பின் வேலையில் மூழ்கி விட்டவனை அழைத்தவள் "சார் இன்று நீங்கள் வேளச்சேரி சைட்டிற்குச் செல்ல வேண்டும் என்று கூறினீர்களே..?,மறந்து விட்டதா..?"என்று நினைவு படுத்த "செல்கிறேன் இல்லை.. செல்கிறோம்.. இன்னும் பத்து நிமிடத்தில் புறப்படலாம்.. அதற்கு முன் எனக்கு ஒரு கப் காஃபி நித்யா.." என்று கூறிவனிடம் புன்னகைத்து விட்டு.. கதிரிடம் கூறி காஃபி வரவழைத்தாள்.

அவனுடன் மீண்டும் காரில் செல்கையில் "சார்.. அப்படியானால் ஆன்ட்டியிடம் உங்களது மதிய சாப்பாடை சைட்டிற்கே கொடுத்து விடச் சொல்லட்டுமா..?"என்று வினவ.. "வேண்டாம் வேண்டாம்.. வெளியில் சாப்பிட்டுக் கொள்ளலாம்.. சாப்பாடு வேண்டாமென்று சொல்லி விடு.. நேரமானாலும் ஆகலாம்.."என்று கூற அவளும் குதூகலத்துடனே தலையசைத்தாள்.

அடுத்த மூன்று நான்கு மணி நேரங்களை சைட்டிலேயே செலவழித்தனர் இருவரும். "சார்.. சாப்பிடச் செல்லலாம்.."என்று அவள் தொடங்கியதும் பதிலே கூறாமல் இருந்தவனின் பின்பு திரிந்து ஒரு வழியாகச் சம்மதிக்க வைத்து அழைத்து வந்தவள் "பசி,தூக்கம் பாராமல் நீங்கள் உழைப்பது சரி தான்.. என்னையும் எதற்காக பட்டினி போடுகிறீர்கள்..?,"என்று பொறிந்தவளிடம் "சாரி.. சாரி நித்யா.."என்று மன்னிப்புக் கேட்டவன் பார்க் ஷெராட்டனிற்கு அழைத்துச் சென்றான்.

"ஓ!, நீங்கள் ஸ்டார் ஹோட்டலில் தான் சாப்பிடுவீர்களாக்கும்..?"என்று கேலி செய்தபடி இறங்கியவளிடம் "நீ தானே கூறினாய் என் சம்பளத்தில் ஸ்டார் ஹோட்டலிற்குச் செல்ல முடியவில்லை என்று.. இந்தப் பாவம் எனக்கு எதற்கம்மா..?,அதனால் தான்.."என்று கூற கலகலவெனச் சிரித்தாள் நித்யா.

அங்கே அவன் ஏற்கனவே மேஜை பதிவு செய்திருப்பதாகக் கூற அவனை வியப்புடன் நோக்கினாள். "என்ன ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியமாக இருக்கிறதே.. எனக்காகவா புக் செய்திருக்கிறீர்கள்..?"என்று விழிகளைப் பெரிதாக்கி வினவியவளிடம் சிரித்தபடி அமரும் படி செய்கை செய்தான் கௌதம். பதில் கூறுகிறானா பார் கல்லூளிமங்கன்.. என்று திட்டிக் கொண்டவள்.. அவன் காட்டிய இடத்தில் அமர்ந்தாள்..

DO NOT COPY

தானும் அமர எத்தனித்தவன் அணிந்திருந்த கோட்டைக் கழட்ட எண்ணி கோட்டில் கை வைத்தான். அவன் கழட்ட முயற்சிப்பதை அறிந்து கொண்ட பணிப்பெண் வேகமாக அருகே வந்து “ஐ வில் ஹெல்ப் யூ சார்..”என்று அவன் கை மீது தன் கரத்தை வைக்க.. சட்டென அவளது கையை உதறியவன் பின் சுதாரித்து “இட்ஸ் ஓகே.. தேங்க்யூ.. நான் சமாளித்துக் கொள்வேன்..”என்று கூற.. அந்தப் பெண் திகைப்பும்,தயக்கமுமாய் விழித்தாலும்.. பின் புன்னகைக்க முயன்றபடி விலகிச் சென்றாள்.

அவன் அமர்ந்ததும் அவனை முறைத்த நித்யா.. “என்ன தான் பிரச்சனை உங்களுக்கு..?,ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்..?,உங்கள் கோட்டைத் தொட்டது தவறா..?,அந்தப் பெண்ணின் கடமையைத் தானே செய்தாள் அவள்..?, இப்படி அவமானப் படுத்துகிறீர்கள்..?,”என்று பல்லைக் கடித்தபடி அவள் அடிக்குரலில் பொறிய.. “ப்ச்..”என்றபடி வேறு புறம் திரும்பியவன் “எனக்குப் பிடிக்கவில்லை..”என்று உணர்ச்சியற்ற குரலில் கூற.. “பிடிக்கவில்லையா..?, என்ன பிடிக்கவில்லை...?, அன்று நான் கோட் அணிந்து விட்ட போது அமைதியாகத் தானே இருந்தீர்கள்..?”என்று தொடங்கியவளிடம் வேகமாக இடையிட்டவன் “அவளும் நீயும் ஒன்றா..?”என்று கூற.. வியப்புடன் நிமிர்ந்து அவன் முகம் நோக்கினாள்.

தான் கூறியதன் அர்த்தத்தை உணராமலேயே மெனு கார்டில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தவனை இமைக்காமல் நோக்கியவளுக்கு மனதில் பட்டாம்பூச்சிகள் பறந்தன. “ஏன்..?,நான் மட்டும் என்ன ஸ்பெஷல்..?”என்று கை கட்டி இரண்டு இமைகளையும் இரண்டு முறை உயர்த்திக் கேட்டவளிடம் “வேறு என்ன..?,நீ என்னிடம் வேலை பார்ப்பவள் என்பது தான்..”என்று அலட்டிக் கொள்ளாமல் கூற “ம்,ம்..”என்றவள் “ஒப்புக் கொள்ள மாட்டானே.. படுபாவி..”என்று திட்டிக் கொண்டாள் மனதுக்குள்.

அதன் பின் அவனுடன் வம்பு செய்து பதிலுக்கு திட்டுக்களையும் பெற்றுக் கொண்டு ஒரு வழியாக மதிய உணவை முடித்துக் கொண்டு அலுவலகத்திற்குச் சென்றாள் நித்யா.

அன்று இரவு தந்தையுடன் இண்டர்நெட் வாயிலாக வெகு நேரம் உரையாடியவள்.. கௌதமைப் பற்றியும்,அவனிடம் தெரியும் மாற்றங்களைப் பற்றியும் விவரித்துக் கொண்டிருந்தாள். “அப்பா.. நான் கோட் அணிந்து விட்ட போது கௌதம் என்னைத் தடுக்கவுமில்லை.. விலக்கி அவமானப் படுத்தவும் இல்லை.. ஆனால் இன்று ஹோட்டலில் பணிப்பெண் அவனது ஆடையில் கை வைத்ததும் வேண்டாமென்று கூறி விட்டான். அப்படியானால் அவனுக்கு என்னைப் பிடித்திருக்கிறது தானே..?”என்று விழி முழுக்க ஆர்வமும்,ஆசையுமாக மகள் வினவியதைக் கண்டு யோசனையாக இருந்தது

DO NOT COPY

விஸ்வநாதனுக்கு. இனிமேலும் தாமதம் செய்யாது உடனடியாக இந்தியா புறப்பட வேண்டுமென்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

ஆனாலும் மகளிடம் வம்பு செய்ய எண்ணி "அவனுக்கு உன்னை எதற்காகம்மா பிடிக்க வேண்டும்..?"என்று வினவ.. அவளோ முகத்தைச் சுருக்கி "என்ன அப்பா கௌதமிற்கு என்னைப் பிடித்தால் தானே என் பேச்சிற்கு மதிப்புக் கொடுத்து அவனது குணத்தை மாற்ற முயல்வான்..?,திருமணத்திற்குச் சம்மதிப்பான்..?"என்றவள் திருமணமா.. என்று நகம் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்து விட தன் எதிரில் கணிப்பொறியில் தெரிந்த மகளின் உருவத்தைக் கண்டு சிரிப்பு வந்தது அவருக்கு.

"ம்,மேலே சொல்லம்மா.. அவன் சீக்கிரம் திருமணத்திற்குச் சம்மதிக்க வேண்டும்.. அதன் பின் நீ நியூயார்க் திரும்ப வேண்டும்.. அது தானே..?"என்று கூற "நியூயார்க் திரும்புவதா..?"என்று அதிர்ந்து வினவியவளுக்கு தனது அதிர்வே மிகப் பெரிய அதிர்வைத் தந்தது.. அதன் பின் தந்தையுடன் சிறிது நேரம் உரையாடி விட்டுத் தன் படுக்கையில் சாய்ந்தவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

அப்பா கூறியதும் சரி தானே.. தான் இந்தியா வந்ததே கௌதமை மாற்றித் திருமணத்திற்கு சம்மதிக்க வைக்கத் தான்.. அது நிறைவேறி விட்டதென்றால் அவள் சொந்த ஊருக்குத் திரும்புவது தானே நியாயம்..?,ஊர் திரும்புவதை எண்ணிக் குதூகலப் படாமல் மனம் எதற்காக வருத்தத்தில் ஆழ வேண்டும்..? என ஆராய்ந்தவளுக்குத் தெரிந்த ஒரே பதில்.. எப்படி கௌதமைப் பாராமல்.. அவனுடன் வம்பு செய்து சிரிக்காமல் இருக்க முடியும் என்பது தான்..! காலை விடிந்தாலே.. இன்று கௌதமைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் தான் அவள் அந்த நாளைத் தொடங்குவதே..!

அவனுடன் சண்டையிட்டு.. அவனைச் சிரிக்க வைத்து.. அவனது முறைப்பை ரசித்து.. அவன் தன் மீது காட்டும் அக்கறையை உணர்ந்து.. முழுக்க முழுக்க அவனை மட்டுமே சிந்திக்கும் நிலைக்கு ஆளாகி விட்டப் பின் திடீரென அவனை விட்டு விலகிச் செல் என்றால் எப்படி முடியும்..?, முடியாது.. நிச்சயம் முடியாது.. கௌதமைத் தவிர்த்து ஒரு வாழ்வை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது..

அவன் வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்வானா..?, அதை நான் அனுமதிக்க வேண்டுமா..?, அப்படி மட்டும் அவன் ஏதேனும் செய்து கொண்டால் பளார்,பளார் என் அறைந்து மண மேடையிலிருந்து இழுத்து வந்து விடுவேன் ராஸ்கல்.. என்றெண்ணியவளுக்கு.. கௌதமன் மாறி வேறு ஒரு வாழ்வைத் தொடர்கிறான் என்றால்.. அவளுக்கு எதற்காகக் கோபம் வர வேண்டும்..?,அப்படியானால் அவன் இப்படியே இருந்து விட வேண்டுமென்று

DO NOT COPY

தான் அவள் நினைக்கிறாளா..?,பின்னே..?,வேறு யாருடன் தான் அவன் வாழ வேண்டுமென்று நினைக்கிறாள்..?

யோசித்தபடியே கண் மூடியவளுக்கு.. மனக் கண்ணில் தோன்றிய காட்சி.. மணக் கோலத்தில் சிரித்த முகத்துடன் அவளைக் கண்டாலே கண்ணில் தோன்றும் குறும்புப் பார்வையுடன் அவளுக்கு மாலையிட்டான் கௌதம் பிரபாகரன். திடுக்கிட்டு விழித்தெழுந்த நித்யாவிற்கு.. தான் கண்ட காட்சி திகைப்பை ஏற்படுத்தினாலும் கூடவே இதழ்க்கடையில் புன்னகையையும் தோற்றுவித்தது.

ஆக,அவனை மாற்றிக் காட்டுகிறேன் என்று தந்தையிடம் சூளுரைத்து விட்டு வந்தவள் தான் முற்றிலுமாக மாறிப் போனதை எண்ணி சிரிக்கத் தானே வேண்டும்..?, அலட்சியமாக அடியெடுத்து வைத்தவளைத் தன் அமர்த்தலான பேச்சினாலும்,பார்வையினாலும் வசியம் செய்தவன்.. பாலைவனம் போல் வரண்டு கிடக்கும் அவன் முகத்தில் அவ்வப்போது காணும் சிரிப்பைக் கண்டு அவளுள் ஜில்லென்ற உணர்வை ஏற்படுத்தியவன்.. தன் உயரத்தால்.. கம்பீரத்தால்... அலட்சியமான போக்கினால்.. திமிரினால்.. அன்பால்.. அக்கறையால்.. சிரிப்பால்.. கௌதம் பிரபாகரன் முற்றிலுமாக அவளைக் கவர்ந்து விட்டான். அவனை மாற்றுவதாக எண்ணிக் கொண்டு வேறு நினைவின்றி அவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு பிச்சியாய் அலையும் நித்யாவின் மனது அவனிடம் அவள் அனுமதியின்றியே அவனிடம் சரணடைந்து விட்டது..

தன் எண்ணங்களை அறிந்து கொண்ட நித்யாவிற்கு உடனடியாக அவனைக் காண வேண்டும் போல் மனம் பரபரத்தது.. விடியும் வரை பொறு மனமே.. என்று சமாதானப் படுத்திக் கொண்டவள்.. விடிந்த பின் குளித்துத் தனக்குப் பிடித்தமான மஞ்சள் நிறச் பாவாடை,சட்டை, துப்பட்டாவை அணிந்து கொண்டு அவனது இல்லம் நோக்கிச் சிட்டாகப் பறந்தாள்.

“குட்மார்னிங் வைகுந்த் அண்ணா..”என்று முகம் முழுக்க சிரிப்புடன் கூறியவளை புன்னகையுடன் நோக்கிய வைகுந்தன் “என்னம்மா இன்று உங்களுக்குப் பிறந்த நாளா..?,பளிச்சென்று இருக்கிறீர்களே..?”என்றவரிடம் “பிறந்த நாள் இல்லை வைகுந்த் அண்ணா.. ஆனால் நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.. அதனால் தான்..”என்று புன்னகைத்தவள் உள்ளே நடந்தாள்.

உள்ளே சென்று சமையலறையில் வசந்தியிடம் பேசிச் சிரித்தவள்.. கௌதமின் நடமாட்டம் இல்லாததைக் கண்டு “அத்தை.. அவர் இல்லையா..?”என்று விசாரிக்க “ஜாகிங் சென்றிருக்கிறான்.. வந்து விடுவான்.. நீ எதற்காக சீக்கிரம் எழுந்து தயாராகி விட்டாய் நிதும்மா..?”என்று வினவ.. இவரிடம் என்ன

DO NOT COPY

சொல்வதென்று திணறியவள்.. “ஒ..ஒன்றுமில்லை அத்தை.. நான் ஹாலில் அமர்ந்திருக்கிறேன்..”எனக் கூறி அவர் கொடுத்த கா∴பி கப்புடன் வெளியே வந்து விட்டாள்.

ஹாலில் சுத்தம் செய்து கொண்டிருந்த வைகுந்த்தின் உறவுக்காரப் பெண்ணிடம் நலம் விசாரித்தபடியே அமர்ந்தாள். அவளிடம் பேசிக் கொண்டே வாயிற் புறத்தில் பார்வையிட்டவளுக்கு.. கௌதம் தனது வேக நடையுடன் உள்ளே வருவதைக் கண்டு நெஞ்சம் படபடவென அடித்தது.. இது என்ன..?, நேற்று வரை இல்லாத பயமும்,படபடப்பும் புதிதாக இன்று..?மேலும் ஆராயத் தோணாததால்.. கா∴பிக் கப்பில் கவனம் செலுத்தினாள்.

விறுவிறுவென நடந்து வந்தவன்.. அவள் அமர்ந்திருந்த சோபாவில் அவள் அருகிலேயே இயல்பாக அமர.. இனிய அதிர்ச்சியுடன் அமைதியாக அமர்ந்திருந்தாள்.. கையில் வைத்திருந்த டவலால் முகத்தைத் துடைத்தவன்... அவள் புறம் திரும்பி “என்ன ஸ்பெஷல் இன்று..?,”என்று விசாரிக்க.. அவன் முகம் பாராமல் “ஒ..ஒன்றுமில்லையே.. ஏ..ஏன்..?”என்று வினவினாள்.

“ம்,ம்..”என்றவன் தொடர்ந்து “அம்மா.. கஞ்சி எடுத்து வாருங்கள்..”என்று கூற.. “நான் எடுத்து வருகிறேன்..”என்று ஓடிச் சென்றாள். வசந்தி கொடுத்தக் கஞ்சியை அவனிடம் நீட்டியவளை.. புருவம் தூக்கிப் பார்வையிட்டவன் “ம்,இன்று கொஞ்சம் அதிகப்படியாக அடக்கமாக நடந்து கொள்கிறாயே..?, ஏதேனும் பெரிதாகப் பழிவாங்கப் போகிறாயா.. என்னை..?”என்று சிரித்தபடி விசாரிக்க நிமிர்ந்து அவனை முறைத்தவள் “அதெல்லாம் ஒன்றுமில்லை..” என்று முணுமுணுத்தாள்.

கஞ்சியைப் பருகி முடித்தவன் “குளித்து விட்டு வருகிறேன்..”என்று எழுந்து சென்றான். அவன் செல்வதைக் கண்டபடியே நின்று விட்டவளிடம் திரும்பி வந்து அவள் எதிரே நின்றவன் “ஏன் கண்ணெல்லாம் சிவந்திருக்கிறது..?,இரவு தூங்கவில்லையா..?”என்று விசாரிக்க.. வியப்புடன் அவன் முகம் பார்த்தாள். வந்ததிலிருந்து இரண்டே முறை தான் அவளது முகம் பார்த்தான். அதிலேயே கண்டறிந்து விட்டானா..?, பதிலற்று நிற்பவளை மேலும் கூர்ந்து நோக்கியவன் “காய்ச்சல் எதுவும் வந்து விட்டதா..?”என்று விசாரித்தான்.

அவள் அதற்கும் பதிலற்று நிற்பதைக் கண்டு சற்றுத் தயங்கி அவள் நெற்றியில் கரம் பதித்து சோதித்தான். அவன் கரம் பதிந்ததும் விழி மூடித் திறந்தவள்.. அவனை இமைக்காமல் நோக்க.. “காய்ச்சல் ஒன்றுமில்லையே..” என்றவன் தொடர்ந்து “ஓ!,நீ தான் ஒரு பாட்டில் விஸ்கியை ராவாக அடிப்பாயே.. அப்படி ஏதும் செய்தாயா இரவு..?,அதனால் கூடச் சிவந்திருக்கலாம்..”என்றவனை “சார்..”என்று அவள் கோபமாக இடைமறிக்க.. “சரி.. சரி சீக்கிரம் அலுவலகம் செல்லும் வழியைப் பார்..” என்று அதட்டியபடி

DO NOT COPY

விலகிச் சென்றான். கோபமாக அவனை முறைத்தாலும்.. மனசுக்குள் பூப் பூக்க.. சிரிப்பைத் தேக்கிய முகத்துடன் ஓடிச் சென்றாள் நித்யா.

அன்று அலுவலகத்தில் வேலைகளுக்கு மத்தியில் தனது மின்னஞ்சலை பார்வையிட்டுக் கொண்டிருந்த நித்யா தனது தோழி ஜோஸ்னா எங்களையெல்லாம் மறந்து விட்டு இந்தியாவில் என்ன தான் செய்கிறாய் என்று கோபமாக அனுப்பியிருந்த மின்னஞ்சலைக் கண்டு சிரிப்புடன் அவளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

“நித்யா.. சிறுசேரிக்குச் செல்ல வேண்டிய சைட் இஞ்சினியர் இன்று விடுமுறையாமே..?,மெயில் அனுப்பியிருக்கிறார் பார்.. வேறு யார் செல்ல இருக்கிறார்கள்..?,விசாரித்தாயா..?,”என்று கேட்க.. நித்யாவிடமிருந்து பதிலே இல்லை.. “நித்யா..”என்று கணிப்பொறியிலிருந்து பார்வையை விலக்காமல் மீண்டும் வினவியவன்.. அவளிடம் பதிலற்றுப் போக.. அவளைத் திரும்பி நோக்கினான்.

சிரிப்புடன் கணிப்பொறியில் பார்வையை பதித்திருந்தவளைக் கண்டு கோபமாக எழுந்து அவளருகே வந்தான். அவள் மின்னஞ்சலைத் திறந்து வைத்திருப்பதைப் பார்த்து.. “ம்,ஆக.. உன் சொந்த காரியங்களைச் செய்து கொண்டுப் பொழுதை போக்குவதற்குத் தான் அலுவலகம் வருகிறாயா..?, தலைக்கு மேல் வேலை இருக்கையில் ஜாலியாக மெயில் அனுப்பிக் கொண்டிருக்கிறாய்..?,ம்,யாருக்கு அனுப்புகிறாய்..?,வெள்ளைக்காரக் காதலனா..?” என்று நக்கலாக வினவ... அவளுக்குக் கோபமாக வந்தது.

“எக்ஸ்யூஸ் மீ.. மைண்ட் யுவர் வேர்ட்ஸ்.. நான் வேலை பார்க்கவில்லையென்பதைக் காட்டி திட்டினால் போதும்.. நான் யாருடன் பேசுகிறேன் என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் விமர்சிக்க அவசியமில்லை.. ஆமாம்.. வெள்ளைக்காரக் காதலன் தான்.. அதனால் உங்களுக்கென்ன வந்தது..?, அளவுடன் பேசக் கற்றுக் கொள்ளுங்கள்..”என்று பாய.. வெறுப்புடன் ஒரு பார்வையைச் செலுத்தினான் கௌதம்.

“ஆமாம்,நீ எவனுடன் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன வந்தது..?, என் வேலை எனக்குச் சரியாக நடந்தாக வேண்டும்.. சிறுசேரி சைட்டில் யார் இருக்கிறார்கள் என்கிற தகவல் எனக்கு வந்தாக வேண்டும்.. ஆர்.ஆர். பில்டர்ஸிற்காக நாம் தயாரித்திருக்கும் பிளான் என் டேபிளிற்கு வர வேண்டும்.. “என்று ஆணைகளைப் பிறப்பித்து விட்டுத் தன் இருக்கைக்குச் சென்று விட்டான்.

அவன் சென்றதும் அமராமல் மூச்சு வாங்க நின்றிருந்த நித்யாவிற்கு எரிச்சலாக வந்தது. படுபாவி! இவனை மட்டுமே எண்ணி உயிர் வாழ்ந்து

DO NOT COPY

கொண்டிருக்கிறேன் நான்...! என்னை எவனோ ஒருவனுடன் துணை சேர்க்கிறான்.. கோபத்துடனே அமர்ந்து அடுத்தடுத்த வேலைகளைப் பார்த்து முடித்தவள்.. அவன் மேஜையில் சென்று அடுக்கினாள்.

அவளது முகத்தைப் பார்க்காமல் அமர்ந்திருந்தவனை நின்று முறைத்து விட்டுக் கோபமாகத் திரும்பியவளின் துப்பட்டா அவனது இருக்கையில் மாட்டிக் கொண்டு விட வேகமாகத் திரும்பி நோக்கினாள். அவன் அலட்டிக் கொள்ளாமல் துப்பட்டாவை ஒரு பார்வை பார்த்து விட்டு அவளை நிமிர்ந்து நோக்க.. அவள் திணறி "நா.. நான் வேண்டுமென்று எதுவும் செய்யவில்லை.. தானாக மாட்டிக் கொண்டது.. ஏ..ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்..?"என்று மேலும் திணற.. பக்கெனச் சிரித்து விட்டான் அவன்.

அவன் சிரிப்பதைக் கண்டு மேலும் கோபம் கொண்டவள்.. விசுக்கெனத் துப்பட்டாவை இழுத்துக் கொண்ட விலக.. கீழே விரிக்கப்பட்டிருந்த கார்பெட் வழுக்கி விலப் பார்க்க.. "ஏ..ஏய் நித்யா.."என்று சட்டென எழுந்தவன்.. அவள் இடையைப் பற்றித் தன்னருகே இழுக்க.. அவனது தோளைப் பற்றி கால் ஊன்றி நின்றாள்..

"கீழே பார்த்து நடக்கத் தெரியாதா இடியட்..?"என்று அவன் வழக்கம் போல் வசை பாடத் துவங்க.. படபடவென இமைகளைக் கொட்டியபடி விழித்துக் கொண்டு நின்றாள். அவன் தோள் மீது பதிந்திருந்தத் தன் கரத்தினை விலக்கிக் கொள்ளத் தோன்றாமல் அவன் முகம் கண்டபடி சுகமான கற்பனையில் ஆழ்ந்து விட்டவளை விலக்கி நிறுத்தி "நித்யா.."என்று அவன் கத்த.. திடுக்கிட்டவள் "சா..சாரி சார்.."எனக் கூறி விட்டு விடுவிடுவெனத் தன் இருக்கைக்குச் சென்றமர்ந்தாள்.

அவன் முகத்தை அருகே காணுகையில் தன்னிலை மறந்து பேந்த பேந்த விழிப்பதை எண்ணி அவளுக்கே திகைப்பாகவும் கொஞ்சமே கொஞ்சம் வெட்கமாகவும் இருந்தது. தன் இடையைப் பற்றியிருந்த அவன் கரங்கள் ஏற்படுத்திய சிலிர்ப்பை எண்ணி எண்ணி பூரித்துக் கொண்டிருந்தாள். அவனுக்குள்ளும் தன்னைப் போல் ஏதேனும் உணர்வு இருக்கிறதா என்று ஆராய்வதற்காக ஓரக் கண்ணால் அவனை நோக்கினாள். அவனோ அங்கே அப்போது எதுவுமே நடவாததைப் போன்று சுருக்கிய புருவங்களுடன் கணிப்பொறியை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

சரியான ஜடம்! உணர்ச்சியென்று ஒன்று இருக்கிறதா இல்லையா இவனுக்கு என்று மனதினுள் பொறுமியபடியே வேலையில் ஈடுபட்டாள். அடுத்த இரண்டு நாட்களும் எவ்வித பிரச்சனையுமின்றி அமைதியாகக் கழிய.. மூன்றாம் நாள் நித்யாவின் வாழ்வில் முக்கியமான சம்பவம் நடைபெற்றது. அது அவளுக்கு மகிழ்ச்சி அளித்ததா அல்லது துக்கத்தை அளித்ததா என்று அவளாலேயே

DO NOT COPY

தீர்மானிக்க முடியவில்லை.. ஆனால் மனதிற்குள் ஒளித்து வைத்து அவனுடன் ஆடிக் கொண்டிருந்த ஆட்டம் வெளிப்படுத்தப் பட்டதில் அவளுக்கு பாரம் நீங்கிய நிம்மதியைத் தான் ஏற்படுத்தியது.

அன்று காலை வழக்கம் போல் துள்ளலுடன் அலுவலகத்திற்குள் நுழைந்தவள் லிஃப்ட்டிலிருந்து வெளிப்பட்டப் பணிப்பெண் சீதாவிடம் நின்று உரையாடிவிட்டுத் தானும் மின்தூக்கியில் ஏறினாள். உடன் ஏறிய ஒருவன் இரண்டாம் தளத்தில் இறங்கி விட.. அவள் எட்டாவது தளத்திற்காகக் காத்திருந்தாள். வழியில் எவரும் ஏறிக் கொள்ளாததால் அவள் மட்டுமே தனியே இருக்க நேரிட்டது. கடிகாரத்தில் மணியைப் பார்த்து விட்டு.. தனக்கு முன்னாலேயே கௌதம் கிளம்பி விட்டானே.. இந்நேரம் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்திருப்பான்.. நெற்றிக் கண்ணைத் திறக்கப் போகிறான்.. என்று அவள் எண்ணிக் கொண்டு இருந்த சமயம் திடீரென லிஃப்ட் முழுதும் இருட்டாகிப் பாதியில் நின்று விட்டது.

திடீரென இருள் சூழ்ந்து விட்டதில் கொஞ்சம் பதறிப் போன நித்யா.. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கைப்பேசியிலிருந்து ஒளி பரப்பி லிஃப்ட்டிலிருக்கும் அலாரத்தை இயக்க முயன்றாள். அது வேலை செய்யாமல் போக தன் கைப்பேசியில் யாரையேனும் அழைக்கலாம் என நினைத்து கையிலிருந்தக் கைப்பேசியை இயக்கினாள்.. சிக்னல் இல்லாமல் போனதால் அதுவும் உதவாமல் போகத் தன் தலை விதியை நொந்து கொண்டு ஓரமாகச் சென்றமர்ந்தாள்.

இரு தளங்களுக்கிடையில் தான் இருட்டில் மாட்டிக் கொண்டதைக் கண்டுக் கொஞ்சம் பயமாயிருந்தது அவளுக்கு. மின்சாரப் பிரச்சனையாயிருக்கும்.. சிறிது நேரத்தில் இயங்கத் துவங்கி விடுமென்று நித்யா தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு ஓரமாக நின்றிருக்க.. திடீரென லிஃப்ட்டின் அங்கங்கே தீக்கங்குகள் தெறிக்க ஆரம்பித்தன. என்ன நடக்கிறதென்றே தெரியாமல் பயந்து.. இருட்டில் தடுக்கிக் கீழே விழுந்த நித்யாவிற்கு இதயம் தொண்டைக்குள் வந்து துடித்தது. இப்படி கௌதமனின் முகத்தைக் காணாமலேயே சாகப் போகிறோமே! தன் மனதில் முதன்முதலாக மலர்ந்திருக்கும் காதலைத் தன் ஆசைக் காதலனிடம் வெளிப்படுத்தாமலே லிஃப்ட்டுக்குள் மின்சாரம் தாக்கிச் சாகப் போகிறோமே! தெய்வமே..! அப்பாவிடம் அத்தை என்ன கூறுவாள்..?,அவளது மகனை வாழ வைக்க எண்ணி இவளது வாழ்வைப் பாழாக்கி விட்டேனே அண்ணா என்று கதறுவாளா..?, அத்தை.. உங்களது மகனது வாழ்வை ஓரளவு மாற்றி விட்டேன் என்கிற திருப்தியுடன் போகிறேன்! அப்பா.. அப்பா.. உங்களுக்கு நான் என்ன சொல்ல முடியும்..?,கடவுளே.. எதற்காக இப்படி என்னைச் சாகடிக்கிறாய்..?

DO NOT COPY

என்று மனதுக்குள் புலம்பிய நித்யா.. அடுத்தடுத்துத் தன் மேல் சிதறிய தீக்கங்குளால் பயந்து நடுங்கி கடைசியில் மூர்ச்சை அடைந்து விட்டாள்.

“அப்பா... அப்பா..”என்ற புலம்பலுடன் அவள் கிடக்க.. சிறிது நேரத்தில் லிஃப்ட் உயிர் பெற்று அடுத்தத் தளத்தை அடைந்தது.. அந்தத் தளத்தில் உள்ளோர் லிஃப்ட்டில் மயங்கிக் கிடந்த நித்யாவை அடையாளம் கண்டு சத்தமிடத் துவங்க சிறிது நேரத்தில் அந்தத் தளம் அல்லோல் கல்லோலப் பட்டது.. நம்பியின் மூலமாக விசயமறிந்த கௌதம் விரைந்து ஓடி வர.. லிஃப்ட்டினுள் கிடந்த நித்யாவைப் பார்த்து அவன் பதறிப் போனான். “நம்பி தண்ணீர் எடுத்து வாருங்கள்..”என்றவன் கூட்டத்தை ஒதுக்கி நித்யாவின் அருகே சென்று அவளைத் தூக்கிக் கொண்டு அறைக்கு விரைந்தான்.

நம்பி கொண்டு வந்தத் தண்ணீரை அவள் மீது தெளித்தவன் “நித்யா.. நித்யா.. கண் திற.. எழுந்திரு..”என்று உலுக்க.. மெல்ல மெல்லச் சுரணை வந்து கண் விழித்தவள்.. எதிரே நின்றிருந்த கௌதமைக் கண்டு சிரிப்பும்,கண்ணீருமாக “கௌதம்...”என்று அவனைக் கட்டிக் கொள்ள.. அவனும் அவளது கூந்தலை வருடி.. நடுங்கியவளை ஆசுவாசப் படுத்தி “கூல் நித்யா.. ஒன்றுமாகவில்லை.. யு ஆர் சேஃப் நௌ..”என்று சமாதானம் கூற.. ஒருவழியாக அவனை விட்டு விலகியவள்.. “அப்படியானால் நா.. நான் உயிரோடு இருக்கிறேனா..?,எவ்வளவு பயந்து போனேன் தெரியுமா..?”என்று அழுகையுடன் வினவ.. மெல்லிய சிரிப்புடன் அவள் கரங்களைப் பற்றிக் கொண்டவன்.. அவள் கண்களைத் துடைத்து.. “உனக்கு ஒன்றுமாகவில்லை.. நீ சௌக்கியமாக இருக்கிறாய்..”என்று கூற.. “நீங்கள் தான் என்னைக் காப்பாற்றினீர்களா..?”என்று வினவியவளிடம் “காப்பாற்றுமளவிற்கு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை நித்யா... லிஃப்ட் சிறிது நேரம் நின்று போனதற்கு நீ இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்து விட்டாய்..”என்று அவன் அதே சிரிப்புடன் கூறினான்.

“சிறிது நேரம் நின்று போன வேளையில் என்னென்ன நடந்தது தெரியுமா..?, திடீரென எங்கிருந்தோ தீக்கங்குகள் சிதற ஆரம்பித்து விட்டன.அதைக் கண்டு தான் நான் பயந்து போய் மயக்கமடைந்தேன்..”என்று தன் கரங்களைப் பற்றியிருந்த அவன் கையைக் கண்டபடி கூறினாள். “ஓஹோ.. நித்யா.. நீ எவ்வளவு தைரியசாலி.. போராட்டக்காரி என்று நான் நினைத்திருந்தேன்.. நீ என்னவென்றால் இப்படி ஒரு சிறு சம்பவத்திற்குப் போய் பயப்பட்டு விட்டாயே..”என்று அவன் கேலி செய்ய.. “ம்,ம், கேலி செய்ய நன்றாகத் தான் இருக்கும்.. அனுபவித்துப் பார்த்தால் தெரிந்திருக்கும்..”என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள.. சத்தமாகச் சிரித்தான் அவன்.

“என்னை யார் இங்கே அழைத்து வந்தது..?,நானாக நடந்து வந்தேனா..?”என்று கேட்டவளிடம் “நீ தான் மூர்ச்சையாகி விழுந்து விட்டாயே.. நான் தான் தூக்கி வந்தேன்..”என்று அவன் கூற.. ச்ச,அந்தக் காட்சியை விழித்திருந்து பார்க்காமல்

DO NOT COPY

போனோமே.. என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டவள்.. மெல்ல விழி உயர்த்தி “தேங்க்ஸ்..”என்று கூற.. “இதை விடப் பேராபத்தில் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்தாயே.. நல்ல காலம்.. லிஃப்ட் தானாக இயங்கியது..” என்றான்.

அதன் பின் சிறிது நேர மௌனத்தின் பின்னர் அவன் நிமிர்ந்து அவள் முகத்தைக் காண.. அந்த நேரத்தில் அவளும் அவனைத் தான் நோக்கிக் கொண்டிருந்தாள். எப்போதும் உர்ரென்ற முகத்துடன் அவளுடன் சண்டையிடுவான். அல்லது அவளது செயல்களில் தன்னை மறந்து அடக்கமாட்டாமல் சிரிப்பான். ஆனால் இப்போது நடந்து கொண்டிருப்பதைக் காண்கையில் அவளுக்கு ஆச்சரியம் உண்டானது. மெல்லிய சிரிப்புடன் அதிர்ந்து கூடப் பேசமால் அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு மென்மையாக நடந்து கொள்கிறானே..! எப்படி..?, “அறிவில்லை.. லிஃப்ட் நின்று போனதற்கு பயப்படுவாயா..?,நீ என்ன சிறு குழந்தையா.?”என்று லெஃப்ட் அண்ட் ரைட் வாங்கியிருந்தால் இது கௌதம் தான் என்று நம்பியிருப்பாள் அவள்.. ஆனால் அவன் அதற்கு எதிர்மாறாக நடந்து கொண்டது அவளுக்குள் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அவளது அணைப்பைக் கூட அவன் நிராகரிக்கவில்லை என்பதை நினைக்கையில் உள்ளம் துள்ளியது.

அவனது சிரிப்பும்,அக்கறையான பேச்சும்,மென்மையான செய்கையும்.. கௌதம் இப்படியே காலம் முழுதும் நீ இருந்து விடேன்.. என்று மனதுக்குள் அவனிடம் வேண்டிக் கொண்டிருந்தவளிடம்.. “சரி,நீ சிறிது நேரம் இங்கேயே ஓய்வெடுத்துக் கொள்.. நான் சென்று வேலையை கவனிக்கிறேன்.. சரியா..?, சமாளித்துக் கொள்வாய் தானே..?”என்று அவன் அவளது காதோரக் கூந்தலை ஒதுக்கியபடி வினவ.. மேலும் பூரித்துப் போனாள். பதில் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டியவளிடம் சரி எனக் கூறி விட்டு அவன் எழுந்தான்.


திடீரென எங்கிருந்து அப்படியொரு வேகம் வந்ததோ.. எழுந்து நடக்க முற்பட்டவனை “கௌதம்...”என்று அவன் கையைப் பற்றி நிறுத்தியவள்.. அவன் தன் புறம் திரும்பி என்ன என்று வினவியதும்.. அவனைத் தன்னருகே வருமாறு செய்கையால் தெரிவித்தாள். என்ன என்றபடியே அவளை நோக்கிக் குனிந்து அருகே சென்றவனை இரண்டு நொடி இமைக்காமல் நோக்கியவள்.. அவன் தோள் பற்றித் தன்னருகே இழுத்து அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள். திகைத்து விழி விரித்தவனிடம் “ஐ லவ் யூ கௌதம்...” என்று மெல்லிய குரலில் கூறினாள்.

விழிகள் தெறித்து விழுந்திடும் படி இமைக்காமல் அவளை வெறித்து நோக்கிய கௌதமிற்கு உடலோடு சேர்ந்து உள்ளமும் கொதித்தது. என்ன நடந்தது என்பதை உணரத் தோன்றாமல்.. உணர முடியாமல் திகைத்துப் போனவன் சிலையென நின்று விட.. அவனை சிரிப்புடன் நோக்கியபடி அமர்ந்திருந்தாள்


DO NOT COPY

நித்யா. அவள் சிரிப்பதைக் கண்டவனுக்கு ஆத்திரமும்,கோபமும் பெருக.. என்ன செய்கிறோம் என்பதையே மறந்து பளாரென அவள் கன்னத்தில் அறைந்தான்.

கௌதம் தன்னை அடிப்பான் என்று சிறிதும் கற்பனை செய்திராத நித்யா.. அவனது திடீர் தாக்குதலால் நிலை குலைந்து அமர்ந்திருந்த மெத்தையில் போய் விழுந்தாள். ரௌத்ரமான பார்வையுடன் அவளை வெறித்தபடி நின்றிருந்தவனைக் காண்கையில் ஒரு புறம் பயமாக இருந்தாலும்.. துணிவைத் திரட்டி.. இவன் என்ன சிவபெருமானின் மறு அவதாரமா.. பார்வையால் எரித்து விடுவானா..?, அதையும் தான் பார்த்து விடுவோமே.. ஆங்காரத்துடன் மெத்தையிலிருந்து எழுந்து மூச்சு வாங்க அவனருகே சென்று நின்றவள்.. "அடிக்கிறீர்களா..?, இதற்கு.. இதற்கும் சேர்த்து அடித்துக் கொள்ளுங்கள்"என்றவள்.. மீண்டும் அவனைப் பற்றி முகமெங்கும் முத்தமிட.. செய்கையற்று சில நொடிகள் நின்று விட்டவன்.. பின் அவளை விலக்கித் தள்ளி விட்டு விறுவிறுவென அறையை விட்டு வெளியேறினான்.



# அத்தியாயம் – 10




**பரவசநிலை என்றால் இது தானோ..?**
**உன் புல்லாங்குழல் ஓசை..**
**என் காதுகளைத் தீண்டிய அந்த நொடி..**
**உன் கார்மேனியைக் கண்டு..**
**என் கண்கள் மோட்சம் பெற்ற அந்த நொடி..**
**உன் வலிய கரங்கள் என் கைகள் பற்றியதும்..**
**நான் நாணமுற்ற அந்த நொடி..**

கௌதம் அந்த அறையை விட்டு வெளியேறி விட்ட பின் அடங்காத கோபத்துடனும்,ஆத்திரத்துடனும் மூச்சு வாங்க அமர்ந்த நித்யாவிற்கு தன் செயலை எண்ணி வியப்பாக இருந்தது. எங்கே இருந்து வந்தது அப்படி ஒரு தைரியம்..?, அவனது அக்கறையான செய்கையிலும் பேச்சிலும் தன்னை மறந்து தன் மனதில் இருந்த காதலை வெளிப்படுத்தி விட்டாள்.. ஆனால் தன் மனதிலிருக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தி விட்ட நொடி அவன் ஓடி வந்து அணைத்துக் கொள்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை தான்.. ஆனால் இப்படி அடித்து அவமானப் படுத்துவான் என்றும் அவள் நினைக்கவில்லை. ஒரே மகளாகத் தன் வீட்டில் பிறந்ததிலிருந்து செல்லமாய் வளர்க்கப்பட்டவள்.. அவளது அன்னையும் சரி தந்தையும் சரி வாய்ப் பேச்சாக அவளைக் கண்டிப்பார்களே தவிர யாரும் கை நீட்டி அடித்ததில்லை..

அப்படியிருக்க அவன் இன்று அறைந்ததும் கோபப் பட்டு அவள் நடந்து கொண்டதில் தவறொன்றும் இருப்பதாய் அவளுக்குத் தெரியவில்லை. நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று ஒரு பெண் கூறினால்.. ஆமாம்,இல்லையென்று ஏதேனும் பதில் கூறியிருக்க வேண்டும். அதை விடுத்து அறைந்து தள்ளுகிறான் ராஸ்கல்! என்று சிறிது நேரம் பொறுமித் தள்ளியபடி அமர்ந்திருந்தவளுக்கு நேரம் செல்லச் செல்ல தன் மீது தான் தவறோ என்று தோன்ற ஆரம்பித்தது.

திருமணமான மறுநாளே மனைவி வேறு ஒருவனுடன் சென்று விட்ட அன்றிலிருந்து பெண்கள் என்றாலே கண்களை மூடிக் கொள்ளுமளவிற்கு வெறுப்பையும்,ஒவ்வாமையையும் சேர்த்து வைத்திருந்தவன் ஏதோ நித்யா

DO NOT COPY

வந்த பின்பு தான் ஓரளவு அவனது கூட்டிலிருந்து வெளியே வந்து சிறிதேனும் பெண்களை மதிக்கத் துவங்கியிருக்கிறான். சகஜமாக பழகத் துவங்கியிருக்கிறான். குடிப் பழக்கத்தையும் விட்டுத் தொலைத்திருக்கிறான். அவன் சிறிது சிறிதாக தன்னை மாற்றிக் கொண்டு வரும் இந்த நேரத்தில் போய் தனது நேசத்தை வெளிப்படுத்தி முட்டாள்தனம் செய்து விட்டாளே..!

ஒவ்வொரு விசயத்திலும் அவனது எதிர்ப்பைப் பொருட்படுத்தாது போராடி அவனுடன் சண்டையிட்டு ஜெயித்திருக்கிறாள் தான்.. ஆனால் இந்த விசயத்தில் அப்படி நடந்து கொள்ள முடியாதே..! காதல்,கல்யாணம் என்பதெல்லாம் தானாக மனதில் தோன்ற வேண்டிய உணர்வு. வற்புறுத்தி கட்டாயத்தால் எப்படி அவன் மனதை மாற்ற முடியும்..?, இனி எப்படி அவன் அவளிடம் நெருங்கிப் பழகுவான்..?, இத்தனை நாட்களாக சிறிது சிறிதாக அவனிடம் முன்னேறியது அனைத்தும் வீணாகி விட்டதே! முட்டாள் நித்யா!

ஆனால்..... ஒரு விசயத்தைப் பற்றி யோசிக்கவில்லையே! அவனுக்குக் காதல் என்றால் பாகற்காயாகவும்.. கல்யாணம் என்றால் வேப்பங்காயாகவும் கசக்கிறது என்பதற்காக நித்யா அவளது நேசத்தை வெளிப்படுத்தாமல் இருக்க முடியுமா..?, என்றேனும் ஒரு நாள் வெளிக் கொணர வேண்டிய விசயம் இன்று வெளிப்பட்டு விட்டது.. அவ்வளவு தானே..?,

நித்யா இந்தியா வந்ததன் நோக்கம் என்ன..?, எவளோ ஒருத்தி.. சரி,அவன் தாலி கட்டிய பெண் தான்.. காதலித்தவனுடன் தான் வாழ முடியும்.. மஞ்சள் கயிறை மட்டும் கட்டி விட்டால் நீ என் கணவனாகி விட முடியாது என்றெண்ணி அவனை விடுத்து காதலனுடனே ஓடி விட்டாள்.. நீ எதற்காக அப்பா அந்த அவமானத்தை எண்ணி எண்ணி தினம் தினம் துக்கப்பட்டு உன்னைச் சுற்றி இருப்பவர்களையும் துன்பத்தில் ஆழ்த்துகிறாய்..?, சீக்கிரமே ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்து கொண்டு வாழும் வழியைப் பார் என்று வலியுறுத்திச் சம்மதிக்க வைப்பது தான் அவளது இந்தப் பயணத்தின் நோக்கம்.. சரி தானே..?,

அந்த ஒரு நல்ல்ல்ல பெண் அவளாக இருக்கக் கூடாதா..? நித்யாவிற்கு என்ன குறை..?,வாய் கொஞ்சம் ஜாஸ்தி தான்.. ஒரு நாளைக்கு ஒன்பது முறையேனும் அறிவிருக்கிறதா உனக்கு என்று கௌதமனிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளும் மிகச் சிறந்த பெண் தான்.. ஆனால்.. ஆனால் வாழ்நாள் முழுமைக்கும் அவனுக்கு மட்டுமே மனைவியாக.. அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டு.. அவனது சிரிப்பை ரசித்துக் கொண்டு.. அவனது கோபத்தைக் கிரகித்துக் கொண்டு.. அவனது அன்பை அனுபவித்துக் கொண்டு கழித்து விடுவாளே..! இது ஏன் அவனுக்குப் புரியவில்லை..?

DO NOT COPY

அவனுக்குப் புரிகிறதோ இல்லையோ.. நித்யா தீர்மானித்து விட்டாள்..! இந்த ஜென்மத்தில் அவளது வாழ்வு கௌதமோடு தான்.. அதில் எவ்வித மாற்றமும் இல்லை.. என்ன கொஞ்சம் இல்லை.. அதிகமாகவே அவனுடன் போராட வேண்டியிருக்கும்.. அதனால் என்ன..?, வீட்டு வேலைக்குக் கூட பெண்களைச் சேர்த்துக் கொள்ள மாட்டேன் என்கிற பிடிவாதத்துடன் இத்தனை வருடங்களைக் கடத்தியவனை.. அவள் மாற்றவில்லையா..?, அவனது கோப குணத்தை மாற்றவில்லையா..?,அவனை கேலியும்,சிரிப்பும் நிறைந்தவனாக மாற்றவில்லையா..? இதிலும் நிச்சயம் ஜெயிப்பாள்..

இந்த பூஜாடிக் கொண்டானைச் சமாளிப்பது பெரிய வித்தையா என்ன..?, அடித்தாலும் சரி,உதைத்தாலும் சரி, அவளது காதலை அவள் விட்டுக் கொடுப்பதாக இல்லை.. வெகு நேரமாக அமர்ந்தபடி யோசனையில் ஆழ்ந்து விட்டவள் இவ்வாறு முடிவு செய்து விட்டபின் எழுந்துத் தன் இருக்கைக்கு வந்து வேலையைத் தொடர்ந்தாள்.

சிறிது நேரத்திலேயே அறைக் கதவு திறக்கும் ஒலி கேட்டு வந்து விட்டான் சண்டாளன் என்றெண்ணி நிமிர்ந்தவள் “நித்யாம்மா.. லிஃப்ட்டில் மயங்கிக் கிடந்தாயாமே.. என்னவாயிற்று..?”என்று வினவியபடியே அழகர்சாமி உள்ளே நுழைந்தார். கௌதமை எதிர்பார்த்து ஆர்வத்துடன் நிமிர்ந்த நித்யாவிற்கு அழகர்சாமி நுழைந்தது சற்று ஏமாற்றத்தை அளித்தது, ஆனாலும் சமாளித்துக் கொண்டு “ஆ..ஆமாம் அங்கிள்..”என்று ஆரம்பித்து நடந்ததைக் கூறினாள்.

“லிஃப்ட் பாதியில் நின்று போனதற்காகவா மயங்கி விழுந்தாய்..?,நம்பவே முடியவில்லையே..?,நித்யா நீ எவ்வளவு தைரியமான பெண் என்றூ நான் நினைத்திருந்தேன்..”என்று அவர் கேலி செய்ய அதில் எரிச்சலுற்றவள்... “எனக்கும் பயம் என்கிற உணர்வு இருக்கிறது அங்கிள்.. உங்கள் எம்.டியை நான்கு வார்த்தை எதிர்த்துப் பேசி விட்டதால் நான் ஒன்றும் வீர மங்கை இல்லை.. நானும் எல்லா சராசரி உணர்வுகளையும் கொண்ட சாதாரணமானப் பெண் தான்..”என்று கூற.. அவளை யோசனையாக நோக்கினார் அழகர்சாமி,

“என்னம்மா..?,என்னவாயிற்று..?,நான் உள்ளே நுழையும் போதே உன் முகத்தில் வெளிச்சம் குறைந்து விட்டதே.. கௌதமை வேறு காணவில்லை.. உங்களிருவருக்கும் ஏதேனும் பிரச்சனையா..?”என்று வினவினார். பெருமூச்சை வெளியிட்டுத் தலை குனிந்தவள் “அப்படியெல்லாம் ஒன்றுமில்லை அங்கிள்.. அவர் எங்கே சென்றிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது..”என்று முடித்து விட.. “சரி தான்.. உன் மௌனத்தின் காரணம் உன் ஹீரோ தான் என்று தெரிகிறது..”என்றவர் சிரித்தபடி வெளியேறி விட தலையில் கை வைத்த படி அமர்ந்து விட்டாள் நித்யா.

DO NOT COPY

அன்று முழுவதும் அலுவலகம் இருக்கும் பக்கம் கூட எட்டிப் பார்க்காதவன் அடுத்த இரண்டு நாட்களும் இதையே தொடர கொஞ்சம் பயம் வந்து விட்டது நித்யாவிற்கு. கம்பெனியின் எம்.டி! அவன் இல்லாமல் எப்படி வேலை நடக்கும்..? இப்படிப் பொறுப்பில்லாமல் இருக்கிறானே.. என்று திட்டித் தீர்த்தவள் அழகர்சாமியிடம் சென்று காரணத்தைக் கேட்க.. உடல் நிலை சரியில்லை,அதனால் அலுவலகம் வர முடியவில்லை என்று அவன் கூறியதாகத் தெரிவித்தார். இதை நம்புவதற்கு அவள் என்ன முட்டாளா..?

உன்னை விரும்புகிறேன் என்று அவள் கூறிய ஒரு காரணத்திற்காக அலுவலகத்திற்குக் கூட வராமல் இருக்கிறானே..! இப்படியே எத்தனை நாட்களைக் கடத்துவான்..?,உடனே அவனிடம் சென்று அவன் சட்டையைப் பற்றிக் கேள்வி கேட்க வேண்டும் போல் ஒரு வேகம் எழுந்தது அவளுக்கு. எண்ணியதை மறுநாளே செயல்படுத்தவும் செய்தாள் நித்யா.

இரண்டு நாட்களாக வசந்தியின் மூலமாக கௌதமனின் மனநிலையை அறிய முயன்று கொண்டிருந்தாள். அவர் அளித்த பதிலோ அவளை இன்னமும் பயத்திற்குள்ளாக்கியது. “அறைக்குள் அடைந்து கிடக்கிறான் நிதும்மா.. சாப்பிடுவதற்குக் கூட கீழே வரவில்லை.. என்னவென்று விசாரிக்கலாம் என்றெண்ணி அவன் முகத்தைப் பார்த்தால் பேசுவதற்குக் கூட பயமாக இருக்கிறது எனக்கு.. என்ன நடந்தது நித்யா..?,பழையபடி அவனது முகம் கடுமையாக மாறி விட்டதே..?”என்று அவர் கவலையுடன் அவளிடம் விசாரிக்க.. “ஒ..ஒன்றுமில்லை அத்தை..”என்று சமாளிப்பதற்குள் பெரும்பாடு பட்டுப் போனாள்.

இதற்கு எப்படியும் முடிவு கட்டியாக வேண்டும்.. என்று கறுவிக் கொண்டவள் அன்று காலையிலேயே அவனது இல்லத்திற்கு வருகை தந்திருந்தாள். “வாம்மா..”என்று வரவேற்ற வசந்தியிடம் “கௌதம் எங்கே அத்தை..?,ஜாகிங் சென்றிருக்கிறானா..?”என்று விசாரித்தாள். “நான் தான் கூறினேனே நிதும்மா.. அவன் இரண்டு நாட்களாக அறையை விட்டு வெளியே வரவேயில்லை..”என்று கூற “ஓ!,அப்படியானால் இப்போதும் அறையில் தான் இருக்கிறானா..?”என்று வினவியவள் அவர் ஆம் என்றதும் “நான் சென்று அவனிடம் பேசுகிறேன் அத்தை..”எனக் கூறி விட்டு அவனது அறைக்குச் சென்றாள்.

வளைவாகச் சென்ற மாடிப்படிகளில் விறுவிறுவென ஏறிச் சென்றவள்.. வலது புறம் திரும்பியதும் இருந்த முதல் அறையின் அருகே சென்று நின்றாள். அடுத்தடுத்து பெரிய பெரிய மூச்சுகளை வெளியிட்டுத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவள் அவனது அறைக்கதவை லேசாகத் தட்டினாள். பதில் வராமல் போனதும் லேசாக அறைக் கதவைத் தள்ளினாள். பூட்டப்படாதக் கதவு நொடியில் திறந்து கொள்ள.. தயக்கத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தவளுக்கு.. தீவிரமான முகத்துடன் தொலைக்காட்சிப் பெட்டியின் மீது

DO NOT COPY

பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த கௌதமைக் கண்டதும் அவ்வளவு நேரமாக மனதைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தத் தயக்கம்,பயம்,கோபம் அனைத்தும் பறந்து போனது. சிரிப்புடன் கைகளைக் கட்டிக் கொண்டு அவனையே பார்த்தபடி அறை வாசலில் நின்றிருந்தாள்.

அவள் எண்ணியபடி சிறிது நேரத்தில் அவள் புறம் பார்வையைத் திருப்பியவன் இரண்டு நொடிகள் இமைக்காமல் நோக்கி விட்டு மீண்டும் தொலைக்காட்சிப் பெட்டியிலேயே பார்வையைப் பதித்தான். அவன் தன் புறம் அழுத்தமானப் பார்வையைச் செலுத்தியதும் என்ன சொல்லப் போகிறானோ என்று படபடவென அடித்துக் கொள்ளும் இதயத்துடன் காத்திருந்த நித்யாவிற்கு அவன் மீண்டும் திரும்பிக் கொண்டதும் திகைப்பாகிப் போனது..

என்ன..?,என்ன நடந்தது இப்போது..?அவன் தன்னைக் கண்டானா..?, அல்லது அது கற்பனையா..?,என்றெண்ணியவள்.. மெல்ல நடந்து அவனருகே சென்றாள். அரவம் உணர்ந்து இம்முறை நன்றாகத் தலை நிமிர்ந்த கௌதம் புருவம் சுருக்கி அவளை நோக்கியபடி எழுந்தான். அவனது முக மாறுதல்களைக் கண்டபடியே அருகே வந்த நித்யா.. இயல்பாக அவனது கட்டிலில் அமர்ந்து.. தொலைக்காட்சியைக் கண்டு “ஹாரி பாட்டர் சீரீஸ் பார்க்கிறீர்களா..?,ஹா ஹா.. எனக்கும் கூட மிகவும் இஷ்டம்.. அதீதமான கற்பனையல்லவா..?ம் எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காது.. ஏன் நின்று கொண்டே இருக்கிறீர்கள்..?,உட்காருங்கள்..”என்று கூற.. கோபமாக அவளை நோக்கியவன் “கட்டிலை விட்டு எழுந்திருக்கிறாயா இல்லையா..?”என்று வினவினான்.

நித்யா தன்னை விரும்புவதாகக் கூறி முத்தமிட்ட அன்றிலிருந்து அவளைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருந்தவனுக்கு.. அறைக்குள் அடைந்து கிடந்த அந்த இரண்டு நாட்களும் எங்கு திரும்பினாலும் அவளது சிரிப்பொலியும், குறும்பு நிறைந்த கண்களுமே வந்து போனது. எதையும் பார்க்க விரும்பாமல் கண்களை இறுக மூடினால் கூட மனக் கண்ணில் அவளது நிலா முகமே தோன்றியது.

இது என்ன தொல்லை..?,எங்கிருந்து வந்தாள் இவள்..?,அறிமுகமான நாளிலிருந்து இன்று வரை தனக்குள் எத்தனை மாற்றங்களைப் புரிந்திருக்கிறாள்..?,சிரிப்பைத் தொலைத்து சந்தோசத்தை மறந்து.. குடியில் நிம்மதியைத் தேடி.. கிட்டத்தட்ட மரம் போல் உணர்ச்சியற்று ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவனை.. அவளது புன்னகை ததும்பும் விழிகளும், குறும்பு நிறைந்த பேச்சும்,எதிர்த்துப் பேசி வாதாடும் திறமையும்,சுயநலம் பாராமல் அனைவரிடமும் சரிசமமாகப் பழகும் விதமும்,கேலியும்,சிரிப்பும், சிறுபிள்ளைத் தனமான கோபமும்,தைரியமும் அவனைக் கொஞ்சம் அசைத்து விட்டது உண்மை தான்..

DO NOT COPY

ஒவ்வொரு முறையும் அவனுடன் போராடி.. இது தவறு எனச் சுட்டிக் காட்டி.. அதை அவன் மாற்றிக் கொள்ளும் வரை தளராமல் அவனுடம் சண்டையிட்டவள்..! எந்த உரிமையுடன் நடந்து கொண்டாள்..? முதலாளி என்கிற எல்லையைத் தாண்டி இயல்பாக அவனை நெருங்கினாளே..?,எப்படி..? அவனது மனமும் அவளை வெகு இயல்பாக ஏற்றுக் கொண்டதே..?,ஏன்..?, இரண்டு வருடங்களாகப் பெண் வாடையைக் கூட சுவாசிக்க விரும்பாதவன்.. அவளருகில் இல்லாத நேரங்களை அவஸ்தையாக உணர்ந்திருக்கிறான்.. எதையேனும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டு.. அவளாகச் சிரித்துக் கொண்டு.. அவன் கோபப்படும் வேளையில் சிலிர்த்துக் கொண்டு.. அவனது வாழ்வில் அவனறியாமலே ஒன்றிப் போனாள்..

மறந்து போயிருந்த.. ஏன்.. மரத்துப் போய் விட்டதாய் அவன் எண்ணி வைத்திருந்தப் பல உணர்வுகளை அவள் இயல்பாக வெளிக் கொணர்ந்தாள்.. அவள் தொடுகையை,ஸ்பரிசத்தை,வாசனையை தனக்குள்ளே ரசித்து அவன் அனுபவிக்கத் தொடங்கிய இந்த நேரத்தில்.. தனக்கு மிக நெருக்கமானவளாக.. அவனது நலம் விரும்பியாக.. அவள் மாறி விட்ட.. இந்த நேரத்தில்.. தன்னைக் காதலிப்பதாக அவள் கூறியதும்.. மயக்கத்திலிருந்து வெளி வந்தவன் போல்.. தனது மனதிலிருந்த முட்டாள் தனமான எண்ணங்களை உணரத் துவங்கினான் கௌதம் பிரபாகரன்.

கல்யாணம் என்கிற பெயரில் வாழ்வில் ஒரு முறை பட்டத் துன்பம் போதாதா..?, முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்ட தனது அந்தரங்க ஆசைகளை மீண்டும் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதா...?.இது விஷப் பரீட்சை.. இன்னொரு முறை ஒரு நரகத்தை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது! யாரோ ஒரு சிறுபெண்.. அவனது வாழ்க்கையில் தென்றலாக நுழைந்து பல்வேறு மாற்றத்தைப் புகுத்தி விட்டாள்.. அதற்காக.. அதற்காக அவளைக் காதலிப்பதா..?,காதல்! இப்படியொரு உணர்வு அவனுக்குள் இருக்கிறதா என்ன..?, நித்யா மீது அவனுக்குக் காதல் வருமா..?,நிச்சயம் முடியாது... இது நடக்காத ஒன்று.. சூடு கண்ட பூனையின் ஒதுக்கம்.. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்ச அவன் தயாராக இல்லை.. அவள் வேலா..?இல்லை மருந்தா..?, தெரியாது,, தெரிந்து கொள்ளவும் அவன் விரும்பவில்லை.. நித்யாவை ஒதுக்கியாக வேண்டும்.. எப்படியேனும்..

இது தான் இரண்டு நாட்களாக அறைக்குள்ளேயே அடைந்து கிடந்து அவன் வெகுவாக யோசித்து எடுத்த முடிவு.. அதை எப்படி செயல்படுத்துவது என்று சிந்தித்தபடி பார்வையைச் செலுத்தியவன் கண்களில் வாசலில் நின்றிருந்த நித்யா பட்ட போது.. இரண்டு நாட்களாக அவனை மீறித் தோன்றி இம்சித்துக் கொண்டிருக்கும் அவளது கற்பனை உருவமாயிருக்கும் என்றெண்ணிக் கொண்டு தான் அவன் பார்வையைத் திருப்பியது.. ஆனால் அந்த கற்பனை

DO NOT COPY

உருவம் தன்னருகே நடந்து வந்த போது தான்.. நிஜமாகவே அவள் வந்து விட்டாள் என்று உணர்ந்து அவன் வேகமாக கட்டிலை விட்டு எழுந்தது..

கௌதம் கோபமாகத் தன்னை எழச் சொன்னதும் சற்றே பயந்த நித்யா.. பின் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "ஏன்..?,எதற்காக எழ வேண்டும்..?,நியாயமாகப் பார்த்தால் வீட்டிற்கு வந்த விருந்தாளியை மரியாதையாக அழைத்து அமரச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு.. உங்களிடம் மரியாதையெல்லாம் எதிர்பார்க்க முடியது என்கிற காரணத்தினால் தான் நானே அமர்ந்தேன்.."என்று எப்போதும் போல் அவனது ஒரு கேள்விக்கு ஒன்பது பதில் அளித்தாள் நித்யா.

எரிச்சலுடன் பெருமூச்சை வெளியிட்டவன் "இப்போது எதற்காக இங்கே வந்திருக்கிறாய்...?"என்று வினவ.. "என்ன சார் இப்படிக் கேட்கிறீர்கள்..?,என் முதலாளி நீங்கள்.. உங்களுக்கு உடல் நிலை சரியில்லையென்றால் வந்து பார்த்துச் செல்ல வேண்டியது என் கடமையல்லவோ..?.அதிலும் இரண்டு நாட்களாக நீங்கள் அலுவலகம் வேறு வரவில்லை.. அதனால் தான்.."என்று கூற.. ஒன்றுமே நடவாதது போல் எவ்வளவு இயல்பாகப் பேசுகிறாள்..?,எமகாதகி! ஒரே வார்த்தையில் என் தூக்கத்தைக் கெடுத்து.. என்னை அலைப்புறச் செய்து விட்டு.. இப்போது பேச்சைப் பார்... என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டவன்.. பின் தொண்டையைச் செறுமிக் கொண்டு.. "பார்த்து விட்டாயல்லவா..?,நான் ஷேமமாக இருக்கிறேன்.. வந்த வேலை முடிந்து விட்டது.. நடையைக் கட்டு.."என்று விரட்டினான்.

"வந்த வேலை இன்னும் முடியவில்லை சார்.. உங்கள் உடல்நிலையை நான் பரிசோதிக்க வேண்டாமா..?,"என்றபடி அருகே வந்து நின்றாள். தனக்கு வெகு அருகே.. ஆசையும்,காதலும் நிறைந்த பார்வையுடன் நின்றிருந்தவளைக் கண்டு அவனது மனம் சொக்கித் தான் போனது... இமைக்க மறந்துத் தன்னை நோக்குபவனைக் கண்டவள்... தைரியத்தை வரவழைத்துக் கொண்டு.. கையை உயர்த்தி.. அவன் கன்னத்தில் பதித்தாள். அவளை மீறிக் குரல் குழையத் துவங்க.. "இரண்டு நாட்களாகத் தாடியைக் கூட ஷேவ் செய்யவில்லையா..?" என்று வினவ.. பதிலளிக்காமல் நின்று விட்டவனின் கண்ணில் தோன்றிய ஏக்கம் அவளை வாயடைக்கச் செய்தது.

அவன் கன்னத்தை மேலும் வருடி.. அவள் மெல்லிய குரலில் "கௌதம்.."என்றழைக்க சட்டென அவளை விட்டு விலகியவன்.. மறுபுறம் திரும்பி "நீ இப்போது வெளியே போகப் போகிறாயா, இல்லையா நித்யா..?" என்று கடினக் குரலில் வினவ.. வேகமாக அவன் கையைப் பற்றித் தன் புறம் திருப்பியவள்.. "நான் வந்ததிலிருந்து நீங்கள் கூறும் ஒரே வார்த்தை இது ஒன்று தான்.. அப்படி நான் என்ன தவறு செய்து விட்டேனென்று அலுவலகத்திற்குக் கூட வராமல் என்னைத் தவிர்க்கிறீர்கள்..?,உங்களைக்

DO NOT COPY

காதலிப்பதாக நான் கூறியது தவறா..?,”என்று வேகத்துடன் வினவ.. “என்னைப் பற்றி என்ன தெரியும் என்று காதலிப்பதாகக் கூறுகிறாய் முட்டாள்..?,”என்று அவனும் சீறத் துவங்க.. அவனை நேராக நிமிர்ந்து நோக்கியவள்.. “உங்களைப் பற்றி.. நீங்கள் அறிந்து வைத்திருப்பதை விட.. ஒரு படி அதிகமாகவே நான் அறிந்து வைத்திருக்கிறேன்.. தேவையில்லாதக் குப்பைகளை மனதில் அடைத்துக் கொண்டு அவஸ்தைப் பட்டுக் கொண்டுத் திரிவது நீங்கள் தான்.. உங்களைக் காயப்படுத்திக் கொண்டு சுற்றி இருப்பவர்களையும் துன்பப் படுத்துகிறீர்கள்..”என்று கோபமாகக் கூறினாள்.

“தேவையில்லாத குப்பையா...?,ஓ! அப்படியானால் எல்லாம் தெரிந்து தான் காதலிப்பதாகக் கூறினாயா..?,கட்டிய மனைவி கல்யாணமான மறுநாளே எவனோ ஒருவனுடன் ஓடிச் சென்று விட்டாளே என்று என் மேல் தோன்றிய இரக்கமா..?,இரக்கத்தில் வந்த காதலா..?,அனுதாபத்தில் தோன்றிய நேசமா..?”என்று அவன் நக்கலாக வினவ.. “இரக்கமா..?,அடேங்கப்பா! ஏன் சார் கையில் இரண்டு வயதுக் குழந்தையுடன் மனைவித் தன்னை விட்டுச் சென்று விட்டாளென்று சோகத்துடன் அமர்ந்திருக்கும் கணவனா நீங்கள்..?,வாழ்க்கையை வாழவே ஆரம்பிக்கவில்லை.. பேச்சைப் பார்...” என்று அவள் பொறிந்ததும்.. “ஆமாம்.. ஆரம்பித்த நாளே என் வாழ்வு முடிந்தும் போய் விட்டது.. அதைப் பற்றிப் பேச இனி எதுவுமில்லை.. அதனால் நீ முட்டாள்தனமாக உளறிக் கொண்டு திரிவதை இன்றோடு நிறுத்தி விடு”என்று கண்கள் சிவக்கக் கோபத்துடன் கூறி முடித்தவனை அழுத்தமாக நோக்கினாள்.

“முட்டாள்தனமாகப் பேசுவதும்,நடந்து கொள்வதும் யார் என்பதைக் கூடிய சீக்கிரத்தில் நீங்களே புரிந்து கொள்வீர்கள்... என் சொந்த விசயங்களைப் பற்றிப் பேசி உங்கள் நேரத்தை வீணாக்க நான் வரவில்லை சார்... உங்கள் உடல்நிலையைப் பற்றி அறிந்து கொள்ளத் தான் வந்தேன்.. நீங்கள் என்னைத் திட்டித் தீர்க்குமளவிற்கு மிக மிக நலமாக இருப்பதைத் தான் கண்டு விட்டேனே.. இனி என்ன..?,செல்கிறேன்..”என்றவள் அவனைத் திரும்பிப் பாராமல் வெளியேறினாள். அவள் சென்ற பின் சிறிது நேரம் எதைப் பற்றியும் யோசிக்கத் தோன்றாமல் அமர்ந்து விட்டவன் பின் எழுந்து குளியலறைக்குச் சென்றான்.

கௌதமிடம் கோபமாகப் பேசி விட்டுக் கீழே வந்த நித்யா வசந்தியின் கலங்கிய முகத்தைக் கண்டு தன் முகத்தைச் சிரிப்புடன் மாற்றிக் கொண்டு அவரருகே சென்றாள். “என்ன அத்தை.. ஏன் எதற்கெடுத்தாலும் கலங்குகிறீர்கள்..?,கௌதம் என்ன சின்ன பையனா..?,அவனுக்கு நிஜமாகவே இரண்டு நாட்களாக உடல்நிலை சரியில்லையாம்.. அதனால் தான் அலுவலகம் செல்லாமல் வீட்டிற்குள்ளேயே இருந்திருக்கிறான்.. இனி சரியாகி விடுவான் கவலைப் படாதீர்கள்..”என்றவள் குட்டிப் பெண் ஸ்ரீமதியைக் கண்டு “பாப்பா.. நீ

DO NOT COPY

கூட இருக்கிறாயா.., உன்னை நான் பார்க்கவேயில்லையே..”என்று தூக்கிக் கொஞ்சியவள் அருகேயிருந்த பூக்கூடையைக் கண்டு “இது என்ன இவ்வளவு பூ..?”என்று விசாரித்தாள். “சாமிக்குப் போடப் பறித்து வைத்திருக்கிறேன் நிதும்மா..”என்ற வசந்தியிடம் “அத்தை நானும் உங்களுடன் சேர்ந்து பூக் கோர்க்கிறேன்..”என்றவள்.. அவருடனே அமர்ந்து விட்டாள்.

சிறிது நேரத்தில் முகச்சவரம் செய்து குளித்துத் தயாராகிக் கீழே வந்தான் கௌதம். அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. மீண்டும் பூவில் கவனம் செலுத்த.. இந்த ராட்சசி இன்னும் செல்லவில்லையா.. இது தெரியாமல் கீழே வந்து விட்டேனே.. என்ற யோசனையுடன் சாப்பாட்டு மேஜையின் மீது சென்றமர்ந்தான் கௌதம்.


இரண்டு நாட்கள் கடுமையை முகத்தில் தேக்கி அடைபட்டுக் கிடந்த மகன் நித்யாவின் ஒரு பேச்சில் மாறிக் கீழே வந்ததைக் கண்டு ஆச்சரியமான வசந்தி மகிழ்ச்சியுடன் சாப்பாடு பரிமாற.. எதுவும் கூறாமல் சாப்பிட்டு முடித்தவன்... “ஸ்ரீ குட்டி.. நீ இங்கே தான் அமர்ந்திருக்கிறாயா..?,ஏன் அமைதியாக இருக்கிறாய்..?அங்கிளிடம் வா..”என்றழைத்தான் கௌதம். பூக் கோர்த்துக் கொண்டிருந்த தன் அருகில் அமர்ந்திருந்த ஸ்ரீமதியிடம் நித்யா மெல்லக் குனிந்து “வர மாட்டேன் என்று சொல்..”என்று கூற அவளும் சிரித்தபடி “நான் வர மாட்டேன்..”என்று கத்திக் கூறினாள்.

“வர மாட்டாயா..?,அப்படியென்று இந்த ஆன்ட்டி சொல்லச் சொன்னாளா..?”என்று கூறியபடியே அவளருகே வந்தமர்ந்தான். அவன் தன்னருகே அமர்ந்ததும் எரிச்சல் கொண்ட நித்யா.. இவன் காதலிக்க மாட்டானாம்.. இப்படியெல்லாம் நெருங்கி அமர்ந்து என் காதலை அதிகப்படுத்த மட்டும் செய்வானாம்.. என்று பொறுமியபடியே அமர்ந்திருந்தவள்.. இயலாமையினால் விளைந்த கோபத்தில் விறுவிறுவென ஊசியில் பூக்களைக் கோர்க்கத் துவங்கினாள்.


“சாக்லேட் கொடுத்தால் என்னிடம் வருவாய் தானே கண்ணே.. இதோ பார்..”என்று பாக்கெட்டில் இருந்து மிட்டாயை அவன் எடுத்ததும் ஸ்ரீமதி அவன் மடியில் ஏறி மிட்டாயை வாங்கிக் கொண்டு “தேங்க் யூ அங்கிள்..”என்று முத்தமிட்டு விட்டு ஓட.. சிரித்தபடியே நித்யாவின் புறம் திரும்பினான் கௌதம். அவனைக் கோபமாக முறைத்தவளைக் கண்டு அவன் புருவம் உயர்த்த இதற்கு ஒன்றும் குறைச்சலில்லை என்று கொதித்துப் போனவள்.. வேகமாக பூக்களைக் கோர்க்க.. இரண்டு நொடி அவளது வேகத்தைக் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்த கௌதம்.. பின் வேகமாக அவள் கையைப் பற்றி “எதற்காக இவ்வளவு வேகமாகக் கோர்க்கிறாய்..?,ஊசி விரலில் ஏறி விடப் போகிறது.. முட்டாள்..”என்று கோபமாகக் கூற.. அவனை அழுத்தமாக நோக்கினாள் நித்யா.

அவளதுப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாது வேறு புறம் திரும்பியவன் பின் அவளது கையை அழுத்தமாகப் பற்றி மீண்டும் அவள் முகம் நோக்கி.. "ஐ ஆம் சாரி நித்யா..."என்று மெல்லிய குரலில் வருத்தத்துடன் கூற.. எதற்கு இந்த சாரி என்று கேட்கக் கூடத் தோன்றாமல் அவனையே விழிகள் பளிச்சிட நோக்கியவள்.. பின் குறும்புப் பார்வைப் பார்த்தபடி அவனிடமிருந்துத் தன் கைகளை விலக்கிச் சுற்றும் முற்றும் நோக்கி யாருமில்லாததை உறுதி செய்து கொண்டு அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு "தேங்க்யூ கௌதம்.."என்று கூறி விட்டு அவன் பதில் கூறும் முன் ஓடிச் சென்று விட்டாள்.

உஷ்ணமாக அவளை நோக்கினாலும்.. மனதில் ஏதோ ஒன்று சில்லெனப் பரவி அவனைக் குளிர்வித்து இதழ்க்கடையில் முறுவலையும் தோற்றுவித்தது அவனுக்கு.



## அத்தியாயம் – 11




**ஏன் இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்..?**
**உன்னைக் கண்டறிய முடியாது..**
**நான் தவிப்புறுவதைப் பார்த்து..**
**நீ மகிழ்ச்சி கொள்கிறாயே.. கண்ணா..**
**போதுமடா.. விளையாட்டாகக் கூட..,**
**உன் அருகாமையை இழக்க..**
**எனக்குத் துணிவில்லை!**

"**எ**ன்னம்மா உன் ஹீரோ இன்றேனும் அலுவலகம் வந்து விடுவானா..?, வசந்தி அம்மா இரண்டு நாட்களுக்கு முன்பு எனக்கு ஃபோன் செய்து கௌதம் தனி அறையில் அடைந்து கிடப்பதாகக் கூறினார்களே..! நீ இருக்கும் தைரியத்தில் நான் அவனை நேரில் சென்று கூடப் பார்க்கவில்லை.. நீ சென்று பார்த்தாயா..?, என்னவாயிற்று அவனுக்கு..?"என்று அலுவலகத்தின் வளாகத்தில் தென்பட்ட நித்யாவிடம் விசாரித்துக் கொண்டிருந்தார் அழகர்சாமி.

"அவனுக்கு என்ன அங்கிள்..?,நன்றாக இருக்கிறான்.. எந்தப் பிரச்சனையுமில்லை.. இன்று அலுவலகம் வந்து விடுவான்.."என்று அவருக்கு பதிலளித்துக் கொண்டிருந்த நித்யா திடீரெனப் பேச்சை நிறுத்தி விரிந்த விழிகளுடன் வாசலை நோக்கினாள். அவளது பார்வையைத் தொடர்ந்து தானும் வாசலை நோக்கிய அழகர்சாமிக்கும் திகைப்பு தான்..

"சின்ன உதவி நம்பி சார்.. காரை பார்க் செய்து விடுகிறீர்களா ப்ளீஸ்..?"என்று கார் சாவியை நம்பியிடம் அளித்துக் கொண்டிருந்த கௌதமைக் கண்டு தான் இருவரும் திகைத்துப் போய் நின்றிருந்தார்கள். ஏனெனில் வழக்கத்திற்கு மாறாக.. சரியாக வாரப்பட்டத் தலைமுடியுடன்.. சுத்தமாக முகச் சவரம் செய்து.. நீல நிற சட்டை,பேண்ட்டுடன் வெகு நாளைக்குப் பிறகு தோற்றத்தில் அக்கறை செலுத்தியவனாக.. அதை விட.. வெளிச்சம் பரவிய முகத்துடன் உள்ளே நுழைந்தான் கௌதம்.

DO NOT COPY

கதவைத் திறந்து நுழைந்தவனின் கண்கள் எதிரே இருந்த நித்யாவைக் காண.. அவளும் கைகளைக் கட்டிக் கொண்டு அவனையே பார்த்தவாறு சிரிப்புடன் நின்றிருந்தாள். அவளது சிரிப்பைக் கண்டதும் தன்னாலே அவனுக்கும் முறுவல் விரிய.. பார்வையை வேறு புறம் திருப்பி.. சிரிப்பை அடக்கியவன் அவளை நோக்கி வந்தான். இருவரது முக மாற்றத்தையும் கவனித்த அழகர்சாமி வியப்பும்,மகிழ்ச்சியும் நிற்க.. அதற்குள் அவர்களருகே வந்து விட்டவன்.. “குட் மார்னிங் அங்கிள்..”என்று புன்னகையுடன் தெரிவிக்க.. “குட் மார்னிங் தம்பி.. “என்றவரிடம் மேலும் இரண்டொரு வார்த்தைப் பேசியவன் பின் நித்யாவிடம் திரும்பி ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு அறைக்குச் சென்றான்.

அவன் சென்றதும் நித்யாவிடம் அழகர்சாமி “நித்யா.. எனக்கு மயக்கம் வருவது போல் இருக்கிறதம்மா..”என்று நடிக்க “ஏ...ஏன் என்னவாயிற்று அங்கிள்..?”என்று பதறியவளிடம் “உங்கள் இருவருக்கிடையில் நடக்கும் மௌன நாடகத்தைக் கண்டு தான்..”என்று அவர் கூற.. நாக்கைக் கடித்துக் கொண்டுத் தலை குனிந்தவள் “நான் வருகிறேன் அங்கிள்..”என்று ஓடி விட.. கலகலவெனச் சிரித்தார் அழகர்சாமி.

அறைக்குள் நுழைந்ததும் “குட்மார்னிங் சார்.. என்ன விசேஷம் இன்று..?, ஹேண்ட்சம்மாக இருக்கிறீர்கள்..?”என்று சிரிப்புடன் வினவ.. அவனோ அவளை முறைத்து “நித்யா.. இது ஆ:பிஸ்..”என்று கூற.. “அப்படியானால்.. வீட்டில் வைத்து நான் இதே கேள்வியைக் கேட்டால்.. எனக்கு பதிலளிப்பீர்களா..?”என்று வினவ.. அவன் அவளை அழுத்தமாக முறைத்தான். “ஓகே ஓகே சாரி.. வேலையைத் தொடரலாம்..”என்றவள் தன் இருக்கைக்கு ஓடி விட்டாள்.. அதற்கு மேல் நின்றால்.. அறிவிருக்கிறதா உனக்கு என்று ஆரம்பித்து விடுவான். தேவையா...?

அன்று வேலைப் பளு சற்று அதிகமாகவே இருக்க.. இருவரும் மற்றதை மறந்து வேலையில் மூழ்கி விட்டனர். மதியம் மூன்று மணிக்குப் பிறகு கைகளை நெட்டி முறித்தபடிக் கணினியில் இருந்துப் பார்வையைத் திருப்பியவள்.. மதிய சாப்பாட்டையே மறந்து போனதை உணர்ந்து.. கௌதமை எட்டிப் பார்த்தாள். அவனும் வேலையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு எழுந்து அவனருகே சென்றாள்.

“மணியாகி விட்டதே.. சாப்பிட்டு விட்டு வேலை பார்க்கலாமே..”என்று கூற.. அவன் “எனக்கு நேரமாகும்.. நீ சென்று சாப்பிடு..”என்று கூறினான். “பரவாயில்லை... வேலை முடிந்ததும் கூறுங்கள்.. சேர்ந்தே சாப்பிடலாம்..” என்று கூறி விட்டுத் தன் இருக்கையை நோக்கி நடந்தவளை “நில் நித்யா..” என்று நிறுத்தியவன் “சாப்பிடலாம்..”எனக் கூறி வாஷ்ரூமை நோக்கிச் சென்றான்.

DO NOT COPY

அவன் வந்ததும் வசந்தி அளித்திருந்தச் சாப்பாட்டைப் பரிமாறினாள். அடுத்த சில நிமிடங்கள் இருவரும் அமைதியாக உண்ணத் துவங்க.. தட்டில் பார்வையைப் பதித்து உண்டு கொண்டிருந்தவனைக் கண்டபடியே சாப்பிட்டவள் திடீரென.. “தாடியில்லாமல் நன்றாகவே இல்லை..” என்று கூற.. நிமிர்ந்து அவளை நோக்கியவன்... “என்ன..?”என்று கேட்க.. “இப்படி க்ளீன் ஷேவ் செய்திருக்கிறீர்களே.. எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தாடியுடன் இருந்த கன்னங்கள் தான் பிடித்திருந்தது..”என்று கூற.. உதட்டைச் சுழித்து மறுத்தவன் பின் மெல்லிய குரலில் “தாடி இருந்தாலும் பிடிப்பதில்லை.. தாடி இல்லாமலும் பிடிப்பதில்லை..”என்று முணுமுணுத்தான்.

அவன் முணுமுணுத்ததைக் கண்டு கொண்டவள்.. ஏன் இப்படி கூறுகிறான் என்று முழிக்க.. அவனது வீட்டிற்குச் சென்றிருந்த போது அவள் ஷேவ் செய்யவில்லையா..?என்று கேட்டது நினைவிற்கு வர.. கலகலவென சிரித்து “எனக்குப் பிடிக்கும் போது தாடி வைத்துக் கொள்ள வேண்டும்.. எனக்குப் பிடிக்காத போது சவரம் செய்து விட வேண்டும்..”என்று கூற.. எரிச்சலுடன் நிமிர்ந்தவன்.. “உனக்குப் பிடித்தபடி நடந்து கொள்வதற்கு நான் ஒன்றும்...” என ஆரம்பித்தவன் முடிக்காமலே நிறுத்தி விட.. “சொல்லுங்கள் சார்.. ஆரம்பித்ததை முடித்து வையுங்கள்... நீங்கள் என் கண்ணான காதலன் தான்.. அதனால் எனக்குப் பிடித்தபடி இருக்கச் சொல்கிறேன்..”என்று கூறினாள்.

“நீ சொன்னதற்காக நான் சவரம் செய்து கொண்டு வரவில்லை.. நீ கூறிய விசயம் எக்காலத்திலும் நடக்காத ஒன்று.. அதனால் இந்த முட்டாள்தனமான எண்ணங்களை மாற்றிக் கொள்ளப் பார்..”என்று பல்லைக் கடித்தபடி அவன் அழுத்தமாகக் கூற.. “ஓஹோ.. நான் சொன்னதற்காக செய்யவில்லையா..?, தோற்றத்தில் எவ்வித அக்கறையுமில்லாமல்.. சரியாக வாரப் படாத தலைமுடியுடனும்,சவரம் செய்யப் படாத தாடியுடனும் பரதேசியைப் போல் வலம் வந்து கொண்டிருந்த நீங்கள்.. இன்று ரேமண்ட்ஸ் மாடலைப் போல் டீக்காக உடுத்திக் கொண்டு என் கண் முன்னே நிற்கிறீர்கள் என்றால்.. என்ன காரணம்..?”என்று வினவினாள்.

தட்டில் கையைக் கழுவியபடியே “என்ன காரணம்..?”என்று அவனும் கேட்க.. “நான் தான் காரணம்.. வேறு என்னவாக இருக்க முடியும்..?”என்றவளைக் கண்டு சிரித்தபடியே எழுந்த கௌதம் தன் இருக்கைக்குச் செல்ல.. “இது என்ன சிரிப்பு..?,இதை நான் ஆமாம் என்று எடுத்துக் கொள்ளட்டுமா..?,அத்தோடு.. நான் உங்களை விரும்பியதாகக் கூறிய பின்பும் என்னை கம்பெனியை விட்டு அடித்து விரட்டாமல் விட்டு வைத்திருக்கிறீர்களே.. இதிலிருந்தே தெரியவில்லை..?,உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதென்று..!”என்று கூற.. இப்போது விரிந்த புன்னகையுடன் அவளை நோக்கினான் கௌதம்.

DO NOT COPY

“நீ கூறியதில் ஒரு விசயம் உண்மை தான்.. என்னை நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறாய்..”என்றவன் தொடர்ந்து “பிடித்திருக்கிறது தான்.. உன்னைப் பிடிக்காதவர்கள் இந்த அலுவலகத்தில் யார் இருக்கிறார்கள்..?, நான் கண்டு வெறுத்தப் பெண்களைப் போல் அல்லாது.. நீ வித்தியாசமாக இருக்கிறாய்.. தவறென்றால் எதிர்த்துப் பேசுகிறாய்.. மற்ற ஆண்களைக் கவர முயல்வதில்லை.. மரியாதையுடன் பழகுகிறாய்.. இயல்பாக இருக்கிறாய்.. அதனால் எனக்குப் பிடித்திருக்கிறது.. இல்லையென்று கூறவில்லை.. ஆனால் பிடித்திருக்கிறது என்பதற்காக.. காதலிக்க முடியாது.. நினைவில் வைத்துக் கொள்.. என் வாழ்வில் காதல்,கல்யாணம் என்கிற பேச்சுக்கெல்லாம் இடமேயில்லை..”என்று கூற.. அதுவரை அவன் பேச்சை ஆர்வத்துடன் கேட்டு வந்தவள் பின் முகம் சுருங்கி.. பின் அவனது பேச்சின் கடைசிப் பகுதியைத் தவிர்த்து விட்டுப் பதிலளித்தாள்.

“பிடித்திருக்கிறது தானே..?,இப்போதைக்கு இது போதும்.. மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்..”என்று சிரிக்க.. அவளை முறைத்தவன்.. “அரட்டை அடித்தது போதும்.. சத்யம் ஹௌஸஸ்ஸின் எஸ்டிமேஸனை எனக்கு மின்னஞ்சல் அனுப்பு..”என்று கூறி விட்டுக் கணிப்பொறியில் பார்வையைத் திருப்பிக் கொண்டான் வழக்கம் போல்.

“உன்னை நானறிவேன் கண்ணா...” என்று பாடியபடியேத் தன் இருக்கைக்குச் சென்றவள் அதன் பின் தன் வேலையைத் தொடர.. இரவு ஒன்பது மணி வரை இருக்கையை விட்டு எழ முடியாத அளவிற்கு வேலை கழுத்தை நெறிக்க.. எதைப் பற்றியும் சிந்திக்காமல் வேலையில் ஆழ்ந்திருந்தாள்.

கழுத்தைத் தேய்த்தபடி இருக்கையை விட்டு எழுந்த கௌதம்.. நித்யாவைக் கண்டு “இன்னும் என்ன செய்கிறாய்..?,வீட்டிற்குக் கிளம்பு.. மீதி வேலையை நாளை பார்த்துக் கொள்ளலாம்..”என்று விரட்ட.. “ம்,இதோ ஆயிற்று.. நீ... நீங்கள்..?”என்று வினவ.. “நானும் தான் வருகிறேன்..”என்று கூற.. இருவரும் சேர்ந்தே புறப்பட்டனர்.

லி∴ப்ட்டில் ஏறியதும் அவன் அமைதியாக நிற்க.. செல்∴போனில் கவனம் செலுத்தியிருந்த நித்யா நிமிர்ந்து அவனை நோக்கினாள்.. செதுக்கிய சிலையென நின்றிருந்த அவனது பக்கவாட்டுத் தோற்றம் அவளைக் கவர.. அவன் அருகே சென்று அவனை இடித்துக் கொண்டு நின்றாள். “ப்ச்..”என்றபடி திரும்பியவனிடம் “என்ன..?,பக்கத்தில் நிற்பது கூடத் தவறா..?”என்று உச்சஸ்தாதியில் சத்தமிட.. தப்பே இல்லை தாயே.. என்பது போல் அவன் கையைக் கட்டித் திரும்பிக் கொண்டான். சிரிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டு நின்றவளை மீண்டும் நோக்கியவன் “இப்போது எதற்கு இந்தப் பார்வை..?”என்று கேட்க.. ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தவள் “ஐ லவ் யூ..”என்று கூற.. சட்டென முகம் மாறி.. அவள் முகத்தையே தன்னை

DO NOT COPY

மறந்து நோக்கியவன்.. பின் லிஃப்ட் நின்று விட்டதை உணர்ந்து விருட்டென வெளியேறினான்.

அவனுக்கே அவன் மீது கோபமாக வந்தது.. காதல்,கல்யாணம் போன்ற கண்றாவியான விசயங்களை நம்பி இனியொரு முறை ஏமாறக் கூடாது என்று அவன் ஒவ்வொரு நொடியும் தீர்மானம் செய்து கொண்டிருக்க.. அவையனைத்தையும் ஒரே பார்வையில்.. ஒரே பேச்சில்.. மாற்றி விடுகிறாள் ராட்சசி..! இவளைத் தவிர்ப்பதும் முடியாத காரியம் ஆயிற்றே.. என்ன தான் செய்வது.. எரிச்சலுடன் காரை நோக்கி நடந்தவனை "கௌதம்.. நில்.."என்று தடுத்தவள்.. "வ..வந்து என்னையும் வீட்டில் இறக்கி விடுகிறீர்களா..?" என்று வினவ.. "ஏன்..?,உன் ஸ்கூட்டி என்னவாயிற்று..?"என்று கேட்டபடியே காரைத் திறந்தவன்.. அவள் திக்கித் திணறி "அது.. அது.. பஞ்சர் ஆகி விட்டது.."என்றதிலேயே அவள் பொய் சொல்கிறாள் என்பதைக் கண்டு கொண்டு "அப்படியென்றால் ஆட்டோவில் போ.."எனக் கூறி விட்டு காரை எடுத்துக் கொண்டு சென்று விட்டான்.

பொய் சொன்னதைக் கண்டு பிடித்து விட்டான் போலும்.. வெவ்வெவே என்று பழிப்புக் காட்டி விட்டு ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு அவளும் புறப்பட்டாள். சிக்னலைக் கடக்கையில் அவனை முந்திக் கொண்டு வேகமாக அவள் வண்டியைச் செலுத்த.. அவள் வண்டி ஓட்டும் லாவகத்தைக் கண்டபடியே அவளைப் பின் தொடர்ந்து வந்தான் கௌதம். ஸ்கூட்டியை வாசலில் நிறுத்தியவளுக்கு இனிய அதிர்ச்சியாக ஒலித்தது விஸ்வநாதனின் குரல். "நிதும்மா..."என்று ஒலித்தத் தந்தையின் குரலைக் கேட்டுத் திகைத்துப் பின் "அப்பா..."என்று துள்ளிக் கொண்டு ஓடிச் சென்று அவரை அணைத்துக் கொண்டாள்.

அவளைத் தொடர்ந்து வந்த கௌதம் நித்யாவின் கூச்சலைக் கேட்டுக் காரை நிறுத்தி விட்டு இறங்க.. அங்கே தந்தையை அணைத்துக் கொண்டு நின்றவளைக் கண்டு மென்மையாக புன்னகைத்தான். "எவ்வளவு நாட்களாயிற்று நீங்கள் வருவதற்கு..?,இனியொரு முறை இப்படி என்னை விட்டு இருக்காதீர்கள் அப்பா.."என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டவளைப் பாசமாக வருடியவர் "இனி இப்படி இருக்க மாட்டேன்.. நீ எப்படியிருக்கிறாயடா..?,மெலிந்தார் போல் தெரிகிறதே..?"என்று கூற.. "அப்பா.. இது உங்களுக்கே அதிகமாக இல்லையா..?,அங்கே நீங்கள் சாம்பார் என்ற பெயரில் ஒன்றைச் சமைத்துப் போடுவீர்களே.. அதைச் சாப்பிடும் போது இருந்ததை விட இப்போது சதை போட்டிருக்கிறேன்.."என்றவள் "வசந்தி அத்தையின் சமையல் அப்படி..."என்று மெல்லிய குரலில் கூறி விட்டு வாசலைப் பார்க்க.. அங்கே கௌதம் நின்றிருந்ததைக் கண்டுத் திகைத்துப் பின் சிரிப்புடன் அவனிடம் ஓடினாள்.

அவன் கையைப் பற்றிக் கொண்டு இழுத்து வந்தவள்.. “அப்பா.. இவர் தான் என் எம்,டி கௌதம் பிரபாகரன்..”என்று அறிமுகம் செய்ய.. அவள் தன் கையை இறுகப் பற்றியிருப்பதை உணர்ந்து “நித்யா..”என்று அடிக்குரலில் கூறி.. அவள் கையை விடுவித்தவன்.. பின் புன்னகைத்தபடி “ஹலோ சார்..”என்று அவரிடம் கை குலுக்கினான். இருவரது செய்கையையும் கண்ட விஸ்வநாதன் மகள் இந்த அளவிற்குத் தேறி விட்டாளா.. என்று நினைத்துக் கொண்டும்.. கௌதமனின் கம்பீரமான தோற்றத்தையும்,குரலையும் கண்டு வியந்த படியும் அவனிடம் கை குலுக்கினார்.

பின் “உள்ளே வாருங்கள் தம்பி..”என்றழைத்துச் செல்லத் தயங்கியபடியே நின்றவனை “என்ன நின்று விட்டீர்கள்..?,வாருங்கள்..”என்று கையைப் பற்றி இழுத்துச் சென்றாள். விஸ்வநாதன் முன்னால் சென்று விட்டதை உறுதிபடுத்திக் கொண்ட கௌதம் அவளிடம் கோபமாக “நித்யா.. உன் தந்தை அருகில் இருக்கிறார் என்கிற பயம் கூட இல்லையா உனக்கு..?,கையை விடப் போகிறாயா.. இல்லையா..?”என்று அதட்ட.. “கைப் பிடிப்பதற்கெல்லாம் என் தந்தை ஒன்றும் கூற மாட்டார்.. அமருங்கள்..”என்று உட்கார வைத்தவள்.. “நான் உங்களிருவருக்கும் காபி கொண்டு வருகிறேன்..”என்று உள்ளே சென்றாள்.

அவள் சென்றதும் சங்கடத்துடன் முறுவலித்தவன் பின் “அவள் இன்னமும் சிறு பெண்ணாகவே இருக்கிறாள் சார்.. நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்..”என்று கூற.. என் மகள் சிறு பெண்ணா..?,இரும்பு மனிதனைப் போல் இருந்த உன்னையே இப்படி மாற்றியிருக்கிறாளே கௌதம்.. என்று நினைத்துக் கொண்டவர்.. தானும் முறுவலித்து “ஆமாம் தம்பி.. சிறு வயதிலேயே அவள் அன்னை இறைவனடி சேர்ந்து விட்டதால்.. செல்லமாகவே வளர்த்து விட்டேன்.. அதனால் தான் இப்படி..”என்று கூறினார்.

“நித்யா போன வாரமே கூறினாள்.. நீங்கள் மாயவரம் சென்றிருப்பதாகவும்.. சிறிது நாட்களில் திரும்பி விடுவீர்கள் என்றும்.. என் அன்னை,தந்தையின் சொந்த ஊரும் கூட அது தான்.. மாயவரத்தில் எங்கே நீங்கள்..?”என்று விசாரிக்க.. போன வாரம் மாயவரம் சென்றிருந்தேனா.. என்றபடி அவர் நித்யாவைப் பார்க்க.. “ஆ..ஆமாம் டாடி.. நீங்கள் இரண்டு,மூன்று வாரமாக அங்கே தானே இருந்தீர்கள்.. அதைத் தான் கூறினேன்..”என்று சமாளிக்க.. அதையே தானும் கூறினார் விஸ்வநாதன்.

மாயவரத்திற்கு அருகே இருக்குமொரு கிராமத்தின் பெயரைச் சொல்லி அது தான் தனக்குச் சொந்த ஊர் என்று கூறியவர்.. பூர்வீக நில விவகாரத்திற்காகச் சொந்த ஊருக்குச் சென்றிருந்ததாகவும் கூறினார். அதன் பின் கௌதம் தனது பூர்வீகத்தைப் பற்றித் தெரிவிக்க.. ஒன்றுமறியாதவரைப் போல் தலையாட்டிக் கொண்டு அமர்ந்திருந்தார்.

DO NOT COPY

பின் அவன் அவரது நியூயார்க் வாழ்க்கையைப் பற்றி விசாரிக்க.. தான் வேலை பார்த்த நிறுவனத்தின் பெயரைக் கூறியவர் தொடர்ந்து "எத்தனை நாள் தான் அடுத்த நாட்டில் அமர்ந்திருப்பது தம்பி..?,என்றேனும் ஒரு நாள் சொந்த நாட்டிற்கு வந்து தானே ஆக வேண்டும்..?"என்று கூற "சரி தான் சார்.." என்று சிரித்த கௌதம் மேலும் சிறிது நேரம் பேசி விட்டு விடைபெற்றான். அவரிடம் "வருகிறேன் சார்.."என்றவன் நித்யாவிடம் ஒரு தலையசைப்பில் விடைபெற.. அவள் அவனுடனே வாசல் வரை சென்றாள்.

"எப்படி என் தந்தை..?"என்று வினவ.. "மிகவும் நல்லவராக இருக்கிறார்.. ஆனால் உன்னை எப்படி மகளாகப் பெற்றார் என்று தான் தெரியவில்லை.." என்றவனிடம்"ஹா..ஹா.. பெரியஜோக்..."என்று அவள் முறைக்க அவளது தலையில் குட்டி "குட் நைட்.."என்று கூறி விட்டுத் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

அவன் செல்வதைக் கண்டு விட்டுத் துள்ளலுடன் வீட்டிற்குள் நுழைந்தவள் சமையலறையில் உருட்டிக் கொண்டிருந்தத் தந்தையிடம் சென்று "என்னப்பா செய்கிறீர்கள்..?,சமைக்க வேண்டாம்.. அத்தை வைகுந்த் அண்ணனிடம் அனுப்பி வைப்பார்கள்.."என்று கூற "அத்தையை எதிர்பார்த்துக் கொண்டு நீ சமையல் கற்றுக் கொள்ளாமலே இருந்தாயா நிதும்மா..?"என்றுத் திட்டத் துவங்கியதும் "வந்ததும் ஆரம்பிக்காதீர்கள் டாடி.."என்றவளிடம் "நீயெல்லாம் கௌதமைத் திருமணம் செய்து கொண்டு அவனை என்ன பாடு படுத்தப் போகிறாயோ...?" என்று கூற.. வாயடைத்துப் போய் நின்று விட்டவள்.. "அ...அப்பா.."என்று திகைக்க.. சிரிப்புடன் மகளிடம் வந்தார் விஸ்வநாதன்.

"கௌதமை வேண்டாம் என்று கூற நான் என்ன முட்டாளா நித்யா..?,சொல்லப் போனால்.. அவனது கம்பீரத்திற்கும்,ஆளுமைக்கும் முன்னால் நீ கொஞ்சம் டம்மி தான்.."என்று கேலி செய்ய.. "அப்பா.."என்று பல்லைக் கடித்தாள் நித்யா. கலகலவெனச் சிரித்தவர் "அத்தோடு என் தங்கை மகனே மருமகனாக வருவது எனக்குப் பெரு மகிழ்ச்சி தான்.. வசந்தி முதன்முதலில் கௌதமைப் பற்றிக் கூறிய போது.. என் தங்கை மகனுக்கு என் மகளைத் திருமணம் முடித்து வைக்க் முடியாமல் போனதே என்று நான் வருத்தப்பட்டேனம்மா.. ஆனால் அவன் நிலைமையைக் கேட்ட பின்பு அவனை மாற்றி நல்ல பெண்ணாகத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று தான் தோன்றியதே தவிர,.. நான் இப்படி யோசிக்கவேயில்லை.. ஆனால் இன்று அவன் உன்னுடன் இயல்பாகப் பேசிக் கொண்டு நடந்து வரும் போது.. நான் உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.. இந்த உலகத்தில் நீங்கள் இருவர் தான் பொருத்தமான ஜோடி என்று தோன்றியது.."என்று கூற.. வெட்கத்துடன் தலை குனிந்தவள்.. "நீங்கள் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?"என்று வினவினாள்.

DO NOT COPY

“எனக்கு இங்கே வருவதற்கு முன்பிலிருந்தே சந்தேகம் தானம்மா.. உன் பேச்சு,உன் நடவடிக்கை அனைத்தும் வழக்கத்திற்கு மாறாக இருந்தது கௌதம் விசயத்தில்.. என் மகளையே இந்த அளவிற்கு மாற்றி விட்டானே.. யார் அவன் என்பதைக் காண்பதற்காகத் தான் நான் இங்கே வந்ததே..”என்று கூற.. சிரிப்புடன் தந்தையைக் கட்டிக் கொண்டவள்.. “உங்கள் பேச்செல்லாம் நன்றாகத் தான் இருக்கிறது.. நீங்களும்,நானும் ஆசையை வளர்த்து என்ன பிரயோஜனம்..?,கௌதம் என் காதலை ஏற்றுக் கொள்ள மறுக்கிறான் அப்பா...” என்றவள் அவனுக்கும்,தனக்கும் நடந்த வாக்குவாதத்தைத் தெரிவித்தாள்.

“ஆனால் அவன் நிச்சயம் என்னை ஏற்றுக் கொள்வான்.. அதுவரை நான் விடப் போவதில்லை..”என்று கூற.. “இவ்வளவு தூரம் அவனை மாற்றியிருக்கிறாய்.. நிச்சயம் உன் ஆசையை ஆண்டவன் நிறைவேற்றி வைப்பாரம்மா.. என்னுடைய வாழ்த்துக்கள்..”என்று விஸ்வநாதன் வாழ்த்த.. பெரு மகிழ்ச்சியாய் இருந்தது நித்யாவிற்கு.

விஸ்வநாதனின் மூலமாகச் செய்தி வசந்தியை எட்டி விட.. அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.. மகனது வாழ்வு சிறக்க வேண்டுமென்றும்.. தங்களது குலம் தழைக்க வேண்டுமென்றும் கோவில் கோவிலாக ஏறி இறங்கியவருக்கு இந்தச் செய்தி மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்தது.. மகனது வாழ்வை மாற்றி அவரை திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்கிறேன் அத்தை என்று கூறி... தந்தையின் சொல்லிற்காக இந்தியா வந்த அந்தச் சிறு பெண் இன்று அனைத்தையும் சாதித்துக் கடைசியில் தானே அவன் மீது காதல் கொண்டும் விட்டது.. அவருக்கு சந்தோசத்தை அளித்தது..

காலையில் வீட்டிற்குள் நுழைந்தவளை இருகை பற்றி வரவேற்ற வசந்தி.. “என் கண்ணே... நீ எனக்கு செய்கிற இத்தனை உதவிக்கும் நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ தெரியவில்லை.. என் மகனின் வாழ்வைத் திருப்பி அளித்து.. என் ஜீவனை மீட்டு விட்டாயே.. நீ என் மருமகளாகக் கிடைத்தது.. நான் எந்த பிறவியில் செய்த புண்ணியமோ...!”என்று கண் கலங்க.. “அத்தை..”என்று அவர் கையைப் பற்றிக் கொண்டவள்.. “உங்கள் மகன் கிடைக்க நான் தான் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.. எதற்கென்றே தெரியாமல் நியூயார்க்கிலிருந்து இந்தியா வந்தேன்.. வந்த போது எப்போதடா திரும்பிச் செல்லலாம் என்று தான் நினைத்திருந்தேன்.. ஆனால் உங்கள் மகனுடன் பழகிய பின்பு தான் என் ஜீவனே உங்கள் மகனிடம் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.. வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்வும் காரணத்தோடு தான் நடக்கிறது போலும்..”என்றவள்.. பின் “அத்தை.. அவர் இன்னும் என் காதலை ஏற்றுக் கொள்ளவேயில்லை.. நீங்கள் திருமணம் வரை யோசித்து விட்டீர்களே..?”என்று சிரித்தாள்..

DO NOT COPY

“நீ அவனை எப்படியும் சமாளித்துச் சாதித்து விடுவாய் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறதம்மா..”என்று கூறியவர்.. “இதோ அம்மன் கோவில் குங்குமம்.. எடுத்துக் கொள்..”என்றவர் தானே அவள் நெற்றியில் இட்டார். “பிரசாதத்தை என்னிடம் கொடுங்கள் அத்தை.. நான் கௌதமிற்கும் கொடுக்கிறேன்..”என்றவள் வாங்கிக் கொண்டு அவனது அறைக்குச் சென்றாள்.

கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்தவள் தலை வாரியபடி நிலைக் கண்ணாடியின் முன்பு நின்றிருந்த கௌதமனின் அருகே சென்றாள். நிலைக் கண்ணாடிக்கும்,கௌதம் நின்றிருந்த இடத்திற்கும் இடையே இருந்த சிறிய இடைவெளியில் சென்று நின்று கொண்டவள் கண்ணாடியில் தெரிந்த அவனது பிம்பத்திடம் “ஹாய்..”என்று கூற.. அவனும் எதையும் கண்டு கொள்ளாது தலை வாரியபடியே “ஹாய்...” என்றான்.

பின் டிரெஸ்ஸிங் டேபிளின் மீது அவனை நோக்கி அமர்ந்து கொண்டவள் கையிலிருந்த ஆப்பிளைக் கடித்தபடி “என்ன.. இன்று சீக்கிரம் கிளம்புகிறீர்கள்..? இன்னும் நேரமிருக்கிறதே..?”என்று வினவ.. “ஆமாம்.. இன்று முக்கியமான வேலையாக செங்கல்பட்டு செல்கிறேன்..”என்று தயாராகி நின்றவனிடம் “இந்தாருங்கள்.. ஆன்ட்டி அளித்தக் கோவில் பிரசாதம்..”என்றவள் அவன் முகத்தைத் தன் புறம் திருப்பி குங்குமத்தை அவன் நெற்றியில் இட்டாள். “சரி போதும் நகர்ந்து செல்.. என் லேப்டாப் பேக்..”என்றவன் அவளுக்குப் பின்புறம் இருந்த பையை அவளை உரசிக் குனிந்து எடுக்க.. திகைத்து நிமிர்ந்த நித்யா அவன் எதையும் உணராது செல்வதிலேயே அவசரம் காட்டுவதைக் கண்டு இயல்பாகி.. தொண்டையைச் செறுமி “சா..சாப்பிடாமல் செல்லாதீர்கள்..”என்று கூற.. “என்ன செய்வது..?,சீக்கிரம் சென்றாக வேண்டுமே.. ஆனால் பயங்கரப் பசி..”என்றவன் சிறிதும் யோசிக்காது அவள் கையிலிருந்து ஆப்பிளை வாங்கிக் கடித்தபடியே “தாங்க்ஸ்..”எனக் கூறி விட்டு விறுவிறுவெனச் சென்று விட்டான்.

திகைத்து விழி விரித்து நின்ற நித்யா.. என்னவாயிற்று இவனுக்கு.. என்றெண்ணிய படியே கீழே சென்றாள். தொடர் மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்த அந்த இரண்டு நாட்களின் முடிவில் நித்யா ஒரு அதிர்ச்சியைச் சந்திக்க நேரிட்டது.

அன்று முழுதும் துள்ளலுடனே அலுவலகத்தில் வலம் வந்தவள்.. வெகு நேரமாக அழகர் சாமியின் அறையில் அமர்ந்து அரட்டையில் ஈடுபட்டிருந்தாள். வசந்தியின் மூலமாக அவருக்கும் செய்தி எட்டியிருந்ததால் அவளை அமர வைத்து கேலி செய்து தள்ளிக் கொண்டிருந்தார். அதன் பின் அறைக்குள் நுழைந்த நித்யாவிற்கு.. கௌதம் இல்லாத அறையில் அமர்ந்திருப்பதே எரிச்சலைத் தரத் தானும் செங்கல்பட்டிற்குச் செல்ல விரும்பினாள்.

DO NOT COPY

அவள் எண்ணியதை உணர்ந்தவன் போன்று கௌதமே அவளை அழைத்தான். “நித்யா.. அக்கௌண்டண்ட் சுவாமிநாதனை அழைத்துக் கொண்டு உடனே செங்கல்பட்டு சைட்டிற்கு வா..”என்று அவன் வைத்து விட.. அவன் குரலிலிருந்த வித்தியாசத்தை உணராத நித்யா.. சுவாமிநாதனை அழைத்துக் கொண்டு துள்ளலுடன் புறப்பட்டு விட்டாள்.

ஒன்றரை மணி நேர பிரயாணத்திற்குப் பின்பு இடத்தை அடைந்ததும் கௌதமனை நோக்கி ஓடிச் சென்ற நித்யாவின் வேகம் அருகே செல்கையில் வெகுவாகக் குறைந்து போனது. ஏனெனில் அவன் கோபத்தின் உச்சத்தில் எதிரே நின்றிருந்தவனைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான். எதிரே நின்றிருக்கும் நபர் சைட் இஞ்சினியர் வேணுகோபால் என்பதை அறிந்து கொண்ட நித்யா வேகமாக அருகே சென்றாள்.

குழப்பத்துடன் தன்னருகே வந்து நிற்பவளைக் கண்டவன் அவளைத் தொடர்ந்து வந்த சுவாமிநாதனையும் கண்டு விட்டு.. “என்ன சுவாமி சார் இந்தத் தவறில் உங்களுக்கும் பங்கு இருக்கும் போலும்..”என்று அவரிடம் வினவ.. கதிகலங்கிப் போன சுவாமிநாதன் “எந்தத் தவறு..?எ,..என்ன நடந்தது சார்..?”என்று வினவினார்.

கலங்கிய சுவாமியின் முகத்தைக் கண்டதும் வருத்தமாக இருந்தது நித்யாவிற்கு.சுவாமி நாதனும் சரி,வேணு கோபாலும் சரி நேர்மையாக உழைப்பவர்கள்.. எந்தத் தீமையான எண்ணங்களும் இல்லாதவர்கள்.. இவர்களிருவரையும் எதற்காக இப்படி வாங்குகிறான்..?என்று குழம்பிய நித்யா கோபாலைப் பார்க்க.. அவரோ.. “சார்.. நான் சொல்வதைக் கேளுங்கள் சார்..” என்று கெஞ்சிக் கொண்டிருந்தார்.

“என்ன தவறென்று கேட்கிறீர்களா சுவாமி சார்.. இந்த பிராஜக்ட்டிற்காக வாங்கப்படும் சிமெண்ட் மூட்டைகளில் சரி பாதி இரண்டு நாட்களாகக் காணாமல் போய்க் கொண்டிருக்கிறது.. எத்தனை மூட்டைகள் என்று நீங்கள் எழுதி வைத்திருக்கும் கணக்கிற்கும்,இங்கு இருக்கும் மூட்டைகளின் எண்ணிக்கைக்கும் சம்பந்தமே இல்லையே.. என்ன நடக்கிறது இங்கே..?, மூட்டைக் கணக்கைப் பற்றியெல்லாம் கஸ்டமருக்கு எங்கே தெரியப் போகிறது என்று நினைத்து விட்டீர்களா..?,வாங்கும் காசிற்கு நேர்மையாக வேலை செய்யத் தான் நாமிருக்கிறோம்.. கோடி கணக்கில் அள்ளிக் கொடுக்கும் கிளையண்ட் கிடைத்து விட்டான் என்பதற்காக அவனை மொட்டையடிப்பதற்கு யோசனை தேடிக் கொண்டு இருக்கக் கூடாது..”என்று அவன் காட்டமாகக் கூற..

“சார்.. நீங்கள் நினைப்பது போல் நான் சிமெண்ட் மூட்டைகளை இங்கிருந்து திருடி விற்றுப் பிழைக்கவில்லை.. அப்படிப்பட்ட ஈனப் பிறவியாக வாழ எனக்கு அவசியமில்லை.. ஆர்.எம் வில்லாஸிற்கு பெங்களூரிலிருந்து வந்து

DO NOT COPY

இறங்க வேண்டிய சிமெண்ட் லோடு கர்நாடகாவில் இரண்டு நாட்களாக லாரி ஸ்டிரைக் என்று வரவில்லை.. இதனால் வேலையும் தடைபட்டு வருகிறது.. அதனால் தான் இங்கு வந்திறங்கும் மூட்டைகளை உபயோகிக்கத் திட்டமிட்டோம்.. அதிலும் தேவைக்கு அதிகமாக மிஞ்சுவதால் மட்டுமே எடுத்துக் கொண்டோம்.. இரண்டுமே முக்கியமான பிராஜக்ட் தானே சார்.. கம்பெனிக்கு நல்லது செய்வதாக நினைத்துக் கொண்டு நான் செய்தது தவறாகப் போய் விட்டது" என்றவனைத் தடுத்து நிறுத்தியவன்..

"யாரையும் கேட்காமல் நீங்களே முடிவு செய்து கொள்வீர்களா மிஸ்டர்.கோபால்..?, வேலை தடைபடும் என்று வருத்தப்படும் உங்களது எண்ணத்தை நான் மதிக்கிறேன்.. மூட்டை வந்திறங்கா விட்டால் மாற்று வழிக்காக நீங்கள் என்னையல்லவா அணுகியிருக்க வேண்டும்..?, அதை விடுத்து இன்னொருவரின் சொத்திலிருந்து எடுத்து உபயோகப் படுத்திருக்கிறீர்களே.. இன்று நான் கண்டதை இந்த சைட்டிற்கு சொந்தக்காரர் வந்து பார்த்திருந்தால் நம் கம்பெனிக்கு எவ்வளவு பெரிய அவமானம் மிஞ்சியிருக்கும்..?,என் காசை ஊருக்கெல்லாம் பங்கு கொடுக்கிறாயா என்று அவன் என் சட்டையைப் பிடிப்பதற்கா..?"என்று கோபமாக வினவினான்.

"இல்லை சார்.. இன்று ஸ்டிரைக் முடிந்து லோடு வந்ததும்.. மூட்டைகளை இங்கே இறக்கி விடத் தான் திட்டம் வைத்திருந்தேன்.."என்று கோபால் கூற.. "நீங்கள் என்னிடம் ஏன் கலந்தாலோசிக்கவில்லை கோபால்..?,அந்தக் காரணத்தைக் கூறுங்கள்.."என்று அவன் கேட்க.. "இ...இல்லை சார்.. நீங்கள் இந்தத் திட்டத்தை நிச்சயம் மறுப்பீர்கள் என்றெண்ணி தான்.. நானே.." என்றவனிடம் "அப்படியானால் என்னை ஏமாற்றப் பார்த்திருக்கிறீர்கள்.. அப்படித் தானே கோபால்..?"என்று அழுத்தமாக கௌதம் வினவினான்.

"அம்மாதிரி எவ்வித எண்ணமும் எனக்கு இல்லை சார்.. நான் எனது சுயலாபத்திற்காக எதையும் செய்யவில்லை.. வேலை தாமதப் பட்டு நமக்கு எவ்விதக் கெட்ட பெயரும் வந்து விடக் கூடாது என்கிற ஒரே காரணத்தினால் தான் இவ்வாறு செய்ய நேரிட்டது.. மன்னித்து விடுங்கள் சார்.."என்றவனிடம் கோபமாகத் திரும்பியவன் "என்னை ஏமாற்றி எனக்குச் செய்யப்படும் எந்த நன்மையையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது கோபால்.. நியாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.."என்று அவன் கூறியது கோபாலைப் பாதித்ததோ இல்லையோ.. அமைதியாகக் கேட்டுக் கொண்டு நின்றிருந்த நித்யாவின் மனதிற்குள் பூகம்பத்தையே வரவழைத்தது.

நன்மையாகவே இருந்தாலும் அவனை ஏமாற்றிச் செய்யக் கூடாதாமே..! நித்யாவைப் பற்றிய உண்மை தெரிந்தால்.. இதே போலத் தான் கோபப்படுவானோ..?, அதிர்ச்சியுடன் நின்று விட்ட நித்யாவிற்கு அதன் பின்பு நடந்த எதுவும் காதில் விழவே இல்லை..


“இனியொரு முறை எனக்குத் தெரியாமல் எந்த முடிவும் எடுக்கப் படக் கூடாது. மூட்டைகளை உடனே இடம் மாற்றுங்கள்.. அரை மணி நேரத்தில் ஆர்,எம்மிற்குத் தேவையான சிமெண்ட் மூட்டைகள் வந்திறங்க வழி செய்கிறேன்.. இனி சைட்டில் சிறு பிரச்சனை என்றால் கூட என்னிடம் வருவதற்குத் தயங்கவே வேண்டாம்.. அதே போல் கணக்கை மாற்றி எழுதுவதையும் இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.. நேர்மை மிகவும் முக்கியம்..”என்றவன் “இனி வேலையைப் பாருங்கள்..”எனக் கூறி இருவரையும் அனுப்பி வைத்தான்.

அவனது ஒரே வாக்கியத்தில் திகைத்து நின்று விட்ட நித்யாவை உலுக்கியவன் “என்ன அப்படி நிற்கிறாய் சிலை மாதிரி..?,வா..”என்றழைத்துக் கொண்டு காரை நோக்கி நடந்தான். அவனது வேக நடைக்கு ஏற்றவாறு கிட்டத்தட்ட ஓடியவள் கல் தடுக்கி விழப் பார்க்க “ஏய்..”என்று அவள் கையைப் பற்றியவன் “ஒழுங்காக நடக்கக் கூடத் தெரியாதா..?”என்று அவள் கையைப் பற்றியபடி காருக்கு நடத்திச் சென்றான். அவன் தன் கையைப் பற்றியிருப்பதைக் கூட உணராத நித்யா.. அவன் இழுத்த இழுப்பிற்கு நடந்து சென்றாள்.

காருக்குள் அமர்ந்த பின்னும் அவள் எதுவும் பேசாமல் இருப்பதைக் கண்டு அவள் புறம் திரும்பியவன் “நீ ஏன் முகத்தை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறாய்..?”என்று எரிச்சல் மாறாத குரலில் வினவ.. ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தவள் கலங்கிய மனதுடன் பாதையில் பார்வையைத் திருப்பினாள்.



# அத்தியாயம் – 12




கருமேகங்கள் வானில் புடை சூழ..
வண்ண மயில் தன் தோகை விரித்தாட..
பச்சைப் புல்வெளியில்.. மகிழ மரத்தடியில்..
உன் புல்லாங்குழல் ஓசையில் கிறக்கம் கொண்டு..
நான் உன் மார்பில் சாய்ந்து கிடந்த..
அந்த ஏகாந்த வேளையில்..
மெல்ல வீசியத் தென்றல் காற்றும்..
இம்சையாய் இருந்ததடா கண்ணா..
நீ எங்கிருந்து வந்தாய்..?

**ம**னதில் கலக்கம் சூழ சாலையை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த நித்யாவைக் கண்ட கௌதமிற்கு எரிச்சலானது. தொண தொணவென்று வாய் ஓயாமல் பேசிச் எதிராளியைச் சாகடிக்கக் கூடிய அளவிற்குப் பேச்சுத் திறமை மிகுந்தவள்?!! இன்று ஏன் இவ்வளவு அமைதியாக வருகிறாள்..?,எப்போதும் அவன் தொழிலாளிகளை ஏசும் போது அனுமதியில்லாமல் இடையில் குறுக்கிட்டு நீங்கள் செய்வது தவறென்றுச் சட்டமாகக் கூறுபவள்.. இன்று ஏன் அமைதியாக நின்றிருந்தாள்..?,ஒரு வேளை அவளுக்கும் தவறென்று பட்டதோ..?,இருக்கலாம்! ஆனால் அதற்காக ஏன் இப்படி வருத்தமாக வர வேண்டும்..?,காலையில் கூட நன்றாகத் தானே இருந்தாள் என்று யோசித்தவன் பின் அவள் புறம் திரும்பினான்.

"நித்யா.."என்று அவன் இரண்டு முறை அழைத்தும் பதில் இல்லாமல் போக.. "நித்யா.."என்று அவள் தோளைப் பற்றி உலுக்கினான். "எ..என்ன சார்..?"என்று திடுக்கிட்டு வினவியவளிடம் "ஏன் இப்படி பேயறைந்தார் போல் முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்..?, என்ன நடந்தது..?"என்று அவன் வினவ.. ஒன்றுமே நடக்கவில்லையா ராசா...?, நன்மையாகவே இருந்தாலும் என்னை ஏமாற்றிச் செய்யப்படும் எந்தச் செய்கையையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதென்று பெரிய பருப்பு மாதிரி பேசி வைத்து விட்டு.. இப்போது கேட்பதைப் பார்... என்ன சொல்வதென்று திணறி "ஒ..ஒன்றுமில்லை சார்.." என்று முடித்து விட்டாள்.

DO NOT COPY

அதன் பின் அலுவலகம் வந்து சேர்ந்த பின்பும் அமைதியைக் காத்தவளைக் கண்டு “நித்யா அதைச் செய்.. இதைச் செய்” என அடுத்தடுத்து வேலை வாங்கினான். அவள் அப்போதும் அமைதியாக இருப்பதைக் கண்டு “நித்யா.. வெளியே செல்ல வேண்டும்.. வா..”என்றழைத்தான். எங்கே என்று கூடக் கேட்காமல் மௌனமாகப் புறப்பட்டாள்.

அவளை ஒரு கா∴பி ஷாப்பிற்கு அழைத்துச் சென்றவன், வேண்டியதை ஆர்டர் செய்ததும் இரண்டு கைகளையும் கோர்த்து நாடியில் வைத்துக் கொண்டு அவள் முகத்தை நோக்கினான். அதையும் அறியாமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தவள்… திரும்பி அவன் முகம் நோக்க.. அவன் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்டு நிச்சயமாக அது காதல் பார்வை இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு “என்ன…?”என்றாள்.

எரிச்சலுடன் அவளை நோக்கியவன் “என்ன தான் ஆகித் தொலைந்து விட்டது உனக்கு..?,ஏதோ காதலில் தோல்வியுற்ற பார்வதியைப் போல் முகத்தை ஏகத்துக்கும் பாவமாக வைத்திருக்கிறாய்..?”என்று வினவ.. அவனை நிமிர்ந்து பார்த்தவள்.. “ஏன்..?,உண்மை தானே.. என் காதல் தோல்வியில் தானே போய்க் கொண்டிருக்கிறது..?”என்று முணுமுணுக்க.. “நித்யா..”என்றான் அவன்.

“காலையில் புறப்படும் போது நன்றாகத் தானே இருந்தாய்..?,இப்போது என்ன நடந்து விட்டது..?,வழக்கத்திற்கு மாறாக அமைதியாக இருக்கிறாய்..?,”என்று வினவ.. “நான் பேசுவதைத் தான் தொல்லை என்பீர்களே.. நான் பேச ஆரம்பித்தாலே எரிச்சலாகத் தானே பார்ப்பீர்கள்..?,நியாயமாகப் பார்த்தால்.. இப்போது நான் அமைதியாக இருப்பதைக் கண்டு நீங்கள் மகிழத் தானே வேண்டும்..”என்று கூற.. “அதுவும் சரி தான்.. ஆனால் நீ இஞ்சி தின்ற குரங்கைப் போல் முகத்தை வைத்திருப்பதைக் காண்கையில் பிரச்சனை வலுவானதென்று தோன்றுகிறது.. என்ன..?”என்று வினவினான்.

ஒரு நொடி தலை குனிந்து அமைதியானவள்.. பின் மெல்ல நிமிர்ந்து “பயமாக இருக்கிறது..”என்று கூற.. “பயமா..?,எதற்கு..?”என்று வினவினான் அவன். தயங்கியபடியே “உ..உங்கள் கோபத்தைக் கண்டு தான்..”என்று கூற.. புரியாமல் விழித்தவன்.. “என் கோபத்தைக் கண்டா..?ஏன்..?,இதற்கு முன்பு நான் கோபப்பட்டு நீ பார்த்ததேயில்லையா..?,இப்போது மட்டும் என்ன..?”என்று வினவ.. “என்ன இருந்தாலும் நீங்கள்.. நீங்கள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது.. உங்கள் நன்மையை மட்டுமே நாடுபவர்களை அவமானப் படுத்தியது போலல்லவா இருந்தது உங்கள் பேச்சு..?,என்ன பெரிய ஏமாற்றம் அடைந்து விட்டீர்கள் என்று கோபப்படுகிறீர்கள்..?,உ..உங்கள் வாழ்வை சீராக்க நினைத்தது தவறா..?,நீங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்தது தவறா..?, கிடைத்த அத்தனை நன்மைகளையும் நொடியில் மறந்து விட்டு.. ஏமாற்றி விட்டதாக ஒரேடியாகப் பழி போடுகிறீர்களே..?”என்று உணர்ச்சி மிகுதியில்

DO NOT COPY

உளறித் தொலைத்து விட.. எதிரில் அமர்ந்திருந்தவனோ.. "வாழ்வைச் சீராக்குவதா..?,என்ன உளறுகிறாய்..?"என்று குழப்பமானான்.

"அ..அதாவது.. உங்கள் தொழிலை சீராக்குவதைச் சொல்கிறேன்.. கிளையண்ட்டிடம் உங்களுக்கு எவ்வித கெட்ட பெயரும் வந்து விடக் கூடாது என்பதற்காக அவர்கள் முன் யோசனையுடன் செய்த வேலையை உங்களை ஏமாற்றி விட்டதாகக் கூறி விட்டீர்களே..?,உங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்தவர்களை அவமானப் படுத்தி விட்டீர்களே.. நேர்மையாக உழைப்பவர்கள் இந்த உலகத்தில் மிக மிகக் குறைவு சார்.. அதிலும் விசுவாசமிக்கவர்களைப் பார்ப்பதே அரிதாகி விட்ட இந்தக் காலத்தில்.. அவர்களைப் போல் இருப்பவர்களை தங்கத் தட்டில் தாங்க வேண்டும்.. அதை விடுத்து அத்தனை பேரின் முன்னிலையில் இப்படி.. இப்படி செய்து விட்டீர்களே..?"என்று வினவ.. அவளையே தீர்க்கமாக நோக்கியவன்.. "நீ எதற்காக இப்படி வக்காலத்து வாங்குகிறாய்...?,நீயும் என்னை எந்த வகையிலேனும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறாயா..?"என்று அழுத்தமாக வினவ.. அவனையே வெறித்து நோக்கிய நித்யாவிற்கு.. இவனிடம் போராடிப் பிரயோஜனமேயில்லை என்று தோன்றியது..

விளைவுகளைக் கணக்கிடாமல்.. விளைந்த நன்மைகளைக் கண்டு மகிழ்ச்சியடையாமல்.. நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பதைப் போல் ஒரே விசயத்தைத் தொங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டு எரிச்சலாக வந்தது. நிமிர்ந்து அவனை நோக்கியவள் "இந்த உலகத்தில் உங்கள் அன்னைக்கு அடுத்து உங்களது நன்மையை நாடும் ஒரே ஜீவன் நான் மட்டும் தான்.. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.."எனக் கூறியவளை ஆழ்ந்து நோக்கித் "தெரியும்.." என்றவனிடம் முறைப்பைச் செலுத்தி விட்டு.. சட்டென எழுந்து சென்றாள். அவள் கூறியது மனதை வசியம் செய்ய.. புன்னகை கொண்டவன்.. அவள் பின்னேயே ஓடினான்.

"நித்யா.. நித்யா.. நில்.."என்று அவள் கரம் பற்றியவன்.. "நான் பேசியது தவறு தான்.. மன்னித்து விடு ப்ளீஸ்.. வா.. வாங்கியதை வந்து சாப்பிட்டுச் செல்.." என்று அழைக்க.. "தயவு செய்து என் கையை விடுங்கள்.. நான் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.."என்று உறுவப் பார்க்க.. "ஏய்.. பொது இடத்தில் நின்று கொண்டு என்னடி விளையாட்டு இது..?,மரியாதையாக வருகிறாயா இல்லையா..?"என்று அதட்ட.. "எ..என்ன மிரட்டுகிறீர்கள்..?,இதையெல்லாம் உங்கள் அலுவலகத்தில்.. உங்கள் பேச்சிற்குக் கையைக் கட்டிக் கொண்டு நிற்பவர்களிடம் வைத்துக் கொள்ளுங்கள்.. என்னிடம் வேண்டாம்.."என்று பதிலுக்கு மிரட்டியவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன் நீங்களும் கூட என் அலுவலகத்தில் எனக்குக் கை கட்டி வேலை செய்யும் சாதாரணத் தொழிலாளி தான் மேடம்.."என்று

DO NOT COPY

கூற.. "நான் ஒன்றும் உங்கள்.."என்று ஆரம்பித்தவள்.. முடிக்க முடியாமல் திணறி.. "இப்போது கையை விடப் போகிறீர்களா இல்லையா..?"என்று கோபமாக வினவ.. "நீ இப்போது வரப் போகிறாயா இல்லையா..?"என்று அவன் வினவினான். "வர முடியாது.. கையை விடுங்கள்.."என்று பல்லைக் கடித்தவளிடம் "நீ வரவில்லையென்றால் நான் தூக்கிச் செல்ல வேண்டி வரும்.."என்று அவளது இடையைப் பற்ற.. "கௌதம்.."என்று அவன் கையைப் பற்றியவள்.. "நானே வருகிறேன்.."என்று நடந்து சென்றாள்.

அவன் அமர்ந்ததும் அவனை முறைத்தவள் "பேசுவதையெல்லாம் பேசி விட்டு.. ஏன் இப்படி எல்லாம் செய்கிறீர்கள்..?,சுற்றி இருப்பவர்களைப் பேச்சினாலும்.. செயலினாலும்.. கஷ்டப் படுத்துகிறோம்.. என்கிற நினைப்பே இல்லையா உங்களுக்கு..?என்ன வேண்டுமாலும் பேசுவீர்களா..?"என்று கோபமும்,அழுகையுமாக வினவியவளிடம்.. பார்வையைத் தழைத்தபடி அவள் கையைப் பற்றியவன் "சாரி நிதி.."என்று கூற.. "இதற்கொன்றும் குறைச்சலில்லை.."என்று முணுமுணுத்தபடிக் கையை உறுவிக் கொண்டாள்.

"ஒத்துக் கொள்கிறேன்.. நீ என் நன்மையை மட்டுமே நாடுபவள்.. என்னைப் பல விசயங்களில் மாற்றியிருக்கிறாய்.. இரண்டு வருடங்களா எந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு உயிர் கொடுத்தாய்.. பேசிப் பேசி.. என்னுடன் சண்டையிட்டு.. வாதாடி.. என்னை மாற்றினாய்.. என் அன்னை மீதான எனது அன்பை மீண்டும் தட்டி எழுப்பினாய்.. தோற்றத்தில் கூட அக்கறையற்றுப் பரதேசியைப் போல் திரிந்த என்னை.. மனிதனாக மாற்றினாய்... பெண்கள் மீது நான் கொண்டிருந்த வெறுப்பை மாற்றினாய்.. என்னைச் சுற்றி இருப்பவர்களை மகிழ்வடையைச் செய்தாய்.. உன்னை.. உன்னைப் போய் நான் ஏமாற்றுகிறாயா என்று கேட்டது தவறு தான்.. மன்னித்து விடு.. ப்ளீஸ்.."என்று கூற.. எதுவும் பேசாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

"ஆனால்.. அலுவலத்தில் நடந்தது வேறு நிதி.. எந்த முடிவாக இருந்தாலும்.. என்னிடம் கலந்தாலோசிக்காமல் அவர்களாகவே எப்படி எடுத்து விட முடியும்..?,அது நன்மையாகவே இருந்தாலும்..?, உண்மை தெரிந்ததும் நான் பாராட்டி சன்மானம் அளிப்பேன் என்று நினைத்திருப்பார்கள்.. எதையும் எதிர்பார்க்காமல் எனக்கு நன்மை புரிவதற்கு அவர்கள் நித்யா இல்லையே.. என்னிடம் கை நீட்டி சம்பளம் வாங்கும் சாதாரண வேலையாட்கள்.. அவ்வளவு தான்.. எப்படியிருந்தாலும் என்னிடம் மறைத்துச் செய்ய நினைத்தது தவறு தானே..?,கணக்கை வேறு மாற்றி எழுதி வைத்து.. என்னை நம்ப வைத்து ஏமாற்றியதற்கு.. என்னிடம் உண்மையைச் சொல்லியிருக்கலாமே..?,"என்றவனிடம் "உண்மையைச் சொல்லி நீ.. நீங்கள் ஒப்புக் கொள்ளாமல் போயிருந்தால்..?,இந்த நன்மையும் நடவாமல் போயிருக்குமே..?,"என்று வினவினாள் அவள்.

DO NOT COPY

“என்னிடம் ஆலோசித்திருந்தால்.. நான் மாற்று வழியைச் சொல்லியிருப்பேனே.. “என்றவனிடம் “சார்.. கணக்கை மாற்றி எழுதியும்.. அல்லது உங்களிடம் மறைத்தும்.. அவர்கள் எந்த சொந்த லாபத்தையும் தேடவில்லை.. தயவு செய்து அவர்களைக் குற்றவாளியைப் போல் நடத்துவதை நிறுத்துங்கள்..”என்று எரிச்சலுடன் கூற.. “எப்படியிருந்தாலும்.. என்னை ஏமாற்றி.. சரி, என்னை மறைத்துச் செய்தது தவறு தானே..?, அது நன்மை தான் என்றிருந்தால்.. என்னிடம் தைரியமாகச் சொல்லி இருந்தால் எந்தப் பிரச்சனையும் வந்திருக்காது..”என்றான் அவன்.

இந்த விசயத்தில் சரி தான்.. அவனிடம் ஆலோசிக்கலாம். ஆனால் நித்யாவின் விசயத்தை அவனிடம் ஆலோசித்துச் செய்திருந்தால்.. இவன் ஒப்புக் கொண்டிருப்பானா..?,உன்னைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க நித்யா என்று ஒரு பெண் வந்திருக்கிறாள்.. உனக்குச் சம்மதமா என்றா கேட்டிருக்க முடியும்..?,அய்யோ! ஆண்டவா! என்று நினைத்துக் கொண்டவள் அமைதியாக உண்ணத் துவங்கினாள்.

அதன் பின் இருவரும் அலுவலகம் திரும்பியதும் வேலையில் மூழ்கி விட.. அன்று விரைவிலேயே நித்யா இல்லம் திரும்பி விட்டாள். நடந்த அனைத்தையும் தந்தையிடமும்,அத்தையிடமும் கூற ஏனோ அவளுக்கு மனம் வரவில்லை.. எதற்கும் கலங்காத அவளே கலங்கிப் போய் விட்டாள். அத்தையம்மாள் நிச்சயம் அழுதே வடிந்து விடுவாள். வேண்டாம்.. வேண்டாம்..!

இந்தப் படுபாவியை அவள் காதலிக்காமல் இருந்திருந்தால்.. உன் சகவாசம் போதுமடா சாமி என்று அமெரிக்காவிற்குத் திரும்பியிருப்பாள்.. ஆனால் இப்போது உண்மை தெரிந்து அவன் சாமியாடத் தொடங்கி விட்டால்.. என்ன ஆவது என்பதை நினைக்கையிலேயே பயம் எழுந்தது அவளுக்கு. நித்யா.. நித்யா என்ன ஆகி விட்டது உனக்கு..?,கௌதமைச் சமாளிப்பது கடினமான விசயமா என்ன..?,தான் தண்ணீர் ஊற்றி வளர்க்கும் மரத்திற்கும் தனக்கும் எவ்வித வித்தியாசமுமின்றித் திரிந்தவனை.. இன்று.. ட்ரிம் செய்யப்பட்ட மீசையுடனும்.. அயர்ன் செய்த சட்டையுடனும்.. அழகாக மாற்றியிருக்கிறாள். நிச்சயம் அவனுக்கு உண்மை தெரிகையிலும் சமாளிப்பாள்.... தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டு.. அன்றிரவை கழித்தவள்.. மறுநாள் மகிழ்ச்சியுடனே கண் விழித்தாள்.

எப்படியும் கௌதம் தான் கணவன் என்றாகி விட்டது.. அவன் கோபப் பட்டாலும் கொஞ்சினாலும்.. அவள் தானே சமாளித்தாக வேண்டும்.. அவன் தானே கூறினான்..?,நித்யா அவனது நன்மையை நாடுபவள் என்று.. அப்படியானால் நிச்சயம் அவளையும்,அவளது காதலையும் புரிந்து கொள்வான்.. புரிந்து கொள்ளாமல் போனால்.. சும்மா விடுவாளா என்ன..?, புன்னகையுடனே குளித்துக் கிளம்பி அவன் வீட்டிற்குச் சென்றாள்.

DO NOT COPY

சிரிப்புடன் எதிர் கொண்ட அத்தையிடம் “குட் மார்னிங்” கூறி விட்டு அவர் அளித்தக் கா.்.பியை வாங்கிக் கொண்டு கௌதமின் அறைக்குள் நுழைந்தாள். அறையில் அவன் இல்லாததைக் கண்டு மேலும் முன்னேறியவள்.. குளியலறையில் சத்தத்தை உணர்ந்து.. குளிக்கிறான் போலும் என்றெண்ணிக் கொண்டு அவன் அறையை ஆராய்ந்தாள்..

அவள் முதல்முறை வந்த போது துணி கொண்டு துடைத்தாற் போல் சுத்தமாக இருந்த அறையில்.. இப்போது.. அவனது ஐ-பாட்,பாரதியார் கவிதைகளும் அங்கங்கே கிடந்தது.. அவனது ஐ-பாடை இயக்கி என்ன பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள முயன்றாள்..

“அனுபவம் புதுமை... அவளிடம் கண்டேன்..
அந்நாளில் இல்லாத பொல்லாத எண்ணங்களே..” என்று அது பாடத் துவங்க.. அவளுக்குச் சிரிப்பு வந்தது.. பாட்டைக் கேட்டபடி நின்று விட்டவள்.. குளியலறைத் திறக்கும் சத்தம் கேட்டுச் சட்டெனத் திரும்பி “பி.பி.ஸ்ரீநிவாஸ் பாடல்கள் உங்களுக்குப் பிடிக்குமா சார்..?”என்று ஆரம்பித்தவளின் வார்த்தைகள் உள்ளேயே போய் விட்டது.

குளியலறையிலிருந்து வெளி வருபவன்.. ராஜ உடையிலா வருவான்..?, நித்யா உனக்கு அறிவே இல்லை என்று நினைத்தவளுக்கு.. இடுப்பில் துண்டுடன் தலை துவட்டியபடி நடந்து வருபவனை நிமிர்ந்துப் பார்க்க முடியாமல் வெட்கம் பிடுங்கித் தின்றது. “சா...சாரி..”என்று திரும்பி நின்றவளைக் கண்ட கௌதமிற்கு.. அவளது வெட்கம் சுவாரசியமாகிப் போனது..

மேலும் அவளிடம் வம்பு செய்ய எண்ணி அவன் அருகே வர.. விதிர்விதிர்த்துப் போய் விலகியவளின் அருகே நின்றவன்.. “பாட்டு கேட்கிறாயா..?”என்று ஒரு ஹெட்செட்டை வாங்கித் தன் காதில் வைத்தான்.வெகு அருகில் நின்றவனிடத்திலிருந்து புறப்பட்ட வாசம் அவளை ஏதோ செய்ய.. இறுகக் கண் மூடி நடுங்கியவளைக் கண்ட கௌதமிற்கும் நிலை தடுமாறிப் போனது..

நடுங்கும் அந்த இதழ்களைச் சிறை செய்தால் என்ன.. இறுகக் கண் மூடியிருந்த அந்த மைவிழிகளில் முத்தமிட்டால் என்ன.. ஆப்பிள் பழங்களாய் சிவந்திருந்த அந்தக் கன்னங்களில் பற்கள் பதியக் கடித்தால் என்ன.. அழகான அந்தக் கழுத்தில் முகம் புதைத்தால் என்ன.. என்று ஆழ் மனது ஆசைகள் துள்ளி எழுந்து ரீங்காரமிடத் துவங்க.... சட்டெனத் தலையைச் சிலுப்பி விலகிச் சென்றான் அவன்.

அவன் சென்றதும் சீராக மூச்சு விடத் துவங்கிய நித்யா சிறிது நேரம் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு.. “சார்..”என்றழைத்தாள். “ம்..”என்று டிரெஸ்ஸிங் ரூமிலிருந்து குரல் கொடுத்தபடி வெளியே வந்தான் அவன். அப்போதும்

DO NOT COPY

கையில்லாத பனியனுடன் இயல்பாக நடந்து வந்தவனைக் கண்டு துள்ளிய மனதை அடக்கி.. குரலைச் சாதாரணமாக்கி “உங்களுக்குக் கா∴பி கொடுக்கத் தான் வந்தேன்.. இந்தாருங்கள்..”என்று நீட்டியவளைக் கண்டபடியே கா∴பியைக் கையில் வாங்கிக் கொண்டவன்.. ஒரு கையால் தலையைத் துவட்டியபடி மறுகையால் கா∴பியைப் பருகினான்.

பால்கனியை வெறித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்தபடியே பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த நித்யா.. பின் “என்ன..?.ஐ-பாட் முழுக்கக் காதல் பாடல்கள் தான் இருக்கிறது..?,பாரதியார் கவிதைகளில் கூடக் காதல் பாடல்கள் இருக்கும் பக்கத்தைத் தான் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்.., என்ன விசயம் கௌதம் சார்..?”என்று சிரித்தபடி வினவ.. “ப்ச்,நீ எதற்காக இப்போது அறைக்குள் நுழைந்தாய்?,அனுமதியற்று வந்ததோடு இல்லாமல்.. என் பொருட்களை வேறு உபயோகித்துக் கொண்டிருக்கிறாய்...?,ஐ-பாடைக் கொடு இடியட்..”என்றபடி அருகே வந்தவனின் கைக்குள் சிக்காது.. “ம்ஹ்ம்.. நீங்கள் காரணத்தைச் சொல்லாமல் நான் தர மாட்டேன்..”என்று ஓடியவள்.. டீபாயின் மீது மோதி விழப் பார்க்க.. “ஏ..ஏய்...”என்று அருகே வந்தவனது பனியனைப் பற்றி நிமிர்ந்தவள்.. “நல்ல வேளை கீழே விழவில்லை..”என்று புன்னகைக்க.. அவனோ முறைத்தபடி நின்றான்.

அவனது வெற்று மார்பில் படர்ந்திருந்த சுருள் முடிகளில் முகம் பதிக்க.. அவள் கன்னம் துறுதுறுக்க.. அவனது ஆறடி உயரமும்.. களைந்து கிடந்தக் கேசமும்.. அழுத்தமான விழிகளும்.. இறுகிக் கிடந்த இதழ்களும்.. அவளது ரசனையைத் தூண்டியது.. இமைக்காமல் அவனையே நோக்கியவள்.. “ஒரே.. ஒரு முறை.. கட்டிக் கொள்ளட்டுமா.. ப்ளீஸ்...”என்று கண்களைச் சுருக்கி வினவ.. விழி விரித்து நின்று விட்டான் அவன்.

அவனது மௌனத்தைச் சம்மதமாக ஏற்று.. பற்றியிருந்த இருகரங்களை எடுத்து.. அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்து.. அவன் மார்பில் தன் கன்னம் பதித்தாள்.. செய்கையற்றுக் கிறங்கிப் போய் நின்று விட்டவன்.. தன் மார்பில் தலை சாய்த்திருந்தவளைக் குனிந்து நோக்கினான். எப்படி இயல்பாக.. மனதின் எண்ணங்களையும்.. ஆசைகளையும்.. தட்டி எழுப்புகிறாள்.. அவளிடம் தான் தோற்றுக் கொண்டிருப்பதை சுகமாக உணர்ந்தவனுக்கு.. அவளைத் தன்னிடமிருந்து விலக்கத் தோன்றவில்லை..

கௌதம் தன்னை அணைக்கவில்லை என்று வருத்தமாக இருந்தாலும்.. அவன் தன்னை விலக்கி நிறுத்தாதே அவளுக்குப் போதுமானதாக இருக்க.. கண் மூடி நிம்மதியாகச் சாய்ந்து விட்டாள். தன்னை அணைத்திருந்தவளின் தோளைப் பற்றியவன்.. “நித்யா..”என்றழைக்க.. “ம்..”என்றவளிடம் “இப்போது பயம் போய் விட்டதா..?”என்று மென்மையாக வினவினான்.


DO NOT COPY

அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. பின் குறும்பாக... "ம்ஹ்ம்.. தினமும் இதே போல்.. ஒரு முறை இறுகக் கட்டிக் கொண்டால் தான் பயம் போகும்.."என்று கண்களை உருட்டிக் கூற.. முறைக்க முயன்றுத் தோற்றவன்.. "ராட்சசி.."என்று விலக்கி நிறுத்தினான்.



DO NO

# அத்தியாயம் – 13




**ஓர் இரவு,...!**
**வானில் வெள்ளிப் பந்தாய்..**
**உருண்டோடிக் கொண்டிருந்த வெண்ணிலவு..!**
**சலசலவென சத்தம் எழுப்பி..**
**அழகாய் பரவியிருந்த ஏரிக்கரை..**
**பன்னீர் பூக்கள் சிதறிக் கிடந்த மரத்தடியில்..**
**உன்னையும்,என்னையும் ஏந்திய மஞ்சம்..**
**என் மார்பில் கண் மூடித் துயில் கொண்ட நீ..!**
**உன் தோளை வருடியபடி சிரிப்புடன் நான்..!**

**வா**ழ்க்கை மிகவும் அழகாக சென்று கொண்டிருப்பதாகவே பட்டது நித்யாவிற்கு. பின்னே?, பிறந்து வளர்ந்த தேசத்தை விடுத்து.. அங்கே பழகியிருந்த வாழ்க்கை முறைகளை மறந்து.. விருப்பமற்று தமிழ் நாட்டில் கால் பதித்து.. இந்த ஆறடி மனிதனுடன் சண்டையிட்டு.. அவனை வென்று கடைசியில் அவனிடமே மனதைப் பறி கொடுத்து.. இந்த நாட்டையும்,காதலனையும் விட்டுச் செல்ல மாட்டேனென்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கிறாள். வந்த போது இருந்த மனநிலை என்ன?, இப்போதிருக்கும் மனநிலை என்ன..? சிரிப்பு வந்தது அவளுக்கு.

கௌதமின் அறையில் ஜன்னல் வழி தெரிந்த தூரத்துக் கடல் பரப்பை ரசித்தபடி தனது மாலைக் கா.ஃபியைப் பருகிக் கொண்டிருந்தாள் நித்யா. "ஷ்யூர் சார்.. நிச்சயம் செய்து விடலாம்.."என்று கௌதம் யாருடனோ அலைபேசியில் உரையாடியபடி உள்ளே நுழைவதைக் கண்டு தனது சிந்தனைக்குத் தற்காலிகத் தடையிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அலைபேசியை அணைத்தபடி அவளருகே வந்து நின்றவன்.. நிமிர்ந்து அவள் முகம் நோக்கினான். கா.ஃபி கப்பைக் கையில் பிடித்தபடி சந்தோசச் சிவப்பேறிய முகத்துடன்.. காதலேறிய கண்களுடன்.. சிரிப்புடன் நின்று கொண்டிருந்தாள் நித்யா. வழக்கம் போல் "என்ன..?"என்றவனிடம் "என்ன?,இது தான் நீ என்னிடம் எப்போதும் கேட்கும் ஒரே கேள்வி.. உன்னைப் பார்ப்பதற்காக.. என்

DO NOT COPY

மதியத் தூக்கத்தைத் தியாகம் செய்து மேக்கப் கூட செய்து கொள்ளாமல் ஓடி வந்திருக்கிறேனே.. என் முகத்தைப் பார்த்தேனும் பேசலாமில்லையா..?" என்று வினவ.. அவனோ சட்டைப் பட்டனைக் கழட்டியபடி சிரிப்புடன் நகரப் பார்த்தான்.

"கேட்டுக் கொண்டே இருக்கிறேன்.. செல்கிறாயே..?"என்று அவன் பின்னோடே நடந்தாள். சட்டையைக் கழட்டியவன்.. முகம் கழுவச் செல்ல.. குளியலறை வாசலிலேயே நின்றவள்.. அவன் முகம் கழுவுவதைக் கண்டபடி "ஏன் கௌதம்..?,நீ எப்போதும் இப்படி சிடுமூஞ்சியாகத் தான் இருப்பாயா..?,நான் ஆண்ட்டியிடம் சொல்லி உன் சிறுவயதுப் புகைப்படங்களையெல்லாம் எடுத்துப் பார்த்தேன்.. அப்போதும் கூட நீ உர்ரென்ற முகத்துடன் தான் இருக்கிறாய்.. கொஞ்சம் சிரித்தால் தான் என்ன?,ம்?"என்று கேட்க.. முகத்தைத் துடைத்தபடி வெளியே வந்தவன்.. "எனக்கும் சேர்த்துத்தான் நீ எந்நேரமும் திறந்த வாயுடன் இளித்தபடி திரிகிறாயே..?"என்று கூறினான்.

"இதோடா.. பின்னே உன்னைப் போல் அய்யனார் மாதிரி நானும் இருக்க முடியுமா..?,ம்ஹ்ம்..."என்று திரும்பிக் கொண்டவள்.. பால்கனியில் அவனருகே சென்று அவனை இடித்தபடி நின்றாள், "உன் தந்தையில்லையா..?,இங்கே இருக்கிறாய்..?"என்றவனிடம் "அப்பா வெளியே சென்றிருக்கிறார்.. வீட்டில் போராக இருந்தது.. உன்னை வேறு காலையிலிருந்து பார்க்கவில்லையா அதனால் தான் வந்து விட்டேன்.."என்று சிறுபிள்ளையாக நகைத்தவளைச் சிரிப்புடன் நோக்கியவன்.. அலைஅலையாகக் காற்றில் பறந்து கொண்டிருந்தக் கூந்தலைக் கையில் பிடித்து விரலில் சுருட்டியபடி "நீ எங்கிருந்து வந்தாய் நிதி..?"என்று மென்மையாக வினவ.. அய்யோ! என்று பதறிப் போன நிதி "ஏன்..?,இண்டர்வியூ அன்று என் பயோடேட்டாவில் தான் பார்த்தீர்களே.. நியூயார்க்கிலிருந்து வந்திருக்கிறேன்..."என்று கூற.. தலையைப் பின்னுக்குச் சாய்த்து கடகடவெனச் சிரித்தவன்.. "மக்கு.."என்று முன் நெற்றியில் குட்டி வைத்தான்.

ஓ! விளையாட்டுக்குத் தான் கேட்டானா..?, படுபாவி! பயந்து போனேன்..! என்று மூச்சு விட்ட நித்யா.. சட்டெனத் தோன்றிய உணர்வுடன் "என்னை என்னவென்று அழைத்தீர்கள்..?,"என்று வினவினாள். புரியாமல் அவள் முகத்தை நோக்கியவன் "என்னவென்று அழைத்தேன்..?"என்று அவளிடமே வினவினான். அப்போது தான் அவன் செய்கையைக் கவனித்தவள்.. அவன் கையில் சிக்கிருந்தத் தன் கூந்தலையும்.. அவன் தனக்கு வெகு அருகே நின்றிருந்தையும் கண்டவளுக்கு உள்ளம் துள்ளியது. இது எதையும் உணராது.. அவள் முகத்தைக் கண்டபடியே நின்றிருந்தவனைக் காண்கையில் சிரிப்பு வந்தது.. இதில் செல்லப் பெயராக நிதி வேறு!

DO NOT COPY

“என்னை என்ன சொல்லி அழைத்தீர்கள் இப்போது..?,”என்று மீண்டும் வினவ.. “நிதி என்றழைத்தேன்..,ஏன்..?”என்றவனிடம் “என்னை நிது என்று தான் அழைப்பார்கள்.. இதுவரை யாரும் நிதி என்று அழைத்ததில்லை.. “என்று கூறினாள். சிரிப்பும்,களிப்பும் கலந்து மென்மையாக மாறி விட்ட அவன் முகத்தை ரசித்தபடி அவள் நின்றிருக்க.. நிலவொளியில் ஜொலித்துக் கொண்டிருந்த நித்யாவின் முகத்தை அவன் ரசித்துக் கொண்டிருந்தான்.

வளவளவென பேசியபடி நின்று கொண்டிருந்தவளை இமைக்க மறந்து அவன் பார்த்துக் கொண்டிருக்க.. அவன் பார்வை மாறி விட்டதைக் கண்ட நித்யாவிற்கு முகம் சிவந்து போனது. சிலுசிலுவெனத் தழுவிச் சென்ற காற்றும்.. தூரத்துக் கடற்பரப்பும்.. பால் பொழியும் நிலவும்.. தன் அருகே நின்றிருந்த அழகுச் சிலையும் அவனை மையல் கொள்ள வைத்தது..

கூந்தலை வருடிய அவனது கரங்கள் மெல்ல எழுந்து அவள் கன்னத்தை வருட.. கூசிச் சிலிர்த்துப் போன நித்யா.. முகத்தை வேறு புறம் திருப்ப.. அவளருகே வந்து நின்றவன்.. பால்கனிக் கம்பியை இறுகப் பற்றியிருந்தவளது கைகளைப் பற்றினான். சொக்கிப் போன விழிகளை நிமிர்த்தி அவன் முகம் நோக்க.. அவள் பார்வையில் என்ன கண்டானோ.. சட்டென அவளை விட்டு விலகித் திரும்பி நின்றான்.

“எ..என்ன..?”என்று திக்கித் திணறியவளது வார்த்தைகள் அவன் காதில் எட்டியதாகவே தெரியவில்லை.. பெரிய பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டவன் விறுவிறுவென நடந்து வெளியே சென்று விட.. நித்யாவிற்குத் தான் ஏமாற்றமாகி விட்டது.. என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்..?, இவனது ஒரு பார்வைக்காகவும்,ஒரு தீண்டலுக்காகவும் அவள் தினம் தினம் கனவு கண்டு கொண்டிருக்க படுபாவி... சட்டென விலகிச் சென்று விட்டான்.. அவளது ஏக்கங்களையும்,தவிப்பையும் உணரவே மாட்டான் போலும்.. பாவி! எரிச்சலுடன் மேலும் சிறிது நேரம் புலம்பியபடி அங்கேயே நின்றிருந்தவள்.. பின் கீழே சென்றாள்.

வசந்தியிடம் சென்று கிளம்புகிறேன் அத்தை என்றதும் “சாப்பிட்டு விட்டுச் செல் கண்ணே..”என்றவரிடம் “வேண்டாம் அத்தை.. பசியில்லை..”என்று சோர்வுடன் கூறியவளிடம் “என்னவாயிற்று நிதும்மா..?,உடம்பு சரியில்லையா..? என்ன செய்கிறது..?”என்று விசாரித்தவரிடம் “ஒன்றுமில்லை அத்தை..”என்றவள் “வருகிறேன்..”என்று நகர்ந்தாள். “கௌதமை சாப்பிட அழைத்து வா வைகுந்தா.. தோட்டத்தில் இருக்கிறான்” என்று வசந்தி வைகுந்தனிடம் கூற... ஒரு நொடி நின்றவள் பின் இவனைப் பார்க்காது சென்றாலும் நித்திரை கொள்ள முடியாது.. இம்சை பிடித்தவன்.. என்று மனதுக்குள் வைதபடி தோட்டத்தை நோக்கி நடந்தாள்.

அங்கே தன்னை சாப்பிட அழைக்க வந்த வைகுந்திடம் “அவள் இருக்கிறாளா..?”என்று விசாரித்தான் கௌதம். “யாரைக் கேட்கிறீர்கள் தம்பி..?. நித்யாவையா..?,ஆமாம் இருக்கிறார்கள்..”என்று கூற.. ஒரு நீண்ட மூச்சை வெளியிட்டவன் “அவள் சென்ற பின் வருகிறேன்..”என்று முடித்தான். இதைக் கேட்ட வைகுந்தன் சரியென்று விலகிச் சென்று விட.. அவனுக்குப் பின்னால் நின்று கேட்டிக் கொண்டிருந்த நித்யாவிற்குத் தான் கோபமாக வந்தது.

வைகுந்த் செல்லும் வரை அமைதி காத்தவள்.. “ஓ!நான் சென்றால் தான் வீட்டிற்குள் வருவீர்களாக்கும்..?,நான் இங்கேயே இருந்து விட்டால் என்ன செய்வீர்கள்..?தோட்டத்திலேயே பிழைப்பு நடத்தத் தொடங்கி விடுவீர்களா..?,என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் உங்கள் மனதில்..?” என்று பாயத் துவங்க.. அவள் ஆரம்பித்ததும் திடுக்கிட்டுத் திரும்பிய கௌதம் அவள் கத்தியதும் தலை முடியைக் கோதியபடி வேறு பக்கம் பார்த்தான்.

அப்போதும் அவன் தலை கோதும் அழகை ரசித்த மனதை அடக்கி விறுவிறுவென அவனருகே சென்றாள். அவள் தன்னருகே வந்ததும் அவன் நடக்கத் துவங்க.. அவன் கைப் பற்றி நிறுத்தியவள் “ஏன் வைகுந்த் அண்ணாவிடம் அப்படிச் சொன்னீர்கள்..?,”என்று கேட்க.. அவன் அவளது முகத்தையும் பார்க்காமல்.. அவளுக்குப் பதிலும் கூறாமல்.. வேறு புறம் பார்த்தபடி நின்றிருந்தான்.

அவன் முகத்தைப் பற்றித் தன்புறம் திருப்பியவளின் கைகளை “ப்ச்,நிதி..”என்று அவன் விலகப் பார்க்க.. “ஏன் விலகிச் செல்கிறீர்கள்..?,என்ன நடந்து விட்டதென்று இப்படி நடந்து கொள்கிறீர்கள்..?,என் முகத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்காமல் போய் விட்டதோ..?,நான் சென்றதும் வருகிறேன் என்கிறீர்கள்..?” என்று கத்த.. “தெரியாமல் சொல்லி விட்டேன்.. மன்னித்து விடு தாயே..”என்று கைக் கூப்பியவனை “இப்போது கூட என் முகத்தைப் பார்க்காமல் தான் பேசுகிறீர்கள்..”என்றவளிடம் பதில் சொல்லாமல் மேலே நடக்கத் தொடங்கினான்.

“கௌதம்..”என்று ஓடிச் சென்று அவன் முன்னே நின்றவள்.. “என் முகத்தைப் பார்க்க மாட்டாயா..?,நீ என்னைக் காணாவிடில் நான் இங்கேயிருந்து செல்ல மாட்டேன்..”என்று பிடிவாதம் பிடிக்க.. “உனக்கு என்ன தான் வேண்டும்..?”என்று எரிச்சலுடன் அவள் முகம் நோக்கினான். “ஹா.. ஹா.. பார்த்து விட்டாயா..?ம், எனக்கு என்ன வேண்டும்..?”என்று சிந்திப்பது போல் நடித்தவள்.. “ஒரே ஒரு முத்தம் வேண்டும்...”என்று கூற.. அவளை முறைத்தவன் “முட்டாள் தனமாக உளறிக் கொண்டு திரியாதே..”என்று கூறி விட.. “ப்ளீஸ்.. ப்ளீஸ்.. கௌதம் ப்ளீஸ் டா..”என்று கெஞ்ச.. “டாவா..?”என்று திகைத்தவன் அவள் காதைப் பற்றித் திருகி “நான் உன் முதலாளி.. என்னையே டா என்கிறாயா...?,”என்று

DO NOT COPY

அவன் திட்டியதும் “முதலாளியாய் இருந்தாலும் நீ என் காதலனாயிற்றே.. அப்படித் தான் அழைப்பேன்” என்றவள் அவன் தன்னருகே நின்றிருப்பதை பயன்படுத்திக் கொண்டு அவன் கன்னத்தைப் பற்றி.. அழுந்த முத்தமிட்டு ஓடிச் சென்றாள்.

திகைத்து நின்று விட்ட கௌதமிற்கு.. தன்னை விட்டு விலகிச் செல்பவளை ஓடிச் சென்று அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. இவ்வளவு நேரமாக தனக்குள் ஜபித்துக் கொண்டிருந்த கட்டுப்பாடுக் கொள்கைகள் அனைத்தும் மறந்து போக.. மனது முழுதையும் நித்யாவே நிறைத்திருந்தாள். வேண்டாம் வேண்டாமென்று விலகிப் போய் நின்றாலும் அவளும்,அவளது நினைவுகளும் அவனை விடாது துரத்தியது,

அவள் அருகில் இருக்கையில் ஒரு வகையான அவஸ்தை என்றால்.. அவள் விலகிச் செல்வதோ அதை விட அவஸ்தையாக இருந்தது. நெருங்கி நின்று அவள் இம்சிக்கையில் கஷ்டப்பட்டுத் தன்னில் எழும் உணர்வுகளை அடக்கப் பழகியிருந்தவனுக்கு.. அவள் சென்ற பின்பு மனதில் எழும் கற்பனைகளை அடக்கத் தெரியவில்லை.. அவள் உரசிச் சென்ற தேகம்.. தீயாய் எரியத் துவங்க.. அவளது பெண்மையின் மென்மையும்,துறு துறு விழிகளும்.. கவிதையான சிரிப்பும்.. மறுபடி மறுபடி கண்ணில் தோன்றி அவனை இம்சித்தது.

அலை அலையாக.. அழகாய்ப் பரந்து விரிந்து அவளது தோளைத் தழுவியிருக்கும் கார் கூந்தலில் கண் மூடி முகம் புதைத்து.. துறுதுறுவென இங்குமங்கும் அலை பாயும் அந்தக் கண்களில் இதழ் பதித்து.. சாயம் பூசாது இயல்பாகச் சிவந்திருக்கும் அந்த இதழ்களைச் சிறை செய்து.. அவளுள்ளே புதைந்து விட வேண்டும் போல் உணர்வெழுந்தது அவனுக்கு.

ஆனால்.. ஆனால் ஏதோ ஒன்று அவனை அவள் புறம் நெருங்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. நிச்சயம் பெண்கள் மீது அவனுக்கிருந்த வெறுப்பு இப்போது முற்றிலுமாக மாறி விட்டது. ஓரிருவர் அவன் வாழ்வில் வந்து போன பெண்களைப் போலிருந்தாலும்.. அன்னையைப் போல்.. நித்யாவைப் போல் சிறந்த பெண்கள் உலகில் நிறைய பேர் இருக்கிறார்கள் என்று நிச்சயமாக நம்பினான்.

ஆனால் எண்ணங்களும்,கருத்துகளும் மாறி விட்டது என்பதற்காக நித்யாவின் காதலை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.. அவளது அன்பை,காதலை,நேசத்தை.. அவளது அருகாமையை,விளையாட்டை,துடிப்பை, கோபத்தை அனைத்தையும் ரசித்தான். ரசிக்கிறான்.. அவனது பாறை நெஞ்சிலும் நேசம் என்ற ஒரு உணர்வை உண்டானது நிச்சயம் அவள் மட்டும்

DO NOT COPY

தான்.. இந்த நேசம் அவனது மனதை விட்டு அகலப் போவதில்லை.. ஆனால் அவளோடு இணைந்து மகிழ்ச்சி கொள்ளப் போவதும் இல்லை...

ஏதோ ஒரு உறுத்தல்... அவனுக்கு ஏற்கனவே திருமணம் என்கிற பெயரில் நடந்த ஒன்றை நினைத்து வருந்திக் கொண்டிருக்கிறானா..?,இல்லையே! நித்யாவிற்குத் தான் அவனைப் பற்றிய அனைத்து விவரங்களும் தெரியுமே.. அவளும் அந்தத் திருமணத்தை ஒரு பொருட்டாகக் கூட எண்ணவில்லையே! பின் என்னவாக இருக்கும்..?,எவ்வளவு யோசித்தும் அவனுக்குப் பதில் கிடைக்கவேயில்லை..

அவளருகே இல்லாத போது அவள் தன்னை நெருங்குவதை நிச்சயம் அனுமதிக்கக் கூடாதென்று தனக்குத் தானே கட்டளைகளைப் பிறப்பித்துக் கொள்பவன்.. இன்று அவனை மீறி.. அவள் கைப் பற்றி,கன்னம் வருடி.. ச்ச, சுதாரித்து அவன் விலகியிரா விட்டால் என்ன நடந்திருக்கும்.. புத்தியில்லாமல் நடந்து கொண்டேனே.. இனியொரு முறை அவள் முன்பு இப்படி செயலிழந்து போகக் கூடாது.. என்று தீர்மானித்துக் கொண்டு சாப்பிடச் சென்றான்.

மறுநாள் விடுமுறை என்பதால் நித்யா ஆற அமரக் குளித்துக் காலை சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு கௌதமைக் காண வர.. அவனோ அவள் வருவதற்கு முன்பே.. வீட்டை விட்டுக் கிளம்பி வெளியே சென்று விட்டான். வீட்டிலிருந்தால் எப்படியும் அவளைக் காண வேண்டி வரும்.. அவளருகே வந்தால் மனம் அலை பாயும்.. தேவையா..? என்கிற மனநிலையில் அவன் வெளியே சென்று விட.. அங்கே இவனைக் காணாது நித்யா தான் தவித்துப் போய் விட்டாள்..

மாலை வரை வாசலைப் பார்த்தபடி அமர்ந்து விட்டவளைக் கண்டு “நித்யா மாங்காடு கோவிலுக்குச் சென்று வரலாம் வா..”என்றழைத்துச் சென்றார் வசந்தி. இரவு ஒன்பது மணிக்கு வீடு வந்து சேர்ந்த கௌதம் நித்யாவின் வீட்டு வாசலைப் பார்த்தபடி தன் வீட்டினுள் நுழைந்தான். அன்னையைக் காணவில்லையென்று வைகுந்திடம் விசாரிக்க.. இருவரும் கோவிலுக்குச் சென்று விட்டார்கள் என்றான் அவன்.

ஊர் சுற்றக் கிளம்பி விட்டாள்.. நாள் முழுக்க என்னைக் காணவில்லையென்கிற தவிப்பேனும் இருக்கிறதா..? என்று பொறுமியபடி சிட் அவுட்டில் அமர்ந்தவன் கண் மூடித் தூங்கிப் போனான். அடுத்த அரை மணி நேரத்தில் வசந்தியும், நித்யாவும் வீடு வந்து சேர்ந்தனர்.

“அத்தை.. கௌதம் வந்து விட்டான் போலும்.. வாருங்கள் சீக்கிரம்..”என்று உள்ளே ஓடிச் சென்றாள். “கௌதம்....” என்று கையில் பூக்கூடையுடனும்,நெற்றியில் குங்குமத்துடனும், தலை நிறைய மல்லிகைப்

DO NOT COPY

பூவுமாக சிகப்பு நிறச் சுடிதாரில் அவன் மடியில் அமர்ந்திருந்தாள் நித்யா. பதறி எழுந்து “ஏய்.. எழுந்திரு.. யாரேனும் பார்த்து விடப் போகிறார்கள்.. முட்டாள்...”என்று அடித் தொண்டையில் கர்ஜித்தபடி அவளை விலக்கப் பார்த்தான் கௌதம்,

“நான் எழ மாட்டேன்.. நீ எதற்காக என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட வெளியே சென்று விட்டாய்.. காலையிலிருந்து உன்னைக் காணாமல் எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா..?”என்று கண்ணை உருட்டியவளைக் கண்டு கோபமும்,சிரிப்புமாக இருந்தது கௌதமிற்கு. ஆனாலும் காட்டிக் கொள்ளாமல் “எங்கே சென்று விட்டு வருகிறீர்கள் இருவரும்..?,மணி என்ன தெரியுமா..?,இவ்வளவு லேட்டாக வருகிறீர்கள்..?,அறிவில்லையா..?” என்று பாய்ந்தவனிடம் “அறிவைப் பற்றியெல்லாம் நீ பேசாதே முட்டாள் கௌதம்..”என்றவள் “ஏய்.. என்னடி ரொம்பப் பேசுகிறாய்...?”என்று அதட்டியவனைப் பொருட்படுத்தாதுத் தன் பூக்கூடையில் இருந்த பிரசாதத்தை எடுத்து அவன் வாயில் திணித்து விட்டு.. அவன் நெற்றியில் குங்குமத்தை இட்டாள். “எப்படியாவது கௌதமிற்கு நல்ல புத்தியைக் கொடுத்து என்னைக் காதலிக்க வை கடவுளே..”என்று வேண்டியபடி அவன் நெற்றியில் இட.. பொங்கலை விழுங்கிக் கொண்டிருந்த கௌதமிற்குப் புரையேறியது,..

“அடிப்பாவி! இதையெல்லாம் சாமியிடம் கேட்பாயா..?,அவனவன் பசி,பட்டினி கஷ்டமென்று கடவுளை அழைக்கிறார்கள்.. நீ உன் காதலுக்காக வேண்டிக் கொண்டிருக்கிறாய்.. லூசு..”என்று அவன் சிரிக்க.. “என்ன சிரிப்பு..?,என் நிலைமை அப்படியிருக்கிறது.. “என்று நொடித்துக் கொண்டவள் “நீ எங்கே சென்றாய்..?,என்னிடம் கூடச் சொல்லாமல்..?”என்று வினவ.. கையை நீட்டி சோம்பல் முறித்தவன்.. “வேலை..”என்று கூற.. “சண்டே கூட என்ன வேலை.. பொய் சொல்லாதே..”என்று தொடங்க.. “சோர்வாக இருக்கிறது எனக்கு.. நீ வேறு படுத்துகிறாயே..”என்று எரிச்சலுடன் கூறியவனை அவள் பேச்சற்று முறைக்க.. ஒரு நொடி அவள் கண்களை எதிர் கொண்டவன் அடுத்த நொடி “ப்ச்,நிதி அப்படிப் பார்க்காதே ப்ளீஸ்...”என்று அவள் கழுத்தில் முகம் புதைத்தான்.

முகத்தில் புன்னகை அரும்ப.. அவனை நோக்கியவள்.. “என்னைத் தவிர்ப்பதற்காகத் தான் சென்றிருப்பீர்கள்.. எனக்கு நன்றாகத் தெரியும்..”என்று முணங்க.. அவள் கழுத்தில் மேலும் ஆழப் புதைந்தான் அவன். “இன்று முழுதும் என்னைத் தவிர்த்ததற்காக நீங்கள் என்னை நாளை என்னுடன் ஷாப்பிங் வர வேண்டும்.. இது தான் உங்களுக்குத் தண்டனை..”என்று அவள் கூற.. நிமிர்ந்து முறைத்தவன் “ஆசை தான்.. போடி..”என்று அவளைத் தூக்கி நிறுத்தியவன்.. “என்னைக் கூட்டிச் செல்லா விட்டால் சும்மா விட மாட்டேன்

DO NOT COPY

ராசா.. நியாபகம் வைத்துக் கொள்ளுங்கள்..”என்று மிரட்டியவள்.. மேலும் சிறிது நேரம் அரட்டை அடித்து விட்டு.. வீட்டிற்குப் புறப்பட்டாள்.

மறுநாள் காலை வெளியே செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்த நித்யாவைக் கண்ட விஸ்வநாதன் “நிதும்மா இன்று அரசு விடுமுறை நாள் தானே..?,எங்கே கிளம்பிக் கொண்டிருக்கிறாய்..?”என்று வினவ “நான் ஷாப்பிங் செல்கிறேன் டாடி.. யாருடன் தெரியுமா..?,கௌதமுடன்..”என்றவளைத் திறந்த வாயுடன் நோக்கியவர் “கௌதமுடனா..?,அந்த அளவிற்கு முன்னேறி விட்டாயா..?”என்று கேலி செய்து அனுப்பி வைத்தார்.

தனக்குப் பிடித்த கருப்பு நிற பாவாடை,சட்டையை அணிந்து கொண்டு அவன் வீட்டிற்கு ஓடிச் சென்றாள். வசந்தி வரவேற்கும் முன் “அத்தை.. நான் ஏற்கனவே அப்பா செய்து கொடுத்த உப்புமாவை சாப்பிட்டு விட்டேன்.. நீங்கள் அனாவசியமாக ஒரு கேள்வியை வீணடிக்காதீர்கள்..”என்றவள் தொடர்ந்து “கௌதம் எழுந்து விட்டானா..?”என்று விசாரித்தாள். சிரிப்புடன் அவள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர் “உன் ஹீரோ இன்னும் எழவில்லை.. நித்திரையில் தான் இருக்கிறான்..”என்று கூற.. “ஓகே!”என்று ஓடிச் சென்றாள்.

கதவைத் திறந்து கொண்டு அவன் அறைக்குள் நுழைந்தவள் படுக்கையில் அவன் இல்லாததைக் கண்டு பார்வையைத் திருப்பினாள். படுக்கைக்கு அருகே போடப்பட்டிருந்த நாற்காலியில் வசதியாக படுத்து உறங்கிக் கொண்டிருந்தான் அவன். கையில் வைத்திருந்தப் புத்தகத்தின் நிலை அவன் இரவு வெகு நேரம் வாசித்துக் கொண்டிருந்தான் என்பதை பறைசாற்றீயது. படித்துக் கொண்டிருக்கையிலேயே உறங்கி விட்டான் போலும்..

அவனைப் பார்த்துக் கொண்டே நின்று விட்டவளுக்கு ஒரு யோசனை தோன்ற.. அவன் கையிலிருந்தப் புத்தகத்தை விலக்கி.. அவன் மீது முழுவதுமாகச் சாய்ந்து அமர்ந்தாள். அவன் மார்பில் தலை வைத்து அவனது இதயத் துடிப்பை சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் அவனிடம் அசைவு தெரிய.. விழித்து விட்டான் போலும்.. திட்டு வாங்கப் போகிறாய் நிது.. என்று இரு கண்களையும் அழுந்த மூடிக் கொண்டவள்... அசைந்து திரும்பிய கௌதமனின் கரங்கள் தன் இடையோடு சேர்த்து அணைப்பதைக் கண்டு திகைத்து நிமிர்ந்து நோக்கினாள்.

அவன் உறக்கத்தில் தான் ஆழ்ந்திருந்தான். பயமும்,வியப்பும்,மகிழ்ச்சியும் ஒரு சேரத் தாக்க.. அவனை விட்டு விலகப் பார்த்தவளை அவனது கரங்கள் இடையோடு சேர்த்து வளைத்து தன்னுடன் இறுக்கியது. அணிந்திருந்த சின்ன சட்டை மேலே ஏறிக் கொள்ள.. அவளது வழவழப்பான இடையில் பதிந்த அவனது கரங்கள்.. கூச்சத்தைக் கொடுத்தது அவளுக்கு. இயல்பாக எழுந்த

DO NOT COPY

உணர்வில்.. அவனது கையை விலக்க எத்தனித்தாள். அவனோ இரும்புப் பிடியாக அவளைத் தன்னுடன் இணைத்திருந்தான்.

இடையை அழுத்தத் துவங்கியிருந்த அவனது கரங்கள் தோளோடு சேர்த்து அணைக்க.. அவனோடு ஒட்டிப் போன நித்யாவிற்கு பேச்சே வரவில்லை.. உடல் முழுதும் நடுங்கத் துவங்க.. பேச்சிழந்து போனவளின் கழுத்தோரத்தில் முகம் பதித்தவன்.. மீண்டும் உறங்கிப் போனான்.

தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த அவனது கரங்களை நம்ப முடியாத வியப்புடன் நோக்கிக் கொண்டிருந்த நித்யாவிற்கு.. அவனது வெற்று மார்பில் முகம் பதித்திருப்பது எந்த ஜென்மத்துப் புண்ணியமோ என்று தோன்றியது.. தான் மிக மிக அதிர்ஷ்டம் வாய்ந்தவள் என்று எண்ணினாள். சிறிது நேரத்தில் அவளது கழுத்திலிருந்து முகத்தை நிமிர்த்தி அவள் கூந்தலில் கன்னம் பதித்தவன்.. நிதானமாகக் கண் விழித்து எதிரேயிருந்த கடிகாரத்தில் பார்வையைப் பதித்தான்.

பின் மெல்ல மெல்ல தூக்கம் தெளிய.. தன் கைகளுக்குள் சிறைபட்டுப் போயிருந்த நித்யாவைக் கண்டு பதறி எழுந்தான். அவன் எழுந்த வேகத்தில் அவன் மடியில் அமர்ந்திருந்த நித்யா படாரெனக் கீழே விழுந்தாள். "ஆ!"என்று இடுப்பைப் பற்றியபடி கத்திய நித்யா "பாவி.. அறிவிருக்கிறதா..?இப்படியா தள்ளி விடுவாய்..?"என்று கூற.. "ஏய்.. எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்.. என் அனுமதியில்லாமல் என் அறைக்குள் நுழையாதே என்று.. அறிவில்லை உனக்கு?,காலங்கார்த்தாலேயே வந்து விடுகிறாள்.. தொல்லை செய்வதற்கென்று.."என்று சத்தமிட்டவன் நடந்து குளியலைறையை நோக்கிச் சென்றான், "அடப்பாவி!"என்று வாயில் கை வைத்த நித்யாவைக் கவனிக்காதது போல் நடந்தாலும் அவளைக் கடந்ததும் அவன் முகம் சிரிப்பில் விரிந்தது. குளியலறைக்குள் நுழைந்ததும் அடக்கி வைத்த சிரிப்பை உதிர்த்தவன் அவளை அணைத்ததை நினைத்துக் கொண்டே ஷவர் முன்பு நின்றான்.

வெளியே அவன் தள்ளி விட்டுச் சென்றதில் கீழே கிடந்த நித்யா அடப்பாவி இவ்வளவு பெரிய நடிகனாக இருக்கிறான்.. எதுவுமே நடவாதது போல் எழுந்து சென்று விட்டானே... தூக்கத்தில் இருந்தால் தான் அணைத்துக் கொள்வானா..?, இவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே..! ஆனால்.. அவனது அணைப்பிற்காக ஏங்கிக் கொண்டிருந்த நித்யாவிற்கு.. அவன் தனது கழுத்தில் புதைந்ததும்.. அணைத்ததும் சுகமாக இருந்தது.. அவளே அவனருகே சென்று அணைத்திருக்கிறாள்.. முத்தமிட்டிருக்கிறாள்.. ஆனால்.. அவனாகக் கையைப் பிடித்தால் கூட மனம் நடுங்கிப் போய் விடுகிறது... ஏன்? என்று சிந்தனை செய்தபடியே கீழே வந்தாள்.

DO NOT COPY

அவன் குளித்து முடித்துச் சாப்பிட வந்ததும் அவன் எதிரே சென்றமர்ந்தவள் அவனை முறைத்தபடியிருக்க.. "என்ன அப்படிப் பார்க்கிறாய்..?,"என்று வினவினான். "நீ ஒரு திருட்டுப் பூனை டா.."என்று குற்றம் சாற்ற.. அதற்கு அவளை முறைத்தவன் "ஏய்.. வாடா,போடா என்றாயானால் பல்லைத் தட்டி விடுவேன்.."என்று மிரட்ட.. "உனக்குத் தூக்கத்தில் என்ன நடந்ததென்று தெரியாது அப்படித்தானே..?"என்று கைகளைக் கட்டியபடி வினவ.. அவனோ.. இட்லியை வாயிலடைத்து "என்ன நடந்தது..?,ம்... நியாபகம் வந்து விட்டது.., ஒரு கனவு.. யாரையோ கட்டிப் பிடித்தது போல் இருந்தது.. யாரை என்று தான் தெரியவில்லை.."என்று கூறினான். "கனவில் நடந்ததாமா..?,திருட்டு ராஸ்கல்.."என்று பல்லைக் கடித்தவளைப் பொருட்படுத்தாது அவன் இட்லிகளைக் கபளிகரம் செய்து கொண்டிருந்தான்.

பின் "என்ன..?,எங்கேயோ ஊர் சுற்றக் கிளம்பி விட்டாய் போலும்..?,அம்மாவுடனா செல்கிறாய்..?"என்று வினவினான். "அம்மாவுடனா..?, என்ன விளையாடுகிறீர்களா..?,என்னுடன் ஷாப்பிங் வர வேண்டும் என்றேனே.." என்று கூற "ஷாப்பிங்கா..?ஏய்.. மரியாதையாக இடத்தைக் காலி பண்ணு.."என்று மிரட்ட... "அப்படியானால் உன்னால் வர முடியாது..?,என்ன..?" என்று அவளும் வினவினாள். ஆமாம் எனத் தலையாட்டியவனை "நீ மட்டும் இப்போது வரவில்லையென்றால்.. ?"என்று இழுத்தவளை "வரவில்லையென்றால்..?"என்று அவனும் புருவத்தை உயர்த்தி வினவினான்.

"வரவில்லையென்றால்.. நடுஹாலில் அனைவரின் முன்பும் உன்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுப்பேன்.. பரவாயில்லையா..?"என்றூ வினவ.. புரையேறியே விட்டது அவனுக்கு. "அடிப்பாவி!"என்று விழி விரித்தவன் "அப்படியேதும் செய்து தொலைக்காதே.. நான் வருகிறேன்.."என்று எரிச்சலுடன் மொழிந்தான். "ஹை,தேங்க் யூ கௌதம்..."என்று புன்னகைத்தவள் அடுத்த அரை மணி நேரத்தில்.. வீட்டில் அனைவரும் வியந்த விழிகளுடன் நோக்குவதைப் பொருட்படுத்தாது அவனது கைப்பற்றி இழுத்துச் சென்றாள்.


வசந்திக்குத் தான் சந்தோசம் தாங்க முடியவில்லை.. எப்போதும் அவளுடன் பதிலுக்கு பதில் சண்டையிட்டுக் கொண்டு அவளை வம்பிழுத்துக் கொண்டு சிரித்தபடி திரியும் மகனைக் கண்டு மகிழ்ச்சியாக இருந்தது அவருக்கு. தமையனின் கையைப் பற்றி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

DO NOT COPY



DO NOT COPY

# அத்தியாயம் – 14




**பச்சைப் புல்வெளியில்..**
**சுற்றிலும் வெள்ளை ஆடுகள்..**
**வெள்ளைப் பூக்களாய் மேய்ந்து கொண்டிருக்க..**
**நடுவே இருந்த பாறையின் மீது..**
**கம்பீரமாய் வீற்றிருந்த நின் திருமேனி தன்னை..**
**காண ஆயிரம் கண்கள் வேண்டுமடா கண்ணா..**
**விழிகளில் வசீகரம் மின்ன..**
**என் கண்களைக் கண்டபடி..**
**நீ இசைக்கும் அந்த மோகன ராகம்..**
**மையல் ஏற்றுகிறதடா...!**

**கௌ**தமின் கைகளைப் பற்றியபடி நகரின் மிகப் பெரிய ஷாப்பிங் மாலில் கால்களைப் பதித்த நித்யாவிற்கு சத்தியமாக நடப்பை நம்ப முடியவில்லை. ஊர் எல்லையில் வீற்றிருக்கும் அய்யனார் சிலைக்கும் தனக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்பது போல் கஞ்சி போட்ட சட்டையாக விறைப்புடன் வலம் வந்து கொண்டிருந்த கௌதம் இன்று அவளுடன் இணைந்து ஊர் சுற்ற வந்திருக்கிறான்..

ஆரம்பத்தில் அவனிடம் கண்ட இறுக்கத்தன்மை மறைந்து இயல்பான சிரிப்புடனும்,துடுக்குடனும்,அவளைக் கேலி பேசிக் கொண்டு.. அவளுடன் நகைத்துக் கொண்டு சாதாரண மனிதனாக வாழத் தொடங்கி விட்டான். இவை அனைத்திற்கும் காரணம் தானே என்பதை நினைக்கையில் நித்யாவிற்குக் கர்வம் பொங்கியது.

கௌதமிற்கும் ஆச்சரியம் தான்.. எப்படியிருந்தவனை இப்படி மாற்றி விட்டாள் என்று! அவள் கூறிய எதையும் இதுவரை அவன் மறுத்ததேயில்லை. உரிமையாக அவனுடன் சண்டையிட்டு.. வாதம் செய்து.. எப்படியேனும் நினைத்ததைச் சாதித்து விடுகிறாள். இம்சையாகத் தோன்றினாலும் அவளை விட்டு விலக அவனால் முடியவில்லை..

DO NOT COPY

ஒருவரைப் பற்றி மற்றவர் நினைத்துக் கொண்டு நடந்த இருவரும் ஒரே நேரத்தில் திரும்பி மற்றவரின் முகம் பார்க்க.. இருவரது கண்களும் சந்தித்த நொடி.. இருவருக்கும் சிரிப்பு வந்தது. “ஏன் என்னைப் பார்த்தீர்கள் இப்போது..?,” என்று கொஞ்சலுடன் வினவியவளிடம் “நீ எதற்காக என்னைப் பார்த்தாய்?”என்று அவன் பதிலுக்கு வினவினான். “என் கௌதம் என்னுடன் நடந்து வருகிறானா என்று ஆச்சரியத்தில் பார்த்துக் கொண்டிருந்தேன்.. நீங்கள்..?”என்றவளிடம் “நானும் அதையே தான் நினைத்தேன்.. இது போன்ற இடங்களுக்கெல்லாம் நான் வருகை தந்து பல வருடங்களாகி விட்டது.. ஏன், வேலை விசயமாகச் செல்வதைத் தவிர உள்ளூரில் நான் எங்கேயும் செல்வதில்லை.. அப்படியிருந்தவனை.. இந்த ராட்சசி எவ்வளவு சுலபமாக மாற்றி விட்டாள் என்று எண்ணி உன் முகம் பார்த்தேன்..”என்று தன் கையில் பதிந்திருந்த அவள் கரத்தை அழுத்தினான்.

கண்களைச் சுருக்கி அழகாக முறுவலித்தவள்.. “இந்தக் கடைக்குச் செல்லலாம் வாருங்கள்..”என்று இழுக்க.. “இது ஆண்கள் பிரிவு..”என்றவனிடம் “உனக்கு வாங்கத் தான்.. வா கௌதம்,..”என்றழைத்துச் சென்றாள். அடுத்த ஒரு மணி நேரத்திற்கும் “இதை அணிந்து வா,அதை அணிந்து வா..”என்று மிரட்டி நிறைய சட்டைகளையும்,டீ-ஷர்ட்டுகளையும் வாங்கிக் குவித்தாள். “ஏய்.. நீ குடும்ப கஷ்டத்திற்காக என்னிடம் வேலைக்கு வந்ததாகக் கூறினாயே.. இவ்வளவு துணிகள் வாங்க எங்கிருந்து பணம் வந்தது..?,ம்?”என்று அவன் மிரட்ட “அ..அது குடும்ப கஷ்டத்தைத் தீர்த்தது போக மிச்சமிருந்த பணம்.. நான் சேர்த்து வைத்தது.. போதுமா..?,நீங்கள் கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டு வாருங்கள்..”என்று அவனை அதட்டி பில்லைக் கட்டி விட்டு வெளியே வந்தாள்.

“இப்போது எதற்கு இதெல்லாம்..?,”என்று முகம் சுழித்தவனிடம் “எனக்குத் தோன்றியதைச் செய்கிறேன்.. உனக்கென்ன..?,”என்றவள்.. “பசிக்கிறது.. சாப்பிடச் செல்லலாம் ப்ளீஸ்..”என்று கெஞ்சினாள். சரியென்றவன் “அங்கே ஒரு பீட்சா ஹட் இருக்கிறது.. செல்லலாமா..?”என்று வினவ “அந்த காய்ந்த ரொட்டியை சாப்பிட்டுத் தான் வாழ்நாளில் பாதியைக் கழித்தேன்.. எனக்கு அது வேண்டாம்.. மேலே இருக்கும் ஃபுட் கோர்ட்டிற்குச் செல்லலாம்..”என்றழைத்துச் சென்றாள்.

சுற்றும் முற்றும் வேடிக்கை பார்த்துக் கொண்டு உண்பவளையே அவன் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்க.. அவன் பார்வையை உணர்ந்தவள் “என்ன..?”என்று வினவினாள். “இல்லை,நீ நியூயார்க்கிலிருந்து வந்திருக்கிறாய் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை.. பீட்சா,பர்கரை வேண்டாமென்று விட்டு இங்கே வந்து பானி பூரியை விழுங்கிக் கொண்டிருக்கிறாய்..”என்று நகைத்தான். அவன் சிரிப்பதைக் கண்டவளின் முகம் மென்மையாக “நீ எப்போதும் இப்படி சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்

DO NOT COPY

கௌதம்..”என்று கூற.. “நீ என்னுடன் இருந்தால் எப்போதும் மகிழ்ச்சியாகத் தான் இருப்பேன்..”என்று முணுமுணுத்தவன் அவள் கையைப் பற்றி விரல்களால் வருட.. அவனையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள் நித்யா.

அந்தக் கணம் இருவருமே மிக மிக மகிழ்ச்சியாக உணர்ந்தனர். பற்றியிருந்த அவளது கைகளை விடாமல் “செல்லலாம் வா..”என்று எழுந்தவனிடம்.. “உன்னுடைய சிரிப்பு மிக மிக அழகாக இருக்கிறது கௌதம்..”என்று அவள் கூற.. “இதைத் தான் நான் உன் முன்பு சிரித்த முதல் நாளே கூறி விட்டாயே..?”என்றவனிடம் மேலும் ஏதேதோ கூறி சிரிக்க வைத்துக் கொண்டே நடந்தாள் நித்யா.

எஸ்கலேட்டரில் இருந்து இறங்கியதும் “கௌதம் சாக்லேட்ஸ்.. சாக்லேட் சாப்பிடலாம் ப்ளீஸ்.. ப்ளீஸ்..”என்று குதித்தவளிடம் “சாப்பிட்டே சொத்தை அழித்து விடு..”என்று கேலி செய்தபடி நடந்து சென்றான். பாதாம் சாக்லேட்டைக் காட்டி “இது..”என்றவள்... சாக்லேட் கைக்கு வந்ததும் கொஞ்சம் பிய்த்து அவன் வாயில் திணித்தாள்.. “போதும்.. போதும் நிதி..”என்று அவளது கைப் பற்றியவன்.. எதிரே யாரோ தன்னை உற்றுப் பார்ப்பதை உணர்ந்து நித்யாவிடமிருந்து பார்வையைத் திருப்பி எதிரே நின்றவரிடம் செலுத்தியவனின் முகம் இறுகிப் போனது..

கௌதமின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த நித்யா அவனது முக மாற்றத்தைக் கவனித்து.. அவன் பார்வை சென்ற இடத்தைத் தானும் நோக்கினாள். அங்கே ஒரு ஸ்திரி அவளது கணவனுடனும்,இரண்டு வயதுக் குழந்தையுடனும் நின்றிருந்தாள். யார் இவள்..?,இவளை ஏன் இவன் முறைத்துப் பார்க்கிறான்..?, என்று யோசித்த நித்யா.. இவளது முகம் எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே! ஓ! இவள் அந்த சௌம்யா.. கௌதமை விட்டு விலகி காதலனின் கைப் பிடித்தவள்.. நல்ல வேளை.. புண்ணியவதி ஓடிச் சென்றாள். இல்லையெனில் கௌதம் நித்யாவிற்குக் கிடைத்திருக்க மாட்டானே!

கௌதமின் இறுகிய முகத்தைக் கண்டு கொள்ளாமல் “ஹலோ சௌம்யா.. நான் நித்யா.. கௌதமின் ஃபியான்ஸி..”என்றாள். இப்போது திகைத்து நித்யாவின் முகம் நோக்கினான் கௌதம். சற்றுத் தயங்கினாலும் அவளைப் பார்த்து முறுவலித்த அந்தப் பெண் “ஹலோ நித்யா..”என்று விட்டு.. கௌதமிடம் மெல்ல நிமிர்ந்து “ஹலோ கௌதம்..” என்றாள். அவன் பதிலேதும் சொல்லாமல் சிறு தலையசைப்புடன் விருப்பமற்றுப் புன்னகை செய்ய..

“உங்களுக்குத் திருமணம் நிச்சயமானதில் எனக்கு மிகவு மகிழ்ச்சி கௌதம்.. கங்க்ராட்ஸ்..”என்று கூற.. அவளருகே நின்றிருந்த அவளது கணவனும்

DO NOT COPY

கௌதமின் கையைப் பற்றிக் குலுக்கி “கங்க்ராட்ஸ்”என்றான். அதன் பின் நால்வரும் அமைதியாக நிற்க.. அந்த அமைதியைக் குலைத்த நித்யா “இவன் உங்கள் பையனா சௌம்யா.. சாக்லேட் சாப்பிடுவாயா கண்ணே..?,என்னிடம் வருகிறாயா..?”என்று தூக்கிக் கொள்ள.. சௌம்யாவும்,நித்யாவும் சாக்லேட் கடையை நோக்கி நகர்ந்தனர்.

நித்யாவை கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்த கௌதம் அவள் சௌம்யாவுடன் நகர்ந்து சென்றதும் பல்லைக் கடித்தான். “உங்கள் கோபம் நியாயமானது தான் கௌதம் சார்..”என்று அருகே நின்றிருந்தவனது குரல் கேட்டுத் திரும்பியவன் எதுவும் கூறாமல் வேறு புறம் பார்க்க.. “நான் ஸ்ரீதர்.. சௌம்யாவின் கணவன்.. நா.. நாங்கள் இணைந்த விதம் தவறானது தான் சார்.. ஆ..ஆனால் எங்களுக்கு அப்போது வேறு வழி தெரியவில்லை.. நான் அப்போது தான் தொழில் தொடங்கிய சமயம்.. போதுமான அளவோ பண பலம் இல்லாத காரணத்தினால் திருமணத்திற்கு முன்பே சௌம்யாவை அழைத்துச் செல்ல முடியாமற் போனது.. அவளது தந்தை எனது நிலைய பயன்படுத்திக் கொண்டு அவளை மிரட்டித் திருமணம் செய்து வைத்து விட்டார். ஆனால் எங்களால் வேறு ஒருவருடனுனான வாழ்வை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.. மனதில் ஒருவனை நினைத்துக் கொண்டு வேறு ஒருவருடன் குடும்பம் நடத்துவது தவறு தானே சார்..?,நாங்கள் செய்த தவறை நியாயப்படுத்தவில்லை.. எங்களுக்கு அப்போது வேறு வழி தெரியவில்லை.. அதனால் தான்..”என்றவன் சிறிது இடைவெளி விட்டு..

“நான் உங்களை நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்க முயன்றேன்.. ஆனால் நீங்கள் இருந்த மனநிலையில்.. உங்களை நெருங்கவும் எங்களுக்குத் தயக்கமாக இருந்தது.. நீங்கள் உங்களது வாழ்வைக் கெடுத்துக் கொண்டு திரிந்த இந்த மூன்று வருடங்களும்.. என் மனைவி தினமும் உங்களைப் பற்றி பேசிக் கொண்டு தான் இருப்பாள்.. உங்களது வாழ்வு சீராக வேண்டுமென்று தினம்,தினம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தோம்.. இப்போது உங்களுக்கு ஒரு பெண்ணுடன் நிச்சயமானதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி..”என்று அவன் கூறி முடித்ததும்.. கௌதம் முற்றிலும் திகைத்துப் போனான்.

என்ன கூறுவதென்று தெரியாமல் திணறியவன்... பின் நிமிர்ந்து “போன கதையெல்லாம் எதற்கு இப்போது..?,அதை மறந்து விடுங்கள்.. பையனுக்கு என்ன பெயர்..?”என்று சாதாரணமாகப் பேச.. கவலை மறந்து அவனுடன் உரையாடத் துவங்கினான் ஸ்ரீதர்.

இங்கே இவர்களிருவரும் இப்படி உரையாடிக் கொண்டிருக்க அங்கே நித்யாவோ சௌம்யாவை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்து “மனசாட்சியற்று அப்படியொரு காரியத்தைச் செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது சௌம்யா..?, நீ செய்த காரியத்தில் இரண்டு அப்பாவி ஜீவங்கள் அவர்களது நிம்மதியைத்

DO NOT COPY

தொலைத்து நடைபிணமாகிப் போனதைப் பற்றி நீ அறிவாயா..?,உன்னால் எவ்வளவு அவமானங்களையும்,மன உளைச்சலையும் அவன் அடைந்திருக்கிறான் என்று தெரியுமா உனக்கு..?"என்று கூற.. தலை குனிந்து அமைதியான சௌம்யா பின் கண்ணீர் தேங்கிய விழிகளுடன் நிமிர்ந்து "நா.. நான் என்னை மன்னித்து விடு நித்யா.,, நா..நான் வேறு வழியின்றி தான் அப்படி செய்தேன்.. என் வாழ்வைப் பற்றி மட்டும் சுயநலமாக யோசித்தேனே ஒழிய கௌதமைப் பற்றி யோசிக்கவில்லை.. என்னால்.. என்னால் வேறு ஒருவருடன் வாழ்வதைப் பற்றி யோசிக்க முடியவில்லை.. என் பெற்றோரை எதிர்க்குமளவிற்கு மன தைரியமும் இல்லாததால் தான் அப்படி நடந்து கொள்ள நேரிட்டது.. அது கௌதமை இந்த அளவிற்கு பாதிக்கும் என்று நான் ஒரு பொழுதும் நினைக்கவில்லை.."என்று கூற..

"நீ சொல்வதும் சரி தான்.. ஒருவனைக் காதலித்து விட்டு மற்றொருவனைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வதும் தவறு தான்.. ஆனால் நீ செய்த காரியத்தின் விளைவு என் கௌதமை இரண்டு வருடமாக நடை பிணமாக மாற்றி விட்டது.. அதை என்னால் ஒரு போதும் மன்னிக்க முடியாது சௌம்யா.. அவனை மாற்றி இயல்பாக்க நாங்கள் அரும்பாடு பட்டு விட்டோம்.. எப்படியோ.. போனது போகட்டும்.. எல்லாம் நன்மைக்கே என்று நினைத்துக் கொள்கிறேன்.."என்று முடிக்க.. அவளது கையைப் பற்றிக் கொண்டவள் "கௌதமிற்கு ஏற்ற ஜோடி நீ தான் நித்யா.. அவரது குணத்தை மாற்றி இந்த அளவிற்கு அவரைக் கொணர்ந்திருப்பது மிகப் பெரிய காரியம்.. நீங்கள் இருவரும் 100 வருடம் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.."என்று வாழ்த்த அவளுடன் சிரித்தபடி கௌதமின் அருகே வந்தாள்.

"சரி,நாங்கள் கிளம்புகிறோம் கௌதம் சார்.."என்ற ஸ்ரீதர் குழந்தையைத் தூக்கிக் கொள்ள.. "வருகிறேன் நித்யா.."என்றவள் கௌதமிடம் திரும்பி "ஐ ம் சாரி கௌதம்.. சாரி ஃபார் எவ்ரிதிங்.. எனக்குத் தெரியும் மன்னிப்பு என்கிற ஒரு வார்த்தை என் பாவத்தைப் போக்கி விடப் போவதில்லை என்று.. ஆனால் மன்னிப்பை மட்டும் தான் என்னால் வேண்ட முடியும்.."என்றவள்.. சின்ன தலையசைப்புடன் கணவனுடன் நடந்து சென்றாள்.

அவள் சென்ற பின் கல்லெனச் சமைந்து விட்ட கௌதமை நோக்கியவள்.. "கௌதம்.."என்று உலுக்கினாள். அவனிடம் பதிலில்லாது போக.. அவனை அருகேயிருந்த பெஞ்சில் அமர வைத்தாள். சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தவன் பின் "உனக்கு எப்படி அவளைத் தெரியும்..?"என்று வினவினான். "ஃபோட்டோவில் பார்த்திருக்கிறேன்.."என்று கூறினாள் நித்யா.

"கணவனும்,மனைவியும் மாற்றி மாற்றி மன்னிப்புக் கேட்கிறார்கள்.. மன்னிப்புக் கேட்டால் ஆயிற்றா..?,இரண்டு வருடமாக நான் பட்ட அவமானங்களை யார் திருப்பி எடுத்துக் கொள்வது..?,தவறு செய்து ஓடிச் சென்றது அவள்.. ஆனால்

DO NOT COPY

அந்தப் பாவத்தை அனுபவித்தது நான்..”என்றவனிடம்.. “ஏனென்றால் நீ ஒரு முட்டாள் கௌதம்..”என்ற நித்யா.. அவன் திடுக்கிட்டு அவள் முகம் பார்ப்பதைப் பொருட்படுத்தாது.. “அவமானம் அவமானம் என்கிறாயே.. சிறப்பாக தொழில் நடத்தி நகரின் மிகப் பெரிய புள்ளியாக விளங்கும் பெரும் பணக்காரன் நீ.. உன்னை விட.. திருமணம் முடிந்த மறுநாள் காதலனுடன் ஓடிச் சென்றதற்காக அவளுக்குத் தான் அந்த அவமானத்தின் வீரியம் அதிகமாக இருந்திருக்கும்.. அவள் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.. அதனால் தான் கணவன்,குழந்தையென குடும்ப சகிதமாக மகிழ்ச்சியுடன் இருக்கிறாள்.. ஏசிச் செல்பவர்கள் எவரும்.. உன் சுக,துக்கத்தில் பங்கு கொள்ளப் போவதில்லை.. இது எப்படி உனக்குப் புரியாமல் போனது?,தொழிலில் நொடிந்து போனாலும் அவமானப் படுத்தத் தான் செய்வார்கள்.. அந்த அவமானங்களையே வெற்றிப் படிக்கட்டுகளாக மாற்றி நீ முன் வரவில்லையா.?,இதை மட்டும் ஏன் மாற்றி அர்த்தம் செய்து கொண்டாய்..?,அந்தப் பெண்.. பெற்றோரின் மிரட்டலை மீற முடியாது.. உன்னைத் திருமணம் புரிந்து கொண்டாள்.. காதலனை மறந்து உன்னுடன் வாழ்க்கை நடத்த முடியாமல் ஓடிச் சென்று விட்டாள்.. கொஞ்சம் யோசித்துப் பார்.. அவனை எண்ணிக் கொண்டு உன்னுடனும் ஒன்ற முடியாமல் அவள் வாழ்ந்திருந்தால்.. உங்கள் மூவரின் வாழ்வும் நாசமாகியிருக்கும்.. அதனால் அவள் ஓடிச் சென்றது நல்லது தான்.. அதையே எண்ணிக் கொண்டு சுற்றியிருப்பவர்களைக் கஷ்டப்படுத்தி நீயும் மகிழ்ச்சியற்றுப் போய்.. வாழ்நாளில் இரண்டு வருடங்களை அநியாயமாக வீணாக்கி விட்டாயே..?, நீயாகவே பெண்களென்றால் இப்படித் தான் என்று வர்ணம் பூசிக் கொண்டு.. உலகையே வெறுத்து விட்டவன் போல்.. உலா வந்து கொண்டு.. கௌதம்.. நீ.. நீ தான் முட்டாள்..”என்று ஆங்காரத்துடன் மூச்சு வாங்கக் கத்தி முடித்தாள்.

“நான் முட்டாளா..?,ஆமாம்.. நான் அவமானப் பட்டுத் தலை குனிந்த தருணங்களில் நீ உடனிருந்திருந்தால்.. தைரியமாகத் தான் இருந்திருப்பேன்.. நித்யா.. நா..நான் இப்போது என்ன செய்ய வேண்டும்..?,அவளை மன்னித்து விட வேண்டுமா..?,”என்று சிறுவன் போல் அவளது முகத்தை அண்ணாந்து பார்த்துக் கேள்வி கேட்டவனை.. எங்கிருக்கிறோம் என்பதை மறந்து வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டவள்.. அவன் தலையை வருடி.. “இனி நீ மன்னிப்பதால் ஆகப் போவது ஒன்றுமில்லை.. அவள் செய்த தவறுக்கும் நிச்சயம் தண்டனை இருக்கும்.. இனியேனும் உனது முட்டாள்தனமான எண்ணங்களை மறந்து நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்து கொண்டு.. உன் அன்னைக்கும்,உன்னைச் சுற்றியிருப்பவர்களையும் மகிழ்ச்சிபடுத்தப் பார்..”என்று கூற.. அவளை நிமிர்ந்து நோக்கியவன்... “நல்ல பெண்ணா..?”என்று கேள்வி எழுப்ப.. “ம்,அந்த நல்ல பெண் நானாக இருந்தாலும் சரி தான்..”என்று சிரிக்க.. தானும் சிரித்தபடி அவள் வயிற்றில் முகம் புதைத்தான்.

DO NOT COPY

“கௌதம்.. போகலாம்..”என்று அவனைப் பற்றி எழுப்பியவள்.. அவனை நடத்திச் சென்றாள். அவள் இழுத்த இழுப்பிற்கு நடந்து சென்ற கௌதமிற்கு சந்தோசம்,துக்கம்,நிம்மதியென அனைத்து உணர்வுகளும் எழுந்து இம்சித்தது.. அவன் வாழ்வில் நடந்த அந்தத் திருமணமும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் அதனால் நேர்ந்த துன்பங்களும்.. அன்று நடந்தது போல் மாறி மாறி வந்து போனது. அவள் ஓடிச் சென்ற நாட்களைத் தொடர்ந்து வெளியே வராமல் அறையில் அடைபட்டுக் கிடந்தவன் தொழில் முறை பார்ட்டிகளுக்குச் சென்றாலேனும் மனம் மாறும் என்று நினைத்துச் செல்ல.. அங்கே குடிபோதையில் பணக்காரச் சிங்கங்கள் அனைவரும் அவனைக் கேலி பேசிக் கூறு போட்டனர்.,

நண்பர்கள் என்று அவன் நினைத்த மனங்களும் அவனைத் துன்பத்தில் ஆழ்த்த... அவமானம் தாங்க முடியாமல் தான் அவன் குடியை நாடிச் சென்றான். எப்பேர்ப்பட்ட வார்த்தைகளைக் கேட்டிருக்கிறான்.. இவன் ஆண் பிள்ளையே இல்லை என்று தான் அவள் ஓடிச் சென்று விட்டாள் போலும் என்ற வார்த்தைகளையெல்லாம் கேட்ட போது அவன் அடைந்த கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் அளவேயில்லை.. அதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் இப்போதும் வருத்தம் தானே ஏற்படுகிறது..?, இதையெல்லாம் மன்னிப்பு என்கிற ஒரே வார்த்தை எப்படி சமாதானப்படுத்தும்..?

ஆனால் நித்யா சொன்னதைப் போல் அவன் அந்த வார்த்தைகளையெல்லாம் காது கொடுத்துக் கேட்காமல் இருந்திருந்தால் எத்தனையோ பேரின் நிம்மதி பாழாகாமல் போயிருக்கும்...! நடந்த நிகழ்வுகளையும்,பட்ட அவமானங்களையும் மறக்கவும் முடியாது.. மன்னிக்கவும் முடியாது.. ஆனால் இதையெல்லாம் மாற்ற முடியும் என்று அரும்பாடு பட்டுத் தன்னுடன் போராடி அதில் ஜெயித்தும் இருக்கிறாளே ஒருத்தி.. என்றெண்ணித் தன்னருகே நடந்து வருபவளை அவன் இமைக்காமல் நோக்க.. அவளோ “என்னடா அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்..?,கார் சாவியைக் கொடு நானே வண்டி ஓட்டுகிறேன்..”என்று கூறி சாவியைப் பிடுங்கி அவனை அமர வைத்துத் தானே வண்டியை எடுத்துக் கொண்டு சென்றாள்.

கண் மூடி இருக்கையில் சாய்ந்து விட்டவன்.. பின் நிமிர்ந்து அவளிடம் “அவளிடம் ஏன் அப்படிக் கூறினாய்..?”என்று வினவினான். “என்ன கூறினேன்..?”என்றவளிடம் “கௌதமின் ஃபியான்ஸி என்று..”என்றான் அவன். சாலையிலிருந்து பார்வையைத் திருப்பி அவனை நோக்கியவள் “ஏன் உண்மை தானே..?,எனை விடுத்து நீ வேறு எவளையேனும் திருமணம் புரிந்து கொள்ள விடுவேனா நான்..?”என்று கண்களை உருட்டி மிரட்ட.. அவளைப் பார்த்தபடியே சீட்டில் சாய்ந்தான். “அப்படிப் பார்க்காதேடா.. என்னால் வண்டி ஓட்ட முடியாது..”என்று சிணுங்கியவள்.. ஒரு வழியாக வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

DO NOT COPY

அவனுக்கு வாங்கிய பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அவனறைக்குள் நுழைந்தவள்.. அங்கேயிருந்த சோபாவில் பைகளை வைத்து விட்டு.. "அப்படியே படுத்து விடாதே.. கொஞ்சம் சாப்பிட்டு விட்டுத் தூங்கு.. சரியா..?,நான் செல்லட்டுமா..?"என்று கூறி நகர.. "நித்யா..."என்று கை பற்றியவன்.. அவளைத் தன் புறம் திருப்பினான்.

என்ன என்பது போல் நிமிர்ந்தவளின் காதோரத்துக் கூந்தலை ஒதுக்கி மெல்ல கன்னம் வருடியவன்.. அவள் விழிகளைச் சந்தித்து "நீ வராமல் போயிருந்தால்.. என் வாழ்வு என்னவாகிப் போகியிருக்கும் என்பதை நினைத்தாலே பயமாக இருக்கிறது.."என்று கூற.. அவன் செய்கையிலும் பேச்சிலும் நெகிழ்ந்தவள்.. "நான் இல்லாவிட்டால்.. வேறு பெண் வந்திருப்பாள்.." என்று மெல்ல முணுமுணுக்க... "ம்ஹ்ம்.. என் நித்யாவால் மட்டும் தான் என்னை மாற்ற முடிந்திருக்கும்..."என்று கூற.. சிவந்த முகத்தை மறைக்கத் தலை குனிந்தாள்.. அவள் முகத்தை நிமிர்த்தி அவள் கண்களைச் சந்தித்தவனின் பார்வை வீச்சைத் தாங்காதுக் கண் மூடிக் கொண்டவளின் முகத்தை ஆசை தீரப் பார்த்தவன்.. "தேங்க் யூ... தேங்ஸ் ஃபார் எவ்ரிதிங் நிதி.." என்று அவள் காதருகில் முணுமுணுக்க.. நிமிர்ந்து அவனை நோக்கியவள்.. அவனது மோகப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல்.. ஓடிச் சென்றாள்.

மறுநாள் வேலை நாள் என்பதால்.. இருவரும் அலுவலகம் சென்று விட்டனர். காலையிலிருந்து அவள் முகம் பார்க்காமல் வேலையே கதி என மூழ்கி விட்டவனை அவள் முறைப்புடன் பார்த்துக் கொண்டிருக்க.. அவள் பார்வையை உணர்ந்தும் உணராதது போல் அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். பின் மாலையானதும் "நித்யா.. "என்றழைத்தவன் அவள் எரிச்சலுடன் தன்னருகே வருவதைக் கண்டு சிரித்தபடி எழுந்து வந்தான்.

"என்ன,..?"என்று முறைப்புடன் வினவியவளிடம் கலகலவென நகைத்தவன் "வெளியே செல்லலாமா..?"என்று கேட்க.. "எங்கே..?"என்றாள் அவள். "அது சர்ப்ரைஸ்.. கிளம்பு.."என்று இழுத்துச் சென்றான், நேற்று அவள் அழைத்துச் சென்ற ஷாப்பிங் மாலிற்கு அழைத்துச் சென்றவனை விழி விரிய நோக்கியவள் "இங்கே நேற்று தானே வந்து சென்றோம்..?"என்று வினவ.. "ம்,உனக்கு எதுவும் நான் வாங்கித் தரவில்லையே அதனால் தான்.."என்றவன் அவளை நகைக்கடைக்கு அழைத்துச் செல்ல "சார்.. என்ன இது..?,உங்கள் அலுவலகத்தில் வேலை செய்யும் சாதாரண வேலையாள் நான்.. எனக்கு வைரமா..?,வேண்டாம் சார்.."என்று கூற.. அவளை முறைத்துப் பின் சிரித்தவன் "விளையாடாதே நித்யா.. உனக்கு என்ன வேண்டுமோ வாங்கிக் கொள்.. எனக்காக.. ப்ளீஸ்.."என்று கூற.. "ம்.."என்று யோசித்தவள்.. "எனக்கு இந்த மோதிரம் போதும்.."என்று ஒரு மோதிரத்தைக் காட்ட.. அதைக் கண்ட கௌதம் அவளை சிரிப்புடன் நோக்கினான்.

DO NOT COPY

பிளாட்டினத்தால் செய்யப்பட்ட மோதிரத்தின் நடுவில் G என்ற எழுத்து அழகாக பொறிக்கப்பட்டிருக்க மோதிரம் பார்ப்பதற்கு எளிமையாகவும் அழகாகவும் இருந்தது. வாங்கிக் கொண்டு வெளியே வந்த பின் டப்பாவைத் திறந்து மோதிரத்தை வெளியில் எடுத்தவள்.. அவனிடமே தந்து அணிந்து விடும்படிச் சொல்ல.. அவனும் சிரிப்புடன் அவளுக்கு அணிவித்தான். “ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொள்ளலாம் ப்ளீஸ்..”என்றவள் அவன் தோள் சாய்ந்து தன்னுடைய மொபைல் ஃபோனில் கிளிக்கிக் கொண்டாள். சிரித்த முகத்துடன் காட்சி தந்த இருவரது முகங்களும் புகைப்படத்தில் மிக அழகாக இருந்தது.

“ம்,பஞ்சத்தில் வாடுபவள் தான் லேட்டஸ்ட் மாடல் செல்ஃபோன் வைத்திருப்பாளாக்கும்..”என்று கேலி செய்தவனிடம் “நான் ஒன்றும் ஏழைப் பெண்ணல்ல.. கொஞ்சம் பணக்காரி தான்..”என்று கூற.. “ம்,உன் தந்தை ஏற்கனவே என்னிடம் கூறி விட்டார்.. ஆனால் நிதி.. இண்டர்வியூவில் என்னிடம் வேலைக்குச் சேர்ந்தே ஆக வேண்டுமென்பது போல் ஏன் என்னிடம் வாதாடினாய்..?,குடும்ப கஷ்டம் அது,இது என்று பொய்கள் வேறு.. ஏன்..?”என்று வினவ.. என்ன பதில் சொல்வதென்று யோசித்தவள்.. “அ..அது நியூயார்க்கிலிருந்து இந்தியா வந்த புதிது வேறா.. எனக்கு வேலைக்குச் சென்றே ஆக வேண்டும் போலிருந்தது.. வீட்டில் படு போர்.. அதனால் தான்.. நீ வேறு பெண்களுக்கு வேலை தர மாட்டேன் என்று மிரட்டினாயா..?,அதனால் கோபம் வந்து விட்டது.. எப்படியேனும் உன்னிடம் வேலைக்குச் சேர்ந்து விட வேண்டும் என்கிற வெறியில் அப்படிப் பேசினேன்..”என்று சமாளித்து வைத்தாள்.

அதன் பின் அவன் பார்க்கிங்கிலிருந்து காரை எடுத்துக் கொண்டு வருவதாகவும் அவளை வாசலில் காத்திருக்குமாறும் கூற அவள் சரியென வெளியே சென்றாள். ஒரு வேளை இருவரும் சேர்ந்தே சென்றிருந்தால் பின் வரும் பிரச்சனையைத் தவிர்த்திருக்கலாம்.


முகம் முழுதும் சந்தோசத்தில் பளிச்சிடத் துள்ளலுடன் கார்ப்பார்க்கிங்கை நோக்கி நடந்து செல்பவனை “ஒருத்தியை ஓட வைத்தது போதாதென்று இன்னொருத்திக்கும் வழி பார்த்து விட்டாய் போலும்..”என்ற ஒரு பெண் குரல் தடுத்து நிறுத்தியது. சுருக்கிய புருவங்களுடனும்,கடினமான முகத்துடனும் அவன் திரும்பி நோக்கினான். அந்தப் பெண் யாரென்று அவனுக்கு நினைவில்லை என்பது அவனது முகத்திலிருந்தே தெரிந்தது.

அவள் நக்கலாக நகைத்து “நான் யாரென்று மறந்து போனதா..?,உன் வீட்டில் வேலை செய்து நாட்களை ஓட்டிக் கொண்டிருந்த கண்ணாம்பாளின் மகள்.. நீ வேண்டாமென்று ஒதுக்கிய துரதிர்ஷ்டசாலி..”என்று கூற.. அவன் முகத்தில் நீயா என்கிற ஏளனம் குடி கொண்டது. அவளைப் பொருட்படுத்தாமல் நடந்து செல்லப் பார்த்தவனை கை நீட்டித் தடுத்து நிறுத்தியவள்..

DO NOT COPY


“யாரவள்..?,பணக்காரன் ஒருவன் சிக்கி விட்டால் போதுமே.. மொட்டை அடித்து விடுவாள்களே.. நீ தான் சந்நியாசியாயிற்றே.. நீ எப்படி அவளுடன் சேர்ந்து சுற்றிக் கொண்டு திரிகிறாய்..?,சும்மா கம்பெனி கொடுக்கும் குணமா..?,அல்லது அவளைத் திருமணமே செய்து கொள்ளப் போகிறாயா..?”என்றவளிடம் கோபம் ஜொலிக்க.. அருகே வந்தவன் “இனி ஒரு வார்த்தை பேசினாயானால் அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்.. “என்று மிரட்ட.. “ஓ! அந்த அளவிற்கு நெருக்கமா..?,அப்படியானால் அவள் உன் இரண்டாவது மனைவியாகப் போகிறவளா..?,அவளுக்கும் ஏற்கனவே திருமணம் முடிந்து விட்டதா..?,உன்னைப் போல் ஒருவனை இரண்டாம் தாரமாக கட்டிக் கொள்ள கன்னிப் பெண் எவளும் சம்மதிக்க மாட்டாளே.. ஆமாமாம்.. உன்னைப் போன்ற பணக்காரர்கள் அதையெல்லாம் பார்த்துக் கொண்டா இருப்பீர்கள்..?,இதோ பார்.. இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை.. நான் உன்னுடன் வாழத் தயார் தான்.. அவளுக்கு வாங்கிக் கொடுப்பதைப் போல் நகையும்,பணமுமாக என்னையும் நன்றாக வாழ் வைத்தால் போதும்..”என்று பேசிக் கொண்டே செல்ல.. “ஸ்டாப் இட்..”என்று கத்தினான் கௌதம்.

“இந்த இடத்தை விட்டுச் சென்று... இல்லையென்றால் வெட்டிப் பொலி போட்டு விடுவேன்..”என்று கத்த.. ஏளனப் புன்னகையுடன் நகர்ந்தவள்.. “உன் இரண்டாவது மனைவியுடன் நீ வாழப் போகும் வாழ்வைக் காண நானும் ஆவலாகத் தான் இருக்கிறேன்..”என்று கூறியபடி அவள் நகர்ந்து செல்ல.. தலையைப் பிடித்தபடி அமர்ந்து விட்டான் கௌதம். இரண்டாம் தாரம்..! இரண்டாவது மனைவி.. என்கிற பெயரெல்லாம் அவனது நித்யாவிற்கா? இல்லை.. இல்லை.. இல்லையென மனம் கதற.. செய்வதறியாது நிலை குலைந்து போனான் கௌதம் பிரபாகரன்.



DO NOT COPY

# அத்தியாயம் – 15




**அந்தி மாலைப் பொழுது..**
**சுட்டெரிக்கும் சூரியன் சற்றே ஓய்வெடுக்க..**
**வானத்திலிருந்து மறைந்து கொண்டிருக்க..**
**வெண்ணிலவு தன் பணியை ஆரம்பிக்க..**
**புறப்பட்டுக் கொண்டிருந்த நேரம்,..**
**மஞ்சள் வெயில் உன் திருமுகத்தில் பட்டுத் தெறிக்க..**
**மாலைத் தென்றல் உன் நெற்றியில் மோதி..**
**கற்றை முடியை அலட்சியமாய் உரச..**
**ஆற்றங்கரை அருகினில் அம்சமாக**
**நின்றிருந்த நின் அழகினில்..**
**முற்றிலும் சொக்கிப் போனேனடி.. கண்ணே ராதா..!**

**க**ண்ணாம்பாளின் மகள் சுந்தரி இப்போது கல்லூரி முதலாமாண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் 'பிஞ்சிலேயே பழுத்தது' என்கிற அடைமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருப்பவள். பத்தாம் வகுப்பிலேயே கெட்ட சேர்க்கையினால் கௌதமைக் கண்ணால் அழைக்கப் பழகியிருந்தவள்.. கல்லூரியில் சேர்ந்த பின் மேலும் கேடு கெட்டுப் போனாள்.. பணக்கார வாலிபர்களை வளைத்துப் போட்டு நகைகளையும்,பணத்தையும் வேண்டுமட்டும் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்பது தான் அவளது தலையாயக் கொள்கை.

எப்போது கௌதமிடம் முயற்சி செய்து பார்த்து அவமானப்பட்டுத் தோற்றுப் போனாளோ.. அன்றிலிருந்து இன்று வரை எந்தப் பணக்கார ஆண்மகனும் அவளை ஏறிட்டுப் பார்ப்பதில்லை.. ஆனால் அவள் தனது முயற்சியில் தளர்ந்து விடவில்லை. விடுமுறையின் போதெல்லாம் பணக்கார வாலிபர்கள் வந்து செல்லும் இது போன்ற இடங்களுக்குத் தவறாமல் வருகை தந்து விடுவாள். அப்படி வந்த போது தான்.. நித்யாவுடன் கௌதம் சிரித்தபடி ஃபோட்டோவிற்குப் போஸ் கொடுப்பதைக் கண்டாள்.

DO NOT COPY

அன்று தன்னை அடித்து அவமானப்படுத்தி விரட்டியவன் இன்று எப்படி வேறு ஒருத்தியுடன் உரசிக் கொண்டிருக்கிறான்..?,கண்ணாம்பாள் அந்த வீட்டை விட்டு வெளி வந்த பின் அவன் எந்தப் பெண் வேலைக்காரியையும் வீட்டினுள் அனுமதிக்கவில்லை என்பது அவள் அறிந்த விசயமே.. அப்படியிருக்க இது எப்படி சாத்தியம் என்று யோசித்தவளுக்கு அவனும்,அவளும் பேசிச் சிரித்தபடி நின்றிருந்தது உள்ளே புகைச்சலைக் கிளப்பி விட்டது. அதனால் அவன் தனியே செல்வதைக் கண்டு பின்னேயே சென்று அவனை ஏசித் தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொண்டாள்.

அவள் சென்றபின் அங்கேயிருந்த படிக்கட்டில் அமர்ந்து விட்ட கௌதமின் நிலை தான் பரிதாபமாகிப் போனது.. கன்னிப்பெண் எவளும் இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்யச் சம்மதம் சொல்ல மாட்டார்களாமே!, அப்படியானால்.. நித்யாவிற்கு எப்பேர்ப்பட்ட பெருந்தன்மையான குணம் இருக்க வேண்டும்..?,அவளது படிப்பிற்கும்,அழகுக்கும் அவளைத் திருமணம் செய்து கொள்ள ஆண்கள் வரிசையில் நிற்பார்களே..! அப்படியிருக்க.. அவள்... அவனைப் போய் நேசித்திருக்கிறாளே!

எவ்வளவு விசயங்களில் அவனை மாற்றியிருக்கிறாள்.. இந்த சிரிப்பும்,சந்தோசமுமின்றி இரண்டு வருடமாக கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு குடியில் நிம்மதி தேடி பித்தனாகத் திரிந்தானே.. அவனை எப்படியெல்லாம் மாற்றினாள்.. இருளுக்குள் மாட்டிக் கொண்டு தவித்து.. வெளிச்சத்தைக் கண்டு பயந்து தன் கூட்டுக்குள்ளே அடங்கிப் போனவனைக் கைப் பற்றி அழைத்து வந்து வசந்தத்தைக் காட்டினாளே..! சிரிக்க வைத்தாள்.. துடிப்புடன் நடமாட வைத்தாள்.. நன்றாக உடுத்திக் கொள்ள வைத்தாள்.. பெண்களைப் பற்றிய எண்ணங்களை மாற்றினாள்.. புன்னகை முகத்துடன் செயல்பட வைத்தாள்.. உற்சாகம் கொள்ள வைத்தாள்.. வாதிட வைத்தாள்.. கேலி பேச வைத்தாள்.. தவிக்க வைத்தாள்.. கடைசியாகக் காதலிக்கவும் கற்றுத் தந்தாள்..

மகிழ்ச்சியை மட்டுமே தனக்களித்த அவளுக்கு அவன் அளிக்கப் போவது அவனது இரண்டாவது மனைவி என்கிற பட்டம் தான்..! இதை நிச்சயம் அவள் ஒரு பொருட்டாக நினைக்கப் போவதில்லை.. ஏன்.. அப்படி எவரேனும் கேலி பேசினால்.. அவர்களைச் சும்மா விடவும் மாட்டாள் தான்.. ஆனால் அப்படி ஒரு நிலையை அவனது நிதிக்கு ஏற்படுத்த அவனுக்கு மனமில்லை.. அவனை மணந்து கொள்வது அவளுக்கு அவமானத்தை ஏற்படுத்தும்,அவளைத் துன்புறுத்துமென்றால் நிச்சயம் அவன் அவளை மணந்து கொள்ள மாட்டான். இந்த சுந்தரியைப் போன்று நாக்கில் நரம்பில்லாமல் பேசுபவர்கள் அவனது நித்யாவையும் அவதூறாகப் பேசி விட்டால்.. நிச்சயம் அவனால் தாங்கிக் கொள்ள முடியாது..

DO NOT COPY

அவளது நினைவுகளிலேயே அவன் மீதி காலத்தை ஓட்டி விடுவான்.. நித்யாவின் நல்ல குணத்திற்கு நிச்சயம் அவளுக்கு நல்ல வாழ்க்கை அமையும். ஒரு வகையில் இந்த சுந்தரிக்கு நன்றி சொல்லித் தான் ஆக வேண்டும்.. நித்யாவிடம் தன் காதலை வெளிப்படுத்தி அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்திருந்தான் அவன். சுந்தரி மட்டும் வந்திரா விட்டால் நித்யாவை இந்த உலகமே கௌதமின் இரண்டாவது மனைவியென்று அழைக்க ஆரம்பித்திருக்கும்.. வேண்டாம் அந்த அவமானம் அவளுக்கு வேண்டாம்.. என்று முட்டாள்தனமாக அவனாகவே முடிவு செய்து கொண்ட கௌதம் காரை எடுத்துக் கொண்டுத் தன் போக்கில் செல்ல ஆரம்பித்தான். இதை அறியாத நித்யா அவன் வருவானென்று அந்த மாலின் வாசலிலேயே காத்திருந்தாள்.

நேரம் செல்லச் செல்ல இங்கே இருக்கும் பார்க்கிங்கிலிருந்து காரை எடுத்துக் கொண்டு வரத் தாமதமா என்று பயம் கொண்டவள் அவனது செல்லிற்கு அழைத்தாள். தன் செல்பேசியின் அழைப்பில் திடுக்கிட்டு விழித்த கௌதம் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு செல்ஃபோனையே வெறித்தான். தொடர்ந்து அவள் அழைத்துக் கொண்டே இருக்கவும் வேறு வழியின்றி செல்லை ஆன் செய்து காதில் வைத்தான்.

“எங்கேடா சென்று விட்டாய்..?,எவ்வளவு நேரமாகக் காத்திருப்பது..?”என்று நிதியின் குரல் உரிமையுடன் ஒலித்தது. எதுவும் கூறாமல் கண் மூடியவன் பின் தொண்டையைச் செறுமி “நா..நான் அவசர வேலையாகச் செல்கிறேன்.. நீ வீட்டுக்குச் சென்று விடு..”என்று கூற.. எதிரே நித்யாவோ.. “இதை அப்போதே கால் செய்து சொல்லியிருக்கலாமல்லவா...?,நீ வீட்டுக்கு வா.. கடித்து வைக்கிறேன்..”என்று மிரட்டி ஃபோனை வைத்தாள் நித்யா. அவள் வைத்ததும் தன் செல்ஃபோனை நெற்றியில் அழுத்திய கௌதம்.. மகாபலிபுரம் கடற்கரையில் சென்று அமர்ந்து கடலை வெறித்தான்.

வீட்டிற்குச் சென்ற நித்யா.. “அத்தை.. அப்பா..”என்று ஓடி வந்தவள்.. தனது விரலைக் காட்டி “கௌதம் எனக்கு மோதிரம் அணிவித்தான்..”என்று குதிக்க.. அதைக் கண்ட இருவருக்கும் சந்தோசம் தாள முடியவில்லை.. “உங்களிடம் கூடிய சீக்கிரமே எங்களது கல்யாணத்தைப் பற்றிப் பேசுவான்.. சந்தோசம் தானே அத்தை..?”என்று அவரது கன்னம் பற்ற.. வசந்திக்குக் கண்ணீர் பொல பொலவென வழிந்தது.. நித்யாவைப் பற்றி அவளது முகமெங்கும் முத்தமிட்டுத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அதன் பின் வெகு நேரம் மூவரும் பேசிக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

இரவு வரை அவன் வீடு வந்து சேராததைக் கண்டு “அத்தை.. நீங்கள் சென்று உறங்குங்கள்.. நான் அவர் வந்ததும் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்..”என்று வசந்தியை அனுப்பி வைத்தவள்.. ஹால் சோபாவிலேயே படுத்துக்

DO NOT COPY

கொண்டாள். அவன் வந்தால்.. எப்படியும் எழுப்புவான் என்று எண்ணிக் கொண்டு அவள் உறங்கி விட்டாள்.

2 மணிக்கு வீடு வந்து சேர்ந்தவன்.. வழக்கம் போல் நித்யாவின் வீட்டு வாசலைப் பார்த்தான். பின் ஒரு பெரு மூச்சுடன் திரும்ப.. அங்கே இனிய அதிர்ச்சியாக அவனுடைய நித்யா சோபாவிலேயே உறங்கிப் போயிருந்தாள். தலை சாய்த்து அவளது முகத்தைக் கண்டபடி நின்று விட்டவனுக்கு.. அவளது திருமுகத்தைக் கண்டபடியே உயிரைக் கூட விட்டு விடலாம் என்று தோன்றியது. தீராத வேதனையுடன் கடற்கரையில் அமர்ந்திருந்தவனை அங்கிருந்தோர் எழுப்பி வீட்டிற்குச் செல்லுமாறு சத்தமிட்டனர். அங்கிருந்து கிளம்பியவனுக்கு முன்னைப் போல் குடியை நாடவும் மனமில்லை.. வெகுவாக யோசித்து ஒரு முடிவைத் தீர்மானித்துக் கொண்டவன் வீட்டிற்குச் சென்றான் இனி நித்யாவைக் காண முடியாது என்கிற மனநிலையுடன்.

பல நாட்களாக சாப்பாடு,தண்ணீரைக் காணாதவனின் முகத்தில் ஒரு முறை ஒரு ரொட்டித் துண்டினைக் காட்டினால் எவ்வளவு ஆர்வம் தெரியுமோ.. அதே ஆர்வத்துடன் அவள் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தான். மெல்ல அவளருகே சென்று மண்டியிட்டு அமர்ந்தவன்.. அவள் கன்னத்தை வருட.. அந்தத் தூக்கத்திலும் அழகாக முறுவலித்தாள் அந்த அழகி. அவளது முறுவலைக் கண்டவனுக்கு அதற்கு மேல் தாங்க முடியாமல் போக.. குனிந்து அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான். பின் அவளது கைகளை வருடியபடி வெகு நேரம் அமர்ந்திருந்தவன்.. அவளை மெல்லத் தூக்கித் தன் கைகளில் ஏந்திச் சென்று.. அருகேயிருந்த அறையில் வசதியாகப் படுக்க வைத்து.. போர்வையை இழுத்துப் போர்த்தி.. அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

“சாப்பிடவில்லையா கௌதம்...?”என்று தூக்கத்திலேயே வினவியவளிடம் “நான் சாப்பிட்டேன்.. நீ தூங்கு...”என்று அவளது புருவங்களை நீவியபடி அவள் மீண்டும் நித்திரையில் ஆழ்ந்து போகும் வரை அமர்ந்திருந்தான். அவள் உறங்கியதும் மெல்ல எழுந்தவன் சோர்வுடன் தன்னறைக்கு வந்து படுக்கையில் சாய்ந்தான்.

மறுநாள் காலை கண் விழித்த நித்யா.. எப்படி இந்த அறைக்குள் வந்தேன் என்று யோசித்தபடியே வசந்தியை நாடிச் சென்றாள். பல் துலக்கி அவரளித்தக் கா∴பியையும் பருகி விட்டு “அத்தை.. நான் சென்று கௌதமை பார்த்து விட்டு வீட்டிற்குச் செல்கிறேன்..”என்று கூற.. “அவன் வெளியூர் சென்றிருக்கிறான் நித்யா.. உனக்குத் தெரியாதா..?,தெரியும் என்றல்லவா நினைத்திருந்தேன்.. காலை 5 மணியிருக்கும்... என்னை எழுப்பி வேலை விசயமாக வெளியூர் செல்வதாகக் கூறினானே..”என்று அவர் கூறினார்.

DO NOT COPY

“வேலை விசயமாகவா..?,எனக்குத் தெரியாமலா..?,”என்று யோசனையில் ஆழ்ந்தவள்.. அழகர்சாமிக்கு ஃபோன் செய்து வினவ.. அவரும் தனக்குத் தெரியாதென்று கூறினார். என்ன விசயமாக சென்றிருப்பான்.. அவனது மொபைலுக்கு அழைத்துப் பார்த்தால் அது எடுக்கப் படாமல் போக.. யோசனையுடன் தன் வீட்டிற்குச் சென்றாள்.

அடுத்த நான்கு நாட்களுக்கும் அவனைப் பற்றிய எவ்விதத் தகவலும் இல்லாமற் போக் ஆத்திரமாக வந்தது அவளுக்கு. என்ன தான் பிரச்சனை இவனுக்கு..?,நன்றாகத் தானே இருந்தான்..?,அனைத்தும் சுபமாகச் செல்கிறதென்றூ அவள் இறுமாந்திருந்த இந்த நேரம் பார்த்து எங்கோ தொலைந்து விட்டானே!

அழகர்சாமியிடனும்,வசந்தி அத்தையுடனும் ஃபோனில் உரையாடுபவன் அவளை மட்டும் தவிர்த்தான். அழகர்சாமியிடம் உரையாடுகையில் தான் பேச விரும்புவதாக அவள் கூற “பிஸியாக இருக்கிறேன் அங்கிள்.. பிறகு பேசுகிறேன்..”என்று கூறி விட்டான். முகம் கூம்பி விட அமைதியாக வெளியேறியவளைக் காண அவருக்கே பொறுக்கவில்லை.. “ஊட்டியில் ஒரு கவர்மென்ட் பிராஜக்ட் அம்மா.. அதற்காகத் தான் சென்றிருக்கிறான்..”என்று அவர் சமாதானப்படுத்தியது எதுவும் அவள் காதில் விழவில்லை. கோபமும்,ஆத்திரமுமாய் திரிந்தவளுக்கு எரிச்சலாக இருந்தது. வரட்டும் என்று கறுவிக் கொண்டாள்.

ஐந்தாம் நாள் அதிகாலை நித்யா ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கௌதம் பிரபாகரன் வீடு வந்து சேர்ந்தான். நான்கு நாட்களாக ஷேவ் செய்யப்படாத தாடியுடன் பஞ்சத்தில் அடிபட்டது போல் வீட்டிற்குள் நுழைந்த மகனைக் கண்டு பதறிப் போன வசந்தி “கண்ணா.. என்னவாயிற்று..?,ஏன் இப்படியிருக்கிறாய்..?”என்று வினவ.. “ஒன்றுமில்லைம்மா.. கொஞ்சம் சோர்வாக இருக்கிறது.. நான் சென்று படுத்துக் கொள்கிறேன்..”என்று நகர்ந்து விட்டான்.

அன்று காலை அருகிலிருக்கும் முருகன் கோவிலுக்குச் சென்று வணங்கி விட்டு வசந்தி அத்தையின் வீட்டினுள் நுழைந்தாள் நித்யா. பல நாட்களுக்கு முன்பு அவள் நட்டு வைத்த சிகப்பு ரோஜா செடியில் ஒரு ரோஜாப் பூ மலர்ந்திருக்க.. திடுதிடுவென ஓடி வந்தவள் “ராம்ஸ் தாத்தா.. என் ரோஜா செடியில் ஒரு பூ பூத்திருக்கிறது”என்று தோட்டக்காரர் ராமசாமியிடம் கூறினாள். அவளிட்ட கூச்சல் டைனிங் டேபிளில் அமர்ந்திருந்த கௌதமனின் காதுகளுக்கும் எட்டியது.

தேன் வந்து பாய்ந்தது போல் சிலிர்த்துப் போனவன்.. வாசல் பக்கம் பாய்ந்த பார்வையை அடக்கித் தட்டில் செலுத்தினான். “ஆமாம் கண்ணு..

DO NOT COPY

காலையிலேயே பார்த்தேன்..”என்று சிரித்தவரிடம் “அந்த ரோஜாவை யாரும் பறித்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்..”என்று கூறியபடி வீட்டினுள் நுழைந்தவளின் கால்கள் ஹாலில் அமர்ந்திருந்தவனைக் கண்டதும் தன்னாலேயே நின்று போனது.

அவள் தன்னையே காண்பதை உணர்ந்தும் கண்டு கொள்ளாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்க.. அவனைக் காணாது.. அவனிடம் பேசாது தவித்துப் போன நித்யாவிற்குத் தான் அவனைக் கண்டதும் கண்களில் கண்ணீரே கோர்த்துக் கொண்டது. எதுவும் கூறாமல் அவனைக் கடந்து அடுக்களைக்குள் நுழைந்தாள். அவள் சென்ற உடனே பாதி சாப்பாட்டில் எழுந்து கொண்டவன் உடனே நகர்ந்து விட்டான்.

அவன் செல்வதைக் கண்ட நித்யாவிற்கு நெஞ்சில் வலி எழுந்தது. தவிர்க்கிறானா?, எதற்காக?, இந்த கௌதம் பழைய கௌதமாக இருந்திருந்தால்.. நிச்சயம் அவன் சட்டையைப் பற்றிச் சண்டையிட்டிருப்பாள்.. இப்போதிருக்கும் கௌதமிற்கு.. நித்யாவைப் பற்றியும்,அவளது காதலில் ஆழத்தைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.. அவன் இப்படித் தவிர்ப்பது அவளுள் எப்பேர்ப்பட்ட வலியை ஏற்படுத்தும் என்பதை நன்றாக அறிந்தவன்.. அப்படியிருந்தும் தள்ளி நின்று துன்புறுத்துகிறான் என்றால் நிச்சயம் காரணம் பெரிதாகத் தானிருக்கும்.. அவனாகக் கூறும் வரையில் அவள் கேட்கப் போவதில்லை.. ஆனால் ஒன்று மட்டும் உறுதி.. இந்த ஜென்மத்தில் அவள் அவனை விட்டு விலகுவதாக இல்லை.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.. என்னவாயிற்று என்று வசந்தியும்,விஸ்வநாதனும் நித்யாவிடம் கேள்வி கேட்டனர். ஆனால் அவள் எந்த பதிலும் கூறவில்லை. அலுவலகத்திலும் கௌதமின் பி.எ திருவேங்கடம் விடுமுறையிலிருந்து திரும்பி விட்டதால் இப்போது கௌதமின் பி.எ நித்யா அல்ல என்றாகிப் போனது. அதனால் அவனைப் பார்ப்பதே அரிதாகிப் போனது நித்யாவிற்கு.

ஆனாலும் கிடைக்கும் வாய்ப்பிலெல்லாம் சைட்டிலும்,அலுவலகத்திலும் தூர நின்று பார்த்துக் கொண்டு தானிருந்தாள். கௌதமோ.. தினமும் அவளது ரோஜாச் செடிக்கு அவள் தண்ணீர் ஊற்ற வரும் போதும், அன்னையுடன் வளவளக்கும் போதும் மறைந்து நின்றும்,ஒளிந்து நின்றும் அவளை ரசித்துக் கொண்டிருந்தான். இரண்டு நாட்கள் கடந்து மூன்றாம் நாள்.. நித்யாவை நேருக்கு நேர் சந்தித்து விட்டப் பின் கௌதமினால் தனது கொள்கையைக் கடைபிடிக்க முடியாது போனது.

அன்று ஸ்ரீமதி பாப்பா வீட்டிற்கு வந்திருந்ததால் அவளிடம் ஒரு சாக்லேட் கொடுத்திருந்தான் கௌதம். அதை அவள் மாடியில் சென்றமர்ந்து உண்டு

DO NOT COPY

கொண்டிருக்க.. அவளைத் தேடி வந்த நித்யா.. அவள் கையிலிருந்த சாக்லேட்டைக் கண்டு “பாப்பா யார் உனக்கு சாக்லேட் தந்தது..?,எனக்குக் கொடுக்காமல் சாப்பிடுகிறாயே..?”என்று வினவ.. அவள் சாக்லேட்டோடு வேறு புறம் திரும்பிக் கொண்டாள் “எனக்கு அங்கிள் கொடுத்த சாக்லேட்.. போ..”என்று. “பாப்பா.. இப்படி நமது டீலை மறந்து விட்டாயே..?,உனக்கு அங்கிள் சாக்லேட் அளிக்கும் போதெல்லாம் அதில் பாதியை எனக்குக் கொடுப்பேன் என்றாயே.. இப்போது நீ தனியாக உட்கார்ந்து சாப்பிடுகிறாய்..?, ப்ளீஸ் பாப்பா.. எனக்குக் கொஞ்சம்..”என்று சிறு பிள்ளையிடம் வெட்கத்தை விட்டுக் கெஞ்சிக் கொண்டிருக்க.. ஸ்ரீமதியைத் தேடி மேலே வந்த கௌதமிற்கு இதைக் கண்டதும் சிரிப்பு தாங்க முடியவில்லை.

அவனுக்குத் தெரியும்! மிட்டாய் என்றால்.. நித்யா.. எப்படியும் சண்டையிட்டுப் பிடுங்கியேனும் தின்று விடுவாளென்று! பாக்கெட்டில் வைத்திருந்த கொஞ்சம் பெரிய சைஸ் டேரி மில்க்கை எடுத்து அவள் முன்பு நீட்டினான். “ப்ளீஸ் பாப்பா..”என்று கெஞ்சி கொண்டிருந்த நித்யா தன் முன்பு நீட்டப்பட்ட சாக்லேட்டைக் கண்டு ஆர்வமாகத் திரும்ப.. அங்கே நின்றிருந்த கௌதமைக் கண்டு.. சாக்லேட்டை வாங்காமல் வேறு புறம் பார்த்தாள்.

அவள் தன் கையை விடுத்ததும் ஸ்ரீமதி பாப்பா ஓடிச் சென்று விட.. சிறிது நேரம் வேறு புறம் பார்த்துக் கொண்டிருந்தவள்.. இன்னமும் சாக்லேட்டை நீட்டிய படியே நின்றிருந்த கௌதமை முறைத்தபடி சாக்லேட்டை வாங்கிக் கொண்டவள்.. அங்கேயிருந்த திட்டின் மீது ஏறியமர்ந்து உண்ணத் துவங்கினாள். இரண்டு கைகளிலும் சாக்லேட்டைப் பிடித்து சிறு பிள்ளை போல் உண்பவளை இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்தான் அவன். மிட்டாய் பாதி காலியான நிலையில்.. காற்றில் பறந்து கொண்டிருந்த முடி.. கன்னத்தில் வழிந்து.. அவள் சாப்பிடுவதைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. இரண்டு முறை “ப்ச்,”என்றபடி தோளினால் உரசிச் சீர் செய்தவள்.. மூன்றாம் முறை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவளையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தவன் பார்வையை அகற்றாமல் அவளருகே நெருங்கி கன்னத்தை உரசிக் கொண்டிருந்த கூந்தலைக் காதோரத்தில் ஒதுக்கினான். வெகு நாளைக்குப் பிறகு கிடைத்த அவனது தீண்டலில் கூசிச் சிலிர்த்த சருமத்தைக் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள் அவள். மௌன நாடகம் நடத்திக் கொண்டிருந்த இருவரும் எதுவும் பேசாமல் நேரத்தைக் கடத்த.. பின் தொண்டையைச் செறுமிக் கொண்டு “எப்படியிருக்கிறாய் நிதி..?”என்று உள்ளே சென்று விட்ட குரலில் வினவினான் அவன்.

பதில் கூறாமல் சாக்லேட்டை வாயில் திணித்தவள் அவனை நிமிர்ந்து பார்க்க.. அவளது பார்வையை எதிர் கொள்ள முடியாமல் திணறி.. மறுபக்கம் திரும்பி

DO NOT COPY

நின்றான் அவன். அப்பாடி!சார் ஒரு வழியாகப் பேசி விட்டார் என்று குதூகலித்த நித்யா.. எழுந்து சென்று.. கைகட்டி நின்றிருந்தவனது ஒருபக்கத் தோளில் சாய்ந்து சாக்லேட்டை உண்ணத் துவங்கினாள். அவளது தொடுகையில் மனம் குளிர.. குனிந்து அவள் முகம் நோக்கினான். கூந்தலைக் கோதத் துடித்தக் கைகளுக்குக் கடிவாளமிட்டு.. தொண்டையைச் செறுமியவன்.. "லண்டன் செல்ல முடிவு செய்திருக்கிறேன்..."என்று கூற.. அவன் தோளில் இன்னும் வாகாகச் சாய்ந்து கொண்டு "லண்டனா..?,எதற்கு..?"என்று வினவினாள்.

அவளது ஒவ்வொரு அசைவிலும்... தன் மீது உரசிய அவளது தேகத்தின் மென்மையை உணர்ந்தபடி சொர்க்கத்திற்குச் சென்று கொண்டிருந்தவன்.. மனதை அடக்கி அவளிடம் "அங்கே இரண்டு வருட ஆர்க்கிடெக்ச்சர் கோர்ஸ் படிக்கச் செல்ல வேண்டுமென்று நீண்ட நாட்களாக திட்டமிட்டுக் கொண்டிருந்தேன்.. இப்போது.. இப்போது அதற்கு நேரம் வந்து விட்டது.."என்று கூற.. "ம்ம்??அப்படியா..?,இதை நம்புவதற்கு நான் என்ன முட்டாளா..?"என்றவளிடம் "நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் உண்மை அது தான்.."என்று அவன் முணுமுணுக்க.. "நீங்கள் சென்று விட்டால் அலுவலகத்தை யார் பார்த்துக் கொள்வார்கள்..?"என்று வினவினாள்.

"அழகர்சாமி அங்கிள் தான்.."என்றவனிடம் "இல்லை.. நீங்கள் பொய் கூறுகிறீர்கள்.. உங்களால் முடியாது.."என்று கூற.. தன் தோளில் சாய்ந்திருந்தவளின் முகம் நோக்கி "ஏன்...?"என்றான். "ஏனென்றால்.. இந்த நித்யா.. இங்கே நுழைந்து பல நாட்களாயிற்றே..!"என்று தன் கன்னத்தால் அவனது நெஞ்சில் இடித்தவள்.. "அதனால் என்னை விடுத்து இரண்டு வருடம் பிரிந்திருக்க உங்களால் நிச்சயம் முடியாது.."என்று கண்கள் மின்னக் கூறினாள்.

அது என்னவோ உண்மை தான்.. என்று எண்ணமிட்டபடி நின்றிருந்த கௌதமின் கைகளைப் பற்றி தன்னோடு சேர்த்துக் கொண்டவள்... அவன் தோளில் மேலும் ஆழப் புதைந்து.. "நான் உன்னை எவ்வளவு மிஸ் செய்தேன் தெரியுமா..?,நீ ஏன் என்னிடம் சொல்லாமல் ஊட்டி சென்றாய்..?,அங்கே சென்ற பின் என் ஃபோனைக் கூட எடுக்கவில்லையே ஏன்..?"என்று வினவினாள். அவனது டீஷர்ட்டின் கழுத்தைப் பகுதியைப் பற்றிக் கொஞ்சலுடன் வினவியவளிடம் முழுவதுமாகத் தொலைந்து போன கௌதம்... சட்டென அவளை விடுத்துத் திரும்பி நின்றான்.

"இதற்காக.. இதற்காகத் தான் நான் லண்டன் செல்கிறேன்.. எப்படியேனும்.. உன்னை என் வாழ்விலிருந்து விலக்கியாக வேண்டும்.. உன்னை விரட்டுவதை விட நான் விலகிச் செல்வதே மேல் என்று தான் நானே செல்கிறேன்.. தயவு செய்து எங்கேனும் தூரமாகச் சென்று விடு.. என் கண்ணில் படாமல்.. என்

DO NOT COPY

கருத்தில் கலக்காமல்.. எங்கேனும்.. ப்ளீஸ்..”என்று நடுங்கும் குரலில் அவளது முகம் பார்க்காமல் அழுத்தமாகக் கூறியவனை திகைத்து நோக்கினாள் நித்யா.


கௌதம் அவளை அவனது வாழ்விலிருந்து விலகிச் செல்லச் சொல்கிறானா..?, ஏன்..?எதற்காக..?,நன்றாகத் தானே சென்று கொண்டிருந்தது சென்ற வாரம் வரை..?,திடீரென என்னவாகி விட்டது இவனுக்கு..?,ஏன் இப்படி நடந்து கொள்கிறான்..?,அவனாகவே அழைத்துச் சென்று மோதிரம் வாங்கித் தந்து காதல் பார்வை பார்த்தானே..?,இன்று ஏன் முகம் பார்க்க மறுக்கிறான்..? என்றெண்ணிய நித்யாவிற்கு.. நான்கு நாட்களாக அவன் தன்னைப் பாராமலிருந்ததும்,இங்கே வந்த பின்னும் தன்னை விட்டுப் பிரிந்திருந்தது, இப்போது அவன் பேசிய பேச்சு என அனைத்தும் ஒரு சேர்ந்து.. கண்களிலிருந்து கரகரவெனக் கண்ணீரை வரவழைத்தது..

“எ..என்ன சொல்கிறாய் நீ..?”என்று குரல் நடுங்க வினவியவளிடம் “என்னால் முடியவில்லை நித்யா.. போதும்.. விலகிச் சென்று விடு..”என்று அவன் கைக் கூப்ப.. புரியாமல் அவன் முகம் நோக்கியவள்.. “என்ன முடியவில்லை..?,எதைப் போதுமென்கிறாய்..?,புரிகிற மாதிரிப் பேசித் தொலையேன்..”என்று வெடித்தவளிடம் அவள் புறம் திரும்பியவன் “புரிகிற மாதிரியே பேசுகிறேன் கேட்டுக் கொள்.. நீ. நீ என்னிடம் நெருங்குவதும்.. என்னைக் காதலிப்பதாகக் கூறுவதும் எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.. நீ என் வாழ்வில் தேவையில்லை என்று நினைக்கிறேன்.. உன்னை விட்டு விலகியிருக்க விரும்புகிறேன்.. அது இங்கே முடியாத காரியம் என்பதால்.. லண்டன் செல்கிறேன்.. நான் திரும்பி வரும் முன் தயவு செய்து நீ வேறு எங்கேனும் சென்று விடு..”என்று கூற.. ஆத்திரமும்,அழுகையுமாக அவனை நிமிர்ந்து பார்த்த நித்யா.. பதிலேதும் கூறாமல் அழுதபடியே ஓடிச் செல்ல.. அவள் சென்றதும் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான் கௌதம்.



DO NOT COPY

# அத்தியாயம் – 16




கதிரவன் தன் கரங்களை நீட்டி..
இந்த பூமிக்கு ஒளி பரப்பும்..
அழகான காலை நேரம்...
அவனது கண்களின் வீச்சைத் தாங்காது..
மொட்டு விரிந்து மலர்ந்த பூக்கள்..
அழகாய்ச் சிரித்துக் கொண்டிருக்க..
பச்சை மரங்களின் நடுவே..
வெண்ணிற தேவதையாய்..
இடையில் குடம் ஏந்தி நடந்து வந்தாள் ராதை!

**அ**ழுகையுடன் ஓடிய நித்யா எதிரே வந்த ஒருவரையும் கவனியாமல் தன் இல்லத்தை அடைந்து தன் படுக்கையில் சாய்ந்து குலுங்கினாள். எப்படிப் பேசி விட்டான்.. அவளும் அவளது காதலும் அவனுக்குத் தொல்லையாம்.. நிதி,நிதியெனக் கொஞ்சும் போது தெரியவில்லையா நான் தொல்லையென்று.. என் வாழ்வையே மாற்றி விட்டாய்.. எங்கிருந்து வந்தாயெனக் காதல் வசனம் பேசினானே.. அவையனைத்தும் பொய்யா..?,அவளது கையில் அவன் மோதிரம் அணிவித்த அன்றிலிருந்து அவன் எப்போது தனதுக் காதலை வெளிப்படுத்துவான் என்றும்.. அவன் கூறும் கணம் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கனவு கொண்டிருந்த நித்யாவிற்கு.. அவனது இந்த வார்த்தைகள் அப்பட்டமான அதிர்ச்சியைத் தந்தது.

தேம்பியபடி படுக்கையில் சாந்திருந்தவளைக் கண்ட விஸ்வநாதனுக்கு மனம் பொறுக்கவில்லை.. அவருக்குத் தெரிந்து நித்யா என்றுமே அழுததில்லை.. அவள் கண்கள் கண்ணீரைச் சிந்தியது அவளது அன்னையின் மறைவுக்குப் பிறகு இன்று தான்.. அதிலிருந்தே அவள்.. கௌதமை அன்னைக்கு நிகராக நேசிக்கிறாள் எங்கிற உண்மை அவருக்குப் புரிந்தது. ஆனால் அவளது அழுகையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவும் முடியவில்லை.. தங்கை மகன் தான்.. என்னடா பிரச்சனை என்று தாராளமாகச் சென்று அவன் சட்டையைப் பிடிக்கலாம்.. ஆனால் அவர்களுக்குள் நடந்து கொண்டிருக்கும்

DO NOT COPY

பிரச்சனையில்.. இப்போது தான் வேறு சென்று குழப்பத்தை உண்டாக்க வேண்டாமென்று அமைதியாக இருந்து விட்டார்.

வசந்தி பதறி ஓடி வந்து நித்யாவைப் பார்க்க.. அவளது அழுத தோற்றம் அவருக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியது. அனைவரது கேள்விக்கும் பதில் சொல்லாமல் இருந்த நித்யா.. அமைதியைத் தொடர.. இருவருக்கும் பயம் வந்து விட்டது, அடுத்த நாள் முழுதும் அழுது கரைந்து.. உணவு உண்ணக் கூட மறுத்து விட்டவள்.. மறுநாளே பயங்கரக் காய்ச்சலில் படுத்து விட்டாள்.

அவளது நிலையைக் காணப் பொறுக்காது மகனிடம் வந்த வசந்தி "கண்ணா.. நித்யாவிற்கும் உனக்கும் என்னப் பிரச்சனையோ எனக்குத் தெரியாது.. ஆனால் அவள் இரண்டு நாட்களாக சாப்பாடு,தூக்கமின்றி காய்ச்சலில் படுத்திருக்கிறாள்.. அறையை வேறு மூடி வைத்துக் கொண்டு எவரையும் உள்ளே அனுமதிக்க மறுக்கிறாள்.. இப்படியே சென்று கொண்டிருந்தால்.. அவளது நிலைமை என்னவாகுமோ என்று அவளது தந்தை மிகவும் கலங்குகிறார்.. கொஞ்சம்.. நீ.. நீ சென்று பார்த்து விட்டு வர முடியுமா கௌதம்..?"என்று வினவினார்.

நித்யாவிற்குக் காய்ச்சல் என்றதுமே பதறிப் போன கௌதம்.. அவள் சாப்பாடு,தூக்கமின்றி வாடுவதாக அன்னை சொன்னதும் பயந்தே போனான்.. விரைந்து சென்று எதிர்வீட்டை அடைந்தவன் விஸ்வநாதனைக் கண்டதும் தயங்கி "வ..வந்து நித்யாவை ஹாஸ்பிடல் அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன் சார்.."என்று கூறினான்.

அவர் பதில் பேசாமல் மேலேயிருந்த அவளது அறையைக் கை காட்ட.. விறுவிறுவென மாடிப்படிகளில் ஏறினான். கதவைத் தட்டி அவளிடம் "நித்யா.. நான் கௌதம்.. கதவைத் திற.."என்று கூற.. உள்ளே அவளிடமிருந்து பதிலற்றுப் போனது, "நித்யா.. இப்போது திறக்கப் போகிறாயா.. இல்லை நான் கதவை உடைக்கட்டுமா..?"என்று கோபமாகக் கூற.. அடுத்த நிமிடமே கதவு திறந்தது.

இரண்டு நாள் காய்ச்சலோடு சாப்பாடு,தூக்கமின்றி சோர்ந்து போனவள்.. கதவைத் திறந்து விட்டதும் விழப் பார்க்க.. "நிதி.."என்று ஓடி வந்து அவளைப் பற்றிக்கொண்டான் கௌதம். அவன் தன்னைத் தொட்டதும் அவன் கையைத் தட்டி விட்டு விலகியவள்.. "எதற்காக இப்போது என்னைத் தேடி வந்திருக்கிறாய்...?,இருக்கும் ஜீவனையும் எடுத்துக் கொண்டு செல்வதற்கா..?,இனி உன் பேச்சைக் கேட்க.. என் மனதிலும்,உடலிலும் தெம்பில்லை.. தயவு செய்து வெளியே சென்று விடு.."என்றவளைப் பொருட்படுத்தாது.. அருகேயிருந்த குளுகோஸைக் கலக்கி அவளை அமர வைத்துப் புகட்டியவன் அவளைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்குப் புறப்பட்டு விட்டான்.

DO NOT COPY

“என்னை விடு.. உனக்கு என்ன உரிமை இருக்கிறது என்னைத் தொட..?”என்று புலம்பியவளைக் கண்டு கொள்ளாமல் விறுவிறுவெனப் படிகளில் இறங்கி காரில் அமர வைத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்.

ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டுக் கட்டிலில் கிடப்பவளை இரண்டு நொடி இமைக்காமல் பார்த்திருந்தவன் பின் அவள் புறம் குனிந்து “முட்டாள்.. முட்டாள்.. அழுது கரைந்தால்... சாப்பிடாமல் இருந்தால் வாழ்வில் அனைத்தும் சரியாகி விடுமா..?,பட்டினி கிடப்பதால் யாருக்கும் என்ன லாபம்..?,அல்லது நீ போய்ச் சேர்ந்து விட்டால் தான் யாருக்கு என்ன நஷ்டம்..?,திமிர்.. உடம்பெல்லாம் திமிர்..”என்று பல்லைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்தில் கத்தியவனைப் பொருட்படுத்தாது வேறு புறம் நோக்கிக் கொண்டிருந்தாள் நித்யா.

பின் மெல்ல எழுந்து அமர்ந்தவள்.. தன்னை கோபமாக நோக்கிக் கொண்டிருப்பவனை ஆழப் பார்த்து “இனியொரு முறை லண்டன்,வாஷிங்டன் என்று ஆரம்பித்தீர்களானால் இதை விடக் கடுமையாக என்னைத் தண்டித்துக் கொள்வேன்.. கத்தியை வைத்துக் கையில் கீச்சிக் கொள்வது.. 20,25 தூக்க மாத்திரைகளை விழுங்கிக் கொள்வது.. தூக்கு மாட்டி மூச்சுக்கு ஏங்கி..”என்று கூறிக் கொண்டே சென்றவளை “வாயை மூடு முட்டாள்..”என்று உச்சஸ்தாதியில் சத்தமிட்டவன் பாய்ந்து வந்து அவளை அணைத்துக் கொண்டு “முட்டாள்தனமாகப் பேசி என்னை சாகடிக்காதே நிதி.. ப்ளீஸ்..”என்றவனிடம் “வலிக்கிறதல்லவா..?,இப்படித் தானிருந்தது எனக்கும் நீங்கள் லண்டன் செல்வதாகக் கூறிய போது..”என்றாள்.

அவளைத் தன்னிடமிருந்து பிரித்து அவள் முகம் நோக்கியவன்.. அவளது அழுத்தமானப் பார்வையைக் கண்டு மிரண்டு.. எழுந்து நின்றான். அதன் பின் அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்று சாப்பிட வைத்து மாத்திரை அளித்துத் தூங்க வைத்தான். எதுவுமே பேசாமல் இருவரும் தங்களது பணியைச் செய்து கொண்டிருந்ததைக் கண்டு வசந்தியும்,விஸ்வநாதனும் அமைதியாக விலகிச் சென்றனர்.

கௌதம் சென்றதும் நித்யாவைக் காண வந்த அழகர்சாமி “என்னம்மா இது..?, இப்படிச் செய்து விட்டாயே..”என்று கடிந்து கொள்ள.. அவரிடம் கௌதமின் லண்டன் பயணத்தைப் பற்றிக் கூறினாள். “அவன் நீண்ட நாட்களாக ஆசைப் பட்டது தானம்மா.. ஆனால் இப்போது நீ இப்படி செய்து கொண்ட பின்பு அவன் செல்வான் என்கிற நம்பிக்கையில்லை..”என்றார் அவர். யோசனையுடன் அவரை நோக்கியவர் “அங்கிள் திருவேங்கடம் சாருக்கு இரண்டு வாரம் விடுப்பு அளிக்க முடியுமா..?.முன்னைப் போல் கௌதமுடன் பழக எனக்கு வாய்ப்பில்லாமல் போனது..”என்று கூற கலகலவென நகைத்தார் அழகர்சாமி.

DO NOT COPY

"சிரிக்காதீர்கள் அங்கிள்.. அவரது சம்பளத்தைக் கூட நானே கொடுத்து விடுகிறேன் ப்ளீஸ்.."என்று கூற.. "கொஞ்சம் ரிஸ்க் தானம்மா.. கண்டிப்பாக முயற்சிக்கிறேன்.."எனக் கூறிச் சென்றார் அவர். இரண்டு நாட்கள் பொறுமையாக யோசித்தவள்.. மூன்றாம் நாள் எதுவுமே நடவாதது போல் உற்சாகமாக அலுவலகம் கிளம்பி விட்டாள்.

அன்று அலுவலகத்தில் தன் அறைக்குள் நுழைந்த கௌதம்.. அங்கே கணிணியில் பார்வையைப் பதித்தபடி அமர்ந்திருந்த நித்யாவைக் கண்டு திகைத்து விட்டான். இவள் எதற்காக இங்கே அமர்ந்திருக்கிறாள் என்று! அவளைக் கண்டு கொள்ளாது உள்ளே நுழைபவனைத் தன் பார்வையால் தொடர்ந்த நித்யா உற்சாகமான குரலில் "குட்மார்னிங் சார்.."என்று கூற.. அவனும் "குட் மார்னிங்.."என்று விட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தான்.

"திருவேங்கடம் வரவில்லையா..?"என்று விசாரித்தவனிடம் "அவர் இரண்டு வாரத்திற்கு மெடிக்கல் லீவ் எடுத்திருக்கிறார் சார்.. பெரியம்மையாம்.."என்று புழுகி வைத்தாள். "ஓ!"என்று உள்ளே சென்று விட்ட குரலில் கூறிய கௌதம் அப்படியானால் இன்னும் இரண்டு வாரத்திற்கு இவள் தான் இங்கே அமர்ந்திருப்பாள்.. என்று எரிச்சலுடன் மனதில் எண்ணிக் கொண்டு வேலையைத் தொடர்ந்தான்.

அவனிடம் வம்பு செய்து சாதித்தாக வேண்டும் என்று முடிவு செய்து அவன் அறையில் அமர்ந்திருந்த நித்யாவிற்கு அவன் முகம் போன போக்கைக் கண்டு சிரிப்பு வந்தது. நெஞ்சு நிறையக் காதலை வைத்துக் கொண்டு சார் மறைக்கப் பார்ப்பாராம்.. ஏன் என்கிற காரணத்தையும் கூற மாட்டாராம்.. இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படியிருப்பானென்று பார்ப்போம்.. என்று கறுவியபடி வேலையில் ஈடுபட்டாள்.

சிறிது நேரத்திலேயே ஒரு ப்ரிண்ட் அவுட்டைத் தூக்கிக் கொண்டு அவனருகே சென்று நின்றவள்.. "நீங்கள் கேட்டனுப்பிய பிரிண்ட்.. சரி பார்த்துக் கொள்ளுங்கள்.."என்று அவனருகே நெருங்கியவள்.. அதிலிருப்பதை அவனுக்கு விளக்கும் பொருட்டு அவனை உரசியபடி நின்றாள். சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தவன் பின் இறுகிய முகத்துடன் "நான்... நான் பார்த்துக் கொள்கிறேன்.." என்று கூற.. "என்ன சார்.. விளக்கம் கேட்டு நீங்கள் தானே மெயில் அனுப்பிருந்தீர்கள்.. இப்போது வேண்டாம் என்கிறீர்கள்.."என்று சிணுங்கியபடியே தன் பணியைத் தொடர்ந்தாள்.

ஒரு வழியாக அவள் முடித்து விட்டு நகர்ந்ததும் நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்டவன் அவளை முறைத்தான். "ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்..?,நான் அழகாக இருக்கிறேனா..?"என்று கண்களைச் சிமிட்டி வினவ.. வேகமாகப்

பார்வையைத் திருப்பிக் கொண்டவன் சட்டென அறையை விட்டு வெளியேறினான்.

மதிய இடைவேளையில் வசந்தி அளித்த உணவை அவனுக்குப் பரிமாறியவள் அவனை இடித்தபடி அமர்ந்து "இங்கே தான் ஏசி காற்று நன்றாக வருகிறது.."எனக் கூறி விட்டு உண்ண ஆரம்பித்தாள். "கொஞ்சம் பீட்ரூட் வேண்டும்.. கொஞ்சம் வடகறி.."என அவனை நன்றாகவே உரசிச் சென்று எடுத்துக் கொண்டவளைக் கண்டுப் பல்லைக் கடித்தான் கௌதம். "என்னைச் சாப்பிட விடப் போகிறாயா இல்லையா..?"என்றவனிடம் இமைகளைப் படபடவெனக் கொட்டி "நான் என்ன செய்தேன் சார்..?"என்று வினவினாள்..

"ஒன்றுமே தெரியாததைப் போல் நடிக்காதே... ராட்சசி..."என்று கடித்தப் பற்களுக்கிடையில் வார்த்தைகளைத் துப்பியவனிடம் "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை.."என்று உண்ணத் துவங்கினாள். அன்று மாலை தனது ஸ்கூட்டியை பங்க்ச்சர் செய்து அவனுடனே காரிலும் ஏறிக் கொண்டாள்.. காரில் ஏறியதும் தூக்கம் வருவது போல் பாசாங்கு செய்தவள் அவன் தோளில் சாய்ந்து கண் மூடிக் கொள்ள.. அவள் செய்யும் சேட்டைகளை எண்ணி சிரிப்பு வந்தது அவனுக்கு.

மறுநாள் விடிந்ததும் வசந்தியின் வீட்டிற்கு ஓடிச் சென்றாள். தோட்டத்தில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவனிடம் சென்று.. "குட்மார்னிங் கௌதம்.."என்று கூற அவனோ எதுவும் கூறாமல் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். அவனைக் கண்டபடியே அங்கேயிருந்த மரபெஞ்சில் அமர்ந்தவள் "நானும் உன்னைப் போல் உடற்பயிற்சி செய்து பலமாகப் போகிறேன்.."என்று அவனைப் போல் குனிந்து நிமிர்ந்து உடற்பயிற்சி செய்ய.. அவள் அணிந்திருந்த குட்டை டாப்ஸ் மேலேறி வெளிப்படுத்திய வெண்ணிற இடையைக் கண்டவனுக்குத் தான் தடுமாறிப் போனது...

"ஏய்.. போதும் நீ எக்ஸர்சைஸ் செய்தது.. உள்ளே செல்.."என்று கூற.. "ஏன்..?, நான் உன்னைப் போல் பலசாலியாக வேண்டாமா..?போடா.."என்றாள். "இப்போது உள்ளே செல்லப் போகிறாயா இல்லையா..?"என்று அதட்டியவன் அவள் எப்படியும் சொல் பேச்சுக் கேட்கப் போவதில்லை என்பதையறிந்து ஒரு கையால் அவள் இடையைப் பற்றி லேசாகத் தூக்கி இழுத்துச் சென்றான். "விடு.. என்னை விடு.. நானும் உடற்பயிற்சி செய்வேன்.."என்று கத்தியவளின் வாயை மூடி "ஏன்டி.. என்னைப் படுத்தி எடுக்கிறாய்..?,என்ன தான் வேண்டும் உனக்கு..?"என்று கூற.. "எனக்கு என்ன வேண்டும் என்று உனக்குத் தெரியாதா கௌதம்..?"என்று நேர்ப்பார்வையாக வினவ... சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டவன் "அது நடக்காத ஒன்று நித்யா.."என்று கூறினான். "ஏன்..?"என்று ஒற்றைச் சொல்லாக வினவியவளிடம் "நடக்காதென்றால் நடக்காது.."என்று விட்டு விறுவிறுவென நடந்து உள்ளே சென்று விட்டான். "நீ காரணத்தைக்

DO NOT COPY

கூறும் வரை நான் விடுவதாக இல்லை..”என்று கோபமாகக் கூறியவள் தன் இல்லத்தை நோக்கி நடந்தாள்.

இருவரும் நடத்திக் கொண்டிருந்த கண்ணாமூச்சி ஆட்டம் அடுத்த இரண்டு நாட்களில் முடிவுக்கு வந்தது. அன்று சத்யம் ஹவுஸஸ் என்கிற பலமாடிக் கட்டடங்கள் கொண்ட குடியிருப்புப் பகுதி பிராஜக்ட் நிறைவு பெற்றதற்காக.. அதன் உரிமையாளர் அனைவருக்கும் விருந்தளிக்கத் தீர்மானித்திருந்தார். கௌதமை வரவேற்க வந்தவர்.. நித்யாவின் துறுதுறு செய்கையையும், அவளது பேச்சையும் கவனித்து நீயும் கண்டிப்பாக வாம்மா.. என்று வரவேற்றுச் சென்றார். மறுநாள் மாலை விழா நடக்கவிருப்பதாக அவர் கூற.. கௌதமுடன் ஊர் சுற்ற நல்ல வாய்ப்பென்று கண்டிப்பாகச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

மறுநாள் வசந்தியிடம் ஆலோசித்து சேலை உடுத்துவதாகத் தீர்மானித்துக் கொண்டவள்.. மாலையானதும் வசந்தியுடன் சென்ற முறை ஷாப்பிங் சென்ற போது வாங்கிய பிங்க் நிற டிசைனர் சாரியை உடுத்திக் கொண்டு தோளில் விரிந்து படர்ந்த கூந்தலுடன் லேசான ஒப்பனையுடனும் அழகு மயிலாக கௌதமின் வீட்டிற்குள் நுழைந்தாள். “மிக அழகாய் இருக்கிறாய் கண்ணே..”என்று வசந்தி அவள் கன்னத்தில் முத்தமிட.. விஸ்வநாதன் மகள் சேலையில் அழகாக ஜொலிப்பதைக் கண்டு பூரித்துப் போனார்.

இருவரிடமும் முறுவலித்து விட்டு கௌதமின் அறைக்குள் நுழைந்தாள். நீல நிற கோட் சூட்டில் தயாராகி நின்றவன்.. கண்ணாடியின் முன்பு நின்று தன்னைச் சரிபார்த்தபடி கையில் வாட்சை மாட்டிக் கொண்டிருந்தான். “நான் தயார்.. செல்லலாமா..?”என்றபடி அவனருகே வந்தவளை நிமிர்ந்து கண்ணாடியில் நோக்கியவன் திகைத்துப் போனான்.

பிங்க் நிறப் புடவையில் பிங்க் நிற ரோஜாவாகக் கண் முன்னே நின்றவளை இமைக்க மறந்து நோக்கியவனை.. “இன்னும் டை கட்டவில்லையா..?”என்றவள் அவனைத் தன் புறம் திருப்பி அருகேயிருந்த டையை எடுத்து அணிவிக்கத் தொடங்கினாள். தன் மார்பளவு உயரத்தில் தன்னருகே நின்று கருமமே கண்ணாக டை அணிவித்துக் கொண்டிருந்தவளைக் கண்ட கௌதமிற்கு இதயம் எம்பிக் குதித்தது.

மையிட்டிருந்த அவளது கருவிழிகள் போதை கொள்ள வைக்க.. இயல்பாகச் சிவந்திருந்த கன்னங்கள்.. அவனை முத்தமிட அழைத்தது. லேசாகச் சாயம் பூசப்பட்டிருந்த அவளது இதழ்கள் செர்ரிப் பழங்களாய்த் தோன்ற.. உடனடியாக அதைச் சுவைக்க வேண்டுமென்று வெறி எழுந்தது அவனுக்குள். நேர்த்தியாக அவள் கட்டியிருந்த புடவை வெளிப்படுத்திய

DO NOT COPY

அங்கங்களையும்,மென்னிடையையும் கண்டவனுக்கு அவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் மோகம் எழுந்தது.

டையை அணிவித்து முடித்தவள் நிமிர்ந்து அவன் முகம் பார்க்க.. அவன் தன்னையே நோக்குவதைக் கண்டு "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்..?"என்று வினவியபடி அவன் தலை முடியைக் களைத்து "யு ஆர் லுக்கிங் வெரி ஸ்மார்ட் டுடே.."எனக் கூறி அவன் நெற்றியில் முத்தமிட்டாள். அவன் தோளைப் பற்றி நெருங்கி எம்பி அவள் முத்தமிட்டதில் அவளிடத்திலிருந்து புறப்பட்ட வாசம் அவனுக்கு வெறியேற்ற கண் மூடி அவளது அண்மையை ரசித்தான்.

"போகலாம் கௌதம்.. நேரமாகிவிட்டது..."என்று அவள் முன்னே நடக்க.. மந்திரித்து விட்டக் கோழியைப் போல் அவள் பின்னேயே சென்றான் அவன். அவனது பார்வையில் வித்தியாசத்தை உணர்ந்து கொண்ட நித்யாவிற்கும்.. இவன் ஏன் இப்படிப் பார்க்கிறான்.. என்று குழம்பிப் போனாள். அவனோடு காரில் ஏறி அமர்ந்த பின்பும் அமைதியாக வருபவனை அவளும் எதுவும் கூறவில்லை..

விருந்து நடைபெறும் இடத்தில் அவர்களுக்குத் தெரிந்த நிறைய பேர் வருகை தந்திருக்க.. அவர்களுடன் ஒன்றிப் போனாள் நித்யா. அவளுக்குச் சற்றுத் தொலைவில் நின்று மற்ற ஆண்களுடன் உரையாடலில் ஈடுபட்டிருந்தாலும் கௌதமனின் கண்கள் நித்யாவையே சுற்றியது. வடிவான அவளது இதழ்கள் விரிந்து ஒவ்வொரு முறையும் புன்னகையைச் சிந்தும் போது.. அவன் செயலிழந்து போனான். இங்குமங்கும் துறுதுறுவென நடனமாடிக் கொண்டிருந்த அவளது கருவிழிகள் அவன் கண்களை ஒருமுறை தீண்டிச் சென்றாலும்.. அவன் தடுமாறிப் போனான்.

அனைத்தையும் மீறி அங்குமிங்கும் அவள் நடமாடுகையில்.. இத்தனை நாட்களாக சுடிதாரிலும்,பாவாடை,சட்டையிலும் ஒளிந்து கிடந்த அவளது மொத்த அழகும் இன்று புடவையில்.. எட்டப்பனாக மாறி.. அவளது செழுமையைக் காட்டிக் கொடுத்து அவளுக்கு வஞ்சகம் செய்தது.

ஓடிச் சென்று அவளை இறுக அணைத்து.. ஓடித் திரியும் கண்களைத் தன் முகம் காணச் செய்து.. இதழோடு இதழ் பொருத்தி.. அவளை மூச்சுக்குத் தவிக்க வைத்து.. அந்தக் கழுத்தில் இதழ்களால் வருடி.. காணும் இடமெங்கும் முத்தமிட்டு.. அவள் மார்பில் முகம் புதைத்து அவளைத் தனக்குள்ளேயே புதைத்து விட வேண்டும் போல் தாபம் எழுந்தது அவனுக்கு.

அவள் எதிரில் நின்று அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதே பெரும் அவஸ்தையை ஏற்படுத்த.. தன்னருகே நடந்து சென்று கொண்டிருந்த

DO NOT COPY

வெயிட்டரின் தட்டிலிருந்த மதுவை எடுத்துக் கடகடவென அருந்தினான். இப்படியே இரண்டு,மூன்று வெறியுடன் அருந்தியவனைக் கண்டு பயந்து போன நித்யா... வேகமாக அவனருகே வந்து அவன் கையைப் பற்றி அவனைக் குடிக்க விடாமல் தடுத்து... "கௌதம்.. கௌதம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்..?"என்று அடிக்குரலில் வினவ.. "என்னைத் தொடாதே.. என் கையை விடு..."என்று வெடுக்கெனக் கையை எடுத்துக் கொண்டவனை இழுத்துக் கொண்டு பார்ட்டி நடந்து கொண்டிருந்த இடத்தைத் தாண்டி வெளியே வந்தாள் நித்யா.

"என்னவாகி விட்டது உங்களுக்கு..?,ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்..?, நீங்கள் இனி இந்தக் கருமாந்திரத்தைத் தொட மாட்டீர்கள் என்று நான் மகிழ்ச்சியுற்றிருந்தால்... திடீரென இன்று ஏன் இப்படிச் செய்கிறீர்கள்..?"என்று கோபத்துடன் வினவினாள். அவள் இழுத்த இழுப்பிற்குத் தள்ளாடியவன் "உன்னால் தான்.. உன்னால் தான்.."என்று கூற.. அவனைப் பற்றி நிறுத்திய நித்யா.. "என்னாலா..?"என்று விழி விரித்தாள்.

தன்னைப் பற்றியிருந்த அவளது கைகளை விடுத்து அவள் தோளைப் பற்றி நடத்திச் சென்றவன்.. எதிரேயிருந்த சுவற்றில் சாய்த்து.. "இந்த.. இந்தக் கண்களை முத்தமிட முடியாமல் போனதால் உண்டான தவிப்பு.. இந்த இதழ்களை சுவைக்காமல் போனதால் உள்ளே எழுந்த தாபம்.. இந்தப் பூவுடலை அணைக்க முடியாமல் போனதால் உண்டான தாகம்.."என்றவன் சட்டென அவளை இழுத்து இறுக அணைத்து "நிதி.. ஐ நீட் யூ.. ஐ நீட் யூ டெர்ரிப்ளி.."என்று கூற மூச்சு விட மறந்து திகைத்து நின்று விட்டாள் நித்யா.

தன்னோடு அவளைச் சேர்த்தணைத்த அவனது கரங்கள் முதுகை வருடி.. அவள் இடையில் அழுந்தப் பதிய.. கண்களை இறுக மூடினாள் நித்யா. அந்த மிதமான ஒளியில் அவள் முகத்தை நிமிர்த்தி கண்ட கௌதமிற்கு.. அதற்கு மேல் முடியாதென்று தோன்ற.. குனிந்து அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான். இடையில் இறுகப் பதிந்த அவனது கரங்களே அவனது தாபத்தை வெளிப்படுத்த.. அவளது இதழ்களைப் பருகத் துவங்கியவன்.. விடுவிக்கும் எண்ணமே இல்லை என்பது போல்.. அவளது தலைமுடியை அழுந்தப் பற்றி ஒன்றிப் போயிருந்தான்..

மூச்சுக்குத் திணறிப் போன நித்யா.. அவனிடமிருந்து விலகி வேறு புறம் திரும்பி நிற்க.. அந்தப் பச்சைப் புல்வெளியுடன் கூடிய மாடியில்.. வெட்ட வெளியில்.. சிலுசிலுவென வீசிச் சென்ற காற்று.. அவளது சேலை முந்தானையைக் களவாடிச் சென்று தன்னோடு தக்க வைத்துக் கொள்ள.. அவளைப் பின்னோடு அணைத்து.. முதுகில் இதழ் பதித்து.. கன்னம் உரசினான் அவன். சிலிர்த்து விலகிப் பின்னே சென்றவளின் இடையைப் பற்றி அருகிலிழுத்தவன்.. கழுத்தோரத்தில் முத்தமிட்டு.. அவள் மார்பில் புதைந்தான்.

DO NOT COPY

தன்னியல்பாய் எழுந்த கரங்கள் அவன் தலைமுடியை வருடத் துவங்க.. அவளைப் பற்றித் தூக்கியவன்.. தன் காரை நோக்கி நடந்தான்..


காரில் அவளைக் கிடத்தி.. அவள் மேலே சாய்ந்தவனுக்கு "கௌதம்... நா.. நான் சொல்வதைக் கேளுங்கள்.."என்ற நித்யாவின் வார்த்தைகள் ஏதும் காதில் எட்டாமல் போக... அவள் முகமெங்கும் முத்தமிட்டு அவள் இதழ்களில் மீண்டும் கவிதை எழுதத் தொடங்கினான் அவன்.

அவளை இறுக அணைத்திருந்த அவனது கரங்கள்.. அவள் உடலில் தன் தேடலைத் துவங்க.. இயல்பாக எழுந்த கூச்சத்தில் அவனை தடுத்துக் கொண்டிருந்தாள் நித்யா... "நிதி.. நிதி..." என அவனது கொஞ்சல்களிலும் தீண்டல்களிலும் முழுதாக தன்னை இழந்து போன நித்யா.. தனது சேலையை விலக்கி அவன் தன் மார்பில் முகம் புதைத்த போது.. தன்னைக் கட்டுபடுத்திக் கொள்ள முடியாது போனாள்.

இடையை இறுக்கிய அவனது கரங்கள்.. "நித்யா... நித்யா.."என்ற கொஞ்சலோடு.. மேலும் மேலும் முன்னேறத் துவங்க.. அவனைத் தடுக்கத் தோன்றாமல்.. தடுக்க முடியாமல்.. தானும் சொக்கிப் போனாள் நித்யா.. அவனது ஒரு முத்தத்திற்காகவும்.. ஒரு அணைப்பிற்காகவும் வெகுவாக ஏங்கிப் போயிருந்த அவளுக்கு.. அவனது ஆசையும்,தாபமும்,மோகமும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது.. இந்த நான்கு நாட்களாக அவனைச் சீண்டி,உரசி,உசுப்பேற்றி அவனது மோகத்தை அதிகப்படுத்தியவளை தண்டிப்பதைப் போல் அவளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான் கௌதம் பிரபாகரன்.



# அத்தியாயம் – 17




தோகை விரித்தாடும் வண்ண மயிலும்..
நின் கீதமிசைக்குத் துள்ளி ஓடும் புள்ளி மானும்...
அல்லிக் குளத்தில் பூத்திருக்கும் தங்கத் தாமரையும்..
மோகப் பார்வை வீசியபடி உன்னைச்
சூழ்ந்து நிற்கும் கோபிகையர்களும்...
தவமிருப்பது.. உன் இருவிழிப் பார்வைக்காகத் தானடா கண்ணா!

**மோ**கம் தீர வேண்டி.. தாகம் தீர்க்க நினைத்து.. எதைப் பற்றிய சிந்தனையுமில்லாமல்.. மதுவின் போதையில் சுயநினைவின்றி அவளைத் தன்னோடு இணைத்து விடும் வெறியில் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருந்த கௌதமைத் தடுக்கச் சக்தியற்று வீழ்ந்து போனாள் நித்யா. காரணம் காமத்தோடு கலந்து அவள் மீது அவன் கொண்ட காதலும் அங்கே அரங்கேறிக் கொண்டிருந்ததால்...

"நித்யா... நிதி..."எனக் கொஞ்சல்களுக்கு மத்தியில் அவன் அளித்த முத்தங்களும்... எங்கே விலகிச் சென்று விடுவாளோ என்கிற பயத்தில்.. அவளை இறுகப் பற்றியிருந்த அவனது கைகளும்.. அவனது வேகமும்.. துடிப்பும்.. காதலும்.. மோகமும்.. அவளைச் செயலிழக்கச் செய்ததென்னவோ உண்மை தான்..

அவன் தன்னை விரும்பவே இல்லையோ என்கிற மனோபாவத்திற்கு வந்து எப்படியேனும் அவனுடன் தன் வாழ்வைப் பிணைத்து விட வேண்டும் என்கிற பயத்தில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தவள் அவள். அதிலும் கடைசி இரண்டு வாரமாக காரணமின்றி அவளிடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் அவனது மனநிலையை அறிய முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு.. இன்று அவன் குடிபோதையில்.. திடீரென அவளை அணைத்ததும்.. அவளைத் தீண்ட வேண்டுமெங்கிற தாபம் தன்னை நிம்மதியின்றி அலைக்கழிப்பதாகக் கூறி முத்தமிடுகையில் முழுவதுமாக சொக்கிப் போனாள்..

DO NOT COPY

அவளது காதலன்.. மனங்கவர் கள்வன்.. கடந்த மூன்று ஆண்டுகளாகப் பெண் வாடையற்று பிரம்மச்சாரியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவன்.. அப்பேர்ப்பட்டவனின் அந்தரங்க எண்ணங்களைத் தூண்டும் வகையில் தான் அவனது நேசத்திற்கு உரியவளாக இருக்கிறோம் என்பதை நினைக்கையிலேயே அவளுக்கு கர்வமும்,காதலும் எல்லையற்றுப் போனது..

எதைப் பற்றியும் சிந்திக்க விடாமல் மேலும் மேலும் அவளிடம் தனது தேடலைத் தொடங்கியவனிடம் வார்த்தைகளற்று அவளும் மயங்கிப் போனாள். அவன் எல்லை மீறும் சமயம்.. எங்கிருந்து ஒலித்ததோ அந்த ஹாரன் ஒலி.. மயக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்த நித்யாவிற்கு அவன் தன் மீது படர்ந்திருந்தது பயத்தை ஏற்படுத்த “கௌதம்... கௌதம்..”என அவனைத் தன்னிடமிருந்து விலக்கப் பார்த்தாள்.

மதுவின் போதையோடு சேர்ந்து மாதுவின் போதையும் சேர்ந்து கொள்ள.. அவன் இப்போதைக்கு விழிப்பதாகவே இல்லை.. அவள் விலக்க எத்தனிக்கையில் அவனது பிடி அதிகமாகியதே தவிரக் குறையவில்லை.. இது வேலைக்காகாது..! இவன் சுயநினைவிலேயே இல்லை.. என்றெண்ணியவள்.. தன் பலம் முழுதையும் திரட்டி அவனை விலக்கித் தள்ளி.. முன் சீட்டுக்குச் சென்று விட்டாள்..

“நித்யா... நிதி....”என அவனது கைகள் அவளைக் காற்றில் துழாவிக் கொண்டிருக்க.. முன்னிருக்கையில் வந்து அமர்ந்த நித்யாவிற்கு.. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க.. அந்த ஏசி காரிலும் வியர்த்து வழிந்தது.. அந்த ஹாரன் ஒலி மட்டும் வந்திராவிடில் என்ன காரியம் செய்திருப்பாள்?!, என்ன தான் அமெரிக்காவில் அழுக்குக் கலாச்சாரத்தில் வளர்ந்திருந்தாலும்.. நாம் இந்தியர்கள்.. ஒழுக்கத்தை உயிராகக் கருதும் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தந்தை மூச்சுக்கு முன்னூறு தடவைக் கூறி வளர்த்திருந்தார்.

அப்படிப்பட்டத் தந்தையின் வளர்ப்பில் வளர்ந்த மங்கை... இன்று எப்பேர்ப்பட்டத் தவறை செய்திருப்பாள்..! நல்ல வேளை! எதுவும் நடக்கும் முன் சுதாரித்தாயிற்று..! அமர்ந்திருந்த சீட்டில் பின்னால் சாய்ந்துத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவளை.. “நித்யா... நித்யா.. ஐ லவ் யூ நித்யா.. என் காதலை உன் கண்களைப் பார்த்துக் கூடத் தெரிவிக்க முடியாத கோழையாகிப் போனேன்.. நித்யா.. நா..நான் உன்னை நேசிக்கிறேன்.. என் உயிரினும் மேலாக.. நித்யா.. ஐ லவ் யூ...”என்ற கௌதமின் வார்த்தைகள் திடுக்கிட்டு விழிக்க வைத்தது.

அவசரமாகத் திரும்பி அவன் முகம் நோக்கினாள். இடம்,பொருள்,ஏவல் என அனைத்தையும் மறந்துக் குடி போதையில்.. தன்னிலையின்றி சீட்டில்

படுத்திருந்தவன்... நாக் குளறக் குளற.. தன் மனதின் குமுறல்களையெல்லாம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

இந்த ஒரு வார்த்தையைக் கேட்பதற்காக எத்தனையோ நாட்களாகத் தவித்துக் கொண்டிருந்த நித்யாவிற்கு.. அவனை எழுப்பி அவன் சட்டையைப் பற்றி.. "எதற்காக என்னைத் தவிக்க விட்டாயடா பாவி.."எனச் சண்டையிட்டு அவன் மார்பில் சாய்ந்துக் கண்ணீர் விட வேண்டும் போலிருந்தது. கண்களில் வழிந்தக் கண்ணீருடன் அவனையே வெறித்து நோக்கியபடி அமர்ந்திருந்தாள்.

"நா.. நான் கோழை தான் நித்யா.. நான்.. நான் உனக்கேற்றவனில்லை.. நீ வளர்க்கும் ரோஜாப் பூவை விட நீ மென்மையானவள்.. உன்னைக் காதலித்துக் கல்யாணம் செய்து.. உனக்கு அவப்பெயரைத் தேடித் தர எனக்கு விருப்பமேயில்லை.. உனக்குத் தெரியுமா நித்யா நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேன் என்று.. பெண்கள் மீது அப்படியொன்றும் நாட்டம் இருந்ததில்லை எனக்கு.. படிக்கும் காலத்திலும் சரி,வேலை பார்க்கத் தொடங்கிய பின்னும் சரி, எங்கும் பெண்கள் என் அருகில் வந்ததில்லை.. நீ கூறினாயே.. சிடுமூஞ்சி என்று.. அந்தக் காரணத்திற்காகக் கூட இருக்கலாம்.. அதனால் காதல் என்கிற உணர்வு என் மனதில் எழ வாய்ப்பேயில்லாமல் போனது.. முதன்முதலாக நான் சந்தித்துத் திருமணம் செய்து கொண்ட பெண்ணும் என்னை விட்டு ஓடிச் சென்று விட.. பெண்கள்,காதல்,கல்யாணம் என்றாலே.. எட்டிக் காயாய் கசந்து போனது... அந்தச் சண்டாளியுடன் நடந்த கல்யாணத்தால்.. என் தொழிலும்,உறவுகளிடத்திலும் நான் எனது மரியாதையை இழந்தேன்.. நான் என் கால் செருப்பாக நினைத்த ஜீவன்களெல்லாம் என்னை எக்களிப்பாகப் பேசிச் சென்றது... நரகமாகக் கழிந்த இரண்டு வருடங்களும் என் தன்னம்பிக்கையை,வாழ்க்கை மீதான பிடிப்பை வெகுவாகக் குறைத்து விட்டிருந்தது.. அப்படிப்பட்ட சமயத்தில் தான் புயலாக நீ என் வாழ்வில் நுழைந்தாய்.. முதல் நாளே என்னுடன் வாதாடி.. என் எண்ணத்தை மாற்றி என் கம்பெனியில் இடம் பிடித்தாய்.. உன் நடவடிக்கையும், உன் பேச்சும்,சிரிப்பும் என்னுள் பற்பல மாற்றங்களை விளைவித்தது.. கல்லாகிப் போயிருந்த என்னைச் சிரிக்க வைத்தாய்.. மகிழ்ச்சி கொள்ள வைத்தாய்.. வம்பு பேச வைத்தாய்... அனைத்தையும் தாண்டி... மரத்துப் போயிருந்த என் உணர்வுகளைத் தூண்டி என் மனதில் காதலைப் பரப்பினாய்.. நித்யா.. என் வாழ்வில் என் அன்னைக்குப் பிறகு நான் மதிக்கும் ஒரே பெண் நீ தான்.. என் வாழ்வை எனக்கே உணர வைத்த நீ என் உயிர் மூச்சு நிற்கும் வரை உடனிருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன்.. ஆனால்... ஆனால்..."என்றவனை கண்ணீர் மிதக்கும் விழிகளுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

DO NOT COPY

“முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்டக் கொடி போலாகி விட்டது என் வாழ்க்கை.. ஆரம்பிக்கும் முன்னரே முடிந்தும் போய் விட்டது.. ஆனால்.. நித்யாவின் வாழ்க்கை அப்படியல்ல.. அவள்.. அவளது வாழ்வை வீணாக்க நான் விரும்பவில்லை.. அந்த சுந்தரி கூறியதைப் போல்.. அவள் என்னை மணந்து கொண்டால்.. எனது இரண்டாவது மனைவி என்கிற பெயருக்கு ஆளாகி விடுவாள்.. அது அவளுக்கு எவ்வளவு பெரிய அவமானத்தை ஏற்படுத்தும்..?,முடியாது.. என்னால் முடியாது.. என்னை மணந்து கொண்டதால்.. அவள் வாழ்வில் ஒரு நொடி தலை குனிய நேர்ந்தாலும்.. என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.. நான்.. நான் அவளை விட்டுப் பிரிந்து செல்ல விரும்புகிறேன்... ஆனால்.. என்னால் அவளை மறக்க முடியவில்லை.. என்னால் அவளைப் பிரிந்திருக்க முடியவில்லை.. தூரத்தில் அவளைக் கண்டாலே அள்ளி அணைத்துக் கொள்ள எழும் ஆர்வத்தைக் கட்டுபடுத்திக் கொள்ள முடியாத என்னால்.. அவளருகே நின்று பிரிந்திருக்க முடியவில்லை.. நித்யா.. ஐ நீட் யூ... என் வாழ்க்கை முழுதிற்கும் நீ வேண்டும்.. நித்யா.. நித்யா..”என சுயநினைவின்றிப் புலம்பலில் ஈடுபட்டான் கௌதம்.

அவன் கூறியது முழுதையும் கேட்ட நித்யா மலைத்துப் போனாள். முட்டாள்.. முட்டாள் கௌதம்.. இப்படி அறிவீனமாக முடிவெடுப்பதை என்று தான் நிறுத்திக் கொள்ளப் போகிறாய்..?,போற்றுவார் போற்றட்டும்.. தூற்றுவார் தூற்றட்டும்.. அனைத்தும் இறைவனுக்கே! என்று வாழ்க்கைப் பாதையில் தடையின்றிப் பயணிப்பதை விடுத்து.. முட்டாளைப் போல் யோசிக்கிறான்.. சுந்தரியாம் சுந்தரி! யார் அந்த முட்டாள்..?,நன்றாகச் சென்று கொண்டிருந்த அவனது வாழ்வில் மீண்டும் பூகம்பத்தைக் கிளப்பி விட்டுச் சென்று விட்டாள்.. பாதகி! இவனை.. இவனை என்ன தான் செய்வது..?,போதை தெளிந்ததும் நிச்சயம் அவன் தனது காதலை ஒப்புக் கொள்ளப் போவதில்லை.. சுந்தரி, சுண்டைக்காய் என்று ஆரம்பித்து விடுவான்.. என்று யோசித்தவள்.. அவனை நன்றாகப் படுக்க வைத்து.. வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள்.

வீட்டில் இறங்கியதும் அவனை எழுப்பி அவனது அறைக்கு நடத்திச் சென்று படுக்கையில் சாய்த்தாள். அப்போதும் அவளது கையைப் பற்றி “நித்யா... நித்யா..”என்றவனை மென்மையாக நோக்கி அவன் தலையை வருடி.. நெற்றியில் அழுந்த முத்தமிட்டாள். அப்போதும் அவளது முத்தத்தை உணர்ந்து ஆர்வத்துடன் அவளை அணைத்தவனின் கையை விலக்கி அறையை விட்டு வெளியேறினாள். இரவு முழுதும் சிந்தித்தவள்.. அதிகாலை உறங்கிப் போனாள்.

அதிகாலை தூக்கமும்,போதையும் தெளிந்த பின் மெதுவாக அசைந்து திரும்பிய கௌதம்.. தான் தனது அறையில்.. தனது படுக்கையில் கிடப்பதைக்

கண்டு வியந்து.. நேற்று இரவு என்ன நடந்ததென்பதைக் கண் மூடி நினைவிற்குக் கொண்டு வர முயன்றான்.

பிங்க் நிறப் புடவையில் முகம் நிறைய சிரிப்புடன்.. காற்றில் கூந்தல் அசைந்தாட அவன் கண் முன்னே வந்து நின்றாள் நித்யா.. அவளைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தவன்.. ஒரு கட்டத்திற்கு மேல் தாங்காமல் போக இரண்டு,மூன்று முறை மது அருந்தினான். அதன் பின்.. அதன் பின்.. அவளைக் கட்டி அணைத்ததும்.. மோகத்தில்.. குடி போதையில் புத்தியிழந்து முத்தமிட்டதும் நினைவிற்கு வந்தது.. அதன் பின்பு அவன் அவளைக் காரில் கிடத்தியது வரை தான் அவனுக்கும் ஞாபகம் வந்தது.

அதன் பின்பு என்ன நடந்ததென்பதை எவ்வளவு முயற்சி செய்தும் நினைவில் கொண்டு வர முடியவில்லை. ஆனால் அதன் பின்பு என்ன நடந்திருக்கும் என்பதை அவனால் யூகிக்க முடிந்தது. சட்டென எழுந்தமர்ந்துத் தலை முடியை அழுந்தக் கோதியவனுக்கு.. முட்டாள்தனமாகத் தான் செய்து விட்ட காரியத்தை நினைத்துத் தன் மீதே கோபமும்,ஆத்திரமும் வந்தது...

நித்யாவிடமிருந்து விலகியாக வேண்டுமென்றுத் தீர்மானித்து இத்தனை நாட்களாக அவன் கஷ்டப்பட்டுக் காத்து வந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் கை மீறிப் போய் விட்டதே.. நெஞ்சு நிறையக் காதலுடன் புள்ளி மானாய் தன் பின்னேத் துள்ளித் திரிந்தவளை குடி போதையில் நெருங்கித் துன்புறுத்தி விட்டானே..! பூவின் மென்மையை.. கரந்த பாலின் தூய்மையை.. அப்பழுக்கற்ற காதலை அள்ளி அள்ளிக் கொடுத்தவளின் மீது தன் பலத்தைப் பிரயோகித்திருக்கிறானே! இனி எப்படி அவள் முகத்தில் விழிக்க முடியும்..?

அணு அணுவாக நேசித்து நெஞ்சு நிறைய அவளுக்கான காதலையும்,ஆசையையும் சேமித்து வைத்திருந்தானே..! அவையனைத்தையும் பொய்யாக்குவது போல்.. மிருகத்தனமாக நடந்து கொண்டு ச்சை.. தன் மீதே அவனுக்கு வெறுப்பாக வந்தது. ஓடிச் சென்று அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் போல் தோன்றியது. எண்ணியதை உடனே செயல்படுத்த விரும்பி குளித்து உடை மாற்றி அவள் இல்லம் நோக்கி நடந்தான்.

வாசலில் வரவேற்ற விஸ்வநாதனிடம் முறுவலித்து "நி..நித்யா.."என்று தயங்கித் தயங்கிக் கூற.. "பின் வாசலில் அமர்ந்திருக்கிறால் தம்பி.. செல்லுங்கள்.."என்று அனுப்பி வைத்தார். இதயம் படபடவென அடித்துக் கொள்ள.. மன்னிக்க முடியாத... மிகப் பெரிய தவறைச் செய்து விட்ட குற்ற உணர்வுடன்.. அவளைத் தேடிச் சென்றான்.

இரவு கௌதம் போதையில் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளையும் அந்நாளில் ஆயிரமாவது முறையாக நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கைகள் தன்

DO NOT COPY

போக்கில் மல்லிகைச் செடியை வருடிக் கொண்டிருக்க.. பார்வையை எங்கோ பதித்து சிலையென அமர்ந்திருந்தவளைக் கண்ட கௌதமிற்குக் குற்ற உணர்வு இன்னும் அதிகமானது.

மெல்ல அருகே சென்று “நித்யா...”என்றழைக்க.. திடுக்கிட்டுத் திரும்பினாள் நித்யா. தயங்கியபடி வாசலருகே கௌதம் நின்று கொண்டிருப்பதைக் கண்டவளுக்கு.. நேற்று நடந்து சம்பவங்கள் நினைவில் வர.. சிவந்த முகத்தை மறைத்துக் கொள்ள மறுபுறம் திரும்பித் தலை குனிந்து நின்றாள்.

கருநீலமும்,சிகப்பும் கலந்த தாவணி அணிந்திருந்தவளை அந்தக் கவலையிலும் அவனது மனம் ரசிக்கத் தான் செய்தது. இவளைக் கண்டாலே மனம் தன்னாலே போதை கொள்ள ஆரம்பித்து விடுமே! பார்த்ததும்.. அள்ளி அணைக்கத் தூண்டும் இந்த மோசமான உணர்வை அளிக்க இவளால் மட்டும் எப்படி முடிகிறது..?,ராட்சசி.. என்னை வசியம் செய்யுமளவிற்கு காதலையும்,அன்பையும் கொட்டி கொட்டி அளித்து விட்டு இப்போது விலகி நிற்கிறாளே..!

செய்த பெரும் பிழையால் அவளிடம் மன்னிப்புக் கேட்க வந்திருக்கும் எண்ணமே இல்லாதவன் போல்.. தன் காதலியின் ஒப்பனையற்ற அழகில் மதி மயங்கி.. போதை கொண்டவன் போல் மாறி விட்டான் அவன். பின் தலையைச் சிலுப்பி நடப்பிற்கு வந்தவன்.. “நித்யா.. நித்யா.. என்னை மன்னித்து விடு.. குடி போதையில் முட்டாள் தனமாக உன்னிடம் தவறாக நடந்து கொண்டேன்... புனிதமான உன்னைச் சீரழித்து.. உன் வாழ்வை வீணாக்கி விட்டேன்.. எனக்குத் தெரியும்.. மன்னிப்பு என்கிற வார்த்தை.. இந்த விசயத்தில் எவ்வளவு பெரிய அபத்தம் என்று.. நிதி.. நீ.. இதற்காக என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்.. என்னை வெறுத்து ஒதுக்கி விடாதே.. நிதி.. ப்ளீஸ்.. என் வளர்ப்பையும்,என் நிலையையும்,ஏன் என் வயதையும் கூட மறந்து மதுவின் ஆக்கிரமிப்பில்.. சுயநினைவின்றி உன்னிடம்.. உன்னிடம்.. எல்லை மீறி நடந்து கொண்டு விட்டேன்.. நினைவு திரும்பியதிலிருந்து என்னால் ஒரு நிமிடம் கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை நிதி.. எப்பேர்ப்பட்ட முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டேன்..”என்று அவன் மூச்சு விடாமல் புலம்பித் தீர்க்க.. “இ..இல்லை.. கௌதம்.. நா..நான் சொல்வதை..”என்று ஆரம்பித்தவளைக் கண்டு கொள்ளாது.. “இல்லை நித்யா.. நீ எதுவும் கூற வேண்டாம்.. எப்பேர்ப்பட்ட ஒழுக்கமற்ற ஈனக் காரியத்தை செய்து விட்டேன் என்பதை நினைக்கையில் என் உடம்பெல்லாம் பற்றி எரிகிறது.. என் அன்னை,தந்தையின் வளர்ப்பை அவமானப் படுத்துவது போல் நான் இப்படி நடந்து கொண்டேனே..”என்று அவன் கதறத் துவங்கியதும்.. ஒரு புறம் வருத்தமாக இருந்தாலும் மூளையில் மின்னல் வெட்டியது அவளுக்கு.

DO NOT COPY

“இதற்காக.. நீ.. நீ என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன் நித்யா..”என்று அவள் முகம் பார்க்கக் கூடக் கூசி வேறு எங்கோ பார்வையைப் பதித்திருந்தவனிடம்.. “தண்டனை என்றால்..?,என்ன தண்டனையாக இருந்தாலும் பரவாயில்லையா..?”என்று வினவினாள். பதில் கூறாமல் தலையாட்டியவனிடம் “இதை நீங்கள் தண்டனை என்று எடுத்துக் கொண்டாலும் சரி,அல்லது செய்த தவறைச் சீர்படுத்துவதாக எண்ணிக் கொண்டாலும் சரி..”என்று பீடிகை போட்டவள்.. “என்னைத் திருமணம் செய்து கொள்வீர்களா..?”என்று வினவ.. திகைத்து விழி விரித்து அவள் முகம் நோக்கினான் அவன்.

ஒன்றும் பேசாமல் தலை குனிந்தபடி நின்றிருந்தவளிடம்.. ஒரு பெருமூச்சை வெளியேற்றி.. “செய்து கொள்கிறேன்” என்று கூறினான். வேறேதும் பேசாமல் அமைதியாகி விட்டவளிடம் “ஐ ஆம் சாரி நித்யா..”எனக் கூறி விட்டு விறுவிறுவென வெளியேறி விட்டான்.

அவன் வெளியேறியதும் குத்தாட்டம் போடாத குறையாக மகிழ்ச்சியாகி விட்டது நித்யாவிற்கு. என்னைக் காதலிப்பாயா மாட்டாயா.. என்று அவன் பின்னே திரிந்து வம்பு செய்து,சண்டையிட்டு ஒரு வழியாக அவன் சம்மதிக்க இருந்த வேளை சுந்தரி வந்து கெடுத்து வைத்தாள்.. இனி அவனிடம் கல்யாணம் செய்து கொள் என எப்படிப் போராடுவது என்று அவள் ஓய்ந்து போன வேளை வந்ததே ஒரு வாய்ப்பு..

தவறு தான்! அவன் செய்யாதத் தவறைச் செய்ததாகக் கூறி ஏமாற்றி அவனைத் திருமணம் செய்து கொள்வது! ஆனால்.. இதை விட்டால்.. இவனைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைப்பது மிகப் பெரிய கடினமான காரியமாயிற்றே! மறுபடியும் சுந்தரி என்பான்.. இரண்டாம் மனைவி,அவமானம் அது,இதுவென முட்டாள்தனமாகப் பேசிக் கடுப்படிப்பான். தேவையா..?, ஆயிரம் பொய்யைச் சொல்லியேனும் கல்யாணம் செய்யலாம் என்கிறார்களே! அவள் சொல்லப் போவது ஒரு பொய் தானே! இதனால் விளையப் போகும் நன்மை தான் ஆயிரம்! அத்தை,அப்பாவிலிருந்து தொடங்கி அழகர்சாமி,நம்பி வரை அனைவரும் சந்தோசப்படுவாரகள்.. இது தான் சரி! என்று தீர்மானித்துக் கொண்டு துள்ளலுடன் வசந்தியிடம் சென்றாள்.

அவரது வீட்டினுள் நுழைந்து “அத்..”என்று உற்சாகமாக ஆரம்பித்தவளின் குரல் பாதியிலேயே நின்று போனது. ஏனெனில் அங்கே அன்னையின் முன்பு குனிந்த தலையுடன் கௌதம் நின்றிருந்தான். சட்டெனத் திரும்பி அங்கேயிருந்த சுவரின் பின்னே மறைந்தவள் அவர்களின் உரையாடலை கவனித்தாள். சற்றுத் தயங்கிய கௌதம் பின் “அம்மா.. நா..நான் நித்யாவைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்..”என்றவன் தொடர்ந்து “எ..எவ்வளவு சீக்கிரம்

DO NOT COPY

முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் ஏற்பாடு செய்யுங்கள்..”எனக் கூற.. வசந்தி அடைந்த மகிழ்ச்சிக்கு வார்த்தைகளே இல்லாமற் போனது.

மகனின் கன்னத்தை வருடி முத்தமிட்டு.. உச்சி மோந்தவர் “நீ இப்படியொரு வார்த்தையைக் கூற வேண்டுமென்பதற்காக எத்தனை நாட்கள் தவமிருந்தேன் தெரியுமா கண்ணா..?,என் பிரார்த்தனை வீண் போகவில்லை.. என் கண்ணன் கல்யாணத்திற்குச் சம்மதித்து விட்டான்.. உன் எண்ணம் போல்.. சிறப்பான வாழ்வமையும்..”என்று அவர் கண்ணீர் சிந்த.. அவரின் கையை விலக்கி லேசான முறுவலுடன் நகர்ந்து சென்றான் அவன்.

அவன் சென்றதும் உள்ளே நுழைந்த நித்யா.. “அத்தை....”என்று கட்டிக் கொள்ள.. “நினைத்ததைச் சாதித்து விட்டாய் நிதும்மா.. எனது கடைசி முயற்சியாகத் தான் நான் உன்னை இந்தியா வரவழைத்தேன்.. அப்போதும் கூட என் மகன் மாறி விடுவானென்று நான் முழுதாக நம்பவில்லை.. ஆனால்.. நீ வந்ததிலிருந்து அவனிடம் தென்படும் மாற்றங்கள்.. நித்யா.. நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும்..”என்று அவர் உணர்ச்சிவசப்பட.. “அத்தை... ரிலாக்ஸ் அத்தை.. உங்கள் மகன் தானாக வந்து என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறுகிறாரே.. எப்படி..?,ஏன் என்றெல்லாம் யோசித்துப் பார்க்க மாட்டீர்களா..?”என்றவள் அவர் என்ன என்று புருவம் சுருக்கியதும்.. “அ..அது வந்து அத்தை.. நீங்கள் என்னைத் தவறாக நினைக்க மாட்டீர்களானால் நான் இதைச் சொல்கிறேன்..”என்று கூறியவள்.. முந்தைய இரவு நடந்ததைத் தெரிவித்தாள்.

அவர்களிருவருக்குள் நடந்த பிற விசயங்களை மறைத்து அவன் குடி போதையில் உளறியதை மட்டும் கூறி “அத்தை.. அந்த கண்ணாம்பாளின் மகள் சுந்தரி மட்டும் அவளது திருவாயை மூடிக் கொண்டு சும்மா இருந்திருந்தால் நானும்,அவரும் எப்போதோ இணைந்திருப்போம்.. அவள் என்ன கூறினாளோ.. அதை மனதில் வைத்துக் கொண்டு அவர் என்னைத் தவிர்க்கப் பார்த்திருக்கிறார்.. அத்தை.. அவரை நான் நேசிப்பதை விட என்னை அவர் அதிகமாக நேசிக்கிறார்.. இ..இனியும் என்னால் அவரைப் பிரிந்திருக்க முடியுமென்று தோன்றவில்லை.. இந்த வாய்ப்பை விடுத்தால்.. அவரைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைப்பதும் கடினம்..”என்று கூற.. வியர்த்து விறுவிறுத்துப் போனது வசந்திக்கு.

“முருகா.. எனது சந்தோசம் இரண்டு நிமிடம் கூட நிலைக்கவில்லையே.. நித்யா.. விளையாட்டல்ல இது.. வாழ்க்கை.. நீ கூறியது பொய் என்று மட்டும் தெரிந்தால்.. அவன் நம்மில் ஒருவரைக் கூட சும்மா விட மாட்டான்.. அவனது குணத்தையும்,முன் கோபத்தையும் நன்கு அறிந்த நீ இப்படியொரு ஆபத்தான முடிவெடுக்கலாமா...?,இப்போதே சென்று அவனிடம் உண்மையைக் கூறி விடு.. இதைப் பற்றி என்றைக்கு அவனுக்குத் தெரிய வந்தாலும்.. அதிக பாதிப்புக்கு

DO NOT COPY

உள்ளாகப் போவது நீ தான்.. வேண்டாம் அம்மா.. சொல்வதைக் கேள்..”என்று பதறினார்.

“அத்தை.. எந்த பிரச்சனை வந்தாலும் நான் சமாளித்துக் கொள்கிறேன்.. இப்போது நான் சென்று உண்மையைக் கூறினால் அவர் இந்த ஜென்மத்திற்கும் திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டார்.. உங்களிடம் உணமையைக் கூறியதே தவறு.. வீணாகப் பதறாதீர்கள் அத்தை.. நான் பார்த்துக் கொள்கிறேன்.. நீங்கள் அவர் கூறியதைப் போல் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்..”என்று கூறினாள். வருத்தம்,பயம்,மகிழ்ச்சி போன்ற கலவையான உணர்வுடன் மேற்படி ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றார் வசந்தி.

கௌதமின் வேண்டுகோளுக்கு இணங்க திருமணம் எளிமையான முறையில் மாங்காடு கோவிலில் மறுவாரமே ஏற்பாடு செய்யப்பட்டது. எதிலும் ஆடம்பரத்தை அவன் விரும்பவில்லை. ஏன்.?,அவள் முகத்தைக் காணக் கூட அவன் ஆசைப்படவில்லை. ஒரே வாரத்தில் திருமணம் என்பதால் நித்யா அலுவலகம் செல்வதைக் கூட நிறுத்தி விட்டாள். ஆனாலும் அவ்வப்போது வீட்டில் காண நேர்கையில் தலை குனிந்த படி வேறு புறம் பார்வையைப் பதித்துச் சென்று விடுவான். அவளாகப் பேச முனைந்தாலும் அவன் பதிலளிப்பதில்லை.. எப்படியும் அவனை மாற்றி விடலாம் என்று நம்பிக்கை இருந்ததால் அவளும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

திட்டமிட்ட படி அடுத்த வார இறுதியில் வெள்ளிக் கிழமையன்று நித்யா-கௌதம் பிரபாகரனின் திருமணம் நடந்தது. கௌதம் பெரிதாக யாரையும் அழைக்காவிடினும் நித்யாவும்,வசந்தியும் ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. நித்யா தன் சார்பாக சௌம்யா-ஸ்ரீதர் தம்பதியினை அழைத்திருந்தாள்.அவளுடைய வரவு வசந்திக்கும்,கௌதமிற்கும் அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்றாலும் அவர்கள் மறுத்துப் பேசவில்லை.

அழகர்சாமி,நம்பி,கதிர் என அலுவலகப் பட்டாளங்கள் அனைவரும் வருகை தந்திருந்தனர். கெட்டி மேளச் சத்தம் முழங்க.. “மாங்கல்யம் தந்துனானேனா...” என்ற மந்திரம் ஒலிக்க.. அனைவரது நல்லாசிகளும் அர்ச்சதை வழியாகப் பெற்று கௌதம் தன் கழுத்தில் அணிவித்தத் தங்கத்தாலியை நெகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள் நித்யா. பிறவியெடுத்ததே இந்த நொடிக்காகத் தானோ என்று நினைக்கத் தூண்டுமளவிற்கு... உடலிலும்,மனதிலும் ஒரு வகையான பரவசம் எழுந்தது. முட்டாள்தனமான எண்ணங்களால்.. அவள் மீதிருக்கும் காதலையும்,அன்பையும்,ஆசையையும் மறைத்து வாழத் துணிந்தவனைப் தன் பிடிவாதத்தால் சம்மதிக்க வைத்து இன்று அவன் கைப்பிடிக்கும் பெருமையையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். அவன் கரங்கள் மேலெழுந்து அவள் கழுத்தில் பதிந்த போது சிலிர்ப்புடன் அவள் நிமிர்ந்து

DO NOT COPY

அவன் முகம் காண.. அவள் முகத்தில் என்ன கண்டானோ.. அவனும் ஒரு நிமிடம் ஆடித் தான் போனான்..

சட்டென விழிகளைத் திருப்பி வேறு புறம் நோக்கியவனைக் கண்டு கொள்ளாதுத் தானும் புன்னகையுடன் திரும்பிக் கொண்டாள். அதன் பின் நடந்த அனைத்து சடங்குகளிலும் அவள் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்ள அவன் உர்ரென்ற முகத்துடனே அமர்ந்திருந்தான். ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் நித்யா இல்லவே இல்லை. விஸ்வநாதனுக்குத் தன் பெண்ணை மணக்கோலத்தில் கண்டதில் ஒப்பற்ற மகிழ்ச்சி.. அவளருகிலேயே நின்று அவளது தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.


திருமணம் முடிந்து அன்றிரவுக்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தது. எவ்வளவோ தடைகளைத் தாண்டி கை கூடியத் தன் காதலையும்,காதலனையும் நினைத்து சந்தோசச் சிரிப்புடன் வசந்தி அளித்த பால் சொம்பை வாங்கிக் கொண்டு ஆயிரம் கனவுகளுடன் அவனறைக்குள் நுழைந்தாள்.

அங்கே அவன் அறை பால்கனியில் சிகரெட்டைப் புகைத்தபடி வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான் கௌதம் பிரபாகரன். அவள் உள்ளே வந்த அரவம் உணர்ந்துத் திரும்பியவன்.. நீல நிறப் புடவையில் கண்களில் கனவு மின்ன அவனையே காதலுடன் நோக்கிக் கொண்டிருந்தவளை ஒரு நொடி இமைக்காமல் நோக்கியவன் அவளைக் கடந்து சென்று கட்டிலில் தன் தலையணையைச் சீர் செய்து.. “இந்தப் பா..பால்..”என்ற நித்யாவின் வார்த்தைகளைக் கண்டு கொள்ளாது படுக்கையில் சாய்ந்துக் கண்களை மூடிக் கொண்டான். இதைச் சற்றும் எதிர்பாராத நித்யா.. அவனது பாராமுகத்தைக் கண்டு குழம்பி திகைத்து நின்றாள்.



DO NOT COPY

# அத்தியாயம் – 18




**மஞ்சள் பூக்கள் சுற்றிலும் சிதறிக் கிடக்க..**
**வண்ண மயிலும்,வெள்ளைப் புறாக்களும் புடை சூழ..**
**பச்சைப் புல்வெளியில்.. சில்லென்ற காற்றில்..**
**கையில் புல்லாங்குழலுடன்.. தூரத்து மலைச் சிகரத்தை..**
**வேடிக்கை பார்த்தபடி நீ அமர்ந்திருந்த கோலம்..**
**கவிதையடா கண்ணா!**

**ப**திலேதும் கூறாமல் தன் போக்கில் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டவனைக் கண்டு ஆத்திரமாக வந்தது நித்யாவிற்கு. இவனுக்கு என்ன தான் பிரச்சனை? ஏன் இப்படி நடந்து கொள்கிறான்..?,காரணமில்லாமல் உதாசீனப் படுத்துகிறான்..? இந்தத் திருமணம் நிச்சயமான அன்றிலிருந்து அவன் அவளிடம் முகம் கொடுத்துக் கூடப் பேசுவதில்லை.. தற்செயலாகப் பார்க்க நேர்ந்தாலும் நிமிர்ந்து கூடப் பார்க்காமல் விலகிச் சென்று விடுகிறான். இவனை என்ன தான் செய்வது..?,அவனாக எதையேனும் நினைத்துக் கொண்டு.. தன்னைத் தானே குழப்பிக் கொண்டு அடுத்தவர்களைக் கஷ்டப்படுத்துகிறான்.. எரிச்சல் மண்ட விளக்கை அணைத்து விட்டு கட்டிலின் மறு ஓரத்தில் சென்று படுத்துக் கொண்டாள்.

அவள் தன்னை வெகு நேரமாக வெறித்து நோக்குவதை உணர்ந்தேயிருந்த கௌதமிற்கு.. அவள் எதிர்த்து எதுவும் பேசாமல் அமைதியாக படுத்துக் கொண்டது மேலும் வலியை ஏற்படுத்தியது. முன்னைப் போலென்றால் அவனை உலுக்கி எழுப்பி.. "ஏன்டா என்னிடம் பேசாமல் இருக்கிறாய்..?"என்று சட்டையைப் பிடித்திருப்பாள். அன்று நடந்து போன பயங்கர நிகழ்வால் தான் இப்படி மாறி விட்டாள் என்று தனக்குத் தானே தவறாக முடிவு செய்து கொண்ட கௌதம் கண்களை இறுக மூடி மனக்குமுறலை அடக்கினான்.

சுயநினைவின்றி.. தன்னிலை மறந்து.. அவளுடன் தவறாக நடந்து கொண்டு பெருங்குற்றத்திற்கு ஆளாகி விட்டவனது நிலைமை படுபயங்கரமாக இருந்தது. இன்று வரை அவனால் அவளது முகத்தையேனும் நிமிர்ந்து பார்க்க முடிந்ததா..?,இந்த உறுத்தலை என்றேனும் நீக்க முடியுமா..? நிச்சயம்

DO NOT COPY

முடியாது.. மாசற்ற அன்பைக் காட்டி அவனது வாழ்வைச் சீராக்கிய தேவதை அவள்.. அவளை.. அவளைப் போய் மோகத்தில் வேட்டையாடியிருக்கிறானே.. தினமும் ஆயிரம் முறை வந்து போகும் இந்த எண்ணம் அன்றும் அவனை அலைக்கழித்து நித்திரை கொள்ள விடாமல் துன்புறுத்தியது.

அவனுடன் தான் இணைய வேண்டும் என்று நினைத்து அவள் கூறிய பொய்யே தங்கள் இருவரையும் பிரித்து வைக்கப் போவதை அறியாமல் நித்திரையில் ஆழ்ந்திருந்தாள் நித்யா.

மறுநாள் காலை அவனுக்கு முன்பே எழுந்து விட்டவள் குளித்து தலையைத் துவட்டியபடியே அவன் முன்பு வந்து நின்றாள். இரவு வெகு நேரம் விழித்திருந்ததால் அதிகாலையில் தான் உறக்கத்தைத் தழுவியிருந்தான் கௌதம். முதன்முறை.. காரில் இருவரும் உறங்கிப் போன நிகழ்வு நினைவிற்கு வந்தது அவளுக்கு. அப்போதும் அவன் நித்திரை கொள்வதை ரசித்தாள். இப்போதும் ரசிக்கிறாள்..

மெல்ல எழுந்த அவளது கரங்கள்.. அவனது சிகையைக் கோத எத்தனித்த அந்த நொடி.. விழி திறந்த கௌதம்.. தனக்கு வெகு அருகில் அவள் நிற்பதைக் கண்டுப் பதறி விரைந்து எழுந்தான். “எ..என்ன..?”என்று கோபமாக வினவியவனிடம் என்ன கூறுவதென்று விழித்தவள்.. பின் “கா..காலண்டர்.. தே..தேதி கிழிக்க வந்தேன்..”என்று அவன் படுக்கைக்கு அருகேயிருந்த நாற்காட்டியைக் காட்டி விட்டு நகர்ந்து சென்று விட்டாள்.

அவளுக்கே ஆச்சரியம் தான்.. கௌதம்.. பூஜாடி கொண்டான்.. இவன் என்ன பெரிய பருப்பா... சிவபெருமானின் மறு அவதாரமா.. என்றெல்லாம் அவனைத் திட்டித் தீர்த்து உடனுக்குடனே அவனிடம் சண்டையிட்டு விடுபவள். இப்போது என்ன சொல்லி விடுவானோ என்று பயந்து விலகி வருவது.. அவளுக்கேக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது.

கௌதமிற்குத் தான் பயப்படுவதா என்று சிலிர்த்துக் கொண்டாலும்.. அவளுக்கு உள்ளூரக் கொஞ்சம் உறுத்தல் தான்.. தான் கூறியது பொய் என்பதை அவன் கண்டு கொண்டானானால் என்ன நடக்குமோ என்று அவளுக்கும் பயமாகத் தானிருந்தது. ஆனால் எப்படியும் சமாளித்து விடலாம் என்கிற தைரியம் உள்ளே இருந்தாலும்.. முன் போல் அவளாகச் சென்று அவனைச் சீண்டி...வம்பு செய்து.. அனைத்தையும் சீராக்கி விட ஏனோ அவளுக்குத் தைரியமில்லை.. அது ஏனென்றும் புரியவில்லை.

அவனிடமிருந்துத் தப்பித்துக் கீழே வந்தவள்.. ஹாலில் அமர்ந்திருந்தத் தந்தையைக் கண்டு “அப்பா..”என்று பாய்ந்தோடி வந்தாள். பொன் மஞ்சள் கயிறு கழுத்தில் மினுமினுக்க.. உச்சியில் இட்டக் குங்குமத்துடன் முகம்

DO NOT COPY

முழுக்கப் புன்னகையுடன் தன்னருகே வரும் மகளை ஆசை தீர நோக்கியவர் அவள் தலையை வருடி “உன் அன்னை இருந்திருந்தால் உன்னை இந்தக் கோலத்தில் கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றிருப்பாள்”என்று கூற.. தானும் அதை ஆமோதித்தவள்.. “அம்மாவிற்கும் சேர்த்துச் சந்தோசப் படத் தான் நீங்கள் இருக்கிறீர்களே டாடி..”என்றாள். “சரி சரி.. அப்பாவும் பெண்ணும் பாசத்தைப் பொழிந்தது போதும்.. இந்தாருங்கள் டீ”என்று டீக்கோப்பையை நீட்டினார் வசந்தி.

டீயைப் பருகியபடியே மகளை நோக்கியவர் “உனக்கும் கௌதமிற்கும் இடையே எந்தப் பிரச்சனையும் இல்லை தானேம்மா..?,நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் தானே..?”என்று வினவ.. தந்தையை சாந்தமாக நோக்கியவள் “அப்பா.. நானும் கௌதமும் ரொம்ப ரொம்ப சந்தோசமாக இருக்கிறோம்.. போதுமா..?”என்று அவள் கூறிய அந்த நொடி “ம்க்கும்..”என்று தொண்டையைக் கனைத்தபடி வந்து சேர்ந்தான் கௌதம்.

“மிகவும் சந்தோசமம்மா.. நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண் குளிரக் காண்பதற்காகத் தானே நான் உயிரோடு இருப்பதே..”என்றவர் தொடர்ந்து “அப்படியானால் நான் நியூயார்க் திரும்புகிறேனம்மா.. அங்கே எனக்கு வேலை இருக்கிறது.. குறைந்தது ஆறேழு மாதங்களேனும் அங்கே இருந்தாக வேண்டும்.. அதன் பின்பு தான் இந்தியாவில் நிரந்தரமாகக் குடியேறுவதைத் தீர்மானிக்க வேண்டும்..”என்று கூறத் தந்தையை முகம் வாட நோக்கினாள் நித்யா. “கட்டாயமாகப் போய் தான் ஆக வேண்டுமாப்பா..?”என்று வினவியவளிடம் “ஆமாம் நிதும்மா.. கொஞ்ச நாட்களுக்குத் தானே.. அதன் பின்பு அப்பா இங்கேயே நிரந்தரமாகக் குடியேறிவிடுவேன்.. சரி தானே..?,இனி நீ அப்பாவைப் பற்றியெல்லாம் யோசிக்கக் கூடாது... உன்னைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்வதற்குத் தான் கௌதம் இருக்கிறானே..”என்று கூற.. அது மேலும் அவளுக்குப் பீதியை ஏற்படுத்தியது.

மிரட்சியுடன் நிமிர்ந்துத் தன் முகம் நோக்குபவளைத் தானும் நோக்கியவன் “இங்கே வா..” என்றழைத்தான்.. அவள் தன்னருகே வந்ததும் அவள் தோளைப் பற்றிச் சமாதானமாக “கொஞ்ச நாட்களுக்குத் தானே நிதி.. அதன் பின் அவர் இங்கேயே வந்து விடப் போகிறார்.. இதற்கு ஏன் முகம் வாடுவானேன்..?ம்?”என்று புன்னகையுடன் வினவ.. விழி விரித்துத் திகைத்துப் போனாள் நித்யா.. இருவரையும் கண்ட விஸ்வநாதனுக்கும்,வசந்திக்கும் மனம் குளிர்ந்து போனது.

ஒருவரையொருவர் கண்டபடி நின்று விட்ட இருவரையும் தனித்து விட எண்ணி விஸ்வநாதனும்,வசந்தியும் சிரிப்புடன் விலகிச் சென்று விட.. அவர்கள் சென்றதை உறுதி படுத்திக் கொண்ட கௌதம் “சாரி..”எனக் கூறித் தன் கையை விலக்கிக் கொண்டான். சாரியா..? எதற்கு சாரி என்கிறான் என்பது

DO NOT COPY

புரியாமல் குழம்பியவள்.. தன்னை விட்டு விலகி நடந்து கொண்டிருந்தவனிடம் “எதற்கு இந்த சாரி...?”என்று வினவினாள். அவள் குரலைக் கேட்டுத் தன் நடையை நிறுத்தியவன்.. அவள் புறம் திரும்பாமலேயே “உ.. உன்னைத் தொட நேர்ந்ததற்காக.. எனக்குத் தெரியும்.. அது உனக்கு எவ்வளவு அருவெறுப்பையும்,அசூயையும் உண்டாக்கியிருக்குமென்று..”என்று குரல் கம்மக் கூறியவன் திகைத்து நிற்பவளைப் பொருட்படுத்தாதுச் சென்று விட்டான்.

அடக் கடவுளே..! எப்படியேனும் அவனுடன் தன் வாழ்வைப் பிணைத்து விட வேண்டுமென்று அவள் கூறிய பொய்யைப் பெரிதாக நினைத்துக் கொண்டு.. முட்டாள் தனமாக நடந்து கொள்கிறானே..! இதை.. இதை எப்படிச் சரி செய்வது? எப்படி யோசித்தும் அவளால் எந்த முடிவிற்கும் வர முடியவில்லை. உண்மையைக் கூறினாலும் பிரச்சனை.. கூறாவிட்டாலும் பிரச்சனை.. வாழ்வில் முதன்முறையாக அடுத்து என்ன செய்வதென்று நித்யா தவித்தது இந்த விசயத்திற்காகத் தானிருக்க வேண்டும்..

அதன் பின் கடந்து சென்ற ஒவ்வொரு நாளும் அவளுக்கு இம்சையாகத் தானிருந்தது. எப்படியேனும் அவனிடம் பேசி ஒரு தீர்வைக் கொண்டு வந்து விட வேண்டுமென்று அவள் முயற்சித்த எதுவும் பலிக்காமல் போனது. இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்புபவன் அவள் தனக்காக விழித்திருப்பதை அறிந்தும் கண்டு கொள்ளாமல் சென்றான். காலை அவனுக்கு உணவு பரிமாறும் போதும்.. தோட்டத்தில் அமர்ந்திருக்கும் போதும்.. அவனிடம் பேச முயல்வாள். ஆனால் அவனிடமிருந்து எந்த பதிலும் வராது..

நியூயார்க் திரும்ப வேண்டும் என்று கூறியிருந்த விஸ்வநாதன் அந்த வார இறுதியில் புறப்பட்டு விட.. நித்யாவிற்கு சற்று அதிகமாகவே பயம் சூழ்ந்தது. நித்யா எப்போதும் தனிமையாக உணர்ந்ததேயில்லை. ஏனெனில் எப்போதும்.. யோசிப்பதற்கும்,செய்வதற்கும் அவளுக்கு நிறைய விசயங்கள் இருந்து வந்தது. தந்தை வீட்டில் இல்லாவிடில் சிறுவர்களுடன் பார்க்கில் விளையாடச் சென்று விடுவாள்.. தோழிகளுடன் ஊர் சுற்றுவது.. இண்டர்நெட்டில் எதையேனும் வாசித்துக் கொண்டிருப்பதென தன் பொழுதுகளை எப்போதும் பிஸியாகவே வைத்துக் கொள்வாள். ஆனால்.. இப்போதோ நிலைமை தலைகீழாக இருந்தது.. எப்போதும் அவளுக்கிருக்கும் ஒரே சிந்தனை கௌதம்.. கௌதம்.. கௌதம் மட்டுமே.. அவனது பாராமுகம் பெரிதும் வாட்ட.. எவரிடமும் பகிர்ந்து கொள்ளவும் மனமின்றி அமைதியாகி விட்டாள்.

அவளது அமைதியை உணர்ந்த கௌதமிற்கோ.. அந்த நாளில் நடந்த சம்பவம் தான் அவளை இந்த அளவிற்கு மாற்றி விட்டதாக எண்ணி கலங்கிப் போனான்.

DO NOT COPY

அன்று எப்போதும் போல் இரவு தாமதமாக வீடு திரும்பியவன்.. பால்கனியில் அமர்ந்து நிலவை வெறித்துக் கொண்டிருந்தவளைக் கண்டு விட்டு உடை மாற்றச் சென்றான். அவனது வருகையை உணர்ந்திருந்தும் அவள் கண்கள் நிலவை விட்டு விலகாமல் இருந்தது. அலுவலகத்திலிருந்து திரும்பி விட்டேன் கண்ணே என்று ஓடி வந்து அணைத்துக் கொள்ளவா போகிறான்..?, பெரு மூச்சை வெளியிட்டபடி அமர்ந்து விட்டாள்.

சிறிது நேரம் எதுவும் கூறாமல் தன் வேலைகளில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தவன்.. பின் அவளருகே வந்து நின்றான். லேசாகத் தொண்டையைச் செறுமியபடி அவள் முகத்தை நோக்கியவன் “குளிராக இருக்கிறதே.. உள்ளே வந்து உட்காரலாமில்லையா..?”என்று வினவ.. விழியைப் பெரிதாக்கி அவனை நோக்கியவள்.. ஒன்றும் கூறாமல் மீண்டும் பார்வையைத் திருப்பிக் கொள்ள.. தன்னுடன் பேசக் கூட அவளுக்கு விருப்பம் இல்லை போலும்.. என்றெண்ணியவன் கலங்கிய மனதுடன் திரும்பிச் செல்ல எத்தனித்தான்.

அவன் விலகிச் செல்வது தாங்காமல் அவன் கையைப் பற்றியவள்.. தன் கன்னத்தில் பதித்து அவன் வயிற்றில் தலை சாய்த்துக் கொண்டாள். இரண்டு நிமிடம் அவளது செய்கையில் சிலிர்த்துப் போய் அமைதியாக நின்று விட்டவன்.. பின் எதையும் காட்டிக் கொள்ளாமல் அவளைப் பற்றி விலக்கி “குளிரில் அமராதே..”என்று கரகரத்தக் குரலில் கூறி விட்டுச் சென்று விட்டான். அவன் சென்றதும் துக்கம் பொங்க.. விழிகளில் வழிந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்த நித்யா பேசாமல் சென்று படுத்துக் கொண்டாள்.

லேப்டாப்பில் பார்வையைப் பதித்தபடி அமர்ந்திருந்தாலும்.. தன்னருகே அழுகையில் குலுங்கியபடி மறுபுறம் திரும்பிப் படுத்திருந்த நித்யாவைக் கவனித்துக் கொண்டு தானிருந்தான். சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தவன் பின் “நித்யா.. நித்யா..”என்று அவள் தோள் பற்ற.. தேம்பியபடியே அவன் புறம் திரும்பியவள்.. “கௌ… கௌதம்.. நீ.. நீ என்னை விட்டுச் சென்று விட மாட்டாய் தானே.. கௌதம்.. கௌதம்..”என்று தேம்ப.. “உன்னை விட்டு நான் எங்கே செல்லப் போகிறேன்..?, தயவு செய்து அழாதே.. ப்ளீஸ்.. தூங்கு.. சொல்வதைக் கேள் நிதி.. நிம்மதியாகத் தூங்குமா..”என்று அவள் முதுகை வருடி.. சமாதானப் படுத்தினான். தலையணையை விட்டு அவன் மடியில் முகம் பதித்தவள் அவன் அரவணைப்பிலேயே உறங்கிப் போனாள்.

அவள் தலையை வருடியபடி வெகு நேரம் அமர்ந்திருந்தவன் பெரு மூச்சுடன் அவளை விலக்கிப் படுக்கையில் படுக்க வைத்து விட்டுத் தானும் உறங்கிப் போனான். இந்தச் சம்பவத்திற்குப் பின் பெரிய மாற்றமாக கௌதம் அவளுடன் ஒரேடியாக இல்லாவிடினும் ஒன்றிரண்டு வார்த்தைகளேனும் தினமும் பேசிச் சென்றான்.

DO NOT COPY

காலையில் அவள் உணவு பரிமாறும் போது “நீ சாப்பிட்டாயா..?”என்று விசாரிப்பவன் அவள் இல்லையென்று கூறினால் அவளை அமரச் செய்து சாப்பிடவும் வைத்தான். அவனது செய்கையைக் கண்டு நெகிழ்ந்து போன நித்யாவிற்கும் விரைவில் அவன் மாறி விடுவான் என்று நம்பிக்கையும் வந்தது.

அன்றும் அப்படித் தான்.. மாலை விரைவிலேயே வீடு திரும்பி விட்டவனிடம் தயங்கியபடியே சென்று “வ..வந்து..”என்று தொடங்க.. சட்டைக் காலரைச் சரி செய்தபடி அவள் புறம் திரும்பியவன் “என்ன..?”என்று புருவம் நெறிக்க.. “அ..அது.. நமக்குத் திருமணம் ஆன பின்பு நான் அலுவலகமும் செல்லாமல் இருப்பதால்.. வீட்டில் மிகவும் போராக உள்ளது.. நாம்.. நாம்..”என்றவள் நிறுத்தி.. அவன் முகம் பார்த்தாள். அதுவரை தன்னருகே இருந்த மேஜையில் வைக்கப்படிருந்த பொம்மையின் மீது இல்லாத தூசியைத் துடைத்த படி நின்றிருந்தவள்.. இப்போது தயங்கி “நாம் வெளியே எங்கேனும் சென்று வரலாமா..?”என்று வேகமாகக் கேட்டு விட்டு அவனை பயத்துடன் நிமிர்ந்து நோக்கினாள்.

அவளது செய்கையில் உண்டான சிரிப்பை அடக்கி நிமிர்ந்தவன் “சரி.. எங்கே போக வேண்டும்..?”என்று விசாரிக்க.. வியந்து அவனை நோக்கியவள் மகிழ்ச்சியுடன் “நிஜமாகவா கௌதம்..? ப்ராமிஸ்..”என்று கை நீட்ட.. அவன் புன்னகைத்த படி “ம்,ம்..”என்று தலையாட்டினான். “ம்,அருகேயிருக்கும் முருகன் கோவிலுக்குச் சென்று விட்டு.. அப்படியே பீச்.. பின் ரெஸ்டாரண்ட் சென்று சாப்பிட்டு விட்டுத் திரும்பி விடலாம்..”என்றவளுக்கு.. இவ்வளவு நீளமான திட்டத்திற்கு ஒப்புக் கொள்ள மாட்டானே.. என்ற பயமும் இருந்தது.

அவன் ஒன்றும் கூறாமல் சரியென்று விட குதூகலமாகக் கிளம்பி விட்டாள். வசந்தியிடம் சென்று “அத்தை.. நானும் உங்கள் மகனும் வெளியே செல்கிறோம்.. இரவு சாப்பிட்டு விட்டுத் தான் வருவோம்.. அதனால் நீங்கள் எங்களுக்காகக் காத்திருக்க வேண்டாம்.. சரியா..?”என்று கூறி விட்டு சிட்டாகப் பறந்தாள். அடுத்த அரை மணி நேரத்தில் கருப்பு நிற பாவாடை,சட்டையில் தயாராகி வந்தவள்.. அவனுடன் புறப்பட்டாள்.

அருகிலிருக்கும் கோவிலில் தரிசனத்தை முடித்தவர்கள்.. பின் பீச்சிற்குச் சென்றனர். அலையில் சிறிது நேரம் கால் நனைத்து விளையாடியவள்.. தூரத்தில்.. வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தவனிடம் சென்று “கொஞ்சம் தூரம் நடக்கலாமா..?”என்று வினவ.. சரியென்றபடி எழுந்தான். தைரியத்தை வரவழைத்து அவன் கைப் பற்றிக் கொண்டவள்.. ஏதேதோ வளவளத்தபடி அவனுடன் நடந்தாள்.

DO NOT COPY

ஜனசந்தடியைத் தாண்டி வந்ததும் வரிசையாகப் படகுகள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்க.. அதன் மறைவில் காதலர்கள் தங்களது லீலைகளை நடத்திக் கொண்டிருந்தனர். அதைக் கண்டவளுக்கு சிரிப்பு வந்தது அடப்பாவிகளா..! இதையும் விட்டு வைக்க மாட்டீர்களா என்று.. ஆனாலும் கௌதம் என்ன நினைக்கிறான் இப்போது என்பதைத் தெரிந்து கொள்ள.. அவன் முகம் நோக்கினாள்.. அவனோ முகம் இறுக.. பாக்கெட்டுக்குள் கையை நுழைத்தபடி நடந்து கொண்டிருந்தான்.

அவனது இறுகிய முகம்.. அவளுக்குள் என்னவோ செய்ய.. அவனிடம் வம்பு செய்ய எண்ணித் தன் கையிலிருந்த பாப்கார்ன் பாக்கெட்டை அவன் தலையில் கொட்டி விட்டு.. கலகலவெனச் சிரித்தபடி ஓடிச் சென்றாள். "ஏய்.. ஏய்.. என்ன செய்கிறாய் இடியட்.."என்று கத்தியவன் தானும் அவளைத் தொடர்ந்து ஓடி.. "நித்யா.. நில்.. நில் நிதி.."என்று கத்த.. அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகின் ஒரு புறத்தில் சென்று நின்று கொண்டவள்.. "ம்ஹ்ம்.. மாட்டேன்.."என்று ஓட.. அவன் படகின் ஒரு புறத்திலும்.. அவள் மறு புறத்திலும் என்று ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

"ஏய்.. உன்னை.. "என்று பல்லைக் கடித்தவன் சட்டென "நித்யா.. உன் காலடியில் நண்டு.. நண்டு.."என்று கத்த.. காலை உதறியபடி பதறித் துள்ளியவள்.. அவன் பொய் சொல்கிறான் என்று சுதாரிக்கும் முன்னே அவளைப் பற்றியிருந்தான் அவன். அவனிடமிருந்து விலக எத்தனித்து அவள் ஓடப் பார்க்க.. கால் தடுக்கி அவள் மீதே சாய்ந்தான் கௌதம்.

"முட்டாள்.. அறிவிருக்கிறதா உனக்கு..?"என்று பாய்ந்தவனைக் கண்டு கொள்ளாது அவள் கலகலவெனச் சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கண்டு அவன் முறைக்க.. கௌதம் பழையபடி கோபப் படுவதைக் கண்டு அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உதட்டில் உறைந்த சிரிப்புடன் அவனை இமைக்காமல் நோக்கினாள். அவளது பார்வை வித்தியாசத்தை உணர்ந்தவன் திகைத்துத் தடுமாறி.. "எ..என்ன..?"என்று வினவ.. ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தவள்.. அவன் மீதிருந்து பார்வையை விலக்காமல்.. "ஐ லவ் யூ கௌதம்.."என்றவள்.. நிமிர்ந்து அவன் இதழ்களில் முத்தமிட்டாள்.

திகைத்துக் கண் மூடியவன்.. பின் அவளை விலக்கித் தள்ளி விட்டு எழுந்து நடந்தான். அவன் விலக்கித் தள்ளியதில் கோபம் கொண்டவள் மூச்சு வாங்க ஓடி வந்து அவன் கையைப் பற்றி நிறுத்தினாள். "இப்போது.. இப்போது எதற்காக விலகிச் செல்கிறீர்கள்..?"என்று வினவ.. அவள் கைகளைத் தன்னிடமிருந்து விலக்கியவன் மறுபுறம் திரும்பி நின்று கொண்டு "ஒரு முறை நடந்த தவறுக்கே ஒவ்வொரு நாளையும் நரகமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் நான்.. இதில்.. இதில் இன்னொரு முறையா...?"என்று குரல் கம்மக் கூறியவன்.. "வீட்டிற்குச் செல்லலாம்"என்று மேலே நடந்தான்.

DO NOT COPY

அவன் கூறியதைக் கேட்டு குழப்பம் கொண்டவள்.. "எதைத் தவறு என்கிறீர்கள்..? கணவனை மனைவி முத்தமிடுவது தவறா..?,இது என்ன முட்டாள்தனம்..?"என்று வினவ "இது உன் கழுத்தில் ஏறுவதற்கு முன்பே நடந்த அந்தக் கேடு கெட்ட சம்பவம் மறந்து போய் விட்டதா உனக்கு..?"என்று அவள் கழுத்திலிருந்தத் தாலியைத் தூக்கிக் காட்டிக் கூறியவன்.. "அந்தத் தவறை.. அந்தப் பாவத்தை.. அதனால் என் மனதில் உண்டான உறுத்தலை மறைத்து.. மறந்து.. என்னால் எப்படி உன்னுடன் சகஜமான வாழ்க்கையைத் தொடர முடியும்..?"என்று கலக்கம் நிறைந்த குரலில் கூறியவனைக் கண்டு மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டாள்.

"அதற்காக..? தவறு செய்து விட்டோம் என்பதற்காக வாழ்நாள் முழுவதையும் இப்படியே பாராமுகத்துடன் கழிக்கத் திட்டமிட்டிருக்கிறீர்களா..?,நாமும் மற்றவர்களைப் போல் சாதாரண வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டாமா..?,"என்று சத்தமிட்டவளிடம் "நான்.. நான் உனக்கு ஏற்றவன் இல்லை நித்யா.. நீ.. நீ.. மாசற்றவள்.. பரிசுத்தமானவள்.. உன்னைப் போய் நான்.. நான்.."என்றவன் தொடர்ந்து "என்றேனும் இந்த உறுத்தலும்.. வேதனையும் குறையுமாயின்.. அன்று வாழ்வதைப் பற்றி யோசிக்கலாம்.."என்று கூறி விட்டு விறுவிறுவென நடந்து சென்று விட்டான்.

திகைத்து நின்று விட்ட நித்யாவிற்கு இது என்ன முட்டாள்தனம் என்றே தோன்றியது. அதன் பின்பு இறுக்கத்துடனே வீடு வந்த சேர்ந்தனர் இருவரும். நடக்காத ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு இப்படி முட்டாள்தனமாக நடந்து கொள்கிறானே..? என்ன தான் செய்வது..? அதன் பின்பு வந்த நாட்கள் சூனியமாகவே தொடர.. அவளுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டான் அவன்.

அவளைத் தொட நேர்ந்தால்.. அவளுக்கு அசூயையாக இருக்கும் என்கிறான்.. அவள் தான் அவனை விட்டு விலகுவதாகக் கலங்கினான். பீச்சில் வைத்துத் தான் அவள் கூறி விட்டாளே.. அவனை விரும்புவதாக.. இன்னும் என்ன தான் பிரச்சனை அவனுக்கு..?,உறுத்தல் என்கிறான்.. மறக்க முடியாது என்கிறான்.. கடவுளே! தான் ஒன்று நினைக்க.. தெய்வம் ஒன்று நினைக்கிறதே!

அன்று தந்தையுடன் ஸ்கைப்பில் உரையாடுகையில்.. அவளது சோர்ந்த முகத்தைக் கண்டு விஸ்வநாதன் என்னவென்று வினவினார். "ஒன்றுமில்லை டாடி.."என்றாலும் கண்களில் கண்ணீர் சேர்ந்தது நித்யாவிற்கு. அவள் முகத்தில் உயிர்ப்பில்லை என்பதைக் கண்டு கொண்டவர் "உனக்கும் கௌதமிற்கும் பிரச்சனையா நித்யா?"என்று வினவ.. "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை டாடி.. உங்கள் மாப்பிள்ளை என்னை மிக மிக நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்.. நீங்கள் சாப்பிட்டுத் தூங்குங்கள்.."என்று கூறி விட்டு மடிக்கணிணியை மூடி வைத்தாள்.

ஹால் சோபாவில் சோர்ந்து போய் சாய்ந்திருந்தவளைத் தட்டியெழுப்பிய வசந்தி “நித்யா.. என்னடா செய்கிறது..?,ஏன் இப்படி சோர்ந்து தெரிகிறாய்..?”என்று பதறி வினவ.. “ஒன்றுமில்லை அத்தை..”என்று அவர் மடியில் சாய்ந்தவளுக்கு.. அதற்கு மேல் முடியாமல் போக.. தன் மனதிலிருப்பதை எல்லாம் கொட்டினாள்.

“நான் கூறிய பொய்யே எனக்கு வினையாகிப் போய் விட்டது அத்தை.. அவர்.. அவர்.. அன்று எங்களிருவருக்கிடையில் தவறு நடந்து விட்டதாகவும்.. குடிபோதையில் சுயநினைவின்றித் தான் செய்த தவறு.. அவருக்கு உறுத்தலை ஏற்படுத்துவதாகவும் கூறுகிறார்.. அதை மனதில் வைத்துக் கொண்டு என்னுடன் இணைந்து வாழ மறுக்கிறார். உறுத்தலை மறந்து.. மறைத்துத் தன்னால் வாழ முடியாது என்கிறார்.. நல்ல குடும்பத்தில்.. ஒழுக்கமான வளர்ப்பில் வளர்ந்தத் தான் இப்படியெல்லாம் தவறு செய்து விட்டது அவருக்கு அருவெறுப்பை ஏற்படுத்துகிறதாம்.. அதையே பிடித்துக் கொண்டு பிடிவாதமாக இருக்கிறார் அத்தை.. எனக்கு.. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை..”

“இந்த வாய்ப்பை விட்டால் எங்கே அவரும் நானும் இணைய முடியாமல் போய் விடுமோ என்று தான்.. அன்று எங்களிருவருக்குமிடையில் தவறு நடந்து விட்டதாகப் பொய் கூறினேன்.. ஆனால்.. ஆனால் அது இப்படியொரு மாற்றத்தை என் வாழ்வில் ஏற்படுத்தி விடுமென்று நான் நினைக்கவேயில்லை.. அவர்.. அவர் என் முகம் பார்க்கக் கூட மறுக்கிறார் அத்தை.. அவரது எண்ணம் என்று மாறி.. என் வாழ்வு என்று சீராகும் என்று எனக்குப் பயமாக இருக்கிறது..”என்று கலங்கிய மனதுடன் கூறுபவளை வசந்தி பாவமாக நோக்கிக் கொண்டிருக்க.. வழக்கத்திற்கு மாறாக அன்று விரைவிலேயே வீடு திரும்பிய கௌதம்.. இவர்களிருவரது சம்பாஷணையைக் கேட்டுக் கோபம் கொப்பளிக்க.. அதிர்ந்து நின்று விட்டான்.

“எதற்கும் கவலைப்படாதேம்மா.. அனைத்தும் சரியாகி விடும்..”என்று கூறிய வசந்தியை நிமிர்ந்து நோக்கிய நித்யா.. அவருக்குப் பின்னே மாடிப்படியின் அருகில் வெறி கொண்ட வேங்கையாக கோபத்தில் கண்கள் சிவந்து.. மாடிப்படியின் கைப்பிடியை இறுகப் பற்றியிருந்த கௌதமைக் கண்டு அதிர்ந்து எழுந்து நின்றாள். கோபம்,ஆத்திரம்.. இப்படி ஏமாற்றி விட்டாயே என்கிற ஆதங்கம்.. வேதனை.. வலி.. என அனைத்து உணர்வுகளும் அவன் கண்ணில் மாறி மாறி வந்து போக.. அதைக் கண்ட நித்யாவிற்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போனது. பயத்தில் வியர்த்து வழிந்து.. கை,கால்கள் நடுக்கமுற்றது.. அணிந்திருந்தத் துப்பட்டாவை இறுகப் பற்றி.. கண்களில் கோர்த்திருந்தக் கண்ணீரை அடக்கினாள் நித்யா.

அவளை உறுத்து விழித்து விட்டு விறுவிறுவெனத் தன் அறைக்குச் சென்று விட்டான் அவன். அவன் சென்றதும் சக்தியெல்லாம் வடிந்தது போல்

DO NOT COPY

தொப்பென சோபாவில் விழுந்தவளைப் பதறி கைப்பற்றிய வசந்தி உடனே ஓடிச் சென்று தண்ணீர் எடுத்து வந்து அவளைப் பருகச் செய்தார். வியர்வையைத் தன் சேலை முந்தானையால் துடைத்து விட்டவர் "நித்யா.. நித்யா என்னடாம்மா.. அவனது கோபம் இரண்டு,மூன்று நாட்களுக்குத் தான்.. அவனே மாறி விடுவான்.. உன் அன்பும்,நேசமும் அவனுக்குப் புரியாமலா இருந்திருக்கும்..?,நித்யா.. நான் சொல்வதைக் கேள்.."என்று அவர் கூற..

அவர் கூறும் வார்த்தைகளையோ.. அவர் முகத்தையோ.. உணர்ந்து கொள்ள முடியாத நித்யாவிற்குக் கண் முன்னே தோன்றியதெல்லாம் கௌதமனின் ரௌத்ரம் நிறைந்த விழிகள் மட்டுமே.. கண்கள் குளம் கட்டத் துவங்க.. "அத்தை.. அத்தை.. நான் எந்தத் தவறும் செய்யவில்லை அத்தை.. அவரை.. அவரை அப்படிப் பார்க்க வேண்டாமென்று சொல்லுங்கள் அத்தை.. என்னால் தாங்க முடியவில்லை.. நான் ஏமாற்ற நினைக்கவில்லை.. அவருடன் இணைந்து வாழத் தான் விரும்புகிறேன்.. அதைப் புரிந்து கொள்ளச் சொல்லுங்கள்.. அவரில்லாமல் நான் உயிர் வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை.. அத்தை.. எனக்கு பயமாக இருக்கிறதே.. அத்தை.. கௌதம்.."என மயங்கிச் சரிந்தாள்.

பயமும்,நடுக்கமும்.. சரியாகச் சாப்பிடாததால் வற்றிப் போயிருந்த உடலும்.. அவளை மிகுந்த அலைப்புறுதலுக்கு ஆளாக்க.. சுயநினைவின்றி மயங்கிச் சரிந்தாள். அவள் மயங்கியதும் பதறிப் போன வசந்தி "கௌதம்.. கௌதம்.."என்று குரல் கொடுக்க அவனிடமிருந்து எந்த பதிலும் இல்லாமல் போனது. அவரது கூச்சலில் வீட்டு வேலைக்காரர்கள் அனைவரும் கூடி விட.. நித்யாவின் முகத்தில் தண்ணீர் தெளித்தான் வைகுந்தன். முகத்தைத் துடைத்தபடி எழுந்தமர்ந்த நித்யா.. தன்னைச் சுற்றி நின்றிருந்தோரைக் கண்டு புன்னகைக்க முயன்றபடி "எ..எனக்கு ஒன்றுமில்லை.. நன்றாகத் தான் இருக்கிறேன்.. நீங்கள் சென்று வேலையைப் பாருங்கள்.."என்று அனுப்பி வைத்தாள்.

நடுக்கம் குறையாமல்.. தன் கைகளை அழுந்தப் பற்றியவளைக் கண்ட வசந்திக்கும் என்ன செய்வதென்றேப் புரியவில்லை.. கௌதமின் கோபத்தை நன்கு அறிந்திருந்ததால் தான் வசந்தி அன்றே அவனிடம் உண்மையைக் கூறி விடும்படிப் பதறியது.. இப்போது இந்தப் பெண் என்ன செய்வாள்..?, அவளது பயத்தில் முக்கால்வாசியைத் தானும் கொண்டிருந்த வசந்திக்கும் மேலே என்ன செய்வதென்று எந்த யோசனையும் வரவில்லை..

அவரது மடியில் தலை சாய்த்து.. கை,கால்களை ஒடுக்கிப் படுத்துக் கொண்ட நித்யாவின் உடலில் நடுக்கம் குறைந்தபாடில்லை.. கண் மூடினால் தோன்றும் கௌதமனின் கோபம் நிறைந்த உருவம்.. சித்ரவதை செய்ய.. நிமிடத்தொற்கொரு முறை உடல் தூக்கித் தூக்கிப் போட்டது அவளுக்கு.

DO NOT COPY

ஆறுதலாக அவளை அணைத்துக் கொண்ட வசந்தி.. சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தார்.

**நி**த்யா கூறிய அப்பட்டமான உண்மையைக் கிரகித்துக் கொள்ள முடியாமல் தவித்துப் போன கௌதமிற்கு.. அவமானமும்,கோபமும்,ஆத்திரமும்,வலியும் மாறி மாறி வந்துத் துன்புறுத்தியது. ஒரு சிறு பெண்... எப்படியெல்லாம் தன்னை ஏமாற்றியிருக்கிறாள்..?,நடக்காத ஒன்றை நடந்து விட்டதாக நினைத்து தினம் தினம் தவித்துச் சித்ரவதைப் பட்டு மனம் வருந்தி.. அவமானமாக நினைத்துக் கலங்கி வேதனைக்குள்ளாகி.. நித்யா.. நித்யா.. நீ நீ எப்பேர்ப்பட்டப் பாவம் புரிந்து விட்டாய்..?

ஒவ்வொரு நாளையும் தவிப்புடன் கடத்தி.. அவள் முகம் பார்க்கக் கூசி.. ஏன்.. தாயின் முகத்தைக் கூட அவன் இந்த நாள் வரை நிமிர்ந்து நோக்கவில்லையே! தாய்-தந்தையின் ஒழுக்கமான வளர்ப்பிற்குத் தான் கலங்கம் ஏற்படுத்தி விட்டதாக எண்ணி.. நாளுக்கு நாள் நரகமாகக் கடத்தினானே.. பாவி.. எப்பேர்ப்பட்டத் துரோகத்தைப் புரிந்திருக்கிறாள்..

அவனுக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது..?,அவன் வாழ்வில் வந்த பெண்கள் அனைவரும் அவனை ஒரு கோமாளியாக எண்ணி.. அவன் தலையில் மிளகாய் அறைத்து விட்டுச் சென்று விடுகிறார்கள்..?, அந்த சௌம்யா கல்யாணம் செய்த மறுநாளே அவனை விட்டுக் காதலனுடன் ஓடிச் சென்று பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி.. இரண்டு ஆண்டுகளுக்கு அவனை முடக்கிப் போட்டு வைத்தாள். அந்த சுந்தரி.. பணக்கார வாலிபனை எப்படியேனும் மடக்கிப் போட்டு விட வேண்டுமெங்கிற மேலான எண்ணத்தை குறிக்கோளாகவேக் கொண்டிருப்பவள்.. உன் பெண்டாட்டி தான் ஓடிச் சென்று விட்டாளே.. என்னுடன் வாழ வருகிறாயா என்று எக்களிப்பாகக் கேட்டுச் சென்றாள்.

இவர்களையெல்லாம் விட.. நித்யா... அவனுடைய நித்யா.. அவனுக்குள் இருக்கும் நேசத்தை அழகாகத் தட்டியெழுப்பி.. இதமான இசையாக.. சுகமானத் தென்றலாக.. அழகான இம்சையாக.. அவன் மனதில் வாசம் செய்பவள்.. நிம்மதி,சந்தோசம் என்கிற விசயங்களெல்லாம் இனித் தன் வாழ்வில் இல்லையென இறுகிப் போய் வாழ்ந்து கொண்டிருந்தவனை.. தன் துறு துறு செய்கையால்.. சிரிப்பினால்.. அன்பினால்.. அக்கறையினால்.. எப்படி மாற்றினாள்.. அவள்.. அவள் எப்படி அவனை ஏமாற்றலாம்..?

பெண்களைக் கண்டாலே.. ஒரு வித ஒவ்வாமையோடு விலகிச் சென்று விடுபவன்.. அவள் வந்த பின்பு தானே.. அனைத்துப் பெண்களையும் மதிக்கத் தொடங்கினான். அவளே அவனை இப்படி ஏமாற்றப் பார்த்தால்.. அவன் இனி

DO NOT COPY

யாரை நம்புவான்..?, ஏளனமானப் புன்னகையைச் சிந்தியவன்.. தன்னைத் தானேத் திட்டிக் கொண்டான்.

அலுவலகத்தில் அவள் நுழைந்த நாளே அவளை அவன் விரட்டியடித்திருக்க வேண்டும்.. பெண்கள் அனைவரும் பாம்பைப் போன்றவர்கள்.. வசீகரமானத் தோற்றத்தைக் கொண்டிருந்தாலும்.. உள்ளே இருப்பதனைத்தும் விஷம்.. தான் கண்ட பெண்களில் அவள் மாறுபட்டவளென நம்பினானே.. தானும் அதே குட்டையில் ஊறிய மட்டை தான் என்று நிரூபித்து விட்டாளே.. சண்டாளி! எப்படியெல்லாம் நடித்தாள்..?

“என்னை விட்டுப் போய் விடாதே கௌதம்..”என அழுது நாடகமாடி.. என்னவோ வாழ்வை இழந்து விட்டவள் போன்று.. பரிதாபமான முகத்துடன் வலம் வந்து.. ச்சை,வேஷதாரி.. தவறு நடந்து விட்டதாக வருந்தி அவள் முன்பு சென்ற போது கூட.. நீங்கள் நினைக்குமளவிற்கு எதுவும் நடக்கவில்லை கௌதம் என்று கூறினாளா.. இல்லை.. பொய் சொல்கிறோமே என்கிற உறுத்தலே இல்லாமல்.. எப்படித் தைரியமாகப் பேசினாள்..?, ஏமாற்றுக்காரி.. அவள் இனத்திற்கே உரித்தான உன்னதமான குணம் போலும்.. ஆண்களை ஏமாற்றுவது...!

திருமணமான அன்றிலிருந்து இன்று வரை அவளைக் காணும் போதெல்லாம் மனதில் உண்டான வலியை அனுபவித்தவனுக்கு இந்த ஏமாற்றம் மிகப் பெரிய வெறியை ஏற்படுத்தியது.. பூப் போன்றவளை சிதைத்து விட்டதாக.. மென்மையானவளைத் துன்புறுத்தி விட்டதாக.. நினைத்து.. நினைத்துக் கலங்கி அவளோடு ஒன்ற முடியாமல்... தன் வாழ்வைத் தொடர முடியாமல்.. எப்படியெல்லாம் வருத்தப்பட்டுப் போனான்..! தொடர்ச்சியாக நான்கைந்து சிகரெட்டுக்களை ஊதித் தள்ளியவனுக்கு.. நித்யாவின் மீது ஆத்திரம் மட்டுமே மிஞ்சியது..

வெகு நேரம் வசந்தியின் மடியில் கிடந்த நித்யாவைச் சமாதானப் படுத்தி அவன் அறைக்கு அனுப்பி வைத்தார் வசந்தி. அவனது கண்களிலிருந்தேத் தன் மீதான அவனது கோபத்தின் வீரியத்தை அறிந்திருந்த நித்யாவிற்கு.. அந்த நிமிடமே பூமியில் புதைந்து போய் விடலாமென்று தோன்றியது. என்ன தண்டனை அளிப்பான்..?,வீட்டை விட்டு வெளியே போ என்பானா..?.தந்தை இல்லாத இந்த நேரத்தில் தான் எங்கே செல்வது..?,அப்பா.. எனக்குப் பயமாக இருக்கிறது.. என்று மனதுக்குள் புலம்பியபடியே படியேறினாள். முடிவேயில்லாததாய் எண்ணிய படிக்கட்டுக்கள்.. நேரே அவனது அறைக்குக் கொண்டு சென்று விட.. லேசாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

DO NOT COPY

அங்கே குறுக்கும் நெடுக்குமாக நடந்த படி அறையை அளந்து கொண்டிருந்தான் கௌதம். கீழே கிடந்த சிகரெட்டுகள்.. அவன் எவ்வளவு கோபத்துடன் இருக்கிறான் என்பதைத் தெரிவிக்க.. நெஞ்சுக்குள் குளிர் பரவியது நித்யாவிற்கு. அழுது அழுது சிவந்து போன விழிகளுடனும்,களைந்து கிடந்த கூந்தலுடனும்,முகத்தில் ஒளியின்றி.. நடுக்கத்துடன் நின்றிருந்தவளின் அருகே வந்து அழுத்தமாக நோக்கினான் கௌதம்.

அவனது பார்வையைக் கண்டவளுக்கு உள்ளே பிசைய.. அந்நாளில் ஒன்பதாவது முறையாகக் கண்களில் நீர் கோர்க்க.. "கௌதம்.. நா..நான்.."என்று தொடங்கியவள்.. கௌதமின் பளாரென்ற அறையில் நான்கடி தள்ளிக் குப்புற விழுந்தாள். அவனது ஐந்து விரல்களும் கன்னத்தில் பதிந்திருக்க.. காது விண் விண்ணென்றுத் தெறித்தது. வலியில் முகம் சுருங்கி.. இதழோரத்தில் வழிந்த ரத்தத்தைக் கையால் துடைத்தபடி கண்ணீருடன் அவன் முகத்தை ஏறிட்டாள்.

"நா..நான்.."என்று மீண்டும் தொடங்கியவளின் அருகே வந்தவன் அவள் தலை முடியைக் கொத்தாகப் பற்றித் தூக்கி "பேசாதேடி... இனி நீ ஒரு வார்த்தை பேசினாலும்.. நான் கொலைகாரன் ஆகி விடுவேன்.. ஜாக்கிரதை"என்று உறும.. உதட்டைக் கடித்து அழுகையை அடக்கினாள் அவள். "இனியும் உன் நடிப்பு ஜாலத்தைக் காட்டி என்னை ஏமாற்ற முயற்சிக்காதே... இனியும் உன்னை நம்ப நான் முட்டாள் அல்ல.. எப்படியடி உன்னால் இவ்வளவு பெரியப் பொய்யைக் கூற முடிந்தது..?,என்ன பாவம் செய்தேன் நான்..?,ஏன் என்னை சித்ரவதைக்குள்ளாக்கினாய்..?, உன்னை எவ்வளவு நம்பினேன் தெரியுமா..?, கண் மூடித் தனமாக நீ கூறிய அனைத்திற்கும் தலையாட்டினேன்.. என் வாழ்வில் நுழைந்து நீ செய்த அத்தனை மாற்றங்களையும் எண்ணி எண்ணிப் பூரித்தேன்.. உன்னை அணுஅணுவாய் நேசித்தேன்.. உயிரேனும் மேலாக விரும்பினேன்.. கோபுரமாக நான் உன்னை எண்ணி வைத்திருக்க.. ஆனால்.. நீ.. அந்த சௌம்யாவைப் போல்.. சுந்தரியைப் போல்.. என்னை சுலபமாக ஏமாற்றி விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு.. இந்த அளவிற்கு கொண்டு வந்து விட்டாய்.."

"உனக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா..?,அவர்கள் ஆரம்பத்திலிருந்து இன்று வரைத் தங்களது உண்மையான குணத்தைக் காட்டி கெட்டவர்களாகத் தான் நடந்து வருகிறார்கள்.. ஆனால்.. ஆனால் நீ நல்லவளைப் போல் வேடமிட்டு.. என் அலுவலகத்தில் நுழைந்து.. என் வீட்டில் புகுந்து.. என் மனதிலும் இடம் பிடித்து.. கடைசியில் உன் சுயரூபத்தைக் காட்டி விட்டாய்.. பாதகி.. என் வாழ்வில் வந்து சென்ற பெண்கள் என்னை ஏமாளியாக பாவித்த போது கூட.. நான் இவ்வளவு வேதனையுற்றதில்லை.. உலகத்தில் எதுவும் முக்கியமில்லை.. நீ மட்டும் போதுமென உன்னை.. உன்னை மட்டுமே மனதில் நினைத்து.. உன்னுடனே மனதில் வாழ்ந்து.. உன்னை எண்ணி

DO NOT COPY

எண்ணிப் பைத்தியமாகி.. நீயில்லாமல் இனியொரு வாழ்க்கையில்லை என்றாகிப் போன எனக்கு.. நீ.. நீ செய்த இந்தத் துரோகம்.. என்னை.. என்னை எப்படி வெறியேற்றுகிறது தெரியுமா..?,உன்னை.. உன்னை இந்த நொடியே கொன்று போட்டு விட வேண்டுமென்று என் கைகள் துடிக்கிறது.. "என நெற்றி நரம்புகள் புடைத்தெழ.. சிவந்த கண்களில் திரண்ட நீருடன் கூறிவனைக் கண்டு மனம் பதறி.. அழுது வடிந்தது நித்யாவிற்கு.

கண்ட நாளிலிருந்து இன்று வரை அவனது நன்மையை மட்டுமே நாடுபவள் அவள்.. முட்டாள் தனமான எண்ணங்களுடன் வாழ்வில் நாட்டமில்லாமல் திரிந்து கொண்டிருந்தவனைப் போராடி.. அவனை மாற்றி.. இயல்பாக்கிக் கடைசியில் அவன் மீது நேசம் கொண்டு.. இன்று வரை அவனைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவள்.. அந்தச் சுந்தரி மட்டும் அவர்களது வாழ்வில் வந்திராவிடில்.. எப்போதோ அவனைத் திருமணம் செய்து கொண்டு சொர்க்க வாழ்வில் அடியெடுத்து வைத்திருப்பாள்.

அந்த கேடு கெட்டவளின் பேச்சைக் கேட்டுக் கொண்டுத் தன்னைத் தவிர்க்கிறானே.. இனி இவனுக்குப் புரிய வைக்கவும் முடியாதென்று அவள் எண்ணிய போது தான்.. அவனாகவே இப்படியொரு வாய்ப்பை ஏற்படுத்தினான். இதை விட்டால் அவன் அவளைத் திருமணம் செய்து கொள்ள நிச்சயம் சம்மதிக்க மாட்டான்.. அவனது வாழ்வும் பழையபடி மாறிப் போய் விடும் என்கிற காரணத்தினால் தான்.. அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ளும் படிக் கேட்டதே..! அது.. அது அவனை இவ்வளவு பெரிய தாக்கத்திற்கு உள்ளாக்கும் என்று அவள் எண்ணவேயில்லை..

அழுகையை அடக்க முயன்றுத் தோற்று.. கண்ணீர் வழியக் கேவியவளை.. அழுந்தப் பற்றியவன்.. "அழாதே.. கண்ணீரைக் காட்டி நடிக்காதே.. உன் அழுகையை உண்மையென்று நம்பி.. என்னை நானே வருத்திக் கொண்டது போதும்.. இனியும் அழுதாயானால்.. கொன்று விடுவேன்.."என்று மிரட்ட.. அவனது வார்த்தைகளும்,அவனது கை அழுத்தமும் சேர்ந்து.. வலியையும், வேதனையையும் ஏற்படுத்தியது.

அவன் பற்றியிருந்த அவளது கரம் சிவந்து கன்றிப் போக.. வலியில் துடித்தாள் நித்யா. அழுதால்.. அதற்கும் திட்டுவான் என்று கண்களுக்குள்ளே கண்ணீரை அடக்க முயற்சித்தாள். "ஹ்ம்,ஐந்து விரல்களும் ஒன்றாக இருப்பதில்லை.. உங்களை ஏமாற்றிச் சென்ற பெண்களைப் போல் அனைவரும் இருப்பதில்லை என்றாயே.. அப்படியானால் நீ செய்த இந்தக் கேடு கெட்ட காரியம் எந்த வகையில் சேர்த்தி..?,ஆண்களை ஏமாற்றுவது உன் பெண்ணினத்திற்கு உண்டான குணம்.. இதில் நீ மட்டும் விதி விலக்கல்ல.."என்று ஏளனத்துடன் கூறியவனிடம் "கௌதம்.. நான் சொல்வதை ஒரு முறை காது கொடுத்துக் கேளுங்கள்.."என்று நித்யா கெஞ்ச..

DO NOT COPY

“எதைக் கேட்கச் சொல்கிறாய்..?ம்..?,தவறு செய்து விட்டதாக நான் தினம் தினம் தவித்த தவிப்பை நீ அறிவாயா..?,எதிலும் பிடிப்பற்று.. அவமானத்தில் துடித்தேனே.. அதை உணர்வாயா..?, ஏன் என்னிடம் பொய் கூறினாய்..?”என்று வினவியவனிடம் “இ..இல்லை கௌதம்.. எங்கே நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டீர்களோ என்கிற பயத்தில் தான்.. நான்.. நான் அப்படிக் கூறினேன்.. அது உங்களை இவ்வளவு பாதிக்கும் என்று நான் கனவிலும் கூட நினைக்கவில்லை.. என்னை மன்னித்து விடுங்கள்.. நான் செய்த அறிவற்ற காரியத்திற்காக.. நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்..”என்று கைக் கூப்பிக் கண்ணீர் விட்டவளை உணர்ச்சியற்று நோக்கினான் கௌதம்.

“நடக்காத ஒன்றை நடந்து விட்டதாகக் கூறி இத்தனை நாட்களாக என்னை ஏமாற்றிப் பிழைத்தாயே.. என்னைச் சுலபமாக ஏமாற்றி விடலாம் என்கிற எண்ணம் தானே..?,காதலுடன் இணைவேன் என்று ஓடிச் சென்றவளை விட.. என்னுடனே பழகி.. என் ஒவ்வொரு செயலிலும் தலையிட்டு.. அனைத்தையும் மாற்றி.. என் நம்பிக்கைக்குரியவளாக மாறி.. நீ செய்த துரோகத்தை மட்டும் என்னால் மன்னிக்கவே முடியாது...”என்றவன்.. பற்றியிருந்த அவளது கைகளை விலக்கித் தள்ளினான்.

கன்றிப் போய் விட்டக் கைகளைத் தடவியபடி அழுகையில் வீங்கிய முகத்துடன் நின்றிருந்தவளை ஆழ நோக்கி.. “எது நம் இருவருக்குமிடையில் நடந்து முடிந்த விட்டதென்று ஏமாற்றி என்னை மணம் புரிந்தாயோ.. அது.. இப்போது.. இங்கே நடக்கப் போகிறது... உனக்கு இதை விடப் பெரிதாக தண்டனையேதும் அளிக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.. இத்தனை நாட்களாக நான் பட்ட.. வலியை.. வேதனையை.. உன் ஒவ்வொரு செல்லும் அனுபவிக்க வேண்டும்.. கௌதமென்றால்.. ஏமாளி.. இளிச்சவாயன் என்று எண்ணி வைத்திருக்கிறாயே.. அந்த எண்ணம் மாறி.. என்னை ஏமாற்றினால்.. எப்பேர்ப்பட்ட பாதிப்பிற்குள்ளாவாய் என்பதை நீ அறிய வேண்டும்..”என்றவன் அவள் அருகே வர...

அவன் பார்வையிலும் பேச்சிலும் சில்லிட்டுப் போன நித்யா.. மரத்துப் போன கை,கால்களை கஷ்டப்பட்டு அசைத்து.. “கௌதம்... கௌதம்...”என வாய் முணுமுணுக்க.. நடுங்கிப் போன மனதுடன் பின்னால் நகர்ந்தாள். அவள் அணிந்திருந்தத் துப்பட்டாவை அவளிடமிருந்து உறுவித் தூர எறிந்தவனைக் கண்டு நெஞ்சம் படபடவென அடித்துக் கொள்ள.. அவனிடமிருந்து தப்பிக்க எண்ணி.. பால்கனியை நோக்கி ஓடினாள்.

ஆனால் ஒரே எட்டில் அவளைப் பற்றித் தூக்கியவன்.. அவனிடமிருந்து விடுபடத் துடித்து அவள் செய்த முயற்சிகள் அனைத்தையும் அலட்சியமாக

DO NOT COPY

அடக்கி.. அவளைப் படுக்கையில் போட்டான். “எதற்காகத் திமிறுகிறாய்..?,இது நடந்து முடிந்ததாகக் கூசாமல் கூறித் தானே என்னைத் திருமணம் செய்து கொண்டாய்..?,அப்போது நடக்காதது.. இப்போது நடப்பதாக எண்ணிக் கொள்...” எனக் கூறி.. அவள் அழுகையுடன் தடுப்பதைப் பொருட்படுத்தாது.. வேக வேகமாக முன்னேறினான்.

அவளைப் பழி வாங்கி விடும் வெறியுடன்.. அவனது மென்மையான நித்யா தன்னால் துன்புறுகிறாள் என்கிற நினைப்பே இல்லாமல் தொடர்ந்தவனைத் தடுக்கச் சக்தியற்று.. தோற்றுப் போனாள் நித்யா.. காதல் என்ற ஒன்று ஒரு சதவீதம் கூட இல்லாது.. அவள் செய்தத் தவறுக்குத் தண்டனையளிப்பதாக எண்ணிக் கொண்டு மிருகத்தனமாக அவன் நடந்து கொண்டதை தாங்கிக் கொள்ள முடியாது.. கண்ணீர் விட்டு அவள் கதற.. அவள் அழுகையையும், கதறலையும் பொருட்படுத்தாது.. தன் செயலில் குறியாக இருந்தவன்.. போதும்,போதுமென அவளைத் துன்புறுத்திய பின் அவளை விட்டு விலகி எழுந்தான். துச்சமாக அவள் மீது ஒரு பார்வையைச் செலுத்தியவன் விறுவிறுவென அறையை விட்டு வெளியேறினான்.

அவன் சென்ற பின் பாரமாகக் கணத்தத் தலையையும்,உடலையும் கஷ்டப்பட்டுத் தூக்கிக் குளியலறைக்குச் சென்று ஷவரைத் திருகி விட்டு நின்றவளுக்கு.. உடலின் ஒவ்வொரு அணுவும் வலியை ஏற்படுத்தியது.. அவன் கூறினானே.. நான் அனுபவித்த வலியையும்,வேதனையையும் உன் உடலில் ஒவ்வொரு செல்லும் அனுபவிக்க வேண்டுமென்று.. அதற்காக.. அதற்காக.. இப்படி.. மிருகமாக மாறி.. நினைத்துப் பார்க்கக் கூட விரும்பவில்லை அவள்.
அவனது கை விரல்களின் அழுத்தத்தில் சிவந்து கன்றிப் போய் விட்ட இடங்கள் தண்ணீர் பட்டதும் சுரீரென்று எரியத் துவங்க... பல்லைக் கடித்து வலியை அடக்கினாள்.

காதலும்,நேசமும் மருந்துக்கும் கூட இல்லாதவனுடன் இனி வாழ்ந்தென்ன பிரயோஜனம்..?,எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் தான் அந்தப் பொய்யைச் சொல்ல நேர்ந்ததென்பதை புரிந்து கொள்ள முடியாமல்.. அவனை ஏமாற்றி விட்டதாகக் கூறி இப்படியொரு தவறை செய்து விட்டானே..! இனி நித்யா எப்படி அவனுடன் வாழ்வாள்..?,நீ செய்தது துரோகம்.. பாவம் எனக் கூறி மீதி வாழ்வையும் நரகமாகவே கழிப்பான். வேண்டாம்.. வேண்டாம்.. அவனை விட்டு விலகிச் சென்றாலேனும்.. அவள் மீதிருக்கும் கோபம் அவனுக்குக் குறையக் கூடும்..

அவன் அவளைத் துன்புறுத்தியதைக் கூடப் பெரிதாக நினைக்காமல் அவன் வாழ்வைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியத் தன் நிலையைக் கண்டு அவளுக்கு அழுகை தான் வந்தது. இந்தக் காதலையும்,நேசத்தையும் புரிந்து கொள்ளாமல் போனானே! அவள் தோற்று விட்டாள்! என்ன காரணத்திற்காக இந்தியா

DO NOT COPY

வந்தாளோ.. அதில் தோல்வியைத் தழுவி விட்டாள்.. அத்தையும்,அப்பாவும் எவ்வளவு நம்பினார்களோ.. அவர்கள் நம்பிக்கையைப் பொய்ப்பிப்பது போல்.. அவள் தோற்று விட்டாள்..

கௌதமின் மனதை மாற்றி.. வாழ்வின் மீது பிடிப்பை ஏற்படுத்தி.. அவனது வாழ்வை மீட்டுக் கொடுத்து விட்டதாக அவள் இறுமாந்திருந்தது பொய்யாகிப் போனது. அவன் பார்த்த பெண்களின் வரிசையில் அவளையும் சேர்த்து விட்டான். ஏன்..?,அவர்களை விடக் கேவலமானவளாக எண்ணி விட்டான்.. சத்தமில்லாமல் அழத் துவங்கியவள்.. ஷவரை நிறுத்தி விட்டு.. உடை மாற்றிக் கொண்டு வெளியே வந்தாள்.


சிவந்திருந்த உதடும்,கன்னங்களும் நடந்து முடிந்த சம்பவத்தை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்த.. அழுகையுடன் அமர்ந்திருந்தாள். இரண்டு,மூன்று நாட்களாகச் சரியாகச் சாப்பிடாததும்,உணர்ச்சிக் கொந்தளிப்பிலும்.. வெகு நேரத்திற்கு முன்பு நடுங்கத் துவங்கியிருந்த உடல்.. இன்னமும் கூடத் தன் நடுக்கத்தை நிறுத்தாமல் இருந்தது. உதட்டைக் கடித்து நடுக்கத்தைக் கட்டுப்படுத்தியவள்.. அருகேயிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துக் மடமடவெனப் பருகினாள். கொஞ்சம் சமனடைந்து விட்ட மூளையுடன் யோசித்து முடிவு செய்து.. கையிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டுத் தன் வீட்டிற்குச் சென்றாள்.

அவளது நல்ல நேரம்! எதிர் வீட்டை இன்னும் விஸ்வநாதன் காலி செய்யவில்லை.. அன்று இரவு முழுதையும் அங்கேயே கழித்தவள்.. விடிந்த பின் முந்தைய இரவு புக் செய்த விமானத்தில் நியூயார்க் பறந்தாள்.

**இ**ரவு உறங்கச் செல்லும் முன் தோட்டத்தில் நடப்பதை வழக்கமாக வைத்திருக்கும் விஸ்வநாதன் அன்றும் அதே போல் வெளியே வந்தவர்.. அங்கே வாசல் கதவைத் திறந்து கொண்டு.. இந்த உடலும் சுமையென்பது போல்.. சக்தியற்று.. களையிழந்த முகத்துடன்.. எப்போதும் குடி கொண்டிருக்கும்.. புன்னகையும்,குறும்பும் சுத்தமாக மறைந்து போய் பொலிவற்று நடந்த மகளைக் கண்டு இதயம் ஒரு நிமிடம் துடிப்பதை நிறுத்தி விட்டது அவருக்கு.


“நிதும்மா..”என்ற தந்தையின் குரல் ஒலித்ததும்.. நின்று விட்டவள்.. உதடு துடிக்க.. மூக்கு விடைத்து அழுகையில் சிதற.. “அப்பா...”என்று ஓடி வந்து அணைத்துக் கொண்டாள். “நிது.. நிது.. என்னடா.. என்ன நடந்தது..?”என்று அவள் தோளைத் தடவிச் சமாதானப் படுத்தியவரிடம் “நா.. நான் இனி அங்கே போக மாட்டேன்.. போக மாட்டேன் அப்பா..”என்றவளை யோசனையுடன் நோக்கியவர் “சரி பாப்பா.. நீ உள்ளே வா முதலில்..”என்றழைத்துச் சென்றவர்.. அவளைச் சாப்பிட வைத்து.. தட்டிக் கொடுத்துத் தூங்க வைத்தார்.

DO NOT COPY



DO NOT COPY

# அத்தியாயம் – 19




**பூஞ்சோலையில்..**
**பசுமையான மரங்களுக்கிடையில்..**
**கொடியினால் கட்டப்பட்ட ஊஞ்சலில்..**
**உன்னருகே நான் அமர்ந்திருந்த..**
**அந்த ஏகாந்த வேளை...**
**என் உயிர் பிரியும் வரை..**
**மறவாது கண்ணா!**

**ஆ**யிற்று! நித்யா நியூயார்க் திரும்பி இன்றோடு முழுதாக ஆறு மாதங்கள் கடந்து விட்டது. இந்தியாவிலிருந்து இங்கே வந்து சென்ற அன்று அழுகையுடன் விஸ்வநாதனின் தோள் சாய்ந்தவளை.. அவர் சமாதானப்படுத்தி சாப்பிட வைத்து உறங்கச் செய்தார். அவளது முகத்திலிருந்தே தெரிந்தது. அவள் பல நாட்களாக உண்ணாமலும்,உறங்காமலும் இருக்கிறாள் என்பது! அதன் பின் வந்த நாட்களை அவள் அமைதியாகக் கழிக்க.. என்ன நடந்ததென்று கேட்டுக் கேட்டு விஸ்வநாதன் சோர்ந்து போனது தான் மிச்சமாகிப் போனது. அவள் வாயைத் திறப்பதாக இல்லை.

யாருடன் அதிகம் பேசுவதில்லை.. முன் போல் நடையில் ஒரு துள்ளலும்.. நாள் முழுக்க அவளுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் உற்சாகமும்.. வம்பு செய்து சிரிக்கும் குணமும்.. பதிலுக்கு பதில் சண்டையிடும் இயல்பும் மாறிப் போய்.. எங்கோ வெறித்த பார்வையுடன் வாழ்வை இழந்தவள் போல் உயிர்ப்பில்லாமல் இருந்தாள். இன்னும் சில நேரங்களில் கட்டிலில் குப்புற விழுந்து எதையோ நினைத்துக் கொண்டுத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விடுகிறாள். பித்துப் பிடித்தவள் போல் திரிந்தவளை விஸ்வநாதன் தான் அருகிலிருக்கும் குழந்தைகள் பள்ளிக் கூடத்திற்குச் ஆசிரியராகச் செல்லுமாறு வலியுறுத்தினார்.

அங்கே வேலைக்குச் சென்றபின் ஓரளவு நல்ல மாற்றம் தெரிந்தது அவளிடம். முன் போல் வெறித்த பார்வையுடன் திரிவதை விடுத்து.. அவ்வப்போது குழந்தைகள் செய்யும் சேட்டைகளைக் கண்டு முறுவலித்தாள்.

DO NOT COPY

தோற்றத்திலும்,உடல் நலத்திலும் அக்கறையில்லாமல் இருந்தவள்.. இப்போது வேளை தவறாமல் சாப்பிடுகிறாள்.
இவையனைத்தையும் கண்ட விஸ்வநாதனுக்கு மனம் வலித்தது. தானே தன் பெண்ணின் வாழ்வை அழித்து விட்டதாக எண்ணித் தினம் தினம் வருந்தினார். கல்லூரியிலிருந்து வீடு திரும்பியதும்.. தந்தையைக் கட்டிக் கொண்டுச் செல்லம் கொஞ்சித் திரியும் மகளின் அழகைக் காண முடியாது போனதைக் கண்டு கலங்கினார். தினம் நான்கைந்து சிறுவர்களுடன் ஓடி விளையாடித் திரிந்தும்.. நண்பர்களுடன் ஆடிப் பாடி கூத்தடித்துக் கொண்டும்.. சுதந்திரப் பறவையாக.. கவலைகளின்றி மகிழ்ச்சியாக இருந்தவள்.. இன்று சிறகொடிந்து கிடப்பதைக் காணச் சகிக்காமல் உள்ளுக்குள் வருந்தினார்.

ஆனாலும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்.. அவள் விரும்பும் விசயங்கள் அனைத்தையும் செய்தார். அவளது நண்பர்களை வரவழைத்தார். ஷாப்பிங் அழைத்துச் சென்றார். அவளுடன் விளையாடினார்.. ஆடினார்.. பாடினார்.. ஆனால் இவையனைத்திற்கும் சின்ன புன்னகை சிந்தினாளே தவிர எதிலும் கலந்து கொள்ளவில்லை..

பாவி! படுபாவி! எப்படியிருந்தப் பெண்ணை இப்படி மாற்றி விட்டானே! அவனது வாழ்வு சிறக்க வேண்டுமென்று அவனைத் தேடிச் சென்று நல்லது செய்தாளே..! கடைசியில் அவளுக்கு இந்த நிலைமை தானா வர வேண்டும்..? என்று நினைத்தவருக்கு.. ஆறு மாதங்களுக்கு முன்பு நித்யா வீடு வந்து சேர்ந்த நாள் நினைவிற்கு வந்தது.

எவ்வளவோ முயற்சித்தும் தான் திரும்பியதற்கான காரணத்தை அவள் கூற மறுத்த வேளை நித்யாவைக் காணவில்லையென்று பதறித் தமையனுக்கு ஃபோன் செய்தார் வசந்தி.

**அ**ன்று அவளை வெறுப்புடன் நோக்கி விட்டு எழுந்து சென்ற கௌதம் இரவு முழுதையும் காரில் ஊரைச் சுற்றியே கழித்தான். கோபமும்,ஆத்திரமும் இன்னமும் அடங்காமல் இருந்தது.. கண்களை மூடினால் அழுகை நிறைந்த முகத்துடன் உதட்டில் வழிந்த ரத்தத்தைத் துடைத்த நித்யாவே வந்து நின்றாள். தான் செய்தது.. தவறா.. சரியா என்று கூடப் புரியாத மனநிலையில் வண்டியின் வேகத்தை அதிகரித்துச் செலுத்தியவன்.. எதிரே வந்த லாரியின் மீது மோதி.. கடற்கரை மணலில் சென்று விழுந்தான்.

அருகிலிருப்போர் அவனைப் பற்றியெழுப்பித் தண்ணீர் கொடுக்க.. அவனுக்கோ.. இந்த விபத்தில் உயிர் போயிருக்கக் கூடாதா என்றே தோன்றியது.. அவள் தன்னை ஏமாற்றி மணம் புரிந்ததாக ஒரு மனம் கோபத்தில் கொந்தளித்தாலும்.. இன்னொரு மனமோ.. இத்தனை நாட்களாக என்ன செய்து

DO NOT COPY

விட்டோமென்று வருந்தினாயோ.. அந்தக் கொடுமையை அவளுக்குச் செய்து விட்டு வந்திருக்கிறாயே முட்டாள் என்று அவனைச் சாடியது.

கோபம்,வருத்தம்,அழுகை,அவமானம் எனக் கலவை உணர்வுடன் காலை வீடு வந்து சேர்ந்தவன்.. கண்டது வசந்தியின் அழுகை நிறைந்த முகத்தைத் தான். “கௌதம்.. கௌதம்.. நித்யாவைக் காணவில்லை.. எல்லா இடத்திலும் தேடிப் பார்த்து விட்டேன்..”என்று பதற.. முகம் இறுகத் தலை குனிந்தவன் “என்னை ஏமாற்றிய பாவத்திற்காக அவளே தொலைந்து விட்டாள் எனச் சந்தோசப்பட்டுக் கொள்கிறேன்..”என்று கூறி விட்டு விறுவிறுவெனத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

அவன் கூறிய பதிலைக் கேட்ட வசந்தித் திகைத்துப் பின் அழுகையில் குலுங்கினார். நன்றாக இருந்த பெண்ணை என் மகனது வாழ்வை மாற்ற வா தாயி என நியூயார்க்கிலிருந்து இந்தியா வர வைத்துக் கடைசியில்.. அவளது வாழ்வைக் கெடுத்து அனுப்பி வைத்து விட்டோமே! சிரிப்பும்,மகிழ்ச்சியுமாய்.. சுற்றியிருப்பவர்களைக் குதூகலப்படுத்தி.. அனைவரும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாக வைத்துக் கொண்டு.. எத்தனை நன்மைகளைப் புரிந்தாள்..! அவளை இந்தப் பாவி என்ன செய்தான் என்று தெரியவில்லையே.. சொல்லிக் கொள்ளாமல் எங்கோ சென்று விட்டாளே..! விஸ்வநாதன் அண்ணாவின் முகத்தில் இனி எப்படி விழிப்பேன் என்று பதறிய வசந்தி.. அழகர்சாமிக்கு ஃபோன் செய்து தெரிவிக்க இருவரும் சேர்ந்து நித்யாவைத் தேடினர்.

அன்னையிடம் பேசி விட்டு கனத்த மனதுடன் தன்னறைக்கு வந்த கௌதமிற்கு.. அறை இருந்த கோலம் நேற்று இரவு நடந்தக் கோரமான நிகழ்வைக் கண் முன்னே கொண்டு வந்தது. ஆத்திரத்தில் அவன் கிழித்தெறிந்த அவளது ஆடைகள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்க.. அதைக் கண்டவனுக்குத் துக்கம் பொங்கியது. ஆனாலும்.. அவள் செய்த தவறுக்கு இப்போது படுகிறாள்.. என்று தனக்குத் தானே கூறி விட்டுப் படுக்கையில் விழுந்தான். அவளது தலையணையிலிருந்து புறப்பட்ட அவளது வாசம்.. நெஞ்சைக் கசக்கிப் பிழிய.. அவனையறியாமலே.. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது அவனுக்கு.

நித்யாவைப் பற்றி நன்கு அறிந்திருந்ததால் அழகர்சாமி நேராக ஏர்போர்ட்டில் விசாரிக்க.. அன்றைய விமானத்தில் அவள் பறந்திருப்பது தெரிய வந்தது. ஓரளவு நிம்மதியடைந்து இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். அவருக்கு ஆறுதல் கூறி விட்டு அழகர்சாமி சென்று விட.. அழுகை பொங்கியது வசந்திக்கு. சிட்டுக் குருவியைப் போல் சலசலவெனத் திரிந்தவளை என்ன செய்தான் இந்தப் பாவி! எந்தப் பிரச்சனையாயிருந்தாலும் அத்தை,அத்தையென அவளிடம் தெரிவிப்பாளே! இப்போது எதுவுமே கூறாமல் சென்றிருக்கிறாள்

DO NOT COPY

என்றால்.. அவனுக்கும் அவளுக்குமிடையே என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்து அவருக்குப் பயமாக இருந்தது.

அதன் பின் எதுவும் நடவாதது போல் அலுவலகத்திற்குச் செல்பவனை வெறுப்புடன் நோக்கியவர்.. அவன் முகத்தில் விழிப்பது கூட இல்லை.. மகள் வந்து சேர்ந்ததும் விஸ்வநாதன் வசந்திக்கு ஃபோன் செய்து விசாரிக்க.. அழுகையுடன் அண்ணனிடம் நடந்ததைக் கூறினார்.

இருவருக்குமிடையில் என்ன நடந்திருக்கும் என்பதை யூகிக்க முடியாத பெற்றோர்கள்.. தங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து ஊமையாக வருந்திக் கொண்டிருக்க.. பிள்ளைகள் இரண்டும் நடைபிணங்களாய் தங்களது வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

நித்யா சென்று விட்ட பின் வசந்தி அறையை விட்டு வெளி வருவது கூட அரிதாகிப் போனது. தன் மகனின் வாழ்வில் விளக்கேற்ற வந்தவள் அவள் என எண்ணி எண்ணிப் பூரித்து... அவளைத் தன் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் வசந்தி. இனி எல்லாம் சுகமே என்று நினைத்து இருவருக்கும் அவர் மணம் புரிந்து வைக்க.. இந்தப் பாவி அவளை வீட்டை விட்டே விரட்டி விட்டானே! அவரது கோபம் முழுதும் மகன் மீது திரும்ப.. அவன் முகத்தில் விழிப்பது கூடப் பாவம் என்றெண்ணி அவன் வீட்டிலிருக்கும் நேரங்களில் அவர் வெளியே வருவதேயில்லை.

நித்யா இல்லாத வீடு சூன்யமாகத் தோன்ற ஆரம்பிக்க.. கௌதம் வீடு தங்கும் நேரங்களையே குறைத்துக் கொண்டான். தன்னைச் சுற்றியிருப்பவர்கள் தன் மீது காட்டும் வெறுப்பை முதலில் உணர்ந்து கொள்ளாமல்.. தன் போக்கில்.. தனக்கென ஓர் உலகத்தை வகுத்துக் கொண்டு அதிலேயே வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு.. அலுவலகத்தில் அழகர்சாமியும்,வீட்டில் அன்னையும் உமிழும் வெறுப்பு மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்தது.

அவனும் ஒரு வாரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறான் தன் அன்னையுடன் பேசி விட வேண்டுமென்று.. அவனைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொண்டு அவர் எழுந்து செல்ல.. என்னவாயிற்று அம்மாவிற்கு.. என்றெண்ணி.. அவரது அறைக்கதவைத் தட்டினான். “அம்மா.. கதவைத் திற.. நான் தான்..”என்று கூற.. சிறிது நேரம் அவரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. “அம்மா..”என்று அழுத்தமாகக் கத்தி கதவை இடித்தவனைக் கண்டுக் கோபமாக கதவைத் திறந்தவர்.. “என்ன..?,என்ன வேண்டும் உனக்கு?,இனியொரு முறை என்னை அம்மா என்றழைக்காதே.. அதற்கானத் தகுதியை நீ என்றோ இழந்து விட்டாய்.. எதற்காக என்னைத் தொந்தரவு செய்கிறாய்..?,நான் இந்த வீட்டில் இருப்பதும் உனக்குப் பாரமாக இருக்கிறதா..?,உனக்குத் தான் பெண்களென்றாலே பிடிக்காதே.. உன்னைப் பெற்றெடுத்திருந்தாலும்.. நானும்..

DO NOT COPY

நீ வெறுத்து ஒதுக்கும் பெண் இனத்தைச் சேர்ந்தவள் தான்.. அதனால்.. என்னையும் வெளியே செல்லச் சொல்கிறாயா..?"என்று வழக்கத்திற்கு மாறாக அவர் வெடிக்க.. திகைத்துப் போனவன்.. "இ..இல்லைம்மா.."என்று தலையசைத்தவன் பின் தலையை உலுக்கி நிமிர்ந்து..

"ஏன் சத்தமிடுகிறாய் இப்போது..?,நானும் பார்த்துக் கொண்டு தானிருக்கிறேன்.. நீ என்னைத் தவிர்ப்பதை.. அவள் செய்த தவறு அவளுக்கே உறுத்தி விட்டது.. அதனால் தான் அவளே யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சென்று விட்டாள்.. நானா அவளை வீட்டை விட்டு விரட்டினேன்..?, என்னவோ நான் தவறு செய்து விட்டதைப் போல் என்னைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறீர்கள் அனைவரும்.?, என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்...?, உனக்கு அவள் முக்கியமா..?,நான் முக்கியமா அம்மா..?, அவள் என்னை ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டதை நீங்கள் அறிந்து தான் இருந்திருக்கிறீர்கள்.. அவளுடன் சேர்ந்து கொண்டு ஏன் நீங்களும் மறைத்தீர்கள்..?,என்னை ஏமாற்றுவதில் என்ன சந்தோசம் உங்களுக்கு..?"என்று கத்தியவனிடம் "ஏனென்றால் உன் சந்தோசத்தை.. உன் மகிழ்ச்சியை மீட்டுக் கொடுப்பது மட்டுமே எங்கள் மனதில் நிலை கொண்டிருந்தது.."என்று முழுக் குரலையும் உயர்த்திக் கத்தியவரை அவன் வியந்து நோக்கினான்.

அழுகையில் குரல் நடுங்க நெஞ்சைப் பற்றிக் கொண்டவர் "நித்யா யாரென்று உனக்குத் தெரியுமா..?"என்று வினவ.. இமைக்காமல் அன்னையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவனிடம் "நித்யா.. என் அண்ணன் மகள்.. என் பெரியம்மா மகன் விஸ்வநாதனின் மகள்.. நீ என்னை அமெரிக்காவிற்கு சுற்றுப் பயணம் அனுப்பிய போது தான் நான் என் அண்ணனைச் சந்தித்தேன்.. உன்னைப் பற்றிக் கூறி நான் வருத்தப்பட்டது பொறுக்காமல் தான் என் அண்ணன் அவரது மகளான நித்யாவை இங்கே என்னுடன் அனுப்பி வைத்தார்." என்று ஆரம்பித்து எல்லாவற்றையும் அவனிடம் கொட்டினார்.

"பெண்களைப் பற்றி இழிவான எண்ணம் கொண்டிருந்த உன்னை மாற்றுவதற்காக.. உன் வாழ்வைச் சீராக்குவதற்காக.. நீயும் மற்றவர்களைப் போல் குடும்பம்,குழந்தையென வாழ்வைத் தொடர வேண்டும் என்பதற்காக.. அவள் இந்தியா வரச் சம்மதித்தாள். எனக்காக.. அவள் உயிராய் மதிக்கும் தந்தை கூறி விட்ட ஒரே காரணத்திற்காக இங்கே வந்தாள். அவளை வீட்டினுள் அனுமதிப்பது உனக்குப் பிடிக்காமல் போய் விடுமோ என்று பயந்து எதிர் வீட்டில் யாரோ ஒருத்தியைப் போல் தங்க வைத்து.. உனக்காக.. உனக்காக.. எவ்வளவு பாடுபட்டிருக்கிறோம் என்று உனக்குத் தெரியுமா..?,உன்னைப் பெற்ற கடனிற்காக நான் கஷ்டப்பட்டால் சரி தான், எங்கோ பிறந்து.. எங்கோ வளர்ந்த நித்யா எதற்காகக் கஷ்டப்பட வேண்டும்..?, ஆனால் அவள் முயற்சித்தாள்.. நாங்கள் அனைவரும் விரும்பியபடி.. அவள்

DO NOT COPY

உன்னை மாற்றினாள்.. கடைசியில்.. உன்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கவும் தொடங்கினாள்.. அவள் மீதான உனது காதலையும் அறிந்து கொண்டாள்.. எல்லாம் நன்றாகச் சென்று கொண்டிருந்த போது.. ஏதோ ஒரு கழிசடையின் பேச்சைக் கேட்டுக் கொண்டு நீ அவளைத் தவிர்த்தாய்.. விலக்கினாய்.. ஒதுங்கி நின்றாய்.. அப்போது தான்.. அந்தப் பார்ட்டி நாள் வந்தது.. இதைத் தவிர்த்தால் நீ அவளைத் திருமணம் செய்ய மறுத்து பழையபடி வாழ்வைத் தொடர ஆரம்பித்து விடுவாயோ என்று.. அப்போதும் கூட உன் வாழ்வைப் பற்றி யோசித்துத் தான் அவள் கல்யாணம் செய்து கொண்டாள்.. சம்பந்தமே இல்லாமல்.. உன் வாழ்வில் புகுந்து நன்மையை ஏற்படுத்தினாளே.. அவளை.. அவளை அவமானப் படுத்தி வெளியே துரத்தி அடித்து விட்டாயே.. உனக்கு இந்த ஜென்மத்தில் மன்னிப்பு என்பதே கிடையாது..”என்று கூறி விட்டு அவர் அறையை விட்டு வெளியேறி விட ஸ்தம்பித்துப் போனான் கௌதம்.

நித்யா.. நித்யா.. அவனது மாமன் மகள்.. அவனுக்காகவே இந்தியா வந்து.. தங்கி.. அவனை மாற்ற முயன்று.. அதில் வெற்றியும் பெற்றவள்.. அவளை.. அவளைப் போய்.. விரட்டி அடித்து விட்டானே..! பாவி! அம்மா கூறியது போல்.. இந்தப் பாவத்திற்கு மன்னிப்பே கிடையாதே! தலையை அழுந்தக் கோதி.. நிலைகுலைந்து கீழே விழுந்தவனுக்கு.. “நித்யா... நித்யா..”என்கிற வார்த்தையைத் தவிர வேறு வார்த்தையே வரவில்லை.. உடனே... உடனே அவளைச் சந்தித்து.. மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றுத் தோன்றியது அவனுக்கு.. அவள் மன்னித்தாலும்.. மன்னிக்கா விட்டாலும்.. அவளை ஒரு முறை.. ஒரு முறையேனும் காண வேண்டும்.

விரைவாகச் சென்று ஹாலில் அமர்ந்திருந்த அன்னையின் காலடியில் அமர்ந்தவன் “அம்மா.. அம்மா.. நான்.. மிகப் பெரிய குற்றம் செய்து விட்டேனம்மா.. நித்யா.. நித்யா எனக்கு வேண்டும் அம்மா.. ஒரு முறை அவளை விலக்கி நான் செய்தத் தவறு போதும்.. இனியும் அவளைப் பிரிந்து என்னால் இருக்க முடியாதம்மா.. நான் அவளைப் பார்க்க வேண்டும்.. இப்போதே... அவள் எங்கிருக்கிறாள் என்று சொல்லுங்கள்.. ப்ளீஸ்...”என்று கெஞ்ச.. அவனை வெறித்து நோக்கியவர் “நீ விரும்பும் போது அருகே வருவதற்கும்... நீ வெறுக்கும் போது தூரப் போவதற்கும் நித்யா ஒன்றும் உன் வீட்டு வேலைக்காரியல்ல..”என்று அவர் எழுந்து செல்ல.. “அம்மா.. என்னை மன்னித்து விடு... இனியொரு முறை அவளைக் கஷ்டப்படுத்தும் எந்தக் காரியத்தையும் நான் செய்ய மாட்டேன்... ஒரு முறை.. ஒரு முறை அவளை நான் பார்க்க வேண்டும்.. ப்ளீஸ் அம்மா..”என்று கெஞ்சியவனைப் பொருட்படுத்தாது அவர் தன்னறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

DO NOT COPY

மூன்று நாட்கள் அன்னையைத் தொடர்ந்து.. காலில் விழாத குறையாகக் கெஞ்சி.. நித்யா.. நியூயார்க்கில் இருப்பதைத் தெரிந்து கொண்டான். “தேங்க் யூ.. தேங்க் யூ மாம்..”என்று அன்னையைக் கட்டிக் கொண்டவன் “நான் திரும்பி வரும் போது நிச்சயம் உன் மருமகளோடு தான் வருவேன்..”எனக் கூறி விட்டு விரைந்து ஓடிச் சென்றான்.

நித்யா.. நித்யா என மனம் முழுதும் அவள் முகமும்,சிரிப்பும்,துறுதுறு குறும்புத் தனமும்,தன்னிடம் சண்டை பிடிக்கும் குழந்தைத்தனமும் மனக்கண்ணில் தோன்றி சிரிப்பை வரவழைத்தது அவனுக்கு. அவளை எண்ணியபடியே பயணத்தை முடித்தவனுக்கு.. அவளது வீட்டை நோக்கி நடந்த போது இதயம் படபடவென அடித்துக் கொண்டது. விஸ்வநாதன் என்கிற பெயர்ப்பலகையின் மீது வரையப்பட்டிருந்த பொம்மையும்,மீசையும் அது யாருடைய வேலை என்பதை அவனுக்குத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது.. அந்த பொம்மையை வருடியபடி நின்றிருந்தவன் கண்களில் கோர்த்தக் கண்ணீரை அடக்கி காலிங் பெல்லை அழுத்தினான்.

அன்று பள்ளி விடுமுறை நாளாததால் வீட்டிலிருந்த நித்யா.. தனியாக அமர்ந்திருந்தால் மனம் எதையேனும் நினைத்துக் கலங்கும். தேவையா..? என்றெண்ணிக் கொண்டு வீட்டைச் சுத்தம் செய்யத் துவங்கினாள். சிறிது நேரத்திலேயே காலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தவள்.. வெளியே நின்று கொண்டிருந்த கௌதமைக் கண்டு ஆடிப் போனாள்.

ஏன் வந்தான்..?,எதற்காக வந்திருக்கிறான்..?, உயிரும்,உணர்வும் இருந்தும் ஜடம் போல் நடமாடிக் கொண்டிருப்பவளை மொத்தமாக அழித்து விட வந்திருக்கிறானா..?,அவனைக் கண்டுத் திகைத்துப் பின் நடுங்கிப் போனவள்.. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கால் மடங்கி.. மயங்கிச் சரிந்தாள். “நித்யா...” என ஓடி வந்து அவளைப் பற்றியவன்... அவளைத் தன்னோடு அணைத்து “நிதி... நிதி..”என்று கண்ணீருடன் அழைக்க.. சிரமத்துடன் விழிகளைத் திறந்து நோக்கியவள்.. அவனது கண்ணீரைக் கண்டுத் திகைத்துப் பின் அவனிடமிருந்து சட்டென விலகினாள்.

பயணம் செய்த அத்தனை மணி நேரங்களும் அவளைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டு வந்தவன்.. தன்னை விட்டு விலகி நின்றவளின் மீதிருந்து பார்வையை அகற்றாமல் அவளையே நோக்கினான். தூக்கிக் கட்டியிருந்தக் கொண்டையுடன்.. முழங்காலைத் தாண்டி வழிந்த ஸ்கர்ட்டுடன்.. மெலிந்து போன தோற்றத்துடன் நின்றிருந்தாள் அவள். தன்னையே அளந்து கொண்டிருந்தவனை நிமிர்ந்து நோக்கிய நித்யாவும் சற்றுத் திகைத்துத் தான் போனாள்.. பல நாட்களாக மழிக்கப்படாதத் தாடியுடன்.. தூக்கமில்லாது.. சிவந்து போன விழிகளுடனும்.. மெலிந்த தோற்றத்துடனும்.. இமைத்தால் கூட எதிரில்

DO NOT COPY

இருப்பவள் மறைந்து விடுவாளோ என்று பயந்து.. அவளையே கண்களால் பருகியபடி நின்றிருந்தான்.

அவனது பார்வையில் இருந்த குற்ற உணர்வும்.. என்னை மன்னிக்க மாட்டாயா என்கிற தவிப்பும்.. அவளைக் கண்டதும் ஒளி பெற்ற அவனது கண்களும்.. அது வெளிப்படுத்திய எல்லையற்றக் காதலையும் கண்டுத் திகைத்துப் போனவள்.. சட்டென மறுபுறம் திரும்பி நின்றாள்.

காலிங் பெல் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்த மகளிடமிருந்து எவ்வித பதிலும் இல்லாமற் போனதைக் கண்டுத் தன்னறையிலிருந்து வெளியே வந்த விஸ்வநாதன்.. நித்யாவிடமிருந்துப் பார்வையைத் திருப்பாமல் அவளையே விழிகளால் வருடிக் கொண்டிருந்த கௌதமைக் கண்டு வியந்து அவனருகே வந்தார். "கௌதம்.."என்றழைத்தவரின் புறம் திரும்பியவன் "மாமா... நான்.. நான்.."என்று தயங்கி நிற்க.. அவனது முகத்திலிருந்தே செய்த தவறை உணர்ந்ததால் தான் அவன் திரும்பி வந்திருக்கிறான் என்பதை அறிந்து கொண்டவர் "முதலில் உள்ளே வா கௌதம்.."என்றழைக்க.. தந்தையை உறுத்து விழித்தாள் நித்யா.

வெகு நாட்களுக்குப் பிறகு அவள் கோபத்தைக் கண்டவர் திகைத்து அவனை நோக்க,, அவன் மெல்ல நடந்து உள்ளே வந்தமர்ந்தான். நின்ற இடத்திலிருந்து அசையாமலிருந்தவளை நோக்கியபடி அமர்ந்திருந்தவனை "ம்க்கும்.."என்று தொண்டையைச் செறுமியவர் "என்ன விசயமாக நியூயார்க் வந்திருக்கிறீர்கள் தம்பி..?"என்று ஒன்றுமறியாதவர் போல் அவர் விசாரிக்க.. அவரை அடிபட்ட பார்வைப் பார்த்தவன் "நா..நான் என் மனைவியை என்னுடன் அழைத்துப் போக வந்திருக்கிறேன் மாமா.. இனியும்.. இனியும் என்னால் அவளைப் பிரிந்திருக்க முடியுமென்றுத் தோன்றவில்லை.. என்... என்னுடன் அவளை அனுப்பி வைப்பீர்களா மாமா..? "என்று கெஞ்சலுடன் வினவினான்.

நித்யாவிற்கும்,அவனுக்கும் திருமணமான பின்பு கூட அவரை சார் என்றே அழைப்பவன் திடீரென மாமா.. மாமா என்றழைத்ததும் வியப்பாகிப் போனது அவருக்கு. அவர் பார்வையைக் கண்டு மெலிதாக முறுவலித்தவன் "ஏன் மாமா என்றழைக்கிறேன் என்று பார்க்கிறீர்களா..?,அம்மா என்னிடம் அனைத்தையும் கூறி விட்டார்கள்.. நீங்கள்.. எனக்காக.. எனக்காக நித்யாவை அனுப்பி வைத்ததை.. அனைத்தையும்.. கூறினார்கள்.."என்றவன் சட்டென அவரது கைகளைப் பற்றிக் கொண்டு "மாமா.. நான் நித்யாவை உயிராக நேசிக்கிறேன்.. என் அறிவீனத்தால்.. முட்டாள் தனமாக நடந்து கொண்டு அவளைக் காயப்படுத்தி.. கஷ்டப்படுத்தித் துன்புறுத்தியிருக்கிறேன்.. என்னை.. என்னை அவள் மன்னிப்பாளா..?,மன்னித்து ஏற்றுக் கொள்வாளா..?,நான்.. நான் அவளுடன் வாழ விரும்புகிறேன் மாமா.. என் நித்யா எனக்கு வேண்டும்.." என்று கண் கலங்கக் கூற.. அதுவரை அவன் பேசியதைப் பொறுமையாகக்

DO NOT COPY

கேட்டுக் கொண்டிருந்த நித்யாவிற்கு.. அதற்கு மேல் முடியாமற் போக.. “அது.. இந்த ஜென்மத்தில் நடக்காத ஒன்று..”என்று உரக்கக் கூற..
அவள் வாய் திறந்து பேசியதற்காகவே தவம் கிடந்தவன் போன்று வேகமாக எழுந்து அவளருகே வந்தான். மூச்சு வாங்க நிற்பவளை ஆசையுடன் நோக்கியவனைப் பொருட்படுத்தாதுத் தந்தையிடம் திரும்பியவள் “அப்பா.. அவரை வெளியே போகச் சொல்லுங்கள்.. எனக்கு.. அவர் முகத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை..”என்று கத்தியவளைக் கண்டு முகம் வாடிப் போன கௌதம்.. “நிதி.. நிதி நான் சொல்வதைக் கேள்.. ப்ளீஸ்..”என்று கெஞ்ச.. வெறுப்புடன் அவன் புறம் திரும்பியவள் கண்ணில் நீர் மல்க “நா..நான் அன்று கெஞ்சினேனே.. ஒரு முறை நான் சொல்வதைக் கேளுங்கள் என்று.. நீங்கள் செவி சாய்த்தீர்களா..?,நான் மட்டும் எதற்காக நீங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்..?,வெளியே செல்லப் போகிறீர்களா இல்லையா..?”என்று கூச்சலிட்டவளைக் கண்டு செய்வதறியாது அவன் நிற்க.. “தம்பி.. நீங்கள் வெளியே செல்லுங்கள்.. இனியும் என் மகள் அழுது சாவதை என்னால் பார்க்க முடியாது.. சொன்னால் கேளுங்கள்..”என்று விஸ்வநாதன் கெஞ்சத் துவங்கினார்.

இருவரையும் ஒரு முறை நோக்கியவன் “மாமா.. நித்யாவின் கணவனாகத் தானே என்னை இந்த வீட்டிற்குள் அனுமதிக்க மாட்டீர்கள்..?,வசந்தியின் மகனாக அனுமதிப்பீர்கள் தானே..?”என்று வினவ வாயடைத்துப் போனார் விஸ்வநாதன். அவர் தயங்கி மகளைப் பார்க்க.. அவளோ கையிலிருந்தத் துணியைக் கீழே எறிந்து விட்டு விறுவிறுவென நடந்து சென்று விட்டாள். அவள் செல்வதைச் சிரிப்புடன் நோக்கியவனின் அருகே வந்தவர் “இப்போது தான் தம்பி அவள் ஆறேழு மாதங்களுக்குப் பிறகு கோபப்படுவதையே பார்க்கிறேன்... மெல்ல.. மெல்ல அவள் மாறி விடுவாள்..”என்று அவர் குதூகலப்பட.. “மாமா.. என் மீது உங்களுக்குக் கோபமே வரவில்லையா..?”என்று வினவினான்.

“என்ன செய்வது தம்பி.. என்ன தான் நீங்கள் என் மகளின் கணவனாக இருந்தாலும்.. என் தங்கையின் மகனாயிற்றே.. எனக்கு நீங்கள் இருவருமே இரு கண்களைப் போல.. இருவருமே நன்றாக இருக்க வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன்..”என்று கூற அவர் கையை இறுகப் பற்றி “தேங்க்ஸ் மாமா..” என்று மென்மையாக முறுவலித்தான் அவன்.

நித்யாவின் அறைக்கு எதிரேயிருந்த அறையிலேயே தங்கிக் கொண்டவன் குளித்து உடை மாற்றிச் சாப்பிட வந்தான். அவனுக்கு சாப்பாடு எடுத்து வைத்த விஸ்வநாதனிடம் “என்ன மாமா..?,நீங்கள் ஏன் இதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள்..?,எங்கே என் மாமன் மகள்..?”என்று விசாரிக்க... தாடியை மழித்துப் புன்னகையுடன் நிற்பவனைக் கண்டு முறுவலித்து “அவள் கோபமாக

DO NOT COPY

அறையில் அமர்ந்திருக்கிறாள் தம்பி.. எவ்வளவு அழைத்தும் வரவில்லை..” என்று கூறியவரிடம் “நான் சென்று அழைத்து வருகிறேன்..”என்று எழுந்து சென்றான் கௌதம்.

அவளது அறைக்கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தவனைக் கண்டுக் கோபமாக எழுந்தவள் “இங்கே ஏன் வந்தீர்கள்..?,வெளியே செல்லுங்கள்..” என்று கத்தத் துவங்கினாள். “ப்ச்,என்ன நிதி,.?,என் மீது இருக்கும் கோபத்தில் உன் வயிற்றைப் பட்டினி போடுவாயா..?,வா.. வந்து சாப்பிட்டு விட்டு அதன் பின் நன்றாகக் கோபப்படு.. வா கண்ணம்மா..”என்றவனின் வார்த்தைகளில் உள்ளே சிலிர்த்தாலும்.. அதற்கும் தன் மீதே கோபம் கொண்டு “அக்கறையா..?ம்?இந்த ஏழு மாதங்களாக நான் உயிரோடு இருக்கிறேனா.. இல்லையா.. என்று கூட அறியாத நீங்கள் என் மீது அக்கறை இருப்பதாக நடிப்பதை நான் நம்பியாக வேண்டுமா..?,ஏன் மிஸ்டர்.கௌதம்.. உலகத்திலேயே பெரிய நடிப்புக்காரி.. வேஷதாரி நித்யாவை விட நீங்கள் பெரிய நடிப்புக்காரர் போலும்..”என்று எக்களிப்புடன் கூற.. முகம் இறுகத் தலை குனிந்தான் அவன். துச்சமாக ஒரு பார்வையை அவன் மீது செலுத்தி விட்டு அறையை விட்டு வெளியேறினாள்.

பெருமூச்சுடன் அறையை விட்டு வெளியே வந்த கௌதம்.. டைனிங் டேபிளில் அமர்ந்து கோபத்துடன் சாப்பாட்டை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தவளைக் கண்டு சிரிப்புடன் நகர்ந்து சென்றான்.

மறுநாள் காலை பள்ளிக்குப் புறப்பட்டவளைக் கண்டவன் “நிதி.. காலையிலேயே எங்கே புறப்பட்டு விட்டாய்..?”என்றபடி அவளருகே செல்ல.. வழக்கம் போல் அவன் மீது முறைப்பைச் செலுத்தி விட்டு “அப்பா.. கிளம்பி விட்டேன்..”என்று கூறி நடந்து சென்றாள் அவள். “நில் நிதி..”என்றபடி அவள் பின்னேயே நடந்து வந்தவன்.. “ஆமாம்.. மாமா தான் கூறினாரே.. நீ.. பக்கத்திலிருக்கும் பள்ளியில் ஆசிரியராக இருக்கிறாய் என்று.. என்ன நிதி.. இப்போதும்.. குழந்தைகள் சாக்லேட் சாப்பிடும் போது பிடுங்கித் தின்கிறாயா..?”என்று அவன் சிரிக்க.. பதிலே கூறாமல் மேலே நடந்தாள் அவள்.

“எப்போதும் உன்னை சுடிதாரிலும்,ஸ்கர்ட்டிலும் தான் பார்த்திருக்கிறேனா.. இந்த பிங்க் புடவை உனக்கு அழகாக இருக்கிறது நிதி...”என்று கூற.. அவன் பேசுவதை எரிச்சலுடன் கேட்டுக் கொண்டே நடந்த நித்யா.. வழியில் தண்ணீர் தேங்கியிருந்தக் குழியையும்.,. எதிரே வரும் ஜீப்பையும்.. சாலையில் பார்வையைப் பதிக்காமல் தன் முகத்தைப் பார்த்தபடி வள வளத்தபடி வரும் கௌதமையும் மாறி மாறிப் பார்த்தவள்.. ஒன்றும் கூறாமல் மேலே நடந்தாள்.

“சொல் நிதி.. மாலை நீ எப்போது வீடு திரும்புவாய்..?”என்று பேசிக் கொண்டிருந்த கௌதமின் மீது அந்த ஜீப் சேற்றை அடித்து விட்டுச் சென்றது.

DO NOT COPY

இதை எதிர்பார்த்தேயிருந்த நித்யா.. இதழை மடக்கி முறுவலை அடக்க.. முகத்தை அழுந்தத் துடைத்து அவளை முறைத்த கௌதம் “அப்போதே சொல்லியிருக்கலாமில்லையா..?”என்று கூற.. இப்போது சிரிப்பை அடக்க முடியாமல் கலகலவெனச் சிரித்தாள் நித்யா. அவள் சிரிப்பதையே கண் கொட்டாமல் பார்ப்பவனைக் கண்டு சிரிப்பை அடக்கி அவனை முறைத்து விட்டு மேலே நடந்தாள்.

மதியம் 2 மணியளவில் பள்ளி முடிந்ததும் வெளியே வந்த நித்யா.. வாசலில் குழந்தைகள் அனைவரும் கூடியிருப்பதைக் கண்டு அருகே சென்றாள். அங்கே புன்னகை நிறைந்த முகத்துடன் குழந்தைகள் அனைவருக்கும் சாக்லேட் அளித்தபடி நின்று கொண்டிருந்தான் கௌதம். விடுவிடுவென நடந்து அவனருகே சென்றவள்.. குழந்தைகள் அனைவரையும் அதட்டி.. “செல்லுங்கள்.. செல்லுங்கள்..”என்று விரட்டினாள்.

சாக்லேட் அனைத்தையும் வாங்கிக் கொண்ட குழந்தைகள் குதூகலத்துடன் நடந்து செல்ல.. அவன் புறம் கோபமாகத் திரும்பிய நித்யா “என்ன இதெல்லாம்..?ம்?”என்று கூற.. “சும்மா தான்..”என்றவன்.. அவளிடமும் சாக்லேட்டுகளை நீட்டினான். வாங்கிக் கொள்ளாமல் நடந்து சென்று மரபெஞ்சில் அமர்ந்தவளின் அருகே சென்றுத் தானும் அமர்ந்தான்.

“என்ன டீச்சரம்மா..?,சாக்லேட் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டீர்களா..?”என்று வினவ.. “முன்னே பின்னே தெரியாதவர்கள் அளிப்பதையெல்லாம் வாங்கிக் கொள்ளக் கூடாதென்று என் அப்பா கூறியிருக்கிறார்..”என்று கூறினாள். “முன்னே பின்னே தெரியாதவனா..?, அடிப்பாவி!, உனக்குத் தாலி கட்டிய மணாளனை.. உன் காதலனை.. முன்னே பின்னே தெரியாதவன் என்கிறாயா..?”எனக் கூறிச் சிரித்தான்.

அவனை முறைத்து விட்டுத் திரும்பியவள் தங்களருகே பதுங்கிப் பதுங்கி நடந்து வந்த குழந்தையைக் கண்டு “அனு.. ஏன் இப்படி நடந்து வருகிறாய்..?, என்ன வேண்டும்..?”என்று வினவிய நித்யாவைக் கண்டு கொள்ளாது கௌதமிடம் திரும்பிய பாப்பா.. “அங்கிள் என் சாக்லேட்டை அந்த ரிக்கி சாப்பிட்டு விட்டான்.. எனக்கு.. எனக்கு இன்னொரு சாக்லேட் தருகிறீர்களா..?” என்று அழகாகத் தலையைச் சரித்து வினவ.. அதன் வாயைச் சுற்றிப் படர்ந்திருந்த சாக்லேட் கறையே... அவள் அந்த ரிக்கியின் சாக்லேட்டையும் சேர்த்துச் சாப்பிட்டிருப்பாள் என்பது புரிய.. கலகலவெனச் சிரித்தபடி அவளைத் தூக்கிக் கொஞ்சினான் கௌதம்.

குழந்தைகள் என்றால் அவனுக்கு எப்போதும் மிகவும் பிடித்தம்.. எங்கே எந்தக் குழந்தையைக் கண்டாலும் தூக்கிக் கொஞ்ச ஆரம்பித்து விடுவான். இதை அறிந்தேயிருந்த நித்யா அவன் அனுவைக் கொஞ்சி மகிழ்வதை பார்த்தபடியே

DO NOT COPY

அமர்ந்திருந்தாள். “பாப்பா.. உனக்கு உன் டீச்சரே பெட்டர் போலும்..”என்று சிரித்தவன் தன் கையிலிருந்த சாக்லேட்டைக் கொடுத்து “உன் டீச்சர் வேண்டாமென்று கூறி விட்டாள். அதனால் நீயே சாப்பிடு..”என்று நீட்ட.. ஓரக்கண்ணால் இருவரையும் கவனித்துக் கொண்டிருந்த நித்யாவிற்குக் கோபமாக வந்தது.

“தேங்க்ஸ் அங்கிள்..”என்று ஓடப் பார்த்தவளின் ஜடையைப் பற்றி இழுத்தவள் “ஏய்.. அது என் சாக்லேட்.. இந்த அங்கிள் முதலில் எனக்குத் தான் அந்த இரண்டு சாக்லேட்டுகளையும் கொடுத்தார். மரியாதையாக என்னிடம் கொடுத்து விடு..”என்று அனுவை மிரட்டத் துவங்கியவளைக் கண்டு சிரிப்பு பொங்கியது அவனுக்கு. அந்தச் சிறுமி பாவமாக அவன் முகம் பார்க்க “நீ போ பாப்பா.. நான் உங்கள் டீச்சருக்கு வேறு சாக்லேட் தருகிறேன்..”என்று சிரித்து அனுப்பி வைத்தான்.

விட்டால் போதுமென்று அவள் ஓடியதும் சிரித்தபடி அவள் புறம் திரும்பியவன்.. நேர் வெறித்தப் பார்வையுடன் அமர்ந்திருந்தவளின் கையைப் பற்றி.., “நிதி.. அனு பாப்பா.. ரொம்பவும் க்யூட் இல்லை..?”என்று கேட்டான். பதில் கூறாமல் அமர்ந்திருந்தவளிடம் “எனக்கும் அப்படியொரு பாப்பா பெற்றுத் தருகிறாயா..?”என்று மெல்லிய குரலில் அவள் காதருகே சென்று வினவ.. சிலிர்த்துப் போய் திரும்பியவளின் விழிகள்.. அவனது எல்லையற்று காதலில் ஸ்தம்பித்துப் போனது.

சட்டெனப் பார்வையை விலக்கி எழுந்தவளிடம் சாக்லேட்டுகளை நீட்டி “ம்..”என்றான். அவனை முறைத்தபடியே வாங்கிக் கொண்டவள் ஆர்வமாகச் சாக்லேட்டுகளைப் பிரித்து சாப்பிடத் துவங்க.. சிரிப்புடன் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான் அவன்.

இப்படியே அவளுடன் தினம் தினம் அவள் பள்ளி செல்கையில் உடன் சென்று அவளைத் திருப்பி வீட்டுக்கு அழைத்து வரும் பணியைச் செவ்வெனச் செய்து கொண்டிருந்தான் அவன். இவன் இங்கேயே இப்படி காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தால்.. அங்கே அலுவலகத்தை யார் கவனித்துக் கொள்வார்கள்..? என்றெண்ணிய நித்யா.. அதை அவனிடம் கேட்டே விட்டாள்.

“நீ..நீங்கள் இப்படி என்னுடன் திரிந்து கொண்டிருந்தால் ஊரில் உங்கள் அலுவலகத்தை யார் கவனித்துக் கொள்வார்கள்..?”என்று வினவ.. நின்று அவளை பார்த்தவன் பின் தொடர்ந்து நடந்து “நம் அலுவலகத்தை கவனித்துக் கொள்ளத் தான் அழகர்சாமி அங்கிள் இருக்கிறாரே..”என்று கூறினான். “என்ன இருந்தாலும் கம்பெனி முதலாளி நீங்கள்.. நீங்கள் இப்படித் தொழிலைக் கவனிக்காமல்... இங்கே வந்து ஓபி அடித்துக் கொண்டிருப்பதுத் தவறு தானே..?” என்று கூற சட்டென அவள் புறம் திரும்பியவன்.. “நீ கூறியது ரொம்பவும் சரி

DO NOT COPY

நித்யா.. எப்போது நாம் ஊருக்குச் செல்லலாம்..?,ம்..?''என்று வினவ அவள் புரியாதது போல் குழம்பி “உங்கள் அலுவலகத்தைக் கவனித்துக் கொள்ள நான் எதற்காக உங்களுடன் வர வேண்டும்..?''என்று வினவினாள்.

“அது தானே பார்த்தேன்..''என்றவன் அவள் கையை விலக்கி விட்டு “நீ வரும் வரை நான் இவ்விடத்தை விட்டு நகர்வதாக இல்லை..''என்று கூற “கால விரயம் கௌதம்.. நான் இந்த ஊரை விட்டு எங்கும் வருவதாக இல்லை.. ஒரு முறை.. ஒரு முறை இந்த ஊரை விட்டுச் சென்று நான் பட்டக் கஷ்டம் போதும்..''என்றவளின் குரல் தன்னாலேயே நடுங்கத் துவங்க.. “நிதி..''என்று அவளருகே வந்து அவள் கன்னத்தைப் பற்றியவன்..

“நான் செய்தது மகாப் பாவம் நித்யா.. உன்னால்.. மன்னிக்க முடியாதக் குற்றத்தை செய்து விட்டேன்..கோபத்திலும்,ஆத்திரத்திலும் அறிவிழந்து.. நித்யா.. அந்த சம்பவத்தைப் பற்றிப் பேசக் கூட எனக்குக் கூசுகிறது.. ஆனால்.. ஆனால்.. நித்யா.. உன்னைப் பற்றிய அனைத்தையும் தெரிந்து கொண்ட பின்.. நீ எனக்குச் செய்த நன்மைகளை எண்ணிப் பார்த்தப் பின்.. நான் என் தவறை உணர்ந்து கொண்டேன்.. நித்யா.. எனக்கு மன்னிப்பே கிடையாது தான்.. ஆனால் உன் முகத்தைப் பாராமல் நாட்களை ஓட்ட முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.. கண்ணம்மா ப்ளீஸ்..''என்று கெஞ்சியவனிடம்.. பதில் கூறாது.. விலகி நடந்தாள் நித்யா.

நாட்கள் அதன் போக்கில் சென்று கொண்டிருக்க.. கௌதம் அவளது வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விடுபவன் போன்று... அந்த வீட்டோடு ஒன்றிப் போய் விட்டான். அவனும் விஸ்வநாதனும் சேர்ந்து கொண்டுச் செய்யும் அட்டூழியங்களுக்கு அளவில்லாமல் போனது. அவரோடு சேர்ந்து சமையல் செய்கிறேன் என்று இண்டர்நெட்டில் படித்துக் கற்றுக் கொண்டு சமையலில் இறங்கி விட்டான். “மாமா.. மிளகு.. மாமா.. உப்பு..''எனக் கத்திக் கொண்டும்... ஆடிக் கொண்டும் விழுந்து விழுந்து சிரித்தபடி அவன் சமையலறையில் கூத்தடித்ததைக் கண்டு முறுவலுடன் அவனது சிரிப்பைக் கண்டபடியே நின்றிருந்தாள் நித்யா.

மகள் முகத்தைக் கண்ட விஸ்வநாதன் மருமகனுக்குச் சைகை செய்ய.. அவள் முகத்திலிருந்து மனதைக் கண்டு கொண்ட கௌதம்.. மர்மச் சிரிப்புடன் அவளருகே வந்து.. “பேபி.. உன் தந்தையுடன் சேர்ந்து சமைத்து எனக்கு சோர்வாகி விட்டது.. பார்.. எப்படி வியர்த்து வழிகிறதென்று.. இரண்டு கையும் பிஸியாக இருக்கிறது.. கொஞ்சம் துடைத்து விடுகிறாயா..?''என்றவனை முறைத்தவள்.. பேசாமல் செல்லப் பார்க்க.. “நிதி..''என்று கைப்பற்றியவன் அவள் தோள்பட்டையில் முகத்தை உரசித் துடைத்து விட்டு.. “தேங்க்ஸ் பேபி..''எனக் கையிலிருந்த மாவை அவள் மூக்கில் லேசாகத் தடவி விட்டு நகர்ந்து விட்டான்.

DO NOT COPY

அவன் முகம் கழுத்தில் உரசியதும் சூடாகிப் போன நித்யா.. அவனை உறுத்து விழித்து விட்டு விறுவிறுவென நடந்து சென்றாள். அவள் கோபத்துடன் நடப்பதைக் கண்டு சிரித்த கௌதம் "நித்யா மிகவும் அழகு அங்கிள்.."எனக் கூற கலகலவெனச் சிரித்தார் விசு.

அதன் பின் அவர் வேலையிருப்பதாக வெளியே சென்று விடத் தான் சமைத்த உணவினை எடுத்துக் கொண்டு அவளறைக்குச் சென்றான் கௌதம். கதவைத் தள்ளியதும் அது திறந்து கொள்ள "நிதி பேபி.."என்றழைத்தபடி நுழைந்தவனின் இதயம்.. அங்கே குளித்து முடித்துத் தலையைத் துவட்டியபடி.. மார்பிலிருந்து தொடங்கி முழங்கால் வரையில் சுற்றப்பற்றிருந்தத் துண்டுடன் நின்றிருந்தவளைக் கண்டு பன்மடங்காகத் துடித்தது.

அவனைக் கண்டதும் திகைத்த நித்யா.. கோபத்துடன் "வெளியே செல்லுங்கள்.."என்று துவங்க.. அவனோ நொடியில் முகத்தை மாற்றிக் கொண்டு "என்ன பேபி இப்படிச் சொல்லி விட்டாய்..?,நான் சமைத்த சாப்பாடு எப்படியிருக்கிறதென்று நீ சொல்ல வேண்டாமா..?"என்றவன் அவள் மேலே தொடங்கும் முன் அவள் வாயில் ஸ்பூனைத் திணித்தான்.

குளித்து முடித்து வெளி வந்ததில் நல்ல பசியிலிருந்த நித்யாவும் அவன் ஊட்ட ஊட்ட சாப்பிடத் தொடங்கினாள். மனைவியை அந்தக் கோலத்தில் கண்ட பின்பும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நல்லவனைப் போல் தான் நடிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தன்னைத் தள்ளியதற்காகக் கடவுளைக் கிழி கிழியெனக் கிழிக்கத் தொடங்கிய கௌதம்.. அவள் உண்டு முடித்ததும்.. "எப்படியிருக்கிறது..?"என்று வினவ.. "ம்,ம்.. சுமாராக உள்ளது.."என்று கூறினாள் நித்யா,

"ஆமாமாம்.. சுமாராக இருந்ததைத் தான் இப்படி வேக வேகமாக விழுங்கினாயாக்கும்..?"என்று நொடித்துக் கொண்டவன் வெளியே நடக்க.. அவன் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தவளிடம்.. திரும்பி வந்தவன் "நிதி.. இப்போது உனக்கு ஒரு மிகப் பெரிய சந்தேகம் தோன்றியிருக்க வேண்டுமே..!"என்று கேட்க.. "சந்தேகமா..?,எனக்கா..?,இல்லையே.."என்று கூறினாள் அவள்.

"அது எப்படித் தோன்றாமலிருக்கும் என்று அவள் தலை முடியை ஒற்றை விரலால் சுருட்டியவன்.. "உன்னை இப்படிப் பார்த்த பின்பும் நான் அமைதியாக நின்று கொண்டிருப்பதைக் கண்டு உனக்கு எந்தச் சந்தேகமும் வரவில்லையா..?"என்று கேட்க.. அவனை முறைத்து விலகியவளின் இடையைப் பற்றி அருகிலிழுத்தவன்.. அவள் கழுத்தில் முகம் புதைத்து வாசம் பிடித்து.. "தேவியின் இந்த ஸ்பெஷல் தரிசனம் கிடைப்பதே என்றோ ஒரு நாள்


DO NOT COPY

தான்.. அதையும் மிஸ் செய்து விட்டு விலகிச் செல்ல நான் என்ன முட்டாளா..?,பார்த்தேனும் என்னுடைய அவஸ்தையைத் தீர்த்துக் கொள்கிறேனே..''என்று கூற.. "ச்சி....''எனக் கூறி அவனை விட்டு விலகியவள்.. அவன் தோளைப் பற்றித் தள்ளிக் கொண்டு போய் வெளியே தள்ளி விட்டுக் கதவைச் சாத்தினாள். வெளியே கலகலவென அவனது சிரிப்புச் சத்தம் தொடர.. உள்ளே அவளுக்கு முகம் சிவந்து போனது.



DOCOPY

# அத்தியாயம் – 20




**உன் கைப்பிடித்து நான் நடைபயின்ற ஆற்றங்கரை!**
**உன் குழலிசையில் நான் மயங்கி நின்ற பூஞ்சோலை!**
**உன் அணைப்பில் நான் கிறங்கி நின்ற மகிழ மரத்தடி!**
**உன் தோள் சாய்ந்து நான் ஆடிய கொடி ஊஞ்சல்!**
**இவையனைத்துன் என் நெஞ்சில் நீங்கா நினைவுகளாய்!**

**வே**லை விசயமாக விஸ்வநாதன் சில நாட்களுக்கு நியூஜெர்சியில் தங்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டதால்.. இங்கே வீட்டில் நித்யாவும்,கௌதமும் தனித்து விடப் பட்டனர். காலையும்,மாலையும் அவளுக்கு சமைத்துப் போட்டுக் கொண்டும்.. அவள் பள்ளி செல்லும் போதும்,வரும் போதும் உடன் சென்று கொண்டும் தன் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தான் கௌதம். அந்த ஊரில் மழைக்காலம் ஆரம்பிக்கத் துவங்கி விட.. இருவரும் வெளியே எங்கும் செல்ல முடியாமல் பெரும்பாலான நேரங்களை வீட்டிலேயே கழிக்க நேரிட்டது.

மாலை மழை பொழியத் துவங்கியதும் குளிர் தாங்க முடியாமல் இருவரும் கணப்பின் முன்பு வந்து அமரத் துவங்கி விடுவர். அன்றும் அப்படித் தான் கணப்பின் அருகே போடப்பட்டிருந்த ஷோபாவின் ஒரு புறத்தில் அமர்ந்திருந்த நித்யா டிவியில் ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியைக் கண்டு சிரித்தபடி அமர்ந்திருக்க.. மறுபுறத்தில் தனது லேப்டாப்புடன் வேலையில் ஈடுபட்டிருந்தான் கௌதம்.

சிறிது நேரம் அவள் விழுந்து விழுந்து சிரிப்பதைக் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்தவன் பின் அருலிருந்த குஷனை எடுத்து அவள் மடி மீது வைத்து அதில் தலை சாய்த்துக் கொண்டான். உதட்டில் உறைந்து போன சிரிப்புடன் அவனை முறைத்த நித்யா "இப்போது எழுந்திருக்கப் போகிறீர்களா இல்லையா..?"என்று கத்த.. உச்சு கொட்டி முகம் சுழித்தவன் "என்ன நிதி.. வெகு நேரமாக லேப்டாப்புடன் ஒரே நிலையில் எப்படி அமர்ந்திருக்க முடியும்..?,கழுத்தெல்லாம் ஒரே வலி.. உன்னால் முடிந்தால் தோளைப் பிடித்து

DO NOT COPY

விடு... இல்லையென்றால் அமைதியாக இரு.."எனக் கத்தி விட்டுத் தன் வேலையில் ஈடுபட்டான்.

சரியான அரக்கன்! ராட்சசன்! என்றெல்லாம் மனதுக்குள் அவனைத் திட்டியபடி அமர்ந்திருந்த நித்யா சிறிது நேரத்தில் "எனக்குத் தூக்கம் வருகிறது.."என்று அறிவிப்பு போலக் கூறினாள். "இன்னும் கொஞ்ச நேரம்.. கொஞ்ச நேரம்.. நிதி.." என்று கெஞ்சியவன்.. கொஞ்ச நேரத்தை ரொம்ப நேரமாக நீட்ட.. எரிச்சலுடன் அவனைப் பற்றித் தள்ளி எழுந்தாள் அவள்.

அறையை நோக்கிச் செல்பவளின் பின்னேயே தானும் சென்றவனை நின்று முறைத்தவள்.. "இங்கே ஏன் வருகிறீர்கள்..?,உங்கள் அறை அங்கே இருக்கிறது.."என்று கூற.. அவனோ "அய்யோ நிதி.. வெளியே பார்.. இடியும்,மின்னலுமாய் மழை எப்படிப் பெய்கிறதென்று.. எனக்கு இடியென்றால் பயங்கர பயம்.. இந்த வீட்டில் நீயும்,நானும் மட்டும் தானே இருக்கிறோம்.. நான் உன்னுடன் படுத்துக் கொள்கிறேன் நிதி.. ப்ளீஸ்.."என்று கெஞ்ச.. அவனது நடிப்பைக் கண்டு கொண்டவள் உள்ளுக்குள் புன்னகைத்து விட்டுத் தன் படுக்கையில் சென்று படுத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் லேப்டாப்பில் தன்னை மூழ்கடித்துக் கொண்டிருந்தவன்.. பின் நேரமாகி விட்டதை உணர்ந்து அதை மூடி வைத்து விட்டு.. அறை ஜன்னலின் திரைகளை இழுத்து மூடி விட்டு அவளருகே வந்து படுத்தான். அங்கே கௌதமனின் வீட்டில் படுக்கை மிகவும் பெரிதாக இருக்கும். அதனால் இருவரும் ஒரே கட்டிலில் படுத்த போது எந்த வித்தியாசமும் தெரியவில்லை. ஆனால் இங்கே ஒரு முறை புரண்டால் அடுத்தவரை இடித்துக் கொள்ளும் தூரத்தில் அமைந்திருந்த படுக்கையைக் கண்டு சிரித்துக் கொண்டான் கௌதம்.

வெளியே விடாது பெய்து கொண்டிருந்த மழை.. குளிர் பரப்ப.. இரவும்,குளிரும் அவனை உசுப்பேற்றித் தன் அழகு மனைவியைக் காணச் சொல்லியது. மறுபுறம் திரும்பி உறங்கிப் போயிருந்தவளைக் கண்டபடியே படுத்திருந்தவனின் கைகள் சற்று நேரத்தில் உயர்ந்து அவள் கழுத்தை வருட.. சட்டெனக் கையை விலக்கித் திரும்பிப் படுத்த கௌதம்.. "அய்யோ! என்ன காரியம் செய்யத் துணிந்தோம்..?,ஒரு முறை அவள் விருப்பமற்று அவளைத் தீண்டியதற்கே ஏழு மாதங்களாக வேதனையை அனுபவித்தோம்..! மறுபடியுமா..?,வேண்டாம் சாமி! என்றெண்ணிக் கொண்டவன் கட்டிலின் மறு ஓரத்திற்குச் சென்று அவள் புறம் திரும்பாமலேயே படுத்துக் கொண்டான்.

காலையில் கண் விழித்த நித்யா கட்டிலின் மறு ஓரத்தில் ஒரு முறை புரண்டால் கீழே விழுந்து விடுவது போல் படுத்திருந்தவனைக் கண்டுச் சிரித்து.. அவன் தோளைப் பற்றி உள்ளே இழுத்தாள். "ப்ச்,என்ன நிதி..."என்று கொஞ்சியபடி அருகேயிருந்தத் தலையணையைக் கட்டி அணைத்துக்

DO NOT COPY

கொண்டவனைக் கண்டு முறைத்துப் பின்.. அவன் கையிலிருந்தத் தலையணையைப் பிடுங்கி.. அவன் முகத்தில் வைத்து அழுத்தினாள்.

“அய்யோ! கொலை.. கொலை.. கொண்ட கணவனைக் கொலை செய்யப் பார்க்கிறாள்..”என்று கத்தியபடிப் பதறி எழுந்த கௌதம்.. “அடிப்பாவி.. பாதகி.. தாலி கட்டிய கணவனை இப்படிக் கொல்லப் பார்க்கிறாயே.. நீ எல்லாம் ஒரு தமிழ்ப்பெண்ணா..?”என்று கத்த.. ஒன்றும் கூறாமல்.. முறைத்தபடியே நடந்து சென்று குளியலறைக்குள் புகுந்து கொண்டாள் நித்யா.

அன்று காலை தான் பள்ளி செல்கையில் உடன் வந்து.. மாலை அவளை அழைத்துக் கொண்டுத் திரும்பி வந்தவனிடம் “எதற்கு இப்படி பாடிகார்ட் வேலை பார்க்கிறீர்கள்..?,இங்கேயிருக்கும் பள்ளிக்கு என்னால் சென்று வர முடியாதாக்கும்..?”என்று நொடித்துக் கொள்ள.. அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தவன் நடந்து கொண்டிருந்தவளை நிறுத்தி.. “உன்னுடன் கழிக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் நான் சொர்க்கமாகக் கருதுகிறேன் நிதி.. அப்படியிருக்கையில் இந்த வாய்ப்பைத் தவற விடுவேனா சொல்..”என்று கூற.. அவன் குரலும்,முகமும்,பார்வையும் மாறிய விதத்தைக் கண்டு சிலிர்த்துப் போன நித்யா வாயடைத்துப் போய் நின்று விட்டாள்.

அவள் திகைப்பும்,காதலுமாய் தன்னை நோக்குவதைக் கண்டு கொண்டவன் மெல்ல நெருங்கி.. “நிதி.. உன்னை இப்போது முத்தமிட வேண்டுமென்றுத் தோன்றுகிறது எனக்கு..?,முத்தமிடலாமா..?”என்று வினவ.. முகம் சிவந்துத் தலை குனிந்தவளின் கழுத்தைப் பற்றிப் பெரு விரலால் அவள் முகத்தை நிமிர்த்தியவன்.. அவள் கன்னத்தோடுத் தன் கன்னத்தை அழுத்திக் குனிந்து காதோரத்தில் அழுந்த முத்தமிட்டான்.

அவளை விட்டு உதடுகளை விலக்காமலேயே அவன் மேலும் மேலும் முன்னேறி அவள் முகமெங்கும் ஊர்வலம் நடத்தியவன்.. தன் இரு கைகளையும் இணைத்து அவள் இடையில் கோர்த்துக் கொண்டு.. அவள் இதழை நோக்கிக் குனிந்தான். தவிப்பும்,துடிப்புமாய் கண்களை அழுந்த மூடிக் கொண்டவளை இமைக்காமல் நோக்கியவன்.. மெல்ல ஒரு கரத்தை உயர்த்தி.. துடிக்கும் அவள் இதழ்களை வருடிக் குனிந்து அழுந்த முத்தமிட்டான்.

அவன் தோளை இறுகப் பற்றி தன்னை மறந்து அவன் முத்தத்தில் மூழ்கிப் போயிருந்த நித்யா.. படபடவென மழைத்துளித் தன் மேல் விழத் துவங்கியதும் அவனை விலக்கித் தள்ளி விட்டு வீட்டை நோக்கி ஓடினாள். வெகு நாளைக்குப் பிறகு மனைவியைத் தீண்டிய மகிழ்ச்சியில்.. மழையில் ஆடிய கௌதம்.. பின் வீட்டை நோக்கிச் சென்றான்.

DO NOT COPY

உள்ளே நுழைந்தவன் நேராக நித்யாவின் அறைக்குச் செல்ல.. அங்கே ஜன்னல் வழியே மழையை வெறித்தபடி அசையாமல் நின்றிருந்தாள் நித்யா. அவள் அணிந்திருந்த கருப்பு நிறச் சேலை காற்றிலாடிக் கொண்டு கவிதை பாட.. முழுவதுமாக நனைந்து விட்ட ஆடையுடன் அவள் நின்றிருந்த கோலம் அவனை இசை பாட அழைத்தது.

கால்கள் தானாக அவளை நோக்கிச் செல்ல.. அவளருகே சென்று.. அவள் தோளைப் பற்றியவன்.. அங்கே தவழ்ந்து கொண்டிருந்த முடியை விலக்கி கழுத்தில் இதழ் பதித்தான். கண்களை இறுக மூடி நடுங்கியவளைத் தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டவன்.. மேலும் மேலும் முன்னேற.. ஒரு கட்டத்தில் அவனைத் தன் முழு பலம் கொண்டு விலக்கித் தள்ளிய நித்யா.. அழுது கொண்டே தோட்டத்தை நோக்கி ஓடினாள்.

அவள் அழுததும் ஒன்றும் புரியாமல் விழித்த கௌதம்.. வெளியே மழை வலுப்பதை உணர்ந்து விரைந்து ஓடினான். தோட்டத்தில் போடப் பட்டிருக்கும் கல் பெஞ்சில் மரத்தடியில் அமர்ந்துத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள் நித்யா. “நிதி.. நிதி.. என்னம்மா இது..?,இடியும்,மின்னலுமாய் மழை பெய்து கொண்டிருக்கிறது.. நீ இப்படி மரத்தடியில் வந்து அமர்ந்திருக்கிறாயே.. எழுந்து வா நிதி.. ப்ளீஸ்...”என்று கெஞ்ச.. “நான் வர மாட்டேன்.. நீ இங்கிருந்து போ..”என்று அவள் உச்சஸ்தாதியில் கத்த “நித்யா.. நான் சொல்வதைக் கேள்.. என் பொறுமையைச் சோதிக்காதே.. எழுந்து வா நித்யா..”என்றவன் அவள் சொல் பேச்சுக் கேட்காமல் அங்கேயே அமர்ந்திருப்பதைக் கண்டுக் கோபப்பட்டு அவளைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் நடந்தான்.

“சொல் பேச்சு கேட்பதேயில்லை..”என்று கடிந்து கொண்டவன் அருகிலிருந்தத் துவாலையை எடுத்து அவள் கையில் கொடுத்து “சீக்கிரம் துடைத்து.. உடை மாற்று.. சளி பிடித்துக் கொள்ளப் போகிறது..”என்று கூற அவனை வெறித்து நோக்கியவள்.. “ஏழு மாதங்களாக நான் செத்துச் சாம்பலாகி விட்டேனா என்பதைக் கூட அறியாமல் தன் போக்கில் இருந்த உனக்கு இப்போது என்ன பெரிய பாசம்,காதல்..?”என்று வினவ.. அவளை கோபத்துடன் நோக்கியவன் “என்ன பேச்சு பேசுகிறாய்..?,முட்டாள்..”எனக் கூறிப் பளாரென அறைந்தான்.

அவன் அறைந்ததும் அழுகை அதிகமாக “அடி.. நன்றாக அடி.. இப்படி அடித்த பின் நீ என்ன செய்வாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்..”எனக் கண்ணைக் கசக்கியபடிக் கூற.. அவள் சொன்ன வார்த்தையின் பின்னே ஒளிந்து கிடந்த அர்த்தத்தைப் புரிந்து கொண்ட கௌதமிற்கு இதயத்தில் வலி ஏற்பட்டது..

அவள் காலடியிலேயே அமர்ந்தவன் நிமிர்ந்து வேதனையுடன் அவள் முகம் நோக்கி.. “நித்யா.. அ..அன்று நான் கோபத்தில்.. நீ என்னிடம் பொய்யைக் கூறி

DO NOT COPY

மணந்து கொண்டாய் என்கிற ஆதங்கத்தில் அறிவிழந்து அப்படி நடந்து கொண்டேன்.. அதை நினைத்து நான் வருந்தாத நாளே இல்லை கண்ணம்மா.. உன்னால்.. உன்னால் அதை நிச்சயம் மறக்க முடியாது.. ஆனால்.. என்னை இப்படி ஒதுக்கித் தள்ளாதே.. ப்ளீஸ்.. அன்று நான் புரிந்த தவறுக்காக நீ என்ன தண்டனை அளித்தாலும் தாங்கிக் கொள்கிறேன்.. என்னை விட்டு விலகிச் செல்லாதே கண்மணி ப்ளீஸ்.. இனி நிச்சயமாகக் கூறுகிறேன்.. உன் அனுமதியின்றி என் கைவிரல் கூட உன் மீது படாது.. ப்ளீஸ் நித்யா..''என்று அவன் கெஞ்ச.. அழுகையை நிறுத்திக் கண்ணைத் துடைத்துக் கொண்டவள்.. மாற்றுடையை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் நுழைந்தாள்.

அவள் சென்றதும் கணத்த மனதுடன் அவனறைக்கு வந்த கௌதம்.. தன்னைத் தானேத் திட்டியபடி ஈர உடையை மாற்றக் கூட மறந்து அப்படியே உறங்கிப் போனான். வெகு நேரம் கழித்து இரவு உணவைச் சமைக்க வெளியே வந்த நித்யாவிற்கு... அவன் அப்படியே உறங்கிப் போனது வலியை ஏற்படுத்தியது. பின் எனக்கென்ன.. என்று சென்று விட்டவள்.. பின் சிறிது நேரம் கழித்து மனம் தாங்காமல்.. அவன் அறைக்குச் சென்று அவனை எழுப்பினாள். “கௌதம்.. கௌதம்''என அவள் உலுக்கியதில் கண் விழித்தவன் அவளைக் கண்டு புருவம் நெறித்தான். “வ..வந்து.. உடை மாற்றிக் கொண்டு படுத்துக் கொள்ளுங்கள்..''என்று அவள் கூற.. மறு பேச்சின்றி எழுந்து சென்று உடை மாற்றி விட்டு மீண்டும் படுக்கையில் விழுந்தான்.

அவனறையை விட்டு வெளியே வந்த நித்யாவிற்கு மனம் சோர்ந்து போனது. இந்த மனம் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறது..?,அவன் நெருங்குவதை ரசிக்கிறது.. அவன் விலகினால் துன்புறுகிறது.. அவன் உரிமையெடுத்துக் கொண்டால் கோபப் படுகிறது... அவன் தன்னை நோகடித்துக் கொண்டால் அவனுக்காகப் பதறுகிறது..! என்ன தான் இது..? என்று வெகுவாகச் சிந்தித்தவள்.. அறிந்து கொண்டது ஒன்றே ஒன்று தான்.. அவள் கௌதமைத் தீவிரமாகக் காதலிக்கிறாள்.

முதல் நாள் வீட்டினுள் நுழைகையில் அவன் கண்ணிலிருந்தக் காதலைக் கண்டு கொண்டவுடனே.. அவன் மீதிருந்தக் கோபம் அனைத்தும் மாயமாய் மறைந்து விட்டது அவளுக்கு. ஆனாலும் இவனை இவ்வளவு சீக்கிரம் மன்னிப்பதா என்று தான் கோபத்துடன் நடந்து கொண்டிருந்தாள்.. வீம்பையும்,வீராப்பையும் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் தான் அவனை விலக்கிக் கொண்டிருந்தாள். அவனது காதல் பார்வையையும்,அன்பையும், அக்கறையையும் வெகுவாக ரசித்துக் கொண்டு தானே இருந்தாள்..?

அவன் தீண்டிய போது தன்னை மறந்தாளே! ஆனாலும் அன்றைய நாளின் நினைவு அவள் மனதில் தோன்றி அவளை வேதனைக்குள்ளாக்கத் தான் செய்கிறது.. அதை நினைத்து கௌதம் கலங்குவதையும்,வேதனைப்

DO NOT COPY

படுவதையும் கண்டு விட்ட பின்பு அந்த நினைப்பும் கூடக் காணாமல் போனது. இனி என்ன..?,அவனுடன் இணைவது தான் பாக்கி! சிரிப்புடன் அவனை எண்ணியபடியே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலை அவனுக்கு முன்பே எழுந்துச் சமையலறைக்குள் நுழைந்து சமையலைத் துவங்கியவள்.. அவன் எழுந்ததை உறுதி செய்து கொண்டு “கௌதம்.. கௌதம்..”என்று குரல் கொடுத்தாள். “என்ன..?”என்றபடி வந்தவனிடம் “மேலே இருக்கும் மிளகாய்ப்பொடி டப்பாவை எடுக்க வேண்டும்.. எனக்கு எட்டவில்லை.. என்னைக் கொஞ்சம் தூக்கி விடு..”என்று கூறினாள். சற்றுத் திகைத்துப் போய் அவளை நோக்கியவன் பின் “நான் வேண்டுமானால் ஒரு ஸ்டூல் எடுத்து வருகிறேன்.. இல்லையென்றால் நானே எடுத்துத் தருகிறேன்..”என்று கூற.. அவனை முறைத்தாள் நித்யா.

“அப்படிப் பார்க்காதே.. தொடாமல் தூக்க முடியாது நிதி.. புரிந்து கொள்..”என்று அவன் சிணுங்க.. இடையில் கை வைத்து அவனை முறைத்துப் பார்த்தவள் “தொடாமல் தூக்க முடியாதென்று எனக்குத் தெரியாதா..?,இப்போது உன்னால் என்னைத் தூக்க முடியுமா..?,முடியாதா.?”என்று மிரட்ட.. வேறு வழியின்றி அவளருகே வந்துத் தூக்கினான். பொறுமையாக ஒவ்வொரு டப்பாவாகத்திறந்து திறந்துத் தேடி அவனைச் சோதித்தவள்.. கடைசியாக “வாவ்.... கிடைத்து விட்டது..”என்றபடித் திரும்பி அவன் முகம் நோக்கினாள். அவள் முகத்திலல்லாது அவன் பார்வை வேறு எங்கோ பயணிப்பதைக் கண்டுத் திமிறி விலகியவள்.. “ராஸ்கல்..”என்றபடி விலகிச் செல்ல.. “அய்யோ! கண்டு கொண்டால் போலும்!”என்றெண்ணியவன் அமைதியாக நழுவி விட்டான்.

அதன் பின் சிறிது நேரத்திலேயே “கௌதம்.. கௌதம்..”எனக் கூவியவள்.. “என்ன,,?,வேளா வேளைக்கு நான் சமைத்துப் போடுவேன்.. நன்றாக மூக்குப் பிடிக்கத் திங்கலாம் என்று நினைத்துக் கொண்டாயா.?,மரியாதையாக வந்து உதவி செய்..”என்று மிரட்ட.. “அடிப்பாவி.. இத்தனை நாட்களாக நான் சமைத்துப் போட்டதைத் தானேடி நீ உண்டாய்..?”என்று அவன் கூற “ஆமாமாம்.. மகாக் கேவலமான சாப்பாடு..!”என்று அவள் முகத்தைச் சுழிக்கவும்.. அவளை முறைத்தபடியே “இப்போது நான் என்ன செய்ய வேண்டும்..?”என்று வினவினான்.

“இந்த வெங்காயத்தை நறுக்கு..”என்றவளிடம் “நிதி.. நிதி.. வேறு ஏதேனும் காய் வெட்ட வேண்டுமானால் சொல்.. வெங்காயம் மட்டும் வேண்டாம்.. கண்ணீர் வரும்.. ப்ளீஸ்..”என்று கெஞ்ச.., “ஏன்.?,வெங்காயமில்லாமலே அடுத்தவர்களை நீ அழ வைத்தாயே.. இப்போது வெங்காயத்தால் நீ அழுவதில் தவறொன்றுமில்லை.. செய் செய்..”என்று விரட்ட அவனும் முகத்தைச் சுழித்தபடியே.. குடம் குடமாக அழுது ஒரு வெங்காயத்தை வெட்டி முடித்தான்.

DO NOT COPY

“போதும் நிதி.. வேறு ஏதேனும் தண்டனை கொடு ராசாத்தி.. இது வேண்டாம்..” என்று பதற.. “ஓகே.. அந்த காரட்டைத் துறுவிக் கொடு..”என்று கூறினாள்.

பின் “இங்கே வா.. இந்த மசாலைவை இப்படிக் கிளறிக் கொண்டே இரு.. இன்னும் ஐந்து நிமிடத்திற்கு..”என்று கூறி அவனை நிறுத்தி வைத்து விட்டு அவள் குளிக்கச் சென்றாள். ஐந்து நிமிடத்திற்கும் மேலாக அதைக் கிண்டியவன் “நிதி.. போதும் நிதி.. இதற்கு மேல் கிளறினால் அடிப்பிடித்து விடும்.. நான் ஸ்டவ்வை அணைக்கிறேன்..”என்று கத்த.. “அணைத்துத் தொலைடா.. இதைக் கூடவா நான் சொல்லித் தர வேண்டும்...?”என்று அவள் பதிலுக்குச் சத்தமிட்டாள்.

ஒருவழியாக அவள் சமைத்த உணவை இருவரும் உண்ணத் துவங்க.. மனைவியின் கை வண்ணத்தைக் கண்டு வியந்து “நிதி டார்லிங்.. இவ்வளவு நன்றாகச் சமைக்க எப்போது கற்றுக் கொண்டாய்..?”என்று வினவ.. “ம்,இந்த ஏழு மாதங்களாக வீட்டில் இருந்த போது தான்.. தேவையில்லாத எண்ணங்க்ளிலிருந்து தப்பித்துக் கொள்ள சமையல் பழகினேன்..”என்று அவள் இறுகிய முகத்துடன் கூற.. அதற்கு மேல் உண்ண முடியாமல் போனது அவனுக்கு. கொறித்து விட்டு எழுந்தவனைக் கண்டவள் அவன் கைப்பற்றி “இப்போது என்ன சொல்லி விட்டேனென்று எழுந்து போகிறாய்..?, நீ சமைக்கும் கேவலமான சாப்பாட்டை விட என் சாப்பாடு எவ்வளவு நன்றாக இருக்கிறது..?, அதைச் சாப்பிடாமல் எழுந்து செல்கிறாயே..”என்று அவனிடம் வம்பு செய்தாள்.

“என் சாப்பாடு கேவலமா..?,அதனால் தான் வளைத்துக் கட்டினாயாக்கும்..?”என்று கேலி செய்தவனிடம் பழிப்புக் காட்டி விட்டு “போடா..”என்று அவள் கூற.. “டா வா..?”என்று கொதித்துப் போன கௌதம் “நீ போடி..”என்று பதிலுக்குக் கூறியவன்.. கண்கள் பளிச்சிட மனைவியை நோக்கினான். வெகு நாளைக்குப் பிறது அவள் ஒருமையில் அழைப்பதைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அன்று விடுமுறை நாள் என்பதால் அவனுடன் பேசிப் பேசியே பொழுதைக் கழித்தாள். அவன் அதற்காக ஏங்கிப் போயிருந்தவன் என்பதால் அவள் பேசுவதை ரசித்தான். இரவானதும் உறங்கச் செல்லும் வேளையில் தலையணை,டெட்டி பொம்மை சகிதம் தன் அறை வாசலில் நின்றிருந்தவளைக் கண்டுப் புருவம் நெறித்தவன் “நித்யா.. என்னடாம்மா..?”என்று விசாரித்தான்.

“அ..அது வந்து.. ஒரே மழையாக இருக்கீறது.. இடியென்றால் எனக்கு மிகவும் பயம். அதனால் தான் உன் அறையிலேயே படுத்துக் கொள்கிறேன்..”எனக் கூறி அவன் அறைக்குள் நுழைந்து விட்டாள். அவனருகே படுத்துக் கொண்டு அவன் கணிணியில் வேலை பார்ப்பதைப் பற்றி ஆயிரம் கேள்வி கேட்டவளிடம்

DO NOT COPY

சிரித்துக் கொண்டே.. அவள் கூந்தலைக் கோதியபடி பதிலளித்தான், அவனது மென்மையான ஸ்பரிசத்தில் கண் மூடி உறங்க ஆரம்பித்து விட்டாள் நித்யா.

இருவரும் ஒருவர் மேல் மற்றொருவர் வைத்திருக்கும் நேசத்தின் ஆழத்தைப் புரிந்து கொண்டு விட்டதால்.. சண்டை,கோபம்,அழுகையென ஏதுமின்றி சிரிப்பும்,மகிழ்ச்சியுமாய் வாழ்க்கையை நடத்தினர். அவள் அனுமதியின்றி அவளிடம் எப்படி நெருங்குவதென்று அவள் தயங்கிக் கொண்டிருக்க... அவளோ.. கையைக் கூடத் தொட மாட்டானாம்.. என்று பொறுமிக் கொண்டிருந்தாள்..

மனதை மறைத்து இருவரும் ஆடிய கண்ணாமூச்சி ஆட்டம் விரைவிலேயே முடிவிற்கு வந்தது. அன்று காலை நித்யாவுடன் பள்ளிக்குச் செல்கையில் வழியில் அனு பாப்பா கண்ணில் பட.. அவளை ஓடிச் சென்று அணைத்துக் கொண்ட கௌதம்.. வழக்கம் போல் பாக்கெட்டிலிருந்த சாக்லேட்டை அவளிடம் நீட்டினான். குழந்தையும் அவனை முத்தமிட்டு நன்றி தெரிவித்து விட்டு ஓடிச் சென்றது.

அவள் சென்றதும் கௌதமை முறைத்த நித்யா “ஏய்.. உன்னுடனே நடந்து வந்தேனே.. எனக்கு சாக்லேட் கொடுத்தாயா..?,அவளுக்கு மட்டும் கொடுக்கிறாய்..?”என்று கூற “அய்யோ! சாக்லேட் சாப்பிட்டால் பல் சொத்தையாகி விடும் நிதி..”என்றவன்.. அவள் முறைப்பதைக் கண்டு “இ..இல்லை.. அனு பாப்பா.. சாக்லேட் கொடுத்தால் முத்தம் கொடுப்பாள். ஆனால்.. நீ..”என்றவன் அவளை நிமிர்ந்து பார்க்க.. அவளோ நன்றாகச் சிரித்து “இவ்வளவு தானா..?,நான் இரண்டு முத்தம் தருகிறேன்.. நீ எனக்கு இரண்டு சாக்லேட் தர வேண்டும் சரியா..?”எனக் கேட்டு அவனது இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட... திகைத்து வாயடைத்துப் போய் விட்டான் கௌதம்.

“சாக்லேட்டை எடு கௌதம்..”என்று குதித்தவளிடம் தன் பாக்கெட்டுக்குள் இருந்த அனைத்து சாக்லேட்டுகளையும் அவள் கையில் கொட்டினான். “வாவ்.. இவ்வளவு சாக்லேட்ஸா..?,தேங்ஸ் கௌதம்..”என்றவள் “பாய்...”எனக் கூறி ஓடிச் சென்றாள். அவள் சென்ற பின் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போன கௌதமிற்குத் தலை கால் புரியவில்லை.

அன்று மாலை அதே புன்னகை முகத்துடன் வீடு திரும்பியவள் “கௌதம்.. இன்று அனு பிறந்த நாள்.. காலையில் நீ பார்த்த போது அவள் உன்னிடம் கூறவில்லையல்லவா..?,அவள் வீடு அருகில் தான் இருக்கிறது.. மாலை பார்ட்டிக்கு அழைத்திருக்கிறார்கள்.. உன்னையும் தான்.. தயாராகு.. சென்று விட்டு வருவோம்..”என்று கூற அவனும் உற்சாகமாகப் புறப்பட்டான்.

DO NOT COPY

கருநீலமும்,சந்தனமும் கலந்த டிசைனர் புடவை அணிந்து வண்ண மயிலாகப் புறப்பட்டவளை மையலுடன் நோக்கிய கௌதம் அவளை அழைத்துக் கொண்டு அனுவின் வீட்டிற்குப் புறப்பட்டான். சுற்றியிருந்தத் தமிழ்க் குடும்பங்கள் அனைத்தும் வருகை தந்திருக்க.. கூடியிருந்தோர் அனைவரும் பொருத்தமான ஜோடி என்று அவர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

குழந்தைகள் அனைவரும் சேர்ந்து ரைம்ஸ் சொல்வதாய்க் கூறி நித்யாவையும் அழைத்துக் கொண்டனர். கண்களை உருட்டிக் கைகளை ஆட்டித் தானும் ஒரு குழந்தையை மாறிப் பாடி ஆடிக் கொண்டிருந்தவளை சிரிப்பும்,காதலுமாய் நோக்கிக் கொண்டிருந்தான் கௌதம் பிரபாகரன். அவன் பார்வையைக் கண்டு கொண்டவளும்.. பாடுவதை நிறுத்தி.. அவனருகே வந்து "ஏண்டா இப்படிப் பார்க்கிறாய்..?"என்று அழகாய்ச் சிணுங்கத் தன் வசமிழந்து போனான்.

பார்ட்டி முடிந்து வீட்டை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தவனிடம் "அனு அணிந்திருந்த டிரஸ் அழகாக இருந்ததில்லையா கௌதம்..?"என்று கேட்க அவனோ "அதை விட அவள் அம்மா அணிந்திருந்த டிரஸ் மிகவும் அழகாக இருந்தது நிதி"என்று கூற.. அவனை நின்று முறைத்தவள் "ஆமாமாம்.. நீ அணிந்திருக்கும் டிரஸ்ஸை விட பார்ட்டியில் விக்டர் அணிந்திருந்த டிரஸ் மிகவும் அழகாக இருந்தது.."என்று கூறிச் சிரிக்க.. "ஏய்.."என்று பல்லைக் கடித்தான் கௌதம்.

"நீ மட்டும் அனு அம்மாவைப் பார்க்கலாம்.. நான் விக்டரைப் பார்க்கக் கூடாதா..? போடா.."என்றவள்.. அவனைத் தாண்டி ஓடினாள். "நிதி ஓடாதே.. மழை பெய்ததில் தரை வழுக்குகிறது பார்.."என்று அவன் கூறிக் கொண்டிருக்கையிலே அவள் தடுமாறி விழப் பார்க்க... "ஏய்.. ஏய்.." என அவளைப் பிடிக்கச் சென்றவன் தானும் தடுமாறி.. அருகிலிருந்தக் கல்லில் மோதிக் கீழே விழுந்தான்.

நல்லவேளையாக தலையைக் காப்பாற்றிக் கொள்ள அவன் கையால் அரண் அமைத்ததால் கையில் நச்சென்றுக் கல் மோதி நன்றாக அடிபட்டு விட்டது. வலி தாங்காமல் "அம்மா.."என்று கண் மூடியவனைக் கண்டு பதறி எழுந்த நித்யா அருகிலிருந்தோரை அழைத்து அவனை மருத்துவமனையில் அனுமதித்தாள்.

டாக்டர் அவனுக்கு சிகிச்சை அளித்த முடித்த பின்பும் அவள் அழுது கொண்டேயிருக்க "நித்யா.. எனக்கு ஒன்றுமில்லைம்மா.. லேசான ஃப்ராக்சர் தான்.. உன் முன்பு வலியில் கத்தியது தவறாகப் போய்விட்டது. அதனால் தான் இப்படி அழுது வடிகிறாய்.."என்று கடிந்து கொண்டவன் அவளை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

DO NOT COPY

வீட்டிற்கு வந்த பின்னும் அவனது கைக்காயத்தைக் கண்டு "எ..என்னால் தானே உனக்கு இப்படியாகி விட்டது.. நீ சொல்லச் சொல்லக் கேட்காமல் ஓடியதால் தான் உனக்கு அடிபட்டது.."என்று கதற.. "அப்படியென்றால் ஒன்றுமில்லை.. அழாதே நிதி.."என்றவன் அவளைப் பற்றி அணைத்து கூந்தலை வருடி "சின்ன விசயத்திற்காக இப்படி அழுவாயா..?,ஏழு மாதமாக அழ வைத்தது போதுமென்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.. நீ என்னடாவென்றால்.. விடு நிதிமா.."என்று சமாதானப் படுத்தப் பின் நிமிர்ந்தவள்.. "நான் சென்று உடை மாற்றி வருகிறேன்.."என்று வெளியே சென்றாள்.

அவள் உடை மாற்றி அவன் அறைக்குள் நுழைகையில் இருளை வெறித்தபடி நின்று கொண்டிருந்தான் கௌதம். மெல்ல நெருங்கி அவனருகே சென்றவள்.. அவனைப் பின்னாலிருந்து அணைத்து அவன் முதுகில் முகத்தைப் புதைத்தாள். அவள் பூனை நடை நடந்து வருவதை உணர்ந்தேயிருந்த கௌதம் அவளது அணைப்பை எதிர்பார்க்காததால்.. ஸ்தம்பித்து விட்டான். எத்தனை நாட்களுக்குப் பிறகு அணைக்கிறாள்..! விருப்பமிருந்தும் தன்னைச் சுற்றி ஒரு வேலியை அமைத்துக் கொண்டு அவன் அவளை விலக்கிய போதெல்லாம் தேடி வந்து அணைப்பவள்.. அவன் செய்த முட்டாள்தனத்தால் ஏழு மாதங்களாக வருந்தி.. வேதனைப்பட்டு.. எங்கே அவனை வெறுத்து விடுவாளோ என அவனைக் கலக்கத்திற்குள்ளாக்கியவள்.. இன்று அவளாகவே வந்து அணைக்கிறாள்.

அவன் அவளுக்குச் செய்த அத்தனை பாவங்களையும் மறந்து அவன் மீது காதலைக் காட்ட வந்திருக்கிறாள்.. அவளை விரும்பி.. பின் ஒதுக்கி.. பின் வெறுத்து.. அவளைத் துன்புறுத்தியதையெல்லாம் மன்னித்து அவள் அவனிடம் வந்து விட்டாள். கண் மூடி மனைவியின் அணைப்பை ரசித்தவன்.. பின் அவளைத் தன் புறம் இழுத்துக் கன்னம் பற்றி "இத்தனை நாட்கள் ஆயிற்றா உனக்கு?.என்னை நெருங்குவதற்கு..?,ம்?"என்று வினவ.. அவன் கண்ணில் கோர்த்திருந்தக் கண்ணீரைக் கண்ட நித்யாவிற்கும் கண்களில் நீர் வழிந்தது.

சட்டென எம்பி அவனை இறுக அணைத்துக் கொண்டவள் "ஐ லவ் யூ கௌதம்.. ஐ லவ் யூ சோ மச்.."என்று அழுகையினூடே தெரிவிக்கத் தன் கண்களில் தேங்கிய நீரைத் துடைத்தவனும் அவளை அணைத்துக் கொண்டு புன்னகைத்தான்.. "நானும் தான் பேபி.."எனக் கூறி. "என்ன நானும் தான்..?,நீயும் ஐ லவ் யூ சொல்.."என்று சிணுங்கியவளைப் பற்றி முகம் முழுக்க முத்தமிட்டு "ஐ லவ் யூ.. ஐ லவ் யூ நிதி.."என்று கூற.. அழகாய் முறுவலித்து அவன் தோளில் சாய்ந்தாள்.

DO NOT COPY

அவள் இடையைப்பற்றிக் கொண்டு கன்னம் வருடியவன் "நிதி.. அன்று நடந்த சம்பவத்திற்காக.. நான்.."என ஆரம்பித்தவனிடம் "அதைப் பற்றியெல்லாம் இனி பேச வேண்டாம்.."என்று அவள் வேகமாகக் கூற.. "பேச வேண்டாமென்றால் வேறு என்ன செய்ய வேண்டும்..?"என்று அவளது காது மடலில் முத்தமிட்டு ரகசியம் பேசியவனை "ச்சி.."என்று அடித்தவள்.. "இதைப் பற்றிப் பேசாமல் வேறு எதையேனும் பேசு என்கிறேன்.."என்று கூறினாள்.

"இல்லை நிதி.. அதற்காக நான் உன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால் கூடப் போதாது தான்.. நான் விரும்பும் என் அழகான நிதியிடம் அப்படியெல்லாம் நடந்து கொண்டு உன்னை வேதனைக்குள்ளாக்கி விட்டேனே.."என்று வருத்தமுற்றவனிடம் "வருத்தமாகத் தானிருந்தது. நான் பேசுவதற்கு இடமளிக்காமல் நீயாகவே எதையெதையோ நினைத்துக் கொண்டு என்னைப் பழி வாங்கி விட்டதைக் கண்டு.. ஆனால்.. உன்னை இங்கு மறுபடி பார்த்த பின்பு என் கோபம் நிலைக்கவில்லை.. பல நாள் தாடியுடன் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு நுழைந்தாயே.. அன்றே என் கோபமெல்லாம் காணாமல் போய் விட்டது.."என்று கூறிவளிடம் "அன்றேவா..?பிறகு ஏண்டி என்னை இத்தனை நாட்களாகக் கஷ்டப்படுத்தினாய்..?,ராட்சசி.."என்று அவள் இதழ் நோக்கிக் குனிந்தவன் பின் தயங்கி அவளிடம் "முத்தம் கொடுக்கலாம் தானே...?"என்று கூற.. "போடா.."என முகம் சிவந்தவளைப் பற்றி.. ஆசை தீர முத்தமிட்டான் அவன்..

ஜன்னலோரத் திட்டின் மீது ஏறி அமர்ந்தவன் அவளைத் தன் மடியில் அமர வைத்து.. அவள் தலையில் கன்னம் பதித்து..அவள் விரல்களை வருடியவன் "நிதி.. நீ என் வாழ்வில் வந்து செய்த அட்டூழியங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது.. அந்தச் சண்டாளி ஓடியதிலிருந்து பெண்கள் என்றாலே எனக்குப் பயங்கர வெறுப்பு.. அதிலும் நம் வீட்டு வேலைக்காரியின் மகள் சுந்தரி இருக்கிறாளே! அவளெல்லாம் பெண் பிறப்பென்று சொல்லிக் கொள்ளக் கொஞ்சம் கூடத் தகுதியில்லாதவள்.. அவர்களையெல்லாம் சந்தித்து விட்ட பின் எனக்கு பெண்களின் மீதோ.. கல்யாணத்தின் மீதோ.. ஏன் காதலின் மீது கூட நம்பிக்கை இருந்ததில்லை.. உன்னைப் பார்க்கும் வரை.."

"இரும்பைப் போல் வலம் வந்த என்னை.. உயிரும்,உணர்வும் கொண்ட மனிதன் என உணர வைத்தது உன் பார்வையும்,தீண்டலும் தான் கண்ணம்மா.. நீ என் வாழ்வில் வந்திராவிடில்.. குடித்துக் குடித்து கேன்சர் வந்து கூடச் செத்திருப்பேன்.. அந்த அளவிற்கு எனக்கு வாழ்வின் மீது பிடிப்பில்லாமல் இருந்தது.. அப்படியிருந்த என்னை.. சந்தித்த நாளிலிருந்து எதிர்த்துப் பேசி.. வாதாடி.. போராடி.. கடைசியில் காதலிக்கவும் வைத்து விட்டாய்.."என்று கொஞ்சியவனிடம் "பின்னே..?,உன்னை விட்டு ஓடிய சௌம்யா.. குழந்தை

DO NOT COPY

குட்டியுடன் சௌக்கியமாக வாழ்கிறாள்.. அந்த சுந்தரி இன்னமும் 4 ஆண் பிள்ளைகளை வளைத்துப் போட்டு மானங்கெட்டத்தனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இவர்களே நன்றாக இருக்கும் போது... நீ மட்டும் ஏன் ராஜா வாழ்வில் பிடிப்பற்று இருக்க வேண்டும்..?,இதை மட்டும் உனக்கு உணர்த்தி விட்டால் என் வேலை முடிந்து விடும் என்று நினைத்திருந்தேன்.. ஆனால்.. கண்ட நாளிலேயே.. இந்த முறுக்கு மீசையின் மீது மோகம் கொண்டு விட்டதால்.. நானேத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்..."என்று கூறினாள்.

"எப்போது உன் மீது காதல் வந்தது என்று என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை நிதி.. உன்னுடன் பழகத் துவங்கிய நாளிலிருந்தே.. என்னுள் வித்தியாசத்தை உணர்ந்திருக்கிறேன்.. கொஞ்சம் கொஞ்சமாக என் கூட்டை விட்டு வெளி வந்து உன் மீதான காதலை வெளிப்படுத்தத் துவங்கினேன்.. அதிலும் சௌம்யா-ஸ்ரீதரைச் சந்தித்த நாளன்று.. நீ தான் எனக்கேற்ற என் மனைவி என்று தீர்மானமே செய்திருந்தேன்.. ஆனால் மறுநாள் அந்தச் சுந்தரி வந்து ஏதேதோ பேசிக் குழப்பி விட்டுச் சென்று விட்டாள்.."என்று அவன் கூறியதும் கோபமாக அவன் புறம் திரும்பியவள் "இதோ பாரடா.. இனியும் நான் அங்கே வந்த பின்பும் கூட உன்னைப் பிடிக்காதவர்கள் நம் திருமணத்தையும்,நம்மையும் பற்றி மாற்றுக் கருத்தை வெளியிடத் தான் செய்வார்கள்.. அவர்களுக்காக நாம் வாழவில்லை.. நமக்காக வாழ்கிறோம் புரிந்ததா..?,யார் என்ன சொன்னாலும் உடனே சுருங்கிப் போய் விடக் கூடாது.. என்ன..?"என்று கூற... அவள் மூக்கை உரசி "சரிங்க மேடம்.."என்றான் அவன்.

தொடர்ந்து "அப்போது இருந்த மனநிலையில் நான் அப்படி நடந்து கொண்டேன் நிதி.. என் வாழ்வை மாற்றி எனக்கு நல்லது புரிந்த நீ.. எந்த விதத்திலும் என்னால் அவமானப் பட்டு விடக் கூடாது என்று எண்ணினேன்... அதனால் தான் அப்படி நடந்து கொண்டேன்.. அதன் பின்பு பார்ட்டி அன்று.. உன்னை அவ்வளவு அழகாகச் சேலையில் பார்த்ததும் என்னை மறந்து உன்னிடம் நெருங்கி விட்டேன்.."என்றவனிடம் "அன்று தான் எனக்கு உன்னைப் பற்றிய குழப்பம் தீர்ந்தது கௌதம். அந்தச் சுந்தரியின் மீது ஆத்திரமாக வந்தது. உன்னை இப்படியே விட்டால் சரிப்பட மாட்டாய் என்று தான்.. நமக்குள் எல்லாம் நடந்து விட்டதென்று கூறித் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தேன்"என்றாள் நித்யா.

"நீ அப்படிச் செய்திரா விட்டால்.. நானும் முட்டாள்தனமாக எண்ணிக் கொண்டு உன்னைப் பிரிந்து வாழ முடிவு செய்திருப்பேன் நிதி.. அனைத்துமே நன்மைக்குத் தான் போலும்.."என்றவன் சிறிது நேர அமைதிக்குப் பின் "ஆனால் நிதி.. உன்னை என் வாழ்விலிருந்து பிரிப்பதை எண்ணிப் பார்த்தால் கூட நெஞ்சில் வலி பிறக்கும்.. முடியாது முடியாதென எனக்குள்ளேயே நான்

கலங்கியிருக்கிறேன்.. "என்றவனிடம் "நீ என்னைப் பிரித்தால் நான் பார்த்துக் கொண்டு இருப்பேனா..?"என்று மிரட்டினாள் நித்யா.

சிரித்தபடி அணைப்பை இறுக்கியவன் அவள் முகத்தை நிமிர்த்தி கண்,கன்னம் என முத்தமிட்டு.. "அனைத்தையும் விட நான் பட்ட மிகப்பெரியக் கஷ்டம்... உன்னருகில் எனக்கு எதுவுமே தோன்றாதது போல் நடிப்பது தான்.. இனி என்னால் நிச்சயம் முடியாதம்மா.."என்றவன் சிவந்து ஓடியவளைப் பற்றித் தன் கை வளைவில் நிறுத்தி.. அவள் இடையை அழுந்தப் பற்றி இதழ்களில் தன் இதழ் பதித்தான்.

மூச்சு வாங்க விலகி முறைத்தவளிடம் "சாரி நிதி..."என்றவன் "அப்படியானால் நம் ஹனிமூன் இந்த ஊரில் தானா..?"என்று வினவிப் பின் "அம்மாவிற்கும், அழகர்சாமி அங்கிளுக்கும் நாம் இணைந்த விசயத்தை ஃபோன் செய்து தெரிவிக்க வேண்டும்.. இருவரும் என்னை மகா வில்லனைப் போல் நடத்தினார்கள் தெரியுமா.?,அம்மா என்னிடம் பேசக் கூட இல்லை.."என்றவன் "அனைவரும் இந்த ராட்சசிக்குத் தான் சப்போர்ட்..,"எனக் கூறி அவள் கன்னத்தை வலிக்காதவாறுக் கடித்தான்.

"ஆ!"எனப் பொய்யாகச் சிணுங்கியவளின் முகம் வருடி.. "யூ ஆர் மை எவ்ரிதிங் நிதி.. என் சந்தோசம்.. துக்கம்.. அழுகை.. கோபம்.. அனைத்தும்.. அனைத்துமே நீ தான்.. காதலென்றால் என்னவென்று எனக்குக் கற்றுக் கொடுத்தவளும் நீ தான்.. பிரிவின் வேதனையை அனுபவிக்கச் செய்தவளும் நீ தான்.. இனி என் உயிர் உள்ள வரை உன்னைப் பிரிய மாட்டேன் கண்ணம்மா.. நீ எனக்குத் திருப்பிக் கொடுத்த என் வாழ்வின் வசந்தத்தை உன்னுடன் சேர்ந்தே அனுபவிக்க விரும்புகிறேன்.. என்னை ஏற்றுக் கொள்வாயா கண்மணி...?"என்று கை நீட்டியவனிடம் குறும்பாகப் புன்னகைத்து அவன் கையைத் தட்டி விட்டு.. அவனைத் தன்னோடு சேர்த்து இறுக அணைத்தாள் நித்யா. மனைவியின் எல்லையற்றக் காதலில் தொலைந்து போன கௌதம்.. அவளுள் தன் தேடலைத் துவங்கினான்.

********************************************************* முற்றும் *****************************************************

DO NOT COPY



DO NOT